உ
துர்க்காதேவி துணை

# துர்க்காபுரம் மகளிர் இல்லம்

தெல்லிப்பழை

# DURGAPURAM MAHALIR ILLAM

Tellippalai

2014

உ

துர்க்காதேவி துணை

# துர்க்காபுரம் மகளிர் இல்லம்

## தெல்லிப்பழை

# DURGAPURAM MAHALIR ILLAM

## Tellippalai

## 2014

# 32வது ஆண்டுவிழா சிறப்புமலர்க்குழு

போஷகர் : **செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள்**
தலைவர், துர்க்காபுரம் மகளிர் இல்லம்.

கௌரவ ஆலோசகர் : **திருமதி. சிவமலர் அனந்தசயனன்**
அதிபர், துர்க்காபுரம் மகளிர் இல்லம்.

## மலர்க்குழு

**செல்வி. தமிழ்விழி செல்வநாதன்**
( முகிழ்நிலை ஆசிரியர், தேசிய கல்வியியற் கல்லூரி, வவுனியா )
**செல்வி. சிந்துஜா பாலச்சந்திரன்**
**செல்வி. நாகசுஜித்தா ஜெகம்புகழ்ராஜா**
**செல்வி. பிரேமினி குமார்.**
**செல்வி. சிவரூபி சிவசுப்பிரமணியம்**

---

சஞ்சிகை : **துர்க்காபுரம் மகளிர் இல்ல**
**32வது ஆண்டு விழா சிறப்பு மலர் – 2014**

பிரதிகளின் எண்ணிக்கை : **500**

அச்சுப்பதிப்பு : Andra **பிறிண்டேர்ஸ், யாழ்ப்பாணம்.**

வெளியீடு : **நிர்வாகசபை,**
துர்க்காபுரம் மகளிர் இல்லம், தெல்லிப்பழை.

---



# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை (இலங்கை)



தெய்வத்திருமகள்

சிவத்தமிழ்ச்செல்வி

# கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி

( 07-01-1925 -- 15-06-2008 )

ஸ்தாபகர் துர்க்காபுரம் மகளிர் இல்லம்

## விருதுவாக்கு

**ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காணலாம்.**

# Our Motto

**See God in the Smile of Poor.**

## பயணத்தின் எல்லை

**சுயதிறன் நிறைவுடன் உயர்மனித விழுமியங்களைக் கொண்ட தாய்த் தலைமைத்துவ பண்புநிலை விருத்திசார் மகளிர் உருவாக்கம்.**

# Our Vision

**Creation of woman of Human Values with matriarchal Leadership and Self Accomplishment**

## பயணத்தின் பாதை

**தாங்குதிறன்,அடிப்படை, காப்பு, அன்பு, கணிப்பு, கல்வி வழங்கப்படுவதன் மூலம் வாழ்வாதார வளம் குறைந்த பெண்பிள்ளைகள் சுயதிறன் நிறைவுத் தேவையை பெற்று எதிர்காலச் சமூகச் சவால்களுக்கு முகம் கொடுக்க கூடிய சமூக அந்தஸ்தைப் பெற்றுக்கொள்ளும் ஆறுதல் மையமாக உணர்ந்து பயணிப்போம்.**

# Our Mission

We will journey on as a fostering center for achieving the Social Recognition to the female children lacking livelihood resources by providing base for **Sustainability, Protection, Care, Respect and Education for Self Accomplishment to face the Social Challenges.**

# இல்லக் கீதம்

## பல்லவி

வாழிய வாழியவே என்றென்றும்
மாண்புடனே மகளிர் இல்லம் ஓங்கியே நின்று — வாழிய

## அனுபல்லவி

அன்னை துர்க்கை நிழலில் அணி தெல்லியூரினில்
பன்னிப் பரவிடும் பாவையர் இல்லம் என்றும் - வாழிய

## சரணம்

ஒழுக்கம் உயர் பண்பு உண்மையான கல்வி
விழுப்பம் தரும் என்றே மேலோர்கள் வார்த்தையை
மதித்து நடந்துமே வாழ்வெய்தி நாளுமே
மங்காப் புகழெய்தி மங்கையர் மாண்புற — வாழிய

காலையும் மாலையும் வழிபாடு பஜனை
கல்விக்கூடக் கல்வி யோகாசனமும்
கோசாலை தோட்டம் குடிசைக் கைத்தொழில்கள்
கொண்டு மிளிரும் துர்க்கா மகளிர் இல்லம் என்றும் - வாழிய

பெண்களே நாட்டின் கண்களெனப் புகழ்ந்து
மேதினியோர் என்றும் வியந்துமே போற்றுவார்
எங்கள் நல்வாழ்வும் இனிய செந்தமிழும்
எழில்மிகு சைவமும் ஏற்றமுற்று விளங்க — வாழிய



செஞ்சொற்செல்வர்

**கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள்**

தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்.

தலைவர், துர்க்காபுரம் மகளிர் இல்லம்.

# துர்க்காபுரம் மகளிர் இல்லம்

## தெல்லிப்பழை

# நிர்வாகசபை - 2014

| | | | |
|---|---|---|---|
| 01. | கலாநிதி.செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் - தலைவர் | | |
| 02. | திரு.சி.அருளானந்தசிவம் | - | உபதலைவர் |
| 03. | திரு.ச.ஆறுமுகநாதன் | - | உபதலைவர் |
| 04. | Dr.தி.திவாகரன் | - | பொதுச்செயலாளர் |
| 05. | திரு.நா.தவநாதன் | - | இணைச் செயலாளர் |
| 06. | திரு.மு.அருளையா | - | இணைச் செயலாளர் |
| 07. | திரு.அ.சண்முகநாதன் | - | பொருளாளர் |
| 08. | திரு.சு.ஏழூர்நாயகம் | - | உப பொருளாளர் |
| 09. | திரு.நா.திருநாவுக்கரசு | — | தர்மகர்த்தாசபை |
| 10. | திரு.சி.சண்முகானந்தன் | - | தர்மகர்த்தாசபை |
| 11. | திரு.ச.விநாயகரத்தினம் | | |
| 12. | திரு.நா.தவமணிநாயகம் | | |
| 13. | திரு.சு.முருகையா | | |
| 14. | திருமதி.கலாதேவி பொன்னம்பலம் | | |
| 15. | Dr.செ.சபாநடேசன் | | |
| 16. | திரு.ச.உமாசுதன் | | |
| 17. | திரு.வி.பாக்கியநாதன் | | |
| 18. | திரு.S.ரஜீவ்காந்த் | - | இந்து இளைஞர் சங்கப் பிரதிநிதி |

# தேவஸ்தான பிரதம குருக்களின்
# ஆசிச் செய்தி

எல்லாம்வல்ல ஸ்ரீ துர்க்காதேவியின் திருவருளோடும் அன்னை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களால் நிறுவப்பட்ட மகளிர் இல்லம் பெரு விருட்சமாக, விழுதுகளோடு முப்பத்து இரண்டு ஆண்டுகளைக் கடந்து நிற்கின்றது.

கடந்த கால நாட்டு சூழ்நிலையால் பாதிக்கப்பட்ட வன்னிப் பிள்ளைகளை எடுத்து அம்பிகையின் துணையோடு அவர்களை அரவணைத்து பெரியதோர் இல்லம் அமைத்து தேவையான சகல வசதிகளையும் அமைத்து இன்பமான வாழ்க்கைக்கு உதவிய எமது தேவஸ்தானத் தலைவர் ஆறு. திருமுருகன் அவர்களை வாழ்த்துவது எமது கடமையாகும்.

பாடசாலைக் கல்வி முதல், பல்கலைக்கழகம் வரை பயின்று பட்டதாரிகளாக வெளியேறி, ஆசிரியராக, உத்தியோகத்தராக, குடும்பப் பெண்களாக விளங்குவது எமக்கெல்லாம் பெருமையைத் தருகிறது.

இத்தருணத்தில் பிள்ளைகளின் வளர்ச்சியை எல்லோரும் அறியும் வகையில் மலர் ஒன்று வெளிவருவது சாலப் பொருத்தமாகும். அம்பிகையின் திருவருளும் அன்னையின் ஆசியும் கிடைக்கவேண்டுமென்று நல்லாசி கூறி அமைகிறேன்.

**வா. அகிலேஸ்வரக் குருக்கள்**
**தேவஸ்தான குரு**



உ
சிவமயம்
குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்



ஸ்தாபகர் :- ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
முதலாவது குருமஹா சந்நிதானம்
ஆதீன குரு முதல்வர் :- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்
ஸ்தாபிதம் : 1966

021 222 2870

பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை.

## வாழ்த்துச் செய்தி

அன்புசார் பெருந்தகையீர்!

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய துர்க்காபுரம் மகளிர் இல்லம் இன்று தனது 32வது வயதை அடைந்திருப்பதையிட்டு மகிழ்ச்சியடைகிறோம். துன்பத்தில் துவண்டுகொண்டிருந்த நம் சிறுவர்களை வாழ்விற்கு வழிகாட்டும் முகமாக எழுந்ததே மகளிர் இல்லம். ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம் என்பதற்கமைய இவர்களுக்கு உடை, உணவு, கல்வி, ஒழுக்க பண்புகள் என்பவற்றைக் கற்றுக்கொடுக்கும் இல்லமாக 32 ஆண்டுகள் பணியாற்றி தலைநிமிர்ந்து நிற்பது அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருகிறது. சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அம்மையாரின் அறப்பணியினூடாக ஆலயங்கள் செய்யவேண்டிய பணிகளில் ஓர் அங்கமாக எழுந்தவையே மகளிர் இல்லம். இல்லப் பிள்ளைகள் பல துறைகளிலும் வளர்ச்சியடைந்து சமூக, சமயப் பணிகளில் சிறந்து விளங்குவது பாராட்டுக்குரியது. இல்லத்தை நல்ல முறையில் நிர்வகிக்கும் அனைவரையும் வாழ்த்தி பாராட்டுகின்றோம். இப்பணி தொடர இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**இரண்டாவது குருமஹா சந்நிதானம்**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக**
**ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**

# ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளின் அருளாசிச் செய்தி

தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் 32ஆவது ஆண்டு நிறைவு விழா குறித்து நல்லாசிச் செய்தி வழங்குவதில் அகமகிழ்கிறேன். கடவுள் வாழும் கோயிலில் கருணைக்குப் பஞ்சம் இல்லை. துர்க்காதேவியின் சந்நிதானத்தில் பெருங் கருணைக்குப் பஞ்சம் இல்லை. அம்பாள் உலகமாதாவாக நின்று உயர் காரிய ,களைச் செய்விக்கிறாள். ஜீவசேவையை மதித்து அரும்பணியாற்றிய அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் தலைமையில் எழுந்த இவ் இல்லம் பெருமைக்குரியது. உலகளாவிய ரீதியில் வாழும் ஈழத்தமிழர்கள் மத்தியில் இந்த இல்லம் பற்றிய சிறப்பு பெருமையாகப் பேசப்படுவதை யான் அறிவேன். இங்கு வாழும் பிள்ளைகளுக்கு உணவு, உடை, கல்வி வழங்குவதோடு மட்டுமன்றி, அவர்களுக்கு உரிய வாழ்க்கைத் துணை நலன்களை நிறைவேற்றி வைக்கும் பணியை இவ்வில்லம் ஆற்றிவருவதை அறிந்தும் இரட்டிப்பு மகிழ்ச்சிடைகிறேன். மகளிர் இல்லத்தில் வாழ்ந்த பிள்ளைகளின் திருமணங்கள் கோயில் நிர்வாகத்தால் நிறைவேற்றப்பட்டுவரும் செய்தி உண்மையிலேயே உள்ளத்தைத் தொடுகிறது. இப்பண்பாட்டுக்கு வித்திட்ட அன்னையை நினைந்து வணங்குகிறேன். இப்பணியை இன்று நன்முறையில் தொடரும் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களை வாழ்த்துகிறேன். இவருக்கு அருந்துணையாக விளங்கும் நிர்வாகசபை அங்கத்தவர்கள், பிள்ளைகளை வளர்த்தெடுப்பதில் ஆர்வம் காட்டும் பணியாளர்கள் அனைவருக்கும் இந்த நன்னாளில் வாழ்த்துக்களும் ஆசிகளும் உரித்தாகட்டும்.

மகளிர் இல்லத்தில் வாழும் பிள்ளைகள் பேறு பெற்றவர்கள். பல ஊர் மக்கள் அற்புதம் நிறைந்த அம்பாளைத் தரிசிப்பதற்கு தெல்லிப்பழையை நோக்கி வருகிறார்கள். மகளிர் இல்லப்பிள்ளைகள் அற்புதம் நிறைந்த அம்பாள் திருக்கோயிலில் வாழ்வது அவர்கள் செய்த நல்வினைப் பயன் என யான் கருதுகிறேன். இங்கு வாழும் பிள்ளைகளுக்கு நூற்றுக்கு மேற்பட்ட சகோதர உறவு ஒரே இடத்தில் கிடைக்கிறது. இந்த உறவு வலிமையானது, இது ஒரு தவவாழ்வு இல்லப் பிள்ளைகள் இத்தவ வாழ்வின் பெறுமதியை உணர்வார்கள். இப்பிள்ளைகள் கடந்த காலங்களில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று இல்லத்திற்கு பெருமை தேடித்தந்தை யான் அறிவேன். போரின் வேதனைகளைச் சந்தித்த பல பிள்ளைகள் துர்க்காபுரம் மகளில் இல்லத்தில் மன ஆறுதல் பெற்று வாழ்வதை யாம் காண்கிறோம். இப் பிள்ளைகள் “ஐயா வணக்கம்” என உரைக்கும்

ஓசை உள்ளத்தைத் தொடுகிறது. எவ்வேளையும் இவர்களது நெற்றியில் திருநீறு ஒளி பிரகாசித்தக் கொண்டிருக்கும்.இனிமையாகப் பாடுகிறார்கள்; பணி செய்கிறார்கள்; பக்குவமாக வாழ்கிறார்கள். இவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதில் இவர்களது தலைவர் ஐயா காட்டும் ஆர்வத்தைக் கண்டு பூரிப்படைகிறேன். வளமான பெரிய விடுதிச்சாலை சமீபத்தில் கட்டப்பட்டது. அந்த விடுதிச் சாலையில் பிள்ளைகளுக்கு சகல வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. எங்கும் காணாத வகையில் மகளிர் இல்லப் பிள்ளைகள் மிகவும் அன்பாக வளர்க்கப்படுகிறார்கள். அவர்களின் சுபீட்சம் மிக்க எதிர்கால வாழ்வுக்காக என் இனிய குரு சுப்பிரமுனிய சுவாமிகளின் திருப்பாதக் கமலங்களை நினைந்து வணங்கி எனது ஆசிகளை சமர்ப்பிக்கிறேன்.

# செஞ்சொற்செல்வரின் ஆசிச் செய்தி

தெய்வத் திருவருளால் தெய்வீகப் பணிகள் யாதொரு குறையுமின்றி நடைபெறுவது இயற்கை. துர்க்கை அம்பாளின் அருட்கடாட்சத்தாலும் ஆன்மீக அன்னை சிவத்தமிழ்ச்செல்வி அவர்களின் நல்லாசியாலும் அன்பர்களின் பேராதரவிலும் துர்க்காபுரம் மகளிர் இல்லம் பெருவிருட்சமாக வளர்ச்சி பெற்றுள்ளது. எங்கள் இனிய இல்லத்தில் 32வது ஆண்டு பூர்த்தி விழா குறித்து வாழ்த்துவதில் மிகவும் ஆனந்தம் அடைகின்றேன். கடந்த பதினெட்டு ஆண்டுகளாக தேவஸ்தான பணிகளில் பங்குகொள்ளும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. 2008ஆம் ஆண்டு அன்னை சிவத்தமிழ்ச் செல்வியின் பிரிவுக்கு பின் அவர் ஆற்றிய தலைமைத்தவத்தை சிறியேன் ஏற்று நடாத்தும் வாய்ப்பு அம்பாள் அருளால் கிட்டியது. நிர்வாக சபையினர் பணியாளர்கள் அன்பர்கள் அனைவரது பூரண ஒத்துழைப்பாலும் மகளிர் இல்லம் மாண்புற்று திகழ்கிறது.

2009ஆம் ஆண்டு வன்னிப் போரில் மிகவும் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சார்ந்த பெண் பிள்ளைகளை எமது இல்லத்தில் இணைத்துக் கொள்வதற்கு என்னால் ஆன முயற்சிகளை எடுத்தேன். அம் முயற்சியின் பயனாக தொண்ணூற்று ஒன்பது (99) பிள்ளைகள் புதிதாக இணைக்கப்பட்டார்கள். அவ்வேளை யாம் பல இன்னல்களைச் சந்திக்க வேண்டி ஏற்பட்டது. எனினும் சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலர் கௌரவ நீதிமன்ற நீதிபதிகள் அனைவரும் இப்பிள்ளைகளை இணைத்துக் கொள்வதில் பெரிதும் அக்கறை காட்டினார்கள். மகளிர் இல்லம் இன்று பெருந்தொகை பிள்ளைகளுடன் இரு விடுதிச் சாலைகளில் சிறப்பாக இயங்குகிறது. இல்லத்தின் சிறப்பைக் காக்கும் வகையில் மகளிர் இல்ல அதிபராக இப்பொழுது பணியாற்றும் திருமதி. சிவமலர் அனந்தசயனன் அவர்கள் எவ்வித வேதனமும் பெறாமல் தொண்டுப் பணியாக தன் கடமையைச் செய்து வருவது பாராட்டிற்குரியது. இல்லம் ஆரம்பித்த காலம் முதல் இல்லப் பணியில் அர்ப்பணிப்போடு பலர் தொடர்ந்து சேவையாற்றி வருகின்றார்கள். அவர்களது அர்ப்பணிப்பு மிக்க சேவைகளை வாழ்த்த கடமைப்பட்டுள்ளோம்.

இல்லத்தின் வளர்ச்சிப் பாதையில் தொடர்ந்து நிதி உதவி வழங்கி வருபவர்கள் அனைவரும் வாழ்த்துக்குரியவர்கள். குறிப்பாக புலம்பெயர்ந்து

வாழும் மக்கள் இல்ல வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றி வருகின்றனர். அவுஸ்ரேலியாவிலுள்ள அபயகரம் என்ற அமைப்பு ஆண்டுதோறும் அவுஸ்ரேலியாவில் சிறப்பு நிகழ்ச்சியை நடாத்தி பல லட்சம் ரூபா பணத்தினை அனுப்பி உதவி வருகிறார்கள்.

இவ் ஆண்டு மகளிர் இல்ல வளர்ச்சிப் பாதையின் அடுத்த அத்தியாயமாக பிள்ளைகளுக்கான வீட்டுத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வீட்டுத் திட்டம் தொடர்பாக பலர் எமது தேவஸ்தானத்தை பாராட்டி வருகிறார்கள். வீடமைப்புத்திட்டம் உருவாவதற்கு நிலத்தை அன்பளிப்பாக வழங்கிய தெல்லிப்பழை அமரர் பொன்னையா (முன்னாள் சுங்கத் திணைக்கள உத்தியோகத்தர்) குடும்பத்திற்கு நாம் என்றும் நன்றியுடையோம். மகளிர் இல்லப் பிள்ளைகளின் எதிர்கால நன்மை கருதி வாழ்வாதார திட்டங்கள் வெற்றிபெற துர்க்காதேவியைப் பிரார்த்தித்து மகளிர் இல்லப் பிள்ளைகளின் நல்வாழ்விற்காக அம்பாளை மன்றாடி எனது வாழ்த்துச் செய்தியை நிறைவு செய்கின்றேன்.

**செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன்**

*தலைவர்*

*ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,*

*துர்க்காபுரம் மகளிர் இல்லம்,*

*தெல்லிப்பழை.*

AUM

# அகில இலங்கை இந்து மாமன்றம்

(இலங்கை இந்துமன்ற அமைப்புகளினதும் ஆலய நம்பிக்கை பொறுப்புகளினதும் கூட்டமைப்பு)

# ALL CEYLON HINDU CONGRESS

**(Federation of Hindu Religious Associations and Temple Trusts in Sri Lanka)**

| நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைத் தலைவர் | தலைவர் | பொதுச் செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|---|
| **Chairman of the Board of Trustees** | **President:** | **Hony. General Secretary:** | **Hony. Treasurer:** |
| வி. கயிலாசபிள்ளை | கந்தையா நீலகண்டன் | முத்தையா கதிர்காமநாதன் | வே. கந்தசாமி |
| *V.Kailasapillai* | *Kandiah Neelakandan* | *Muthiah Kathirgamanathan* | *V. Kandasamy* |
| *Phone:2575566 (Res)* | *Phone: 2580807 (Res)* | *Phone: 2582139 (Res)* | *Phone: 2586620 (Res)* |
| *Fax : 2575472* | *2371100 (Off) - Fax : 2371111* | *Fax: 2361381* | *Mobile: 071-5349150* |
| *hariomak@gmail.com* | *neela@mnlaw.lk* | *mknathan21@yahoo.com* | *vkandasami@gmail.com* |


## அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவர் திரு கந்தையா நீலகண்டன் அவர்களின் வாழ்த்துச் செய்தி.

இலங்கையில் உள்ள இந்துக் கோயில்களில் தனித்துவம் மிக்க சமுதாய சேவையாற்றும் கோயிலாக துர்க்கா தேவி தேவஸ்தானம் விளங்கி வருவது அனைவரும் அறிந்ததே. இத்தேவஸ்தானத்தில் தலைவராக விளங்கியவர் அமரர் தெய்வத்திருமகள் சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள். உலகம் போற்றும் உன்னத அறப்பணியாளர்.

இத் தெய்வத்திருமகளின் முயற்சியில் உருவாக்கப்பட்ட துர்க்காபுரம் மகளிர் இல்லம் தனது 32 வது ஆண்டு நிறைவு விழாவினை பூர்த்தி செய்வது குறித்து வாழ்த்துவதில் பேருவகை கொள்கின்றேன். யான் சட்டக்கல்லூரி மாணவனாக விளங்கும் போதே சிவத்தமிழ் செல்வி அன்னை மீது உயர்ந்த பக்தி கொண்டிருந்தேன். எங்கள் அகில இலங்கை இந்து மாமன்றம் துர்க்காதேவி தேவஸ்தான பணிகளை என்றும் ஆதரிக்கத் தவறுவதில்லை. மகளிர் இல்லப் பிள்ளைகளின் வளர்ச்சியில் பெரிதும் அக்கறை கொண்டு உழைத்து வரும் தேவஸ்தான நிர்வாக சபையை இவ்வேளையில் வாழ்த்துகின்றேன். இன்றைய தேவஸ்தான நிர்வாக சபைத் தலைவர் சைவஞானபானு செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் அவர்கள் வன்னிப்போரினால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளை மகளிர் இல்லத்தில் இணைக்க வேண்டுமென பெரிதும் முயற்சி செய்தார்கள். அவர்களின் முயற்சிக்கு அகில இலங்கை இந்து மாமன்றமும் தமது பங்களிப்பை வழங்கியுள்ளது. இதனால் பல சைவ பெண்பிள்ளைகள் துர்க்காபுரம் மகளிர் இல்லத்தில் தஞ்சமடையும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. மகளிர் இல்லப் பிள்ளைகள் பல கல்விச் சாதனைளை தொடர்ந்து ஆற்றி வருவது சாதனையாகும். மகளிர் இல்லப் பிள்ளைகளின் எதிர்காலம் குறித்து துர்க்காதேவி தேவஸ்தானம் பல நல்ல செயற்றிட்டங்களை ஆற்றி வருவது தெரிந்து பெரிதும் ஆனந்தமடைகின்றோம்.

துர்க்காபுரம் மகளிர் இல்லத்தில் கற்கும் மாணவர்கள் சிறந்த ஆளுமை மிக்க தலைவிகளாக எதிர்காலத்தில் திகழ வேண்டும். எங்கள் சமயத்தின் பாரம்பரியத்தை எதிர்காலத்தில் காப்பதற்கு இப்பிள்ளைகள் முன்வர வேண்டும். துர்க்காபுரம் மகளிர் இல்லப் பிள்ளைகள் பெரும் கல்விமான்களாக விளங்க வேண்டும். அகில இலங்கை இந்து மாமன்றம் துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் வளர்ச்சி கண்டு பெருமை கொள்கின்றது. இந்நாட்டிலுள்ள சைவ திருக்கோயில்கள் இத்தகைய பணிகளில் ஈடுபட வேண்டும் என்பதனை மாமன்றம் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றது. துர்க்காபுரம் மகளிர் இல்லம் துர்க்கா தேவியின் திருவருளால் எவ்வித குறையும் இன்றி நிறைவாக சிறந்து விளங்க வாழ்த்தி அமைகின்றேன்.

இறைபணியில்

12.3.2014

*கந்தையா நீலகண்டன்*

*தலைவர்*

Vazthu-Message-Durgapuram.doc/HINDU

தலைமையகம்: இல.91/5, சேர். சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு – 02, இலங்கை.

**Head Office: No 91/5, Sir Chittampalam A. Gardiner Mawatha, Colombo – 02, Sri Lanka.**

தொ.பேசி/Phone : 2434990 www.hinducongress.lk தொ.நகல்/Fax : 2344720

hinducongress@gmail.com

# வாழ்க! வானமளந்து வளர்க!!

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் சமுதாய நோக்குக்கான மூலச் சான்றாதாரமாக விளங்கும் துர்க்காபுரம் மகளிர் இல்லம், முப்பத்திரண்டாவது ஆண்டு விழாக்கண்டு சிறப்பிக்கும் தருணத்தில் வாழ்த்துரை வழங்கும் வாய்ப்பு அமைந்தமைக்காக அகம் மிக மகிழ்கின்றேன்.

அண்ணளவாக, அரை நூற்றாண்டுக்கு முன் அன்றிருந்த தர்மகர்த்தா சபை ஆன்றோர், இத்திருக்கோவிலின் பணிகள் பல்கிப் பெருகுவற்காக நடைமுறை அதிகாரங்களுடன் ஆலய அயலிலுள்ள சைவாசார ஒழுக்க சீலர்களைச் சேர்த்து நிர்வாக சபை ஒன்று தம்கீழ் நியமித்தது மிகுந்த தொலைநோக்குடன் கூடிய செயற்பாடாகும். அன்றிலிருந்து எம் ஆலயப் புகழ் வானை அளாவுவதற்கு அத்திவாரமிடப்பட்டது.

கால் நூற்றாண்டு காலமாகப் பொதுச் செயலாளராகப் பொன்னான சேவை செய்த சிவவாகீசர் அவர்களுக்குத் தன் கனவுகளுக்கு வடிவம் கொடுக்க துர்க்கைத் தாய் தந்த வரப்பிரசாதமாக துர்க்கா துரந்தரி அன்னை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் அமைந்தார். நிர்வாக சபையிலும், பின் அதனூடாகத் தர்மகர்த்தா சபையிலும் தலைமைப் பொறுப்பு அளிக்கப்பட்ட அன்னை அமரர் சிவவாகீசரின் செயலாளுமையுடன் செய்த பணிகள் அனந்தம். ஆனால் அவற்றுள் தனித்துவமானது, அன்புள்ளங்கள் தன்னை அம்மா என்றழைக்க, இவ்வில்லத்தை நிறுவி இச்சிறுமியருக்கு அல்லும் பகலும் தாயாக விளங்கியமையாகும். சிறுமியரைச் சைவத்தமிழ் பண்பாட்டில் நெறிப்படுத்தியதுடன், கண்ணியத்தில் இவ்வில்லத்தை இலங்கைத் திருநாட்டிற்கே முன்னுதாரணம் ஆக்கினார் துர்க்கா துரந்தரி அன்னை அவர்கள்.

சின்னஞ்சிறிய வயதில், என்னைக் கரம்பிடித்து ஆலயத்திற்கு அழைத்துச் செல்லும் பெரிய தந்தையார் சிவவாகீசரும் அறமும் அன்பும் ஒருருக்கொண்ட அன்னை சிவத்தமிழ்ச்செல்வி அவர்களும் இவ்வில்லத்தை செவ்வனே இயக்குவது பற்றியும் கோசாலை முதலிய தொடர்புபட்ட விடயங்கள் பற்றியும் இறும்பூதுடன் உரையாடுவது நிழலாக எம் மனதில் இன்றும் நிற்கின்றது.

இடப்பெயர்வு காலம், தாய்ப்பறவை குஞ்சுகளைக் காப்பது போல, அன்னை அவர்கள் இராமநாதன் கல்லூரி, உசன் என்று அடிக்கடி இடம்பெயர்ந்தும், இல்லப் பணிகள் தொய்வற்று இயங்க வைத்தார். இக்கால கட்டத்தைப் பற்றி ஓரளவு நேரடியாகவும், பெரும்பாலும், பொதுச் செயலாளராகிய மலைமகள் இராமநாதன் அவர்கள் கூறியும் நான் அறிந்துள்ளேன்.

2008 – 2009 இலங்கைத் தமிழர்க்கு சோதனையான காலம். இவ்வில்லக் குழந்தைகளின் அன்புத் தாய் ஸ்தூல சரீரம் நீத்துத் துர்க்கையுடன் ஒன்றினார். எமது நாட்டில் வரலாறு காணாத முறையில் ஆதரவற்ற சிறுவர்களின் எண்ணிக்கையும் அனர்த்தங்களால் பெருகியது.

ஆனால், துர்க்கைத்தாய் தன் இல்லத்தை இனியும் நனி சிறக்க உறுதி பூண்டிருப்பதைக் கடந்த ஐந்து வருடங்கள் காட்டியுள்ளன. தொன்று தொட்ட பாரம்பரியத்தில் எந்தத் தொய்வும் இல்லாமல், செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் அவர்கள் அன்னையின் அருளால் நிர்வாகசபைத் தலைவராகப் பதவியேற்றார்.

பெரியோரின் பணிகளைப் பொறுப்பேற்போர் அப்பெரியோர்க்குச் செய்யும் பேருதவி.

"இவன் தந்தை எந்நோற்றான் கொல்"

எனத்தக்கதாக அப்பணிகளை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்வதாகும். அவ்வகையில் இருபதாம் நூற்றாண்டில் எம் ஆலயத்தின் இணையற்ற சாதனையாம் இல்லத்தை இருபத்தோராம் நூற்றாண்டு நோக்கிப் பயணிக்கச் செய்கிறார் செஞ்சொற் செல்வர்.

கல்விக்காக இருவருடம் வெளிநாடு சென்றுவந்த நான் இவ்விடைவெளியில் பல பிரமிக்கத்தக்க புதுமைகளைக் காண்கின்றேன்.

ஐம்பதுகளாக இருந்த சிறுமியர் எண்ணிக்கை இன்று 137 ஆகியுள்ளது. புதிய பொலிவுடன் கட்டடங்கள் உருவாகியிருக்கின்றன. சிறுமியரின் போக்குவரத்து, கல்வி, பொழுதுபோக்கு மற்றும் பல தேவைகளுக்காக வசதிகள் பெருகியுள்ளதாக அறிகின்றேன். இவற்றுக்கெல்லாம் சிகரமாக, வீடமைப்புத் திட்டமொன்று கருவாகி, உருவாகுவதும் அற்புதமான செய்தி. சிறுமியரின் கல்விப் பெறுபேறுகளும் ஆண்டுதோறும் மெருகேறி வருவது கண்கூடு.

இல்லத்தின் எழுச்சி கண்டும் அதனை ஏற்றிவைத்த இணையில்லா இரு தலைமைகளைப் போற்றியும், இரவு பகல் இதற்காக உழைக்கும் நிர்வாக சபையினர், தொண்டர்கள், ஊழியர்கள் மற்றும் அனைவரையும் புகழ்ந்தும் இதற்கெல்லாம் கர்த்தாவாம் அம்பாளை வணங்கியும், இவற்றுக்காக இறும்பூது அடையும் தர்மகர்த்தா சபையுடன் சேர்ந்து இனிமையே உருவான இவ்வில்லச் சிறுமியரையும், இல்லத்தையும் வாழ்த்துவதில் பெருமையடைகின்றேன்.

வாழ்க துர்க்காபுரம் இல்லம்!

வளர்க அன்பறம் நல்லம்!!


**Dr. தி. திவாகரன்**
**நரம்பியல் நிபுணர்**
**பொதுச் செயலாளர்,**
**(தர்மகர்த்தா சபை)**
**துர்க்காதேவி தேவஸ்தானம்,**
**தெல்லிப்பழை.**

# என்றென்றும் ஒளிவீசிப் பிரகாசிக்கட்டும் துர்க்காபுரம் மகளிர் இல்லம்

இன்று முப்பத்து இரண்டாவது அகவையில் காலடி எடுத்து வைத்துள்ளது துர்க்காபுரம் மகளிர் இல்லம். இவ் இல்லமானது பல சோதனைகள் வேதனைகளைச் சந்தித்து அதைச் சாதனைகளாக மாற்றியுள்ளது. எனது சகோதரி சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களால் ஆரம்பித்து வழிநடாத்தப்பட்ட இவ் இல்லமானது, பல வழிகளாலும் முன்னேற்றமடைவது மிகவும் மகிழ்ச்சியைத் தருகிறது.

இவ் இல்லத்தில் வளர்ந்து வரும் பிள்ளைகள் எதிர் காலத்தில்நாட்டின் தலைசிறந்த பிரஜைகளாக வரவேண்டும் என்பதே எனது விருப்பமாகும். எத்தனையோ சிறுவர் இல்லங்கள் தோன்றி இன்று இல்லாமல் போய்விட்டன. அம்பாளின் அருளினால் துர்க்காபுரம் மகளிர் இல்லம் சுடர்விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. அம்பாள் எல்லாவற்றையும் நல்லபடி நடாத்திக் கொண்டு இருக்கிறார். அம்பாளின் அருளினால் இவ் இல்லமானது மேலும்பல சிறப்புக்கள் பெறவேண்டுமென எல்லாம்வல்ல துர்க்காதேவியை வணங்குகின்றேன்.

**க. அப்பாக்குட்டி**

# துர்க்காபுரம் மகளிர் இல்ல அதிபரின் உள்ளத்திலிருந்து....

ஒரு சமுதாயத்தின் பண்பாட்டையும் கலாசாரத்தையும் கட்டிக் காப்பவர்கள் அந்நாட்டுப் பெண்களே ஆவர். ஒவ்வோர் இனத்திலும் உருவாகும் பெரியவர்களுக்கும் பின்னால் ஒரு பெண் உந்துசக்தியாக இருப்பதை வரலாறு கூறுகின்றது. பெண்ணினத்தின் முன்னேற்றம் சட்டத்திட்டங்களினால் சூழல் காரணிகளினால் தடைப்பட்டால் அது சமுதாயத்திற்கு பெரும் கேடாக அமையும்.

"யத்ர நார்யஸ்து பூஜ்யந்தே, ரமந்தே தத்ர தேவதா"
"பெண்கள் மதிக்கப்படுகின்ற இடங்களில் தேவர்கள் இன்புறுகின்றனர்" என்று பெண்களின் முன்னேற்றம் எவ்வளவு முக்கியம் என மனுஸ்மிருதி கூறுகின்றது.

இற்றைக்கு 32 வருடங்களுக்கு முன் இதனை உணர்ந்து ஆதரவற்ற, பொருளாதார ரீதியில் நலிவுற்ற பெண் பிள்ளைகளை முன்னேற்ற வேண்டும், சமூகத்தில் சிறந்த பிரஜைகளாக உருவாக்க வேண்டும் என்ற சமூக சிந்தனையுடன் சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களினால் ஆரம்பிக்கப்பட்டது தான் இந்த துர்க்காபுரம் மகளிர் இல்லம். இவ்வருடத் தொடக்கத்தில் 137 பிள்ளைகளுடன் இயங்கிக் கொண்டிருக்கும் இவ்வில்லமானது இதுவரை காலமும் ஏறக்குறைய 373 பிள்ளைகளுக்கு வாழ்வளித்திருக்கின்றது.

சிவத்தமிழ்ச்செல்வி அவர்களின் தூரநோக்கோடு தாய்த்தலைமைத் துவத்தைக் கட்டியெழுப்பி எம் இல்லப் பிள்ளைகள் சமுதாயத்தின் சவால்களை எதிர்நோக்கும் திறன் பெற்றவர்களாக சமுதாயத்தில் காலடி எடுத்து வைக்கிறார்கள் என்பது ஸ்தாபகருக்குப் பெருமை சேர்க்கும் விடயமாகும்.

கடந்த இரு வருடங்களாக இல்லத்தின் முகாமையாளருக்கு ஒப்பாக அதிபர் என்ற வகையில் எனது பணி மனநிறைவானது. சவால்கள் நிறைந்தது. முக்கியமாக அண்மைக் காலங்களில் சமூகத்தில் புரையோடியுள்ள சிறுவர் துஷ்பிரயோகம், பாலியல் சீர்கேடுகள் போன்றவற்றிலிருந்து சிறுவரைப் பாதுகாப்பதற்காக அதற்குரிய திணைக்களங்கள் எடுத்துவரும் முயற்சிகள் இல்லத்து நடைமுறைகளையும் ஒழுங்குபடுத்தி வருகின்றது. இதனால் இல்ல

நடைமுறைகள், நிர்வாகம் என்பன ஒரு நிறுவன அமைப்பு ரீதியாகத் தொழிற்பட எம்மை வழிநடத்திச் செல்கின்றது. இதன் மூலம் சில கட்டுப்பாடுகள் ஆவண ரீதியாக நடைமுறைப்படுத்தப்படவேண்டிய தேவை எமக்குள்ளது.

இதற்காக எம்முடன் ஒத்துழைக்கும் இல்ல நிர்வாகத்திற்கும் சிறப்பாக அதன் தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களுக்கும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன். இல்லப் பிள்ளைகளின் சகல தேவைகளும் இனம் காணப்பட்டு அறியப்படும்போது உடனடியாக அவற்றைத் தீர்த்து வைப்பதில் ஒரு தலைசிறந்த நிர்வாகியாக அவர் தொழிற்படுகின்றார் என்பது மிகையல்ல. அத்துடன் எமது பிள்ளைகளின் தொகைக்கு ஏற்ப இருக்கவேண்டிய 13 மேற்பார்வையாளர்களின் வேலைகளை 5 மேற்பார்வையாளர்கள் ஆற்றிக் கொண்டிருப்பது என்பது அவர்களுக்கும் நன்றிகூற வைக்கின்றது.

பொதுவாக ஆதரவற்றோர் இல்லம் எனும்போது அவர்களுக்கு உணவு, உடை, உறையுள் என்பவைதான் அத்தியாவசிய தேவைகள் என்பது சமூகத்தின் எண்ணமாகும். ஆனால் அவர்களின் எதிர்காலம் மற்றும் அவர்கள் ஒரு சிறந்த பிரஜையாக சமூகத்தில் காலடி எடுத்து வைப்பதற்கு கல்விதான் முக்கியம் என்பதை உணர்ந்து கல்வித்தேவைகள் எதுவானாலும் மறுப்பேதுமின்றி ஏதோ ஒரு வகையில் உதவிகளைப் பெற்று எம் பிள்ளைகளுக்கு வழங்குவது எமது தலைவர் கலாநிதி ஆறு.திருமுமுருகன் அவர்கள் தூரநோக்கோடு செயற்படுகின்றார் என்பதற்குச் சான்றாகும்.

எம் பிள்ளைகளில் 12 இதுவரை பல்கலைக்கழக பட்டப்படிப்பை முடித்தவர்கள், 09 பேர் பட்டப்படிப்பில் ஈடுபடுகின்றனர். பல்கலைக்கழக அனுமதியை எதிர்பார்த்து 03 பேர் உள்ளனர். இதைவிட தரம் 10, 11இல் 37பேர் உள்ளனர். இவர்களுடைய பாடசாலைக்கல்வி, பிரத்தியேக பாட போதனை என்பவற்றுக்கு நாம் மிகுந்த முயற்சி எடுக்கின்றோம். இதைவிட இன்றைய உலகின் தேவை கருதி கணனிக்கல்வி, பேச்சு ஆங்கிலம், இசை, வாத்தியக்கருவிகள் இசைத்தல் போன்றவற்றையும் கற்கிறார்கள். எம்மைப் பொறுத்தவரையில் எந்த ஒரு பிள்ளையும் இந்த வகையான கல்வியைப் பெற விரும்புகின்றேன் எனக் கூறினால் அவரது வேண்டுகோள் நியாயமாக இருக்கும் பட்சத்தில் என்றைக்குமே நாம் மறுத்ததில்லை என்பதைப் பெருமையுடன் கூறிவைக்க விரும்புகின்றேன். இதற்கு பூரண ஒத்துழைப்பு நல்கும் தலைவர் அவர்கட்கும் சிறப்பாக இத்தேவைகளை நிறைவேற்றவேண்டிய பண உதவி மற்றும் உதவிகளைச் செய்யும் அனைத்து நல்லுள்ளங்களுக்கும் நன்றிகள்.

32ஆவது ஆண்டு விழா சிறப்புமலர் இப்போது உங்கள் கைகளில் தவழ்ந்து கொண்டிருக்கின்றது. பிள்ளைகளின் ஆக்கங்கள், எண்ணங்கள், ஆதங்கங்கள், இலக்குகள் எழுத்துருவில் வடிவமைக்கப்பட்டுள்ளன. பெரியோர்களின் ஆசிகள், வாழ்த்துக்கள், அறிவுரைகள் மலருக்கு மெருகூட்டுகின்றன. நிறைவாக இல்லம் பிள்ளைகளின் தொகை அதிகரிப்பால் வளரவேண்டும் என நிச்சயமாக எந்தக் காலத்திலும் நாம் விரும்பவில்லை.

ஆனால் எம்மிடம் வளரும் பிள்ளைகள் அனைவரும் கல்வியில், ஒழுக்கத்தில் மேலோங்கி சுபீட்சமான வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும் என ஸ்ரீ துர்க்காதேவி அம்பாளின் பாதங்கள் பணிந்து பிரார்த்தனை செய்கிறோம். எம் பிள்ளைகளும் அதை உணர்ந்து தம்மை வளர்த்தவர்களிடம் தமக்கு உதவிகள் செய்பவர்களிடம் நன்றி மறவாமல் நற்பிரஜைகளாக சமூகத்தில் நுழைய வேண்டுமென மனமார வாழ்த்தி அமைகின்றேன்.

**திருமதி. சிவமலர் அனந்தசயனன்**
**இல்ல அதிபர்**

# பொருளடக்கம்

ஆசிச்செய்திகள்

வாழ்த்துச் செய்திகள்

| | | |
|---|---|---|
| 1. | 32வது ஆண்டு நிறைவு பரிசளிப்பு விழா அறிக்கை - 2014 | 1 |
| 2. | ஸ்ரீமான் அ.சே.சுந்தரராஜ ஐயங்கார், B.A. அவர்கள் | 16 |
| 3. | அகவை எழுபத்தெட்டு பூர்த்தி பெறும் "ஆன்மீக அன்னை" சிவத்தமிழ்ச்செல்வி | 22 |
| 4. | அன்புச் செய்தி | 25 |
| 5. | தாய்த் தலைமைத்துவம் | 27 |
| 6. | எனது இருபத்தைந்து வருட மேற்பார்வையாளர் பணியில் துர்க்காபுரம் மகளிர் இல்லம் | 30 |
| 7. | சிவத்தமிழ்ச்செல்வி சைவத்தமிழ் ஆய்வு நூலகம் | 34 |
| 8. | போதைப்பொருள் பாவனை பற்றி பிள்ளைகளுடன் பேசுதல் | 37 |
| 9. | நம்மை நாமே செதுக்குவோம் - தேடல் | 45 |
| 10. | எனக்கு வாழ்வளித்த துர்க்காபுரம் மகளிர் இல்லம் | 48 |
| 11. | என்னைச் செதுக்கிய சிற்பியும் நான் வளர்ந்த கலைக்கோயிலும் | 53 |
| 12. | இல்லத்தின் வளர்ச்சிப்பாதையில் ஒரு நோக்கு | 56 |
| 13. | தமிழ் ஒரு செம்மொழி | 62 |
| 14. | அறநூல்கள் காட்டும் பெண்கள் | 64 |
| 15. | இசையில் வாத்தியக்கருவியின் முக்கியத்துவமும் பயன்பாடும் | 66 |
| 16. | ரஷ்யப்புரட்சி - 1917 | 68 |
| 17. | தோமஸ் கூன் | 70 |
| 18. | சைவசமயத்தின் தொன்மையும் மேன்மையும் | 71 |
| 19. | பாடத்தெரிவில் மாணவர்களின் பங்களிப்பு | 74 |
| 20. | முயற்சிகொண்டு உன்னை உயர்த்திடு | 76 |
| 21. | ஆகமமும் அதன் முக்கியத்துவமும் | 77 |
| 22. | மாவீரன் நெப்போலியன் பொனபார்ட் | 81 |

| | | |
|---|---|---|
| 23. | இடம்பெயரும் கண்டங்கள் | 83 |
| 24. | இப்பத்தைய சமுதாயம் வேறமாதிரி | 85 |
| 25. | எனது கிராமத்தின் ஒளி ஏன் மங்கியது. | 86 |
| 26. | மாணவர் கடமை | 88 |
| 27. | ஆறுமுகநாவலர் | 89 |
| 28. | ஆன்மீக அன்னை | 91 |
| 29. | கூண்டுக்கிளியின் சுயசரிதை | 93 |
| 30. | மகாத்மா காந்தி | 94 |

| | |
|---|---|
| கவிதைகள் | 96 |
| இலங்கை பற்றிய பொதுவான தகவல்கள் | 107 |
| ஆங்கில ஆக்கங்கள் | 110 |
| மாணவர் மன்ற அறிக்கை | 113 |
| பரிசுப்பட்டியல் | 114 |

# துர்க்காபுரம் மகளிர் இல்லம்

## தெல்லிப்பழை.

## 32வது ஆண்டு நிறைவு பரிசளிப்பு விழா அறிக்கை–2014

துர்க்கையம்பாளின் பாதங்களை பணிந்து வணங்கி 32வது ஆண்டு நிறைவு பரிசளிப்பு விழா அறிக்கையை உங்கள் முன் சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

இன்றைய இந்த விழாவிற்குத் தலைமை தாங்கிக் கொண்டிருக்கும் செஞ்சொற்செல்வர் சைவஞானபானு கலாநிதி ஆறு திருமுருகன் அவர்களே, பிரதம விருந்தினராக வருகை தந்துள்ள யாழ் பல்கலைக்கழகப் பேராசிரியர் கலாநிதி கார்த்திகேசு குகபாலன் தம்பதிகளே, ஆசியுரை வழங்கவந்த ஸ்ரீதுர்க்கா தேவஸ்தான பிரதம குருக்கள் சிவஸ்ரீ அகிலேஸ்வர குருக்கள் அவர்களே, நல்லை ஆதீன குரு முதல்வர் அவர்களே, சிறப்பு விருந்தினராக வருகை தந்துள்ள வைத்தியநிபுணர் கௌரி செல்வரட்ணம் அவர்களே, கௌரவ விருந்தினராக வருகை தந்துள்ள திரு.கு.கௌதமன், மாவட்ட உளசமூக இணைப்பாளர் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, மாவட்ட செயலகம் யாழ்ப்பாணம், அவர்களே, வரவேற்புரைக்காக வருகை தந்துள்ள இல்ல நிர்வாகசபை உறுப்பினர் திருமதி.கலாதேவி பொன்னம்பலம் அவர்களே, வாழ்த்துரை வழங்க வந்துள்ள துர்க்காபுரம் மகளிர் இல்ல அதிபர் திருமதி.சிவமலர் அனந்தசயனன் அவர்களே தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்ல 32வது ஆண்டு நிறைவு விழாவிற்கு வருகை தந்துள்ள அனைவரையும் வருக வருகவென வரவேற்று வணக்கம் கூறி உவகையடைகின்றோம்.

03.02.1982 இல் 09 சிறுமிகளுடன் ஆரம்பித்த தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லம் இன்று தனது 32வது ஆண்டு விழாவை கொண்டாடுகின்றது. ஆன்மீக வழிகாட்டி துர்க்கா துரந்தரி அன்னை சிவத்தமிழ் செல்வி அமரர் தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் சிந்தனையில் உதித்த இந்த சரணாலயம் இன்று எல்லா வளங்களையும் தன்னகத்தே கொண்டு வளர்ந்து வருகின்றது. இதற்கு எமது “அம்மா” அவர்களின் தியாக சிந்தனையும் தவப்பலனும் என்பதோடு எம்மை காத்திடும் ஸ்ரீதுர்க்காதேவி அம்பாளின் அருட்கடாட்சமுமேயாகும் என்றால் மிகையாகாது. “அம்மா” அவர்கள் அம்பாளின் பாதங்களை அடைந்து 7வருடங்கள் பூர்த்தியானதை ஆத்மார்த்தமாக நினைவு கூருகின்றோம்.

இல்லத்தில் எமக்கு ஆதரவாக, உறுதுணையாக இருந்த இருபெரும் தூண்கள் கடந்த வருடம் இவ்வுலகை விட்டு மறைந்து விட்டார்கள். எமக்கு பிரதம மேற்பார்வையாளராக இருந்த செல்வி.காமாட்சி கந்தையா அவர்கள் “மிஸ்” என்று எல்லோராலும் அன்பாக அழைக்கப்படுபவர் 10.08.2012இல் இறைபதம் அடைந்தார். இல்லத்தில் மிகச் சிறுவயதிலேயே வந்து இல்லம் ஆரம்பித்த காலம் தொட்டு “அம்மாவின்” அரவணைப்பில், வழிகாட்டலில்

வளர்ந்த திருமதி.மஞ்சுளா உதயகுமார் அவர்கள் தேவஸ்தான அலுவலகத்தில் எழுதுவினைஞராக சிறப்புடன் கடமையாற்றி வருகையில் இரண்டாவது பிரசவத்தின் போது நோய் வாய்ப்பட்டு 31.06.2012 இல் இறைவனடி சேர்ந்தமை எமக்கு அதிர்ச்சியான சம்பவம் ஆகும். இவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

## இல்லத்தின் விருதுவாக்கு

"ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காணலாம்"

## தூரநோக்கு

"சுயதிறன் நிறைவுடன் உயர் மனித விழுமியங்களைக் கொண்டதாக தாய்த் தலைமைத்துவ பண்பு நிலை விருத்திசார் மகளிர் உருவாக்கம்"

### பணிக்கூற்று

**"தாங்கும் திறன் அடிப்படை, காப்பு, அன்பு, கணிப்பு, கல்வி, ஆகியன** வழங்கப்படுவதன் மூலம் வாழ்வாதார வளம் குறைந்த பெண் பிள்ளைகள் சுயதிறன் நிறைவுத்தேவை பெற்று எதிர்கால, சமூகச் சவால்களுக்கு முகம் கொடுக்கக் கூடிய சமூக அந்தஸ்தைப்பெற்றுக் கொள்ளும் ஆறுதல் மையமாக உயர்ந்து பயணிப்போம்"

### அரசாங்கப்பதிவு

துர்க்காபுரம் மகளிர் இல்லம் J/3/84 இலக்கத்தில் 23.09.1988இல் நன்னடத்தை திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டு அரச அங்கீகாரம் பெற்றுள்ளது. வலி வடக்கில் பிரதேச செயலகத்தில் J/F/GN/83/VOL/2005/1 இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டதுடன் யாழ் மாவட்டசிறுவர் இல்லம் மாகாண பதிவாளரால் 1956ஆம் ஆண்டு திருத்திய சட்டயாப்பின் பிரகாரம் 6வது கோவை 142வது அத்தியாய விதிகளுக்கு அமைவாக LP/24/02/01/CH/06 பதிவு இலக்கத்தில் எமது இல்லம் 02.04.2009இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

### இல்லத்தின் தொழிற்பாட்டுக் கட்டமைப்பு

இல்லத்தின் யாப்பின் படி 06வயதிற்கும் 18வயதிற்கும் இடைப்பட்ட தாய்,தந்தையரை இழந்த பெண் பிள்ளைகளை அனுமதிக்கின்ற போதும் நாட்டின் அசாதாரண சூழலால் நிர்க்கதியான வறுமைக்கோட்டின் கீழ் தள்ளப்பட்ட பிள்ளைகள் நன்னடத்தை திணைக்களம் , சிறுவர் நீதி மன்றத்தின் கட்டளைப்படி என்ற வகையில் கடந்த ஓரிரு வருடங்களில் பிள்ளைகள் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். 06 வயதில் இங்கே அனுமதிக்கப்பட்டு பெற்றோர், பாதுகாவலர்கள் அற்ற நிலையில் எதிர்காலத்திற்கு துர்க்காபுரம் மகளிர் இல்லத்தையே நம்பி உள்ள வேறு போக்கிடமற்ற 18வயதுக்கு மேற்பட்டவர்களும் இங்கே உள்ளனர். அவர்கள் பல்கலைக்கழகக் கற்கையை மேற்கொள்ளுவதால் இல்லம் அவர்களையும்

ஆதரித்து வருவது பெருமைப்படக்கூடியது. சட்ட திட்டங்களுக்கு அப்பால் மனித நேயத்துடன் தொழிற்படவேண்டிய அவசியத்தை இல்லமும், திணைக்களமும் உணர்ந்துள்ளது என்பது எமக்கு மனஆறுதலான விடயம்.

ஓரளவு நாட்டுச் சூழல் சீராக பெற்றோருடன் அல்லது பாதுகாவலருடன் சில பிள்ளைகள் மீள் இணைக்கப்பட்டு 2013 ஆரம்பத்தில் 126 பிள்ளைகள் இருந்தனர். இன்றைய புள்ளிவிபரப்படி 2014ல் இம்மாத தொடக்கத்தில் 137 பேர் உள்ளனர்.

பிள்ளைகள் மல்லாகம் சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலயத்திலும், தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாலயத்திலும் (தரம் 2 தொடக்கம் 05 வரை) தரம் 06 தொடக்கம் க.பொ.த உயர்தரம் வரை மருதனார்மடம் யா/இராமநாதன் கல்லூரியிலும், யா/வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையிலும் கல்வி கற்கின்றனர். இவர்களின் கல்வி வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து வளர்த்தெடுக்கும் அப்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் யாவருக்கும் மனமார்ந்த நன்றி கூறுகின்றோம். மேலும் எமது பிள்ளைகள் யாழ்பல்கலைக்கழகம், யாழ் நுண்கலைப்பீடம், வந்தாறுமூலை கிழக்கு பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம், வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிகள் ஆகியவற்றில் உயர்கல்வியை மேற்கொண்டு வருகின்றனர். ஏற்கனவே உயர் கல்வி பெற்று பட்டதாரிகளாக வெளியேறியவர்கள் வேலை வாய்ப்புக்கள் பெற்று அரசதுறைகளில் பணியாற்றுவதுடன் க.பொ.த உயர்தரப் படிப்பை முடித்து வெளிவாரிப்பட்டப் படிப்பிலும் மற்றும் இல்ல நிர்வாகம் தேர்ந்து அமைத்துக் கொடுக்கும் தனியார் நிறுவன வேலை வாய்ப்புகளையும் பெற்று தமது எதிர்காலத்தை சிறப்புடன் அமைத்துள்ளனர். மேலும் சிலர் நிரந்தர வேலை வாய்ப்பு கிடைக்கும் வரை அறநெறிப்பாடசாலை ஆசிரியராகவும் பிரத்தியேக பாடபோதனையிலும் மற்றும் தேவஸ்தான அலுவலகத்திலும் கடமையாற்றுகின்றனர்.

## பல்கலைக்கழக அனுமதி

2011-2012 கல்வியாண்டு கற்கைநெறிக்காக 02 பேர் யாழ்பல்கலைக்கழகத்திற்கும் ஒருவர் வந்தாறுமூலை கிழக்கு பல்கலைக்கழகத்திற்கும் செல்கின்றனர். ஒருவர் யாழ் தேசிய கல்வியற் கல்லூரிக்கு செல்கின்றனர்.

### யாழ்பல்கலைக்கழக அனுமதி – கலைப்பிரிவு

**விதுஷாயினி பாலச்சந்திரன்**

**செல்வதியம்மா பூலோகம்**

### வந்தாறுமூலை பல்கலைக்கழக அனுமதி – கலைப்பிரிவு

**சர்வலோயினி நாகேந்திரம்**

**தேசிய கல்வியியற் கல்லூரி, யாழ்ப்பாணம்**

**தேவதர்மிளா தர்மகுலராசா (ஆரம்ப பிரிவு)**

மேலும் 2012–2013 கல்வியாண்டு கற்கைநெறிக்காக ஜெ.தேவரூபி கலைத்துறைக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம். செல்வி.இ.மதிவதனி உயர் தொழில்நுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணத்தில் உயர் தேசிய டிப்ளோமா–முகாமைத்துவக் கல்வி கற்றுக் கொண்டு இருக்கிறார். ஏற்கனவே 2010–2011 கல்வி ஆண்டில் 02 பல்கலைக்கழக மாணவிகள் எம் இல்லத்தில் உள்ளனர். 2011–2013 கற்கை ஆண்டில் வவுனியா தேசிய கல்வியற் கல்லூரியில் கற்ற செ.தமிழ்விழி கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பட்டம் பெற்று வெளியேறியுள்ளார். இவர்கள் எதிர்காலம் சிறக்க வாழ்த்துக்கள்.

## 2013 க.பொ.த உயர்தர பரீட்சை பெறுபேறு அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதிக்கான தகுதி பெற்றவர்கள்

**சிந்துஜா பாலச்சந்திரன்**

**நாகசுஜித்தா ஜெகம்புகழ்ராஜா**

**மதிவதனி இலட்ச்சுமாணனந்தன்**

**சிவரூபி சிவசுப்பிரமணியம்**

**பிறேமினி குமார்**

### மலைமகள் இராமநாதன் ஞாபகார்த்த பரிசு

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான நிர்வாக சபையின் முன்னாள் பொதுச் செயலாளரும் தர்மகர்த்தா சபை உறுப்பினருமாகிய அமரர் திருமதி. மலைமகள் இராமநாதன் ஞாபகார்த்தமாக கடந்த வருடத்திலிருந்து கல்வியில் சாதனை படைக்கும் மாணவிகளுக்கு அமரர் மலைமகள் இராமநாதன் ஞாபகார்த்த பணப்பரிசை திருமதி.சந்திராதேவி திருநாவுக்கரசு அவர்களும் நரம்பியல் நிபுணர் திரு.தி.திவாகரன் அவர்களும் வழங்குகின்றனர். இவ் வருடம் க.பொ.த உயர்தர பரீட்சையில் அதி உயர்ந்த பெறுபேறுகள் பெற்ற இருவருக்கு வழங்கப்படுகின்றது.

### வாகன வசதி

இல்லப் பிள்ளைகள் பாடசாலைக்கு சிரமமின்றி சென்றுவர ஏற்கனவே எம்மிடம் உள்ள இரு சிற்றூர்திகளும் ஒரு பேரூந்து பஸ்வண்டியும் உள்ளன. இதைவிட வைத்திய தேவைக்கும் மேலதிக வகுப்புக்களிற்கு செல்லவும் முச்சக்கர வண்டி உள்ளது. வாகனங்களின் பராமரிப்புக்கு பொறுப்பாக திரு.ச.உமாசுதன் (நிர்வாக சபை உறுப்பினர்) உள்ளார்.

### இணைப்பாடவிதான செயற்பாடு

பிள்ளைகள் மாலை நேரங்களில் திறந்த உள்ளக விளையாட்டுக்களில் ஈடுபடுவதுடன் நேரங்கள் ஒதுக்கப்பட்டு (சனி, ஞாயிறு) இசை வகுப்புக்கள்

நடைபெறுகின்றது. குறிப்பாக வீணை, வயலின், மிருதங்கம், பண்ணிசை, நடனம் திறமையான ஆசிரியர்களினால் சேவையடிப்படையில் நடாத்தப்படுகின்றது. இதற்காக எம்மிடம் அன்பளிப்பாகவும், கொள்வனவாகவும் 11 வயலின்கள், 04 வீணைகள், 03 மிருதங்கங்கள் உண்டு. பிள்ளைகள் மிக ஆர்வமுடன் கற்று வருவதுடன் அவர்கள் மன அழுத்தங்களுக்கு முகம் கொடுக்காமல் இருக்க இசை உதவுகின்றது என்பது கண்கூடு.

### கணனி அலகு

தற்கால உலகின் தேவை கருதி எமது ஆறு வயது பிள்ளைகளில் இருந்து அனைத்துப் பிள்ளைகளுக்குமாக 10 கணனிகள் கொண்ட கணனி அலகு உள்ளது. இதில் செல்வி.சி.பிரவீனா ஆசிரியராகக் கடமையாற்றுகின்றார். மேலும் மேலதிக கணனி பயிற்சியுடன் சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்காக மல்லாகத்தில் உள்ள IIT கணனி கற்கை நிலையத்திற்கும் செல்கின்றனர். விதுஷாயினி பாலச்சந்திரன், செல்வதியம்மா பூலோகம், சர்வலோயினி நாகேந்திரம் ஆகியோர் இக் கற்கைநெறியினை முடிவு செய்துள்ளனர். தற்போது ஜெயக்குமார் தேவரூபி, மதிவதனி இலட்ச்சுமாணனந்தன் ஆகியோர் கற்கின்றனர். மேலும் எமது கணனி அலகில் சிந்துஜா பாலச்சந்திரன், பிறேமினி குமார், சிவரூபி சிவசுப்பிரமணியம் ஆகியோர் photo shop நெறியை கற்கின்றனர்.

### பிரத்தியேக பாட போதனை

இல்லப் பிள்ளைகளின் கல்வியை மேலும் வளப்படுத்தும் நோக்கமாகவும் வினைதிறன் உள்ள வகையில் கல்வியைப் பெறவும் மாலைநேர, வாரஇறுதி வகுப்புக்கள் நடைபெறுகின்றன. இதன்போது தரம் 6–11வரையான மாணவர்களுக்கு தமிழ், விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம், வரலாறு, சமயம் ஆகிய பாடங்கள் தரமான ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகின்றன. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு அளவையியல், தமிழ், அரசியல், இந்துநாகரிகம், வரலாறு, விவசாயதொழில் நுட்பம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் தரமான ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகின்றன. மேலும் உயர்தர கணிதப்பிரிவில் கல்விகற்கும் மாணவிக்கு கணிதம், பௌதிகவியல், இரசாயனவியல் முதலான பாடங்கள் பிரத்தியேகமாக போதிக்கப்படுகின்றன. அத்துடன் இணைப்பாடவிதான பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன.

### இல்லத்திற்கு வருகை தந்து கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள்.

### ஆரம்ப பிரிவு

திருமதி.மு.காந்திமதி – ஆங்கிலம்
செல்வி.சி.மனோன்மணி – தமிழ், சமயம்
செல்வி.மோ.மாதங்கி – தரம்–3, 4, 5 பொது

**இடைநிலைப் பிரிவு**

திரு.நா.காளிதாசன் – விஞ்ஞானம்

திரு.S.சிவகரன் – விஞ்ஞானம்

திருமதி.ப.லோகநாதன் – விஞ்ஞானம்

திரு. N. கிருஸ்ணமேனன் – கணிதம்

திரு.V. தவராசா – கணிதம்

திரு. K. கௌரிரூபன் – கணிதம்

திரு. N. கிரிசாந்த் – கணிதம்

திரு. S. யோகராஜா – தமிழ்

திரு. F. புவிராஜ் – வரலாறு

செல்வி. சி . பிரவீனா – தகவல் தொழில்நுட்பம், கணனி கற்கை

திரு.T. இந்திரசிங்கம் – ஆங்கிலம்

**உயர்தரப் பிரிவு**

திரு.பவானந்தன் – அளவையியல்

திரு.ம.கீர்த்திராஜன் – தமிழ்

திரு.பு.போல்அன்ரன் – புவியியல்

திரு.S.பிரதாப் – அரசியல்

திரு. கு. புவிராஜ் – இந்துநாகரிகம்

திரு. Y. பிரதீபன் – வரலாறு

திரு. ஆ. விஸ்ணுதேவன் – விவசாய தொழில்நுட்பம்

திரு. T. இந்திரசிங்கம் – ஆங்கிலம்

திரு. B. தர்மசீலன் – பௌதிகவியல்

திருமதி. ஆன்பெலிசியா விமலதாசன் – இரசாயனவியல்

திரு. செ. சத்தியநாராயணன் – கணிதம்

**சேவையடிப்படையில் கடமையாற்றும் ஆசிரியர்கள்**

1. திருமதி. மு. காந்திமதி
2. செல்வி சி. மனோன்மணி
3. திருமதி. சுபத்திரா யோகலிங்கம்
4. திருமதி. தமிழ்ச்செல்வி விஜயகுமார்
5. திருமதி. பாகீரதி கணேசதுரை
6. செல்வி. சந்திரிகா கணேஸ்வரன்
7. திரு. ந. காளிதாசன்
8. திருமதி. ப. லோகநாதன்
9. பிரம்மஶ்ரீ. வரதராஜசர்மா
10. செல்வி. சந்திரிக்கா கணேஸ்பரன்

## இணைப்பாடவிதானம்

திருமதி. தமிழ்ச்செல்வி விஜயகுமார் – நடனம்

திருமதி. மலர்விழி கனகசபை – வீணை

திருமதி. கயல்விழி இரகுநாதன் – வயலின்

பிரம்மஸ்ரீ. வரதராஜசர்மா – மிருதங்கம்

செல்வி. சந்திரிக்கா கணேஸ்பரன் – பண்ணிசை

## தொழிற் பயிற்சி

தெல்லிப்பழை அரிமாக்கழகத்தின் ஆதரவில் நிர்வாகசபை உறுப்பினர் திரு.ச.ஆறுமுகநாதன் வழிகாட்டலில் பாடசாலை விடுமுறைக் காலத்தில் சாதாரணதர, உயர்தர மாணவர்கள் தையல் பயிற்சியில் ஈடுபடுகின்றனர். இதற்காக எம்மிடம் 09 தையல் இயந்திரங்கள் உள்ளன. ஆசிரியராக செல்வி. மேனகா தொழிற்படுகின்றார்.

## இல்ல நிர்வாகம்

துர்க்கா தேவஸ்தான நிர்வாகத்தின் நேரடிக்கண்காணிப்பின் கீழ் எமது துர்க்காபுரம் மகளிர் இல்லம் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் தலைமையில் இயங்குகின்றது. இல்ல நிர்வாக கடைமைகளில் அவருக்குதவியாக இல்ல முகாமையாளருக்கு ஒப்பாக சேவை அடிப்படையில் திருமதி. சிவமலர் அனந்தசயனன் அவர்கள் இல்ல அதிபராக 19.03.2012 தொடக்கம் சேவையாற்றுகின்றார். நிர்வாகசபையில் அங்கம் வகிக்கும் திருமதி.கலாதேவி பொன்னம்பலம் அவர்கள் இல்லத்திற்கு வருகை தந்து குறை நிறைகளை அறிந்து நிர்வாகசபையின் உதவியுடன் தீர்வுகளுக்காக உதவுகின்றார். திருமதி.பாகீரதி கணேசதுரை உளவள ஆலோசகராக சேவை அடிப்படையில் செயலாற்றுகின்றார்.

## இல்ல உத்தியோகத்தர்கள்

செல்வி.செல்வராணி பெரியதம்பி

செல்வி.உஷாதேவி சுப்பையா

செல்வி.சுகந்தினி சுப்பையா

செல்வி.மோகனாம்பாள் நாகநாதன்

செல்வி.பவானி பொன்னையா

ஆகியோர் தொழிற்படுகின்றனர். இவர்களுக்குதவியாக சகோதரி யதீஸ்வரி, செல்வி.மகேஸ்வரி தொழிற்படுகின்றனர். மேற்பார்வையாளர்களினால் மாணவர் ஒழுங்கு, ஒழுக்கம், கல்வி, உடை, வைத்தியம் போன்ற தேவைகள் கவனிக்கப்படுகின்றது. மேற்பார்வையாளர் செல்வி.சுகந்தினி சுப்பையா தலைமையில் திருமதி.க.சிவாஜினி, திருமதி.து.தவமலர், செல்வி.மு.பூமலர், செல்வி.சிந்துஜா தவராஜா ஆகியோர் பிள்ளைகளின் உணவுத்தேவையை கவனித்து வருகின்றனர். செல்வி. சிவமாலினி நாகேந்திரம் ஆலய அலுவலக உதவியாளராகத் தொழிற்படுவதுடன், இல்ல நிர்வாகத்திலும் உதவி செய்கிறார்.

இல்ல அலுவலக உதவியாளராக செல்வி. வைஷ்ணவி சக்திவேல் 05–09–2013 முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

### மாணவர் மன்றமும் பிறந்தநாள் கொண்டாட்டமும்

ஒவ்வோருமாதமும் கடைசி சனிக்கிழமை நடைபெறும் மாணவர் மன்ற கூட்டத்தில் அம்மாதத்தில் பிறந்த சகல பிள்ளைகளுக்கும் புதிய உடை வழங்கப்பட்டு மாணவர் மன்றக் கூட்டத்தில் வாழ்த்தப்படுகின்றார்கள். இதற்கான நிதி உதவியை வழங்கும் அகில இலங்கை இந்துமாமன்ற தலைவர் திரு.கந்தையா நீலகண்டன் அவர்களுக்கு சகல இல்லப் பிள்ளைகள் சார்பில் நன்றி கூறுகின்றோம். மாணவர் மன்றத்தில் பேச்சு, பாடல், நாடகம், பத்திரிகை வாசித்தல், பொது அறிவுப் போன்ற நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. மாணவர் மன்றத்தினால் சுடரொளி பத்திரிகையும் வெளியிடப்படுகின்றது.

### மன்றத்தின் பிற செயற்பாடுகள்

எமது மாணவர் மன்றத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட சான்றிதழுடன் கூடிய முதலுதவிப் பயிற்சிநெறி 26.03.2013அன்று 50 பிள்ளைகளுக்கு நடாத்தப்பட்டது. மார்பக புற்றுநோய் விழிப்புணர்வுக் கருத்தரங்கு மித்துறுவெல நிறுவனத்தினால் 17.05.2013லும், உளவள கருத்தரங்கு 03.03.2013 தகுதி வாய்ந்த விரிவுரையாளர்களினாலும் நடாத்தப்பட்டது. 02.04.2013 கருணாலயம் இல்லப் பிள்ளைகளுடன் ஒருங்கிணைக்கப்பட்டு எமது இல்லத்தில்இந்தியாவிலுள்ள ஆனந்த ஆச்சிரமத்திலிருந்து வந்த குழுவினரால் பஜனை நடாத்தப்பட்டது. பல்கலைக்கழக மாணவர்களும் உயர்தர மாணவர்களும் இணைந்து 12.10.2013 அன்று வாணிவிழாவை கொண்டாடினர். யாழ் இராமநாதன் கல்லூரி ஓய்வுநிலை அதிபரும் ஓய்வுநிலை பிரதி கல்விப் பணிப்பாளருமான (வலிகாமம் கல்வி வலயம்) திருமதி.ஆனந்தி சிவஞானசுந்தரம் அவர்கள் பிரதம விருந்தினராகவும், செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் கௌரவ விருந்தினராகவும் வருகைதந்து சிறப்பித்தனர். வாணிவிழாவையொட்டி பிள்ளைகளுக்கிடையே கவிதை, கட்டுரை, பேச்சு, கோலம், பண்ணிசை, மாலைகட்டுதல்,தோரணம்பின்னல் போன்ற போட்டிகள் நடாத்தப்பட்டு விழாவினன்று பரிசில்கள் வழங்கப்பட்டன. சிறுவர் தினமும், முதியோர் தினமும் 26.10.2013 அன்று கொண்டாடப்பட்டது. இதன் போது கட்டுரை, கவிதைப் போட்டிகள் நடைபெற்று மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டதுடன், பிள்ளைகளினால் சிறுவர் தினம், முதியோர் தினத்தையொட்டி நாடகம் ஒன்று வழங்கப்பட்டது.

### வைத்திய சேவை

இல்லத்திற்கு வருகை தரும் வைத்தியர் ஞாயிறு தோறும் வருகைதந்து பிள்ளைகளின் உடல் நலம் கவனிக்கப்படுவதுடன்,அவசர தேவைக்கு தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கும், தெல்லிப்பழை ஆயுள்வேத வைத்தியசாலைக்கும் தேவையேற்படின்

யாழ் போதனா வைத்தியசாலைக்கும் பிள்ளைகள் அழைத்துச் செல்லப்பட்டு கவனிக்கப்படுகின்றார்கள். ஒவ்வோரு பிள்ளைக்கும் தனித்தனியே வைத்தியக்குறிப்புக் கோவை பேணப்படுவது குறிப்பிடத்தக்கது. வைத்தியசாலைக்குச் செல்லும் போதும் அங்கு எமது இல்லப் பிள்ளைகள் அனுமதிக்கப்பட்டிருக்கும் போதும் இல்லப் பிள்ளைகள் என்ற மனிதாபிமானத்துடன் சிறப்புக் கவனம் செலுத்தும் வைத்தியர்கள், தாதியர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள். இவ்வருட இறுதியில் Dr.செ. சபாநடேசன் அவர்கள் சகல இல்லப் பிள்ளைகளுக்கும் பூச்சி மருந்தினை வழங்கினார். அவர்களுக்கும் எமது நன்றிகள். 2014 தொடக்கம் சுகாதாரவைத்திய அதிகாரி தெல்லிப்பழை அவர்கள் மாதந்தோறும் வருகைதருவதாக உறுதிப்படுத்தியுள்ளார்.

## ஆலோசனை வழிகாட்டல்

எமது இல்லப் பிள்ளைகளுக்கு தேவைப்படும் வழிகாட்டல் ஆலோசனைகள் எமது உளவள ஆலோசகர் திருமதி.பாகீரதி கணேசதுரை அவர்களினால் வழங்கப்படுகின்றது. இதைவிட இல்லப் பிள்ளைகளின் இருப்பு, மற்றும் நீதிமன்றக் கட்டளைகள் தொடர்பாக ஏற்படும் பிரச்சனைகள் தொடர்பாக ஆலோசனைகள் எமது பிரதேச நன்னடத்தை அதிகாரிகளினாலும் சிறுவர் உரிமை மேம்பாட்டு அலுவலர்களாலும் மாவட்ட உளசமூக இணைப்பாளர் மற்றும் செயலக அதிகாரிகளினாலும் எமது மேற்பார்வையாளர்களுக்கு வழங்கப்பட்டு தற்போதுள்ள சூழல் கவி நிலைக்கு சார்பாக பிரச்சனையின்றி இல்லத்தை நடத்திச்செல்வதற்கு உதவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் பெற்றோர் /பாதுகாவலர்கள் பிள்ளைகளை எமது இல்லத்தில் அனுமதித்ததன் தொடர்பாக தத்தமது பிரதேசங்களில் எதிர்நோக்கும் பிரச்சனைகளுக்கும் அவர்களுக்கு ஆதரவாக ஆலோசனை வழங்கி அவர்களின் மன அழுத்தங்களைக் குறைக்கும் எமது பிரதேச நன்னடத்தைத் திணைக்கள அதிகாரிகளுக்கு இல்ல நிர்வாகம் தமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது.

## பெற்றோர் / பாதுகாவலர் ஒன்று கூடல்

ஒவ்வொரு தவணையும் பாடசாலை விடுமுறையை ஒட்டிய தகுதியான ஒரு நாளில் மேற்படி ஒன்று கூடல் நடைபெறுகின்றது. இதன்போது இல்ல மத்தியஸ்த சபை உறுப்பினர்கள், Placement Committee, ஒழுக்காற்றுக்குழு, பிரதேச நன்னடத்தைத் திணைக்கள அதிகாரிகள் இல்ல நிர்வாகத்துடன் அன்றைய கூட்டத்தில் பிரசன்னமாயிருப்பார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. வருடத்தின் ஏனைய மாதங்களில் கடைசி ஞாயிற்றுக்கிழமை மாத்திரம் பெற்றோர் / பாதுகாவலர்கள் பிள்ளைகளைச் சந்திக்க அனுமதிக்கப்படுகின்றனர்.

## இல்ல மத்தியஸ்த சபை உறுப்பினர்கள்

கலாநிதி.ஆறு திருமுருகன்
திருமதி.சிவமலர் அனந்தசயனன்
திருமதி. பாகீரதி கணேசதுரை

திரு.அ. சண்முகநாதன்
திருமதி. கலாதேவி பொன்னம்பலம்
செல்வி. செல்வராணி பெரியதம்பி
செல்வி. சுகந்தினி சுப்பையா
22/03/2013, 09/08/2013 கூட்டங்கள் நடைபெற்றன.

**இல்ல Placement Committee**

கலாநிதி. ஆறு திருமுருகன்
திருமதி. சிவமலர் அனந்தசயனன்
திருமதி. பாகீரதி கணேசதுரை
திரு.ச. ஆறுமுகநாதன்
திருமதி. சியாமளா ஞானேந்திரன்
திருமதி. வினோதா கலைச்செல்வன்

2014 தை மாதத்தில் இருந்து திரு.T.திருமாறன் நன்னடத்தை அதிகாரியாக தொழிற்படுகிறார். மற்றும் திரு.R.வாகீசன் சிறுவர் பாதுகாப்பு உளசமூக உத்தியோகத்தர், தெல்லிப்பழை ஆகத் தொழிற்படுகின்றார்.

21/03/2013, 09/08/2013 கூட்டங்கள் நடைபெற்றன.

**இல்ல ஒழுங்காற்றுகுழு**

கலாநிதி. ஆறு திருமுருகன்
திருமதி. சிவமலர் அனந்தசயனன்
திருமதி. பாகீரதி கணேசதுரை
திரு.சி. அருளானந்தசிவம்
செல்வி. செல்வராணி பெரியதம்பி
செலவி. உஷாதேவி சுப்பையா
செல்வி. மோகனாம்பாள் நாகநாதன்
செல்வி. பவானி பொன்னையா
**20/02/2013, 09/08/2013 கூட்டங்கள் நடைபெற்றன.**

## சிறுவர் உரிமை சிறுவர் பாதுகாப்பு திணைக்களம், நன்னடத்தை திணைக்களத்திலிருந்து வருகை தரல்.

| திகதி | வருகை தந்தவர்கள் |
|---|---|
| 26.04.2013 | நன்னடத்தை ஆணையாளர், நன்னடத்தை உத்தியோகத்தர், பூநரகரி P.O |
| 05.07.2013 | திருமதி.வினோதா கலைச்செல்வன் (தெல்லிப்பழை சிறுவர் உரிமை மேம்பாட்டு அலுவலர்) |

| | |
|---|---|
| 01.08.2013 | திருமதி.வினோதா கலைச்செல்வன் (தெல்லிப்பழை சிறுவர் மேம்பாட்டு அலுவலர்) |
| 15.08.2013 | திரு.சு.வாகீசன் (N.C.P.A) |
| 20.08.2013 | திரு.தி.விஸ்வரூபன் (சிறுவர் நன்னடத்தை வடமாகாண ஆணையாளர்),<br>திருமதி.ச.சடகோபன் (நன்னடத்தை உத்தியோகத்தர்)<br>செல்வி. சஞ்சிதா (நன்னடத்தை சிறுவர் மேம்பாட்டு அலுவலகர்) |
| 04.09.2013 | நீதிபதி, சிறுவர் பாதுகாப்பு நீதவான் நீதிமன்றம் யாழ்ப்பாணம் |
| 12.12.2013 | திரு.கு.கௌதமன் (மாவட்ட உள சமூக இணைப்பாளர்)<br>செல்வி.S.கோதை (மாவட்ட சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர்) |

## பண்ணிசை அறநிதியம்

இல்ல பிள்ளைகளின் பண்ணிசையை வளர்க்கும் வண்ணம் பண்ணிசைப் பயிற்சிக்கென அறநிதியம் உருவாக்கப்பட்டு இலங்கைவங்கி காங்கேசன்துறையில் நிலையான வைப்பு செய்யப்பட்டுள்ளது. இந்தியா வரை சென்று பண்ணிசை பயிற்சிபெற விரும்பும் பிள்ளைகள் இந் நிதியுதவியை பெறமுடியும்.

## இல்லச் சிறுவர்களுக்கான புதிய இல்லம்

நாட்டில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக வன்னிப் பிரதேசத்தில் வாழ்ந்த பிள்ளைகள் யுத்தத்தினால் பெரிதும் பாதிப்படைந்து தாய் தந்தையரை இழந்து நிர்க்கதிக்குள்ளான நிலையில் 2010இல் 99 சிறார்கள். எமது இல்லத்தில் சேர்க்கப்பட்டார்கள். இதனால் இவர்களின் இருப்பிட வசதியைக் கருத்தில் கொண்டு தேவஸ்தான தெற்கு வீதிக்கு வெளியே ஒரு இல்லம் அமைக்க நிர்வாகம் தீர்மானித்து 04.04.2011இல் அத்திவாரம் இடப்பட்டு 14.07.2013இல் திறந்துவைக்கப்பட்டது. அன்றையதினமே தரம் 11வரையான பிள்ளைகள் இக் கட்டிடத்தில் குடியமர்த்தப்பட்டார்கள். 16.07.2013இல் இதற்கான பதிவுகள் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

## சிவத்தமிழ் செல்வி அன்னையர் இல்லம்

முதியோரான தனித்த பெண்கள் இவ் அன்னையர் இல்லத்தில் வசிக்கின்றனர். இவர்கள் ஆன்மீக நாட்டமுடையவர்கள். தங்களால் இயன்ற சரியைத்தொண்டு, அன்னதானப்பணி, கோசாலைப்பணி என்பவற்றில் பங்கெடுப்பதோடு மாதர் சங்கத்திலும் அங்கம் வகித்து வருகின்றனர். கடந்த சில வருடங்களாக இவ் இல்லத்தில் முதிர்ந்த அன்னையர் சேர்த்துக்கொள்ளப்படவில்லை என்பதாலும் ஒருசிலர் இறந்து விட்டதாலும் தற்போது 09 பேர் உள்ளனர். அவர்கள் நோய் நொடியின்றி நிம்மதியாக வாழ பிரார்த்திக்கின்றோம்.

### அன்னையர் இல்லத்தில் வாழ்பவர்கள்

1. திருமதி. இ. சிவமணி
2. செல்வி. த.மங்கையர்க்கரசி

3. திருமதி. வே. சுந்தரம்
4. திருமதி. தேவி சிவபாலசிங்கம்
5. செல்வி. எஸ். மீனா
6. செல்வி க. மகேஸ்வரி
7. திருமதி. து. தவமலர்
8. செல்வி. கருணாதேவி அருளம்பலம்

**கோசாலை**

பிள்ளைகளின் தேவைக்கான போதியளவு பால் பெறுவதற்காக **11**பசுக்கள் கொண்ட கோசாலை மகளிர் இல்லப்பராமரிப்பில் உள்ளது.

**நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபம்**

நல்லூர் முருகப்பெருமானின் மேற்கு வீதியில் அமைந்துள்ள நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் கலைநிகழ்வுகள், திருமண வைபவங்கள், குருபூசை போன்றவை நடைபெறுவதுடன் நல்லூர் மகோற்சவ காலத்தில் கொடியேற்றம் தொடக்கம் தீர்த்தம் வரை பக்தர்களுக்கு அன்னதானமும் நடைபெறுகின்றது. மேற்படி நிகழ்வுகளினூடு வரும் வருமானம் மகளிர் இல்லச் செலவிற்கு பயன்படுகிறது.

**பொருட்கள் உதவி**

1. அமரர் செல்வி. காமாட்சி கந்தையா (துர்க்காபுரம் மகளிர் இல்ல பிரதம மேற்பார்வையாளர்) அவர்களின் ஞாபகார்த்தமாக நிதி அன்பளிப்பில் இருந்து 10 சங்கிலி வழங்கப்பட்டது.
2. 33000/- பெறுமதியான 07 கணணி மேசைகள் உட்பட 65050/- கணணி உபகரணங்கள், அமரர் செல்வி காமாட்சி கந்தையா (துர்க்காபுரம் மகளிர் இல்ல பிரதம மேற்பார்வையாளர்) ஞாபகார்த்தமாக நிதி அன்பளிப்பில் இருந்து வாங்கப்பட்டது.
3. திரு U.K.ரகுநாதன் (ஜேர்மனி) அவர்கள் சேலை, பூட்டுக்காப்பு (ஒன்றரைப் பவுண்) வழங்கியுள்ளார்.
4. சி. ராஜலட்சுமி அவுஸ்திரேலியா அவர்கள் 01 சங்கிலி வழங்கியுள்ளார்.
5. திருமதி.விஜயலட்சுமி விஜயகுமார் அவர்கள் 01 சங்கிலி வழங்கியுள்ளார்.
6. மகாராணி ரெக்ஸ்ரைல் 64 படுக்கை விரிப்புக்களை அன்பளிப்பு செய்துள்ளது.
7. Dr.செ.சபாநடேசன் அவர்களின் அனுசரணையுடன் கனடாவில் இருந்து திரு.சிவஞானசுந்தரம் அவர்கள் (இளைப்பாறிய கல்வி அதிகாரி காங்கேசன்துறை) அவர்கள் 05 கணணி, 02மொனிற்றர், 03keyboard வழங்கப்பட்டது.(பாவனை செய்யப்பட்டவை)
8. திருமதி தனுசியா பிரதீபன் ஜேர்மனி அவர்கள் 26 புத்தகப்பைகள் அன்பளிப்பு

9. சிவகணேசன் ரெக்ஸ்ரைல் 1100/– பெறுமதியான திரைச்சீலைகள் புதிய இல்லத்திற்கு அன்பளிப்பு.
10. ஸ்ரீகோவிந்தன் 18000/– பெறுமதியான மிருதங்கம் அன்பளிப்பு.
11. திரு.பரமலிங்கம், உரும்பிராய், கருணாலயம் 06 வயலின், 01வீணை அன்பளிப்பு.
12. திரு.சு.சசிகரன்(ருமு) அவர்கள் 03 வயலின்களை வழங்கியுள்ளார்.
13. Dr. அ. காயத்திரி அவர்கள் 01வயலின் வழங்கியுள்ளார்.
14. திரு. தி. ரமேஷ் (Swiss) அவர்கள் கற்றல் உபகரணங்களை வழங்கியுள்ளார்.
15. செ. அன்ஜா, கொக்குவில் அவர்கள் கற்றல் உபகரணங்களை வழங்கியுள்ளார்.
16. சுபாஜினி, பண்டத்தரிப்பு அவர்கள் 44m வெள்ளைத் துணி வழங்கியுள்ளார்.
17. திருமதி.கந்தன் சந்திரா 09 பட்டுப்பாவாடைத் துணி வழங்கியுள்ளார்.
18. திரு.பாலகிருஸ்ணன் அரோன் கனடா அவர்கள் 30டசின் கொப்பி, 10டசின் பென்சில், 26School Bags வழங்கியுள்ளார்.
19. திரு.பூபாலசிங்கம் மதன்ராஜ் அளவெட்டி அவர்கள் 20 பட்டுப்பாவாடைத் துணி வழங்கியுள்ளார்.
20. திருமதி.சிவலிங்கம் இராசலட்சுமி அவர்கள் 38 சேலை வழங்கியுள்ளார்.
21. திருமதி.அன்பரசி அமிர்தலிங்கம் இடைக்காடு அவர்கள் 03சாரி வழங்கியுள்ளார்.
22. திரு.அரவிந்தன் கனடா அவர்கள் குளிர்சாதனப் பெட்டி வழங்கியுள்ளார்.
23. திரு.சிவகுமார் அவர்கள் 50 படுக்கைவிரிப்பு வழங்கியுள்ளார்.
24. திரு.மதிமாறன், சுழிபுரம் அவர்கள் 425கொப்பி வழங்கியுள்ளார்.
25. திரு.குகனேசன் அவர்கள் கற்றல் உபகரணங்களை வழங்கியுள்ளார்.
26. திரு.நடராஜா சிவநாதன் அவர்கள் 100கொப்பி, 100பேனா வழங்கியுள்ளார்.
27. திரு.ராஜராஜசேகரம் அவர்கள் ரேடியோசெற் வழங்கியுள்ளார். (பாவனை செய்யப்பட்டவை)
28. திரு.திருமதி. ஜெயராஜா சசிரேகா, அளவெட்டி கிழக்கு (பிரான்ஸ்). TVக்குரிய Deck, அலுவலக 03 பிளாஸ்ரிக் கைபிடியுள்ள கதிரைகள்.
29. யப்பான் நாட்டைச் சேர்ந்த ஜப்பானிய பிரமுகர் ஒவ்வொரு பிள்ளைக்கும் school bag உம் அரைப்பாவாடையும் வழங்கினார்கள்.

**மகளிர் இல்லப் பிள்ளைகளுக்கான ஏனைய அன்பளிப்பு விபரங்கள்**

ப.சீட்டு இல

| | | | |
|---|---|---|---|
| 4437 | A.சிவபாலன் | கொழும்பு | 50000 |
| 4495 | Dr.ம.விமலாதேவி | இலண்டன் | 100000 |
| 4543 | ம.ஈஸ்வரவல்லி | கொழும்பு | 150000 |
| 4613 | K.செல்வரட்ணம் | திருநெல்வேலி | 65000 |
| 4711 | அமரர் காமாட்சி கந்தையா | மகளிர் இல்லம் | 270000 |
| 4815 | அபயகரம் | அவுஸ்ரேலியா | 3209900 |

| | | | |
|---|---|---|---|
| 4881 | ப.வைத்தியநாதன் | கனடா | 100000 |
| 4945 | அமரர் காமாட்சி கந்தையா | மகளிர் இல்லம் | 148500 |
| 5022 | அபயகரம் | அவுஸ்ரேலியா | 1482290 |
| 5026 | தங்கம்மா ராஜதுரை | கோப்பாய் | 50000 |
| | S.ஆனந்தரூபன் | கனடா | 67493 |
| 5084 | A.சிவபாலன் | கொழும்பு | 50000 |
| 5121 | Y.சிவகுமார் | கனடா | 101000 |
| 5228 | நகுலேஸ்வரி | கனடா | 50600 |
| 5305 | ஸ்ரீகற்பகவிநாயகர் ஆலயம் | யாழ்ப்பாணம் | 50000 |
| 5405 | அமுதாகரன் இனிதா | கனடா | 60000 |
| 5548 | ஏ.சிவஞானமூர்த்தி | மலேசியா | 50000 |
| 5568 | இவனீ சத்தியநாதன் | இலண்டன் | 61000 |
| 5583 | குமார் அக்ஷிகா | வெள்ளவத்தை | 63000 |
| 5612 | காயத்திரி ஞானசேகரம் | | 64000 |
| 4864 | ந.நவக்குமார் | வட்டுக்கோட்டை | 100000 |
| 5397 | கஸ்தூரி ஜோன் | UK | 63875 |

பிள்ளைகளின் பிறந்தநாள் செலவாக மாதாந்தம் 15000 ரூபாவை திரு.கந்தையா நீலகண்டன் தலைவர் அகில இலங்கை இந்துமாமன்றம் அவர்கள் வழங்குகின்றார்கள்.

**நன்றிக்குரியோர்**

1. அரசாங்க அதிபர்
2 வலிவடக்கு பிரதேச செயலாளர்.
2. துர்க்காபுரம் தெல்லிப்பழை கிராமசேவையாளர்.
3. வலிவடக்கு பிரதேசசபையினர்.
4. தர்மகர்த்தா சபையினர்.
5. தலைவர் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்கள்.
6. காலத்திற்குக்காலம் நிதி அன்பளிப்பு செய்யும் நிறுவனங்கள். வெளிநாட்டு உள்நாட்டு அன்பர்கள்.
7. இல்லப்பிள்ளைகளை நேசித்து கல்வியில் ஆக்கமும் ஊக்கமும் அளிக்க கல்வி உபகரணங்கள் அன்பளிப்பு வழங்குவோர்.
8. இல்லப் பிள்ளைகளினுடைய வாகனங்களை பராமரித்து இல்லப்பிள்ளைகளின் தேவைகளுக்கமைய ஒழுங்கு செய்யும் நிர்வாக சபை
9. தேவஸ்தான உத்தியோகத்தர்கள், மகளிர் இல்ல உத்தியோகத்தர்கள், பணியாளர்கள்.
10. பத்திரிகைகளான உதயன், வலம்புரி, தினக்குரல், தினகரன்,, வீரகேசரி ஆசிரியர்கள்.

11. மகளிர் இல்ல கணக்குகளை காலத்துக்கு காலம் கணக்காய்வு செய்யும் செல்வேந்திரா அன்கோ பட்டய கணக்காளர் நிறுவனம்.
12. இலங்கை வங்கி சுன்னாகம், காங்கேசன்துறை பம்பலப்பிட்டி கிளைகள், மக்கள் வங்கி சுன்னாகம், தேசிய சேமிப்பு வங்கி சுன்னாகம், யாழ்ப்பாணம்.
13. சிறுவர் பாதுகாப்பு நன்னடத்தை திணைக்கள ஆணையாளர், உத்தியோகத்தர்கள்.
14. தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை, யாழ் போதனா வைத்தியசாலை மற்றும் துர்க்காதேவி ஆயுள்வேத வைத்தியசாலையில் கடமை புரியும் வைத்திய கலாநிதிகள், ஊழியர்கள்.
16. பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள்.
17. வடமாகாணப் பதிவாளர் (பிறப்புச் சான்றிதழ் பெறுதல்)

# ஸ்ரீமான் அ.சே.சுந்தரராஜ ஐயங்கார், B.A
## அவர்கள்

"எத்திறத்தவரும் போற்றும் எழில்கலாசாலை தன்னில்
நத்துநல் லழகின் முத்து நலங்கொள் சுந்தரனாம் ராஜன்
மெத்து மாயிலியம் வேலுப்பிள்ளையாம் இவர்கள் நோக்கின்
முத்தொழில் புரிந்துவாழும் முப்பெருங் கடவுள் போலாம்".

இராமநாதன் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை இயங்கி வந்த ஒரு நேரம் 1941ஆம் ஆண்டு புரட்டாதித் திங்கள் தமிழாசிரியர் பயிற்சிக்காக நாங்கள் அங்கு தெரிவு செய்யப்பட்டோம். இப்பயிற்சி வகுப்பை நடாத்திய மூவரில் ஒருவர் பேராசிரியர் அ.சே.சுந்தரராஜ ஐயங்கார் அவர்கள். இவர் ஒரு பட்ட தாரியும் பண்பாளரும் ஆவர். கம்பரா மாயணத்தைச் சிறப்பாக நயக்க வைத்த பெருமை ஐயங்கார் அவர்களுக்கு உண்டு.

**"யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்**
**வள்ளுவன்போல் இளங்கோவைப்போல்**
**பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை"**

என்று பாடினார் புரட்சிக்கவி சுப்பிரமணிய பாரதியார் அவர்கள். ஆசிரியர் பயிற்சி நடைபெற்ற முதலாம் தவணையில் ஒருநாள் இலக்கிய வகுப்பு ஒன்று இடம்பெற்றது. எம்மவரில் பதின்மூன்று பேர் ஆசிரியர் பயிற்சிக்குத் தெரிவு செய்யப்பட்ட முதலாம் வருட மாணவர்கள் ஆவர். இராமநாதன் கல்லூரியில் கிழக்குப் பக்கமாக அமைந்த ஒரு பகுதி ஆசிரியர் கலாசாலையாகும். அங்கு முதலாம் வருடம், இரண்டாம் வருடம் என இரண்டு வகுப்புகள் நடைபெற்றன. முதலாம் வருட மாண வர்களுக்கு இலக்கிய பாடம் நடைபெற்ற ஒரு தினத்தைக் குறிப்பிடுகின்றேன். எங்கள் வகுப்பறைக்குள் ஒரு பெரியவர் பாடம் எடுப்பதற்கு வருகை தந்தார். தூய வெள்ளாடையும், துரித நடையும், உச்சிக் குடுமியும், நாமம் துலங்கும் நெற்றியும், புன்முறுவல் ததும்பிய திரு முகமும் கொண்டவராக இப்பெரியார் காட்சி அளித்தார். எழுந்து வணக்கம் கூறினோம். இருக்கும்படி பணித்தார். பாடம் தொடங்கியது. கம்பராமா யணத்தில் கற்றுத் துறை போகிய அநுபவத்தை அன்றைய பாட நேரத் திலேயே மெய்ப்பித்து விட்டார். கம்பரா மாயணம் பற்றிய ஒரு முன்னுரை ஐந்து நிமிட நேரத்துக்கு வழங்கினார். பின்பு அன்னார் நயந்ததும் எம்மை நயக்க வைத்ததுமான ஒரு பாடலை எடுத்துக் கொண்டோம்.

**"பஞ்சிஒளிர் விஞ்சுகுளிர் பல்லவம் அனுங்க**
**செஞ்செவிய கஞ்ச நிமிர் சீறடியளாகி**
**அஞ்சொலின மஞ்ஞைஎன அன்னமென மின்னும்**
**வஞ்சி என நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்".**

இராமாயணத்தில் ஆரணிய காண்டத்தில் அமைந்த மேற்காட்டிய பாடலின் சந்தர்ப்பத்தை முதலில் விளக்கினார். பின்பும் ஒரு தடவை அப்பாடலை சந்தத்தோடு திருப்பிச் சொன்னார். கேட்டுக்கொண்ட எங்களுக்கு அப்பாடல் மனனம் ஆகும் நிலை வந்துவிட்டது. திரும்பவும் அப்பாடலை மூன்றாம் முறையும் சந்த நயத்தோடு பாடிக் காட்டினார். உணர்ச்சி ததும்ப அவர் பாடியபோது அவரை அறியாமலேயே உச்சிக் குடுமியும் அவிழ்ந்துவிட்டது. ஒருவாறு சமாளித்துக்கொண்டு அப் பாடலைப் பாடும்படி என்னைச் சுட்டிக் காட்டினார். எனக்குத் தெரிந்தவகையில் சந்தத்தோடு பாடிக்காட்டினேன். தொடர்ந்து உரையை நாற்பது நிமிட நேரத்தில் நகைச் சுவையோடு நிறைவு செய்தார். அன்று தொட்டு இராமாயணத்திலே எனக்கு ஈடுபாடு அதிகரித்தது.

ஐயங்கார் அவர்கள் தமிழ்நாட்டில் திருச்சி மாநகரைப் பிறப்பிடமாகவும் கல்வித் தேர்ச்சிகள் பெற்ற இடமாகவும் கொண்டவர். பட்டதாரி ஆகிய இவரை இராமநாதன் கல்லூரி முகாமையாளர் ஸ்ரீமான் சு. நடேசபிள்ளை அவர்கள் வரவழைத்தார். பரமேஸ்வராக் கல்லூரியிலும், இராமநாதன் கல்லூரியிலும் இவருடைய சேவை சிறப்பாக அமைந்தது. பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் ஐயங்காரைப் பற்றிக் குறிப்பிடும்போது, ஆழ்வார் பெருமக்களிலும் சிறப்பாக, கம்பநாட்டாழ்வாரிலும் திளைத்தவர் என்றும் இலக்கிய இரசிகர்களுக்கு இவர் வழங்கிய கம்பர் கவிதைக் கோவையும், வில்லிபாரதச் சுருக்கமும் மிகவும் பயனுள்ளவையாக அமைந்தவை என்றும் பாராட்டியுள்ளார். கம்பராமாயணப் பாடல்களிலும் வில்லிபாரதத்திலும் மிகச்சுவையுள்ள பாடல்களைத் தெரிந்தெடுத்துத் தந்தமை பாராட்டுக்குரியது. உயர்தர வகுப்பு மாணவர்கள் நயந்து படித்து இன்புறுவதற்கு இப் பாடல்கள் வழிகாட்டுகின்றன. இராமாயணம் வான்போல் பரந்தது என்றும் பசுபிக் சமுத்திரம் போன்று ஆழமானது என்றும் திருப்பாற்கடலைப் போன்று அமுதம் நிறைந்தது என்றும் அதனைச் சுந்தரராஜ ஐயங்கார் கடைந்து கவிதை அமுதத்தைத் தந்துள்ளார் என்றும் நவநீதகிருஷ்ண பாரதியார் எடுத்துக் கூறியுள்ளார்.

கம்பநாட்டாழ்வாரைப் பாராட்டாத எவரும் இருக்க மாட்டார்கள்.

**"கற்பகக் கனிபிழிந்து காதலின் கலையைக் கூட்டி**
**அற்புதக் கனவு காணும் ஆயிரம் அழகு சேர்த்தே**
**விற்புய வீரமூட்டி வியன்பெறும் கவிதை செய்தான்**
**பொற்புறு புலவன் கம்பன் பொன்முடி தமிழுக்**
**– கீந்தான்"**

உலகம் போற்றும் மகாகவியாக விளங்கிய கம்பநாட்டாழ்வாரின் பாடல்களைத் தெரிந்தெடுத்து சுவைக்க வைத்தவர் சுந்தரராஜ ஐயங்கார் அவர்கள். கம்பர் கவிதைக்கோவை, பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிஷ்கிந்தா காண்டம், சுந்தர காண்டம் என்ற ஐந்து பிரிவிலே செய்யுட்களையும், உரை விளக்கங்

களையும் கொண்டுள்ளதாக அமைந்துள்ளது. கல்லூரிகளில் தமிழ் இலக்கியம் கற்கும் மாணவர்களுக்குக் கம்பர் கவிதைக் கோவை சுவை பயக்கும் வகையில் அமைந்துள்ளது. ஐயங்கார் அவர்கள் நூலின் முதற்பாகத்தில் பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம் என்பவற்றுள் திரட்டிய செய்யுள்களையும், இரண்டாம் பாகத்தில் கிஷ்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் ஆகிய வற்றில் திரட்டிய செய்யுட்களையும் சேர்த்துள்ளார். உதாரணத்துக்கு இவர் எடுத்தாண்ட ஒரு பாடலை மாத்திரம் கவனிப்போம். மிதிலைக் காட்சிப் படலத்தில் இடம்பெறும் பாடல் இதுவாகும்.

**"பாகொக்குஞ் சொற் பைங்கிளி**
**யோடும் மங்கையர்**
**மாகத் தும்பர்மங்கையர்**
**நாண மலர் கொய்யும்**
**தோகைக் கொம்பின் அன்னவர்க்**
**கன்னம் நடை தோற்றுப்**
**போகக் கண்டே வண்டினமார்க்கும்**
**பொழில் கண்டார்".**

அதாவது மிதிலாபுரியில் வாழும் பெண்கள் மலர்கொய்து கொண்டு நடமாடும்போது அன்னப்பட்சியானது அப்பெண்களின் நடைக்குத் தோற்றுப் போவதை வண்டினங்கள் பரிகாசம் செய்வது போல ஆர்ப்பரிக்கும் பூஞ் சோலையைக் கண்டார்கள் என்று கூறப்படுகிறது. இவை போன்ற எத்தனை எத்தனை வர்ணனைச் செய்யுட்களை ஆங்காங்கு எடுத்துக் காட்டி கம்பர் கவிதைக் கோவை என்ற நூலில் வெளிவரச் செய்துள்ளார்.

கம்பராமாயணத்தில் மாத்திரமல்ல மகாபாரதத்திலும் ஐயங்கார் அவர்களுக்கு ஈடுபாடு அதிகம். ஐந்தாம் வேதம் எனப் போற்றப்படும் மகா பாரதத்தினை வில்லிபுத்தூராழ்வார் தமிழில் மொழிபெயர்த்து எழுதினார். இச்செய்யுட்களில் சுவை மிகுந்த சில செய்யுட்களை எடுத்துத் தொகுத்து வில்லிபாரதச் சுருக்கம் என்று பெயர் கொடுத்து பாடி விளக்கியுள்ளார். இப் பெரியார் இராமநாதன் கல்லூரி, பரமேஸ்வராக் கல்லூரி, இராமநாதன் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி ஆகிய வற்றில் பல ஆண்டுகளாகத் தமிழ் கற்பித்து வந்தவர். தமிழ், ஆங்கிலம், ஆகிய இரு மொழிகளிலும் பெரும் புலமை படைத்தவர். தான் தெரிவு செய்த செய்யுட்களை நயப்புரையுடன் சுவையாக எடுத்துக் காட்டியுள்ளார். இலக்கியம் கற்பிக்கும் ஆசிரியர்கள் முதலில் தாங்கள் சுவைத்து படிப் பவர்களை சுவைக்க வைக்க வேண்டியவர்கள். இதனை ஐயங்கார் அவர்கள் நன்கு கையாண்டுள்ளார். வித்துவான் கணேசையா போன்ற பேரறிஞர்கள் இவருடைய ஆக்கத்துக்குப் பெரும் வரவேற்பு அளித்துள்ளார்கள். திரௌபதை அருச்சுனனுக்கு மணமாலை சூட்ட இருந்த சந்தர்ப்பத்தில் அங்கு வைக்கப்பட்டிருந்த வில்லை ஈசன் மேருகிரியை எடுத்தது போன்று எடுத்தான் என்று கூறப்படுகிறது. எப்படிப் பார்த்

தாலும் இதனை விஞ்சி இன்னொரு உவமை காட்ட இயலாது.

**"கிளர்மகுட வயவேந்தர் நாணக வெல்லாம்**
**கீழாகத் தனிநெடுநாண் கிளர ஏற்றித்**
**தளர்வறுசா யகந் தொடுத்துக் கற்றோர் யாவரும்**
**தனு நூலுக் காசிரியன் தானே என்ன**
**உளர்திகிரிச் சுழல் இலங்கை அவையோர் தங்கள்**
**ஊக்கமுடன் விழ எய்தான் உரவுத் தோளான்**
**வளருமருந் தவவேள்வி முனிவர் ஆர்த்தார்**
**வாசநறு மலர் சொரிந்து வானோர் ஆர்த்தார்".**

என்பது வில்லிபாரதம்.

துரியோதனன் தம்பி துச்சாதனன் சூதாட்டத்தின் முடிவில் பாஞ்சாலியை நெருங்கித் துகிலுரியத் தொடங்கிய போது எந்த உதவியுமற்ற நிலையில் கண்ணபிரானை அழைக்கின்றாள் பாஞ்சாலி. 'கோவிந்தா கோவிந்தா' என்று அரற்றி அழுகின்றாள் பாஞ்சாலி. கண்ணபிரானுடைய அருள் கிடைக்கின்றது. அம்மையின் அலறல் மொழி கண்ணபிரானுக்கு எட்டியவுடன் அபயம் கிடைக்கிறது. உரியப்பட்ட ஆடை ஆயிரமாயிரம் ஆடையாகப் பெருகி நிற்கிறது. கை சலித்து நிற்கிறான் துச்சாதனன்.

வீஷ்மன் முதலியோர் மகிழ்ச்சிக் கடலில் மூழ்குகின்றனர். இவளே கற்பினுக்கும் மரபினுக்கும் தெய்வம் என்று ஆன்றோர்கள் பாராட்டுகின்றனர். இப்பகுதியை எடுத்துக் காட்டும் பொழுது ஐயங்கார் அவர்களின் இலக்கியச் சுவை வீறு கொண்டு எழுகின்றது. மேலும் வில்லிபாரதச் சுருக்கம் இலக்கியம் சுவைப்போர்க்குப் பெருவிருந்தாக அமைகின்றது. எனவே கம்பர் கவிதைக் கோவையும், வில்லிபாரதச் சுருக்கமும் ஐயங்கார் அவர்களின் உள்ளத்து எழுந்த இலக்கிய ஊற்றுக்கள் என்று கூறினால் மிகையாகாது.

அடுத்து ஐயங்கார் அவர்களின் பண்புகளையும் பணிகளையும் பற்றிக் கவனிப்போம். சேர்.பொன். இராமநாத வள்ளலால் நிறுவப்பட்ட பெண்கள் கல்லூரியிலும், பெண்கள் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிலும் தமிழ்ப் பேராசானாக உயர் பதவி வகித்தவர் இவர். இலக்கியம் கற்பிக்கும் பொழுது சிருங்காரச் சுவைகள் பல இடங்களில் இடம்பெறுவதை அனைவரும் அறிவர். தனது ஒழுக்க சீலத்தினாலும், பண்பினாலும் கன்னிப் பெண்களுக்கு இவற்றை நயம்படக் கற்பித்த பெருமை பாராட்டுக்குரியது. சிரிக்கவும், சிந்திக்கவும் வைத்துப் பாடம் சொல்லும் திறன் இவருடைய பெருமைக்குரியது. சில சமயம் சிருங்காரச் சுவைமிக்க பாடல்களை ஒரு முறை மாத்திரம் பாடிவிட்டு மறுபாட்டுக்கு ஓட்டமெடுப்பார். மாணவிகள் அவருடைய நிலை அறிந்து குழப்பிக் குழப்பி வினா தொடுப்பார்கள். ஆனால் தன்னிலையினின்றும் சிறிதும் பிறழமாட்டார். அவர்களின் ஒழுக்க சீலத்தினை அன்று நாம் புரிந்து கொள்ளவில்லை. இன்று நாம் புரிந்து கொள்கின்றோம். ஒரு மாணவியோடு உரையாடும் தேவை ஏற்பட்டால் ஏறக்குறைய ஐந்தடி தூரத்தில் நின்று உரையாடுவார். தனித்து ஒரு மாணவி இவருடைய அலு

வலகத்துக்குச் சென்றால் இன்னொரு மாணவியையும் அழைத்து வரும்படி கட்டளையிடுவார். இன்று நாம் நினைத்துப் பார்க்க முடியாத ஒழுக்க சீலத்தினை ஐயங்காரிடம் கண்டோம்.

பரீட்சையில் இருபத்தைந்து வீதம் புள்ளிகள் பெறக்கூடியதான இலகு வினாக்களையும் இருபத்தைந்துவீதம் புள்ளிகள் பெறமுடியாத கடினமான வினாக்களையும் கலந்து வினாத்தாள் தயாரிப்பார். ஆனால் புள்ளியிடும்போது விடைத்தாள்களை நன்றாகத் திருத்திக் கணிசமான புள்ளிகளை நிறைவாக இட்டு வைப்பார். அவர்களுடைய உள்ளத்தின் விசாலம் போல புள்ளியிடும் கரங்களின் விசாலமும் தாராளமானவை. சில சமயம் வகுப்பறையிலே கேட்கின்ற கேள்விகளுக்குத் தவறாகப் பதில் அளித்தாலும் 'ரொம்ப சரி அடுத்தாள் சொல்லும் பார்ப்போம்' எனக் கூறுவார். எவரையும் மனம் நோக வைக்காத இனிய பிறவி இவருடைய பிறவி. இது ஸ்ரீமத் நாராயணமூர்த்தி இவருக்குக் கொடுத்த வரமாகும். அன்றைக்கும் என்றைக்கும் கல்வி கற்றோம்; கற்பித்தோம்; வாழ்க்கை நடாத்துகிறோம் என்று சொல்லிப் பெருமிதம் அடைவதற்கு ஐயங்கார் அவர்கள் எமக்குக் காட்டிய பாதை மூல காரணமாக அமைந்தது. பயிற்றப்பட்ட ஆசிரியர் கலாசாலையில் இருந்து 1944ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நாங்கள் வெளியேறினோம். அதன்பின்பும் பெரியார் அவர்களின் சேவையை அறியவும், மகிழ்ச்சியடையவும் வைத்தது இராமநாதன் கல்லூரி கல்விச் சமூகம். தாயகத்துக்குச் சென்று தனது இறுதிக் காலத்தை அறிவுச் சோலையினூடே கழித்து அமரத்துவம் எய்தினார்.

**திரிகரண சுத்தியும் காரிய சித்தியும்**
**எனக்கு அருள்வாய்**
**கருதரிய சிற்சபையின் ஆனந்த நிர்த்தமிடும்**
**கருணாகரக் கடவுளே!**

என்பது இராமநாதன் கல்லூரியில் முகப்பு மண்டபத்தில் பொறிக்கப்பட்டிருக்கும் வாசகமாகும். எனவே கல்லூரி முகாமைத்துவத்தின் நோக்கம் எத்துணை புனிதமானது என்பதைக் கூறி அங்கு கற்பித்த ஆசிரியப் பெருமக்களையும் வாழ்த்தி அமைகின்றேன்.

**சிவத்தமிழ்ச்செல்வி பண்டிதை**
**துர்க்காதுரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி**
**அவர்கள்** J.P.

நன்றி : அறிவொளி காட்டிய சான்றோர் வழியில்....
பக்கம் 1 – 7

# இதய அஞ்சலி



10-08-2012இல் அமரத்துவம்
அடைந்த
**செல்வி. காமாட்சி**
**கந்தையா**
(மிஸ்) அவர்களுக்கு
இதயபூர்வமான அஞ்சலிகள்



31-06-2012இல் அமரத்துவம்
அடைந்த
**திருமதி. மஞ்சுளா**
**உதயகுமார்**
அவர்களுக்கு
இதயபூர்வமான அஞ்சலிகள்

# அகவை எழுபத்தெட்டு பூர்த்திபெறும் "ஆன்மீக அன்னை" சிவத்தமிழ்ச்செல்வி

"பாரியின் கொடையென்ன மாரியின் கொடைமுன்" என இயம்பினர் சங்கப் புலவர். மார்கழி மாதம் மண் செழிக்கும் மாதம். வீடு தோறும் மங்கலக் கோலமிட்டு, பிள்ளையாரை முற்றத்தில் பிடித்து வைத்து மாசிலா வாழ்வு கேட்கும் காலம்.

"அவனியிற் புகுந்தெமை ஆட் கொள்ள வல்லாய் ஆரமுதே பள்ளியெ ழுந்தருளாயே"

என திருப்பள்ளி எழுச்சி பாடி விடிவை வரவேற்கும் திவ்விய காலம். இத்தகைய சிறப்பு வாய்ந்த மார்கழி மாதத்தில் மிருகசீரிட நட்சத்திரத்தில் தீது அகன்று உலகம் உய்ய திருவருள் பேற்றுடன் உதித்தவர்தான் எங்கள் அன்னை சிவத்தமிழ்ச் செல்வி அவர்கள். இற்றைக்கு முப்பது ஆண்டுகளுக்கு முன்பு பருத்தித்துறை இன்பர்சிட்டி சித்திவிநாயகர் கோயில் பிரசங்க நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தவர்; புகழ்பூத்த ஆசிரிய கலாசாலை தமிழ்ப் பேராசிரியரும் "கற்கண்டுப் பண்டிதர்" எனக் கற்றறிந்தோர் போற்றியவரு மாகிய பண்டிதர் பொன். கிருஷ்ண பிள்ளை அவர்கள் இப்பெருமகனாரின் தமிழாற்றலை வியக்காதவர் இல்லை எனலாம். வயதில், அனுபவத்தில் மூத்தவரான இவர் சிவத்தமிழ்ச்செல்வி அம்மா அவர்களை இன்பர்சிட்டி பிள்ளையார் கோயில் விழாவில் அன்று அறிமுகம் செய்து உரையாற்றும் போது பின்வருமாறு குறிப்பிட்டார். "ஈழத்தில் மட்டுமல்ல, ஈழத்திற்கு அப்பாற்பட்ட நாடுகளிலும் கருத்தாழம் மிக்க சொற் பொழிவுகளால் கற்றவர்களையும் மற்றவர்களையும் அரவணைக்கின்ற இப்பெரும் புலமையாளரை சிறியோ னாகிய யான் அறிமுகம் செய்வதில் தயக்கமடைகின்றேன். உலகம் மிகப் பெறுமதியாகக் கருதுகின்ற ஒருவரை யான் எப்படி அறிமுகம் செய்வது? எனச் சிந்தித்தேன். எனக்கு ஒன்று தெளி வாகியது. மிக விலையுயர்ந்தது தங்கம். இத்தங்கத்தினுடைய நிறையைக் கணிப் பதற்கு பற்றைகளிலும் வேலி மூலை களிலும் தேடுவாரற்றிருக்கும் மஞ்சாடிக் காயைப் பயன்படுத்துவார்கள். அடே யப்பா! விலையுயர்ந்த தங்கத்தை சாதாரண மஞ்சாடியை தராசிலே போட்டு எடை பார்க்கிறார்களே என்று ஆச்சரியப்பட்ட எனக்கு இன்று அதே நிலை ஏற்பட்டுவிட்டது. தகுதிகள் பலவுடைய தங்கம்மாவை மஞ்சாடி போன்றிருக்கும் யான் தலைமை தாங்கி அறிமுகம் செய்யும் நிலை" என அவையடக்கமாகத் தலைமையுரை நிகழ்த்தினார். அன்று உரை கேட்ட அன்பர்கள் கற்கண்டுப் பண்டிதரின் ஆழமான அறிமுக உரையையும் அம்மையாரின் அற்புதப் பேருரையையும் கேட்டு அகமகிழ்ந்தனர். முப்பது ஆண்டு களுக்கு முன்பே பழுத்த பண்டிதர், மூத்த தமிழறிஞர் அம்மாவை அறிமுகம் செய்வதற்கு எமக்குத் தகுதி உண்டோ?

எனக்கருதியபோது இன்று அவரைப் பற்றி சிறியவராகிய நாம் எங்ஙனம் தகுதியோடு அவர் பற்றி எடுத்துரைக்க முடியும்? திருமூலர் சுவாமிகள் திரு மந்திரத்தில் குறிப்பிட்டது போல் -

**"பேரறிவாய் பெருஞ்சுடரொன்று அதன் வேரறியாமையை விளம்புகின்றேனே".**

என்ற நிலையில் அம்மா அவர்களின் ஆற்றலை,அவர் செய்த அறப்பணியை எளிதில் எழுதிமுடிக்க இயலாது. தமிழகத்து தமிழ்ப்புலமையாளரும், ஈழத்துப் பேரறிஞர்களும் "இவருக்கு ஈடாக வேறு எவரும் இல்லை" என்று அன்றே சொல்லும் தகைமையில் தம்மை நிலைநிறுத்தியவர் அன்னை. யாழ்ப்பாணத்தில் இற்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு கல்வியறி வுடைய பெண்கள் மிகக் குறைந்த தொகையினரே இருந்தனர். பெண்கள் மேடையில் ஏறித் தம் ஆற்றலை நிரூ பிப்பதென்றால் பொதுவாக அது ஆடல் பாடல் நிகழ்ச்சியாகவே இருக்கும். ஆழமறிந்த புலமையோடு மேடையில் ஏறி பெண் பேசுவதென்றால் அக் காலத்தில் அரிதிலும் அரிது. அன்று யார்க்கும் அஞ்சாது துணிவோடு பெண்ணுலகிற்கே முன்மாதிரியாகத் தன்னை நிலைநாட்டியவர் சிவத்தமிழ்ச் செல்வி அம்மா அவர்கள் என்றால் மிகையாகாது. அம்மையார் அவர்கள் மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடு களுக்கு முதன் முதலாகச் சென்று நாடு திரும்பியவுடன் அன்றைய மலாயன் கபே மேல் மாடியில் ஓர் பாராட்டு விழா நடைபெற்றது. அப்பாராட்டு விழாவில் புகழ்பூத்த நயினை சிவஸ்ரீ. ஐ. கைலாச நாதக் குருக்கள் ஆற்றிய ஆசியுரை இன்றும் அவ்விழாவில் கலந்து கொண்ட வரிடையே பசுமையாக நிற்கின்றது. அவர் தனதுரையில் சிங்கப்பூர், மலேசியா நாட்டுத் தங்கத்திற்கு உலகில் நல்ல மதிப்பு. ஆனால் இன்று மலேசியா, சிங்கப்பூரில் ஈழத்துத் தங்கத்திற்கே மதிப்பு உயர்ந்துள்ளது. எங்கள் தங்கத்தை எல்லா நாடும் இனிமேல் தேடி வருவார்கள். இந்தத் தங்கம் என்றும் தரம் குறையாது. இத்தங்கத்தின் பெறுமதிக்கு எதுவும் நிகரில்லை. எனவே ஈழத்து சைவர்களின் பெருஞ்சொத்தை எல்லோரும் சேர்ந்து வாழ்த்துவோம், பேணுவோம். இத்தகைய பெருமக்களின் நல்லாசீர்வாதங்களை காலத்திற்கு காலம் பெற்று உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தாயாக அன்னை விளங்குகின்றார்.

இன்று பட்டங்கள், கௌரவங்கள் எல்லாவற்றையும் கடந்த நிலையில் ஆன்மீகத் தாயாக விளங்குகின்ற அன்னையின் வரலாற்றை எடுத்துரைப் பதற்கு பல அறிஞர்கள் முயன்றுள் ளனர். அவரது சமூக நலப்பணிகள் பற்றி பல்கலைக்கழக அறிஞர்கள் முதல் பாடசாலை மாணவர்கள் வரை ஆய்வு செய்த வண்ணமாகவுள்ளனர். தெல்லிமா நகரில் இன்று உலகம் போற்றும் திருக்கோயிலாக மிளிர்ந்து கொண்டிருக்கும் துர்க்கையம்பாள் சந்நிதானத்தின் சிறப்பைப் போற்று பவர்கள் துர்க்கா துரந்தரியின் தூய பணியை வாழ்த்தத் தவறுவதில்லை.

ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காணும் ஏற்றமிகு சிறப்பை இலட்சிய

மாகக் கொண்டு அவர் ஆற்றும் பணிகளை ஆயிரமாயிரம் மக்கள் வாழ்த்திய வண்ணம் உள்ளனர். அனுதினமும்அறப்பணிகளால் பலரை ஆற்றுப்படுத்தும் அன்னையை கண் கண்ட தெய்வமாக இன்று கருதுபவர்கள் ஏராளம். முதுமையிலும் தெளிந்த ஞானத்தோடு தம்பணி தொடரும் தாயை இந்நாளில் தலைசாய்ந்து வணங்குகிறோம். அன்னை அவர்களின் நல்லாசி எல்லோர்க்கும் என்றும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

**நன்றி :**

**'அருள் ஒளி' (மாதாந்த சஞ்சிகை)**

**மார்கழி 2002**

**செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களால்**

**ஆசிரியர் தலையங்கமாக எழுதப்பட்டது.**

உ

கடவுள் ஒருவர் இருக்கின்றார்
என்பது முற்றிலும் உண்மை.
அவர் நமக்கு அமைத்த
வாழ்க்கையும் முற்றிலும் உண்மை.
இதனைச் சரியாகப் புரிந்து
கொண்டால் சமுதாயத்துக்கு
நற்பணியாற்றலாம். சமுதாயத்தை
ஈஸ்வர சந்நிதானமாக உணரவும்
சேவிக்கவும் பயின்று கொள்வதே
வாழ்க்கையின் இலக்காக
அமைந்து கொள்ள வேண்டும்

தங்கம்மா அப்பாக்குட்டி

**ஆன்மீக அன்னை அவர்களின் மாதிரிக் கையெழுத்து**

# அன்புச் செய்தி

சகோதரி யதீஸ்வரி

அன்னை ஸ்ரீ துர்க்காதேவியின் அருட்பொழிவு நிலவும் துர்க்காபுரத்தில், சிவத்தமிழ்ச்செல்வி அன்னை தங்கம்மா அப்பாக்குட்டியின் அறச்சிந்தனையில் உருவான துர்க்காபுரம் மகளிர் இல்லம் இன்று தனது 32ஆவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறது!

சேர். பொன். இராமநாதன், உயர்திரு. இந்துபோட் இராசரத்தினம் போன்றோரின் உயரிய எண்ணக்கரு இது. தனது சமூகத்தின் மலர்ச்சி இச்சமூகத்தின் பெண்களிலேயே தங்கியுள்ளது என்ற உண்மையை உணர்ந்த உத்தம உள்ளம் கொண்ட அன்னையால் உருவாக்கப்பட்ட பெண்பிள்ளைகளுக்கான இல்லம் இது.

தமிழ்ச் சைவப் பெண்பிள்ளைகளை மிக அழகிய பண்பாட்டு விழுமியங்களின் மொத்தவடிவமாக வளர்த்து எடுக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் அமைந்த இல்லம்.

ஆரம்ப காலங்களில் மட்டுப்படுத்தப் பட்ட வளங்கள், பொருளாதாரத்துடன் கட்டுப்பாட்டுடன் வளர்க்கப்பட்டது. 1990களின் பின் நாட்டிலே ஏற்பட்ட இக்கட்டான சூழலுக்கூடாக மிக நிதான மாக நடத்தப்பட்டு, பல இடம்பெயர்வுகள், இழப்புகள் மத்தியிலும் நின்றுபிடித்த இல்லம். பிள்ளைகளுடைய நித்திய கடமைகள், ஒழுக்கக் கட்டுப்பாடு, கல்வி எல்லாமே ஒரு குறைவுமில்லாது சீரிய முறையில் வளர்க்கப்பட்டன.

சிவத்தமிழ்ச் செல்வி அவர்களின் மறைவிற்குப் பின் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன், திருமதி. சிவமலர் அனந்தசயனன் அவர்களின் கண்ணியமான வழிநடத்தலில் சீரிய முறையில் இயங்கி வருகின்றது.

இல்லப் பணியாளர்களின் நல்ல பணிகள், சிறந்த இடவசதி, போதிய வளம் பெற்று இல்லம் தற்போது நிறைவாழ்வு இல்லமாக இயங்கி வருகிறது. இவ்வேளையில் இல்லத் திற்குத் தமது அர்ப்பணிப்போடு கூடிய சேவையை வழங்கிய சிலரை நினைத்துப் பார்க்கவேண்டி உள்ளது.

இல்லம் தொடங்கியபோது முதன் முதல் மேற்பார்வையாளராகப் பொறுப் புடன் செயற்பட்ட செல்வி. மணிமேகலை கணபதிப்பிள்ளை, திருமதி. க.தயாள மணி ரீச்சர், செல்வி. பஞ்சராணி (திருமதி. பாலச்சந்திரன்), திருமதி. ருக்மணி செல்வராசா (ஓய்வுநிலை மருத்துவத்தாதி), செல்வி. பராசக்தி, இல்லத்தில் வளர்ந்து இல்லப்பணி,

காரியாலயப் பணியில் சிறந்து விளங்கிய அன்பிற்குரிய பிள்ளை மஞ்சுளா, தனது இறுதி மூச்சு வரை இல்லப் பணியில் கண்ணுங்கருத்துமாக வாழ்ந்த சகோதரி காமாட்சி கந்தையா, ஆரம்ப காலங்களில் இல்லத்தின் ஏனைய பிள்ளைகள் சுமுகமாக வாழத் தம்மை அர்ப்பணித்துப் பணிபுரிந்த இல்லப் பிள்ளைகள் சசி, ரதிதேவி, மனோன்மணி.... இன்றுவரை ஓயாது பணிபுரியும் சகோதரிகள் செல்வி. பெரியதம்பி (ராணியக்கா) செல்வி. சு. சுகந்தினி இவர்கள் என்றும் இல்லப் பிள்ளைகளின் நன்றிக்கு உரியவர்கள்.

செல்வி. காமாட்சியின் திடீர் மறைவின்பின் வெற்றிடமான அவருடைய இடத்திற்கு நியமிக்கப்பட்டு, எவ்வித மறுப்புமின்றி அக்கடமையைச் செவ்வனே ஆற்றிவரும் செல்வி. உஷாதேவி சுப்பையா, அவருடன் இணைந்து பிள்ளைகளை நல்லபடி கவனிக்கும் சகோதரிகள் பவானி, து. தவமலர், க. சிவாஜினி,மோகனா ஆகியோரும் பாராட்டிற்கு உரியவர்கள்.

இன்று நாடு முழுவதும் சுமார் இருபத்து ஐயாயிரம் (25000) பிள்ளைகள் இல்லங்களில் அடைக்கலம் புகுந்துள்ளனர். அனைவருக்காகவும் நாம் பிரார்த்தனை புரிவோம்.

இவர்கள் அனைவரும் நல்ல கல்வி, நல்ல பண்பாடு, உயரிய குறிக்கோள் கொண்ட சிறந்த பிரஜைகளாக உருவாக வேண்டும்.

நாளைய உலகில் கௌரவமான இடத்தினை இவர்கள் அடைய வேண்டும்.

துர்க்காபுரம் மகளிர் இல்லத்தில் வளர்ந்து, இல்லறவாழ்வை ஏற்று, அமைதியாக வாழ்ந்துவரும் வறிய பிள்ளைகளுக்காக துர்க்காபுரம் மகளிர் வீட்டுத்திட்டம் ஒன்றை உருவாக்கி, அவர்களுக்கு குடியிருக்கும் வீடுகள் பலவற்றைக் கட்டியெழுப்ப அத்திவாரம் இட்டுள்ள ஆலய அறங்காவலர், நிருவாக சபையினரின் உயர்ந்த நோக்கத்தினைப் போற்றும் இந்த வேளையில்,

இல்லங்களில் வாழும் பிள்ளைகள் அனைவரும் சொந்த வீடு, சொந்த உழைப்பு, ஆரோக்கியமான அன்பு அகலாத நல்ல குடும்ப வாழ்வு உடையவர்களாக வாழ வாழ்த்துவோம்.

சுய கௌரவம், சமூகப்பொறுப்பு, நன்னடத்தை, தலைமைத்தவப் பண்பு கொண்ட நல்ல பெற்றோராக இவர்கள் மிளிர எல்லாம்வல்ல அன்னை பராசக்தி அருள்புரிய வேண்டும்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

# 25வது ஆண்டு விழாவின்போது...


















## 26வது ஆண்டு விழாவின்போது...





## 28வது ஆண்டு விழாவின்போது...





# 22, 29வது ஆண்டு விழாக்களின்போது...











# 31வது ஆண்டு விழாவின்போது...


















# தாய்த் தலைமைத்துவம்

**திருமதி. பாகீரதி கணேசதுரை**
உளவளவாளர் / ஓய்வுநிலை உப அதிபர்.

**"தற்காலத் தற்கொண்டாற்பேணித் தகைசான்ற
சொற்காத்துச்சோர்விலாள் பெண்"**

ஆம் கற்பு நெறியில் தன்னையும் காத்துக் கொண்டு தன்னை மணம் புரிந்து கொண்ட கணவனையும் அவனது கற்பு நெறி தவறாது பேணி, தகுதியமைந்த புகழையும் காத்து மனையறங்களிலும் தளர்ச்சி இல்லாதவளே இல்லத்திற்குச் சிறந்த பெண் என்று வள்ளுவப் பெருந் தகையார் பெண்ணின் பெருமையைக் கூறியிருக்கின்றார். இதுமட்டுமல்ல,

**புகழ் புரிந்த இல் இல்லோர்க்கு இல்லை
இகழ்வார் ஏறுபோல் பீடுநடை"**

என்னும் குறளின் மூலமாக தலைவனின் புகழைக் காக்க விரும்பும் மனைவி - தலைவி இல்லாதவர்க்கு தம்மை இகழ்ந்து பேசும் பகைவர் முன் சிங்கம் போல் இறுமாப்புடன் தலை நிமிர்ந்து நடக்கும் பெருமித நடை யில்லை. குடும்பத் தலைவன் தலை நிமிர்ந்து நடப்பதும் தலைகுனிந்து நடப்பதும் அந்தக் குடும்பத்தலைவியின் நற்குண நற்செயல்களில் பெரிதும் தங்கியுள்ளமை இங்கு சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. இந்த நிலைகளனுக்கு மட்டுமல்ல, அவன் பெற்றெடுத்த பிள்ளைக்கும் அவனைப் பெற்றெடுத்த குடும்பத்தவர்களில் அவள் வாழும் சுற்றம், சமூகம் அனைத்திற்குமே பெருமிதத்தை வழங்கி நிற்கின்றது. ஒரு குழந்தையைச் சுமந்து பெற்றெடுக்கும் தகுதிப்பாடும்,பொறுப்பும் ஒரு பெண்ணின் கைகளிலேயே இயற்கை யால் வழங்கப்பட்டுள்ளது.

பெண்மையை மாபெரும் சக்தி சமுத்திரமாக வர்ணிக்கும் பாரதியின் வரிகள் பெண்மைக்கு இலக்கணம் வகுத்த வரிகளாக தாய்த் தலை மைத்துவ மாண்பைப் பறைசாற்றி நிற்கின்றன. கண்டவர் போற்றும் பெண்மை நிமிர்ந்த நன்னடையும் நேர் கொண்ட பார்வையும் நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும் நிமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால் செம்மை மாதர் திறம்புவதில்லையாம்" எனும் வரிகளில் இருந்து பெண்மையின் திடசித்தம் வெளிப்பட்டு நிற்பதைக் காணலாம்.

பெண்ணை வெறும் போகப் பொரு ளாகப் பார்த்த நிலைமாறி அவள் கரத்தில் பாரிய பொறுப்புக்களை வழங்கி உன்னதமானதோர் மனித சமுதாயத்தை உருவாக்கிக் கட்டிக் காக்கும் நிலைக்கு இன்றைய மானிடம் உயர்ந்துள்ளமை உண்மையில் போற்று தற்குரிய தொன்றாகும். மனிதர் தம்மை அமரர்களாக்கும் வல்லமை கொண்ட அன்னை பராசக்தியின் வடிவமாகவே பெண்மை பெருமிதம் கொள்கின்றது.

ஆடவர்கள் திசைமாறாமல் நெறி மாறாமல் நிறைவான வாழ்வைத் திறம் பட நடாத்துவதற்கு உந்துசக்தியாகப் பெண் என்பவள் பல்வேறு பரிமாணங் களில் உடனுறைந்து தடுத்தாட் கொள்ளும் நிலை பற்றி அறிஞர்கள் விதந்துரைத்துள்ளமை குறிப்பிடத் தக்கது. ஒரு மனிதனின் நடத்தை, உருவாக்கம் பெறுவதில் முதன்மைப் பொறுப்பை தாயானவள் ஏற்று வழி நடத்தி அவன் இளமை, மத்திய கால வாழ்வியலில் காதலி, மனைவி ஆகிய உறவுகளால் சீர் செய்து மீண்டும் முதுமையில் ஆதரவாகக் காப்பாற்றும் தருணத்தில் தாரமே தாயாகி அர வணைக்கின்றாள். இங்கு தாய்மை தலைமையேற்றுக் குடும்பமாகிய நிறு வனத்தைப் பரிபாலிக்கும் போது ஏனைய அனைத்து உறுப்பினர்களும் அந்த நிழலிலே அச்சமற்று ஆறுதல் கொள்ள முடிகின்றது. பெண்மைக்கே யுரிய அன்புடைமை, விட்டுக்கொடுப்பு, புரிந்துணர்வு, தியாக சித்தம் ஆகிய குணாம்சங்கள் நல்லதோர் தலைமைத் துவத்தை இங்கு வழங்கி நிற்பதைக் காணமுடிகின்றது. இதற்கு அடித்தள மாக பெண் கல்வியின் அவசியம் உணரப்படுகின்றது. உழைப்பையும் ஊதியத்தையும் பெற உதவுகின்ற கல்வித் தரத்திற்கு அப்பால் குடும்பம் எனும் நிறுவனத்தை நிர்வகிப்பதற்கான கல்வித்தரம் மிக மிக அவசியமாகின்றது. குழந்தை வளர்ப்பில் ஆரோக்கியத்தில் நிறைவான ஊட்டச் சத்து என்பவற்றில் மாத வருமானத்திற்கு மேலாக வீட்டுத் தோட்டம், கோழி, ஆடு, மாடு வளர்த்தல், சிறு கைத்தொழில் பற்றிய அறிவு ஆகிய அனைத்தையும் உள்ள டக்கிய கல்வி அறிவு என்பன ஒரு பெண்ணிடம் நிறைந்திருக்க வேண் டியது அவசியம். மனத்துன்பம், பொரு ளாதாரப் பற்றாக்குறை, குழந்தைகள் விடயத்தில் ஏற்படும் தாக்கங்கள், சிறிய முரண்பாடுகள் போன்ற விடயங்கள் ஏற்படுகின்றபோது அதனைத்தாங்கிக் கொண்டு சமநிலை தளம்பாது நின்று முகம் கொடுக்கும் ஆற்றல் தாய்த் தலைமைத்துவத்தில் அதிகளவில் வேண்டப்படுகின்றது. இன்றைய யுவதிகள் மத்தியில் பெரும்பான்மை யாகக் காணப்படும் அவசரம், பரபரப்பு, பொறுமையின்மை, அலட்சியம், பொறுப்பற்ற தன்மை என்பன தாய்த் தலைமைத்துவத்திற்குப் பெரும் சவா லாக மேற்கிளம்பியுள்ளமை மிகவும் வருந்தத்தக்கதொன்றாகும். இன்றைய தகவல் தொழில்நுட்பம் தொடர்பான அறிவின்மையானது இளையோரைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரும் விடயத்தில் பெற்றோருக்குப் பெரும் தடைக்கல்லாகக் காணப்படுகின்றது. ஆம் தலைமுறை இடைவெளியானது கட்டிளமைப் பருவத்துப் பிள்ளைகள் முன் ஒன்றும் தெரியாத தாயாக, தந்தையாக நிற்கவைத்துள்ள நிலை மாறவேண்டும். நவீன நுட்பங்களுடன் கூடிய தொலைபேசி குறும் செய்தி, இணையத்தளம், நீலப்படம் போன்ற விடயங்களில் எந்தவித பரிச்சயமும் அற்ற பெற்றவர்கள் தம் பிள்ளை களைத் தொலைத்துவிட்டு தேடிக் கொண்டிருக்கும் துர்ப்பாக்கியம் மாற வேண்டுமானால் அதிபுத்திசாலிகளாகிய தமது பிள்ளைகளை வளர்ப்பதற்கும்

கண்காணிப்பதற்கும் ஆலோசனை வழங்கி அரவணைப்பதற்கும் அவை தொடர்பான அறிவைப் பெற்றிருப்பது அவசியம்.

உணர்வுச் சமநிலையானது சலனங்கள் ஏற்படும் வேளையில் நம்மைப் பாதுகாத்து நேர் வழி நடக்க வைக்குமாகையால் பிள்ளைகள் மத்தியில் அழகியல் கலைகள் ஏதாவது ஒன்றை சிறுபராயத்தில் இருந்து கற்பிப்பது அவசியம். விளையாட்டுக்கள், ஓய்வு நேரப் பொழுது போக்குகள், வாசிப்புப் பழக்கம், கைவினைப் பொருட்கள் தயாரித்தல், தற்காப்புக் கலைகளில் ஈடுபடல் போன்ற ஆரோக்கியமான திசைகளில் எல்லாம் பிள்ளைகளை ஈடுபடுத்துவதன் மூலம் சமநிலை ஆளுமையுடைய குழந்தைகளை உருவாக்க முடியும். குறிப்பாக பால் நிலை தொடர்பான நேர்மனப்பாங்கை வளர்த்து எதிர்பாலாருடன் ஆரோக்கியமான நட்பை வளர்க்கப் பழக்கப்படுத்துவது அவசியம். மாறாக எதிர்ப்பால் கவர்ச்சியின் பால் ஈர்க்கப்படும் பதின்மவயதுப் பிள்ளைகள் குறிப்பாகப் பெண் பிள்ளைகள் துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகித் தமது எதிர்கால வாழ்வையே கேள்விக் குறியாக்கி மூலையில் முடங்கிப் போகும் அபாயம் சம்பவிக்கும் நிலை தோன்றுவது துரதிஷ்டவசமானது என்பதை நாம் புரிந்து கொள்வது அவசியம்.

மொத்தத்தில் தாய்த் தலைமைத்துவம் என்பது பெண் குழந்தைகளைப் பராமரிக்கும் நிலையில் உள்ள ஒன்றைப் பெற்றார் குடும்பத் தலைமைத்துவத்திற்கும் பொதுவாக நிறுவனமாக்கப்பட்ட காப்பகங்களின் மகளிர் அமைப்புக்களின், பெண்கள் கல்லூரிகளின் தலைமைத்துவத்திற்கும் ஒட்டு மொத்த கலைச் சொல்லாகவே கருதப்படுகின்றது. ஆம்! ஒவ்வொரு பெண்ணுமே தாயாகவோ தாயாகாமலோ எது எப்படியிருப்பினும் தாய்மையின் ஒட்டு மொத்தத் திருவுருவேதான். அது புனிதமானது, போற்றப்படவேண்டியது. அதனைப் புனிதப்படுத்துவதும் போற்றிப் பாதுகாப்பதும் மனிதனாகப் பிறந்த அனைவரதும் கடனாகும் என்றால் - அது மிகையாகாது. ஆம் வொல்காவிலிருந்து கங்கைச் சமவெளியூடாக இன்று வரை எமது வரலாறு தாய்த் தலைமைத்துவ வழி வந்த வரலாறாகவே வளர்ந்து வந்துள்ளமை சர்வம் சக்திமயம் என்று எம்மைப் பெருமிதமடையவைக்கிறன்றதல்லவா!

**இன்றைய சிறுமிகள்**
**நாளைய தலைவிகள்**

# எனது இருபத்தைந்து வருட மேற்பார்வையாளர் பணியில் துர்க்காபுரம் மகளிர் இல்லம்....

**செல்வி. செல்வராணி பெரியதம்பி**
( இல்ல மேற்பார்வையாளர் )

"ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காணலாம்" என்ற மகுட வாசகத்துடன் இன்று ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் துர்க்கா புரம் மகளிர் இல்லம் 03-02-1982ஆம் ஆண்டு அன்னை சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. இவ் இல்லம் ஆரம்பிக்கப்பட்டு முப்பத் திரண்டு வருட காலத்தில், இல்லத்தில் தங்கிப் பயன்பெற்றவர்கள் பலர். திருமுறை மடத்திற்கு பக்கத்தில் அமைந்துள்ள "ஞானசுரபி" கட்டிடத்தில் ஒன்பது பிள்ளைகளுடன் ஆரம்பிக்கப் பட்டது.

எமது கோயில் வளாகத்தில் 03-02-1982ம் ஆண்டு மகளிர் இல்லத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டு 31-01-1986ஆம் ஆண்டு புதிதாக இரண்டுமாடி கட்டி டத்தின் திறப்பு விழா இடம்பெற்றதைத் தொடர்ந்து இக்கட்டடத்தில் மகளிர் இல்லம் இயங்க ஆரம்பித்தது. அக் காலப்பகுதியில் ஆலய நிர்வாக சபையின் பொதுச் செயலாளராக பணியாற்றிய அமரர் திரு.சு. சிவவாகீசர் அவர்கள் எனது குடும்பத்தை நன்கு அறிந்த வகையிலும், எனது சகோ தரர்களின் பணிகளை அறிந்திருந்த வகையிலும் என்னை சிபார்சு செய்து இவ் இல்லத்திற்கு மேற்பார்வை யாளராக இணைத்தார். அன்றிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட எனது பணிக்கு அவ்வேளையில் தேவஸ்தான தலை வராகவும், எமது இல்லத்திற்கு தலை வராகவும் விளங்கிய எமது அன்னை சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் அன்பும், பண்பும், அரவணைப்பும் இவற்றிற்கு மேலான அவரது ஆளுமை, திறமை களும் எனக்கு மேலும் வலுவூட்டுவதாக அமைந்தது. அம்மையார் அவர்களால் பணிக்கப்பட்டதற்கு அமைய இல்லப் பிள்ளைகளின் உடை, சுகாதாரம், இருப்பிடம், மற்றும் ஒழுக்கம் என்ப வற்றை கண்காணித்து, காலநேரம் பாராது பணியாற்றியதில் நன்மதிப்பை யும், பாராட்டையும் பெற்றேன்.

ஆலய சூழலில் எமது சைவ பாரம்பரிய பண்பாட்டுடன் ஆலயப் பணிகளையும் இல்லப் பணிகளையும், அன்னதானப் பணிகளையும் மேற் கொண்ட எமது இல்லப் பிள்ளைகள் தமது கல்வியிலும், கலைகளிலும், விளையாட்டுக்களிலும், திறமையான வர்கள் என்பதை நிலைநாட்டினார்கள். ஆலய சூழலின் செழிப்பிற்கு "மர நடுகை" மேற்கொண்டு கட்டட வளர்ச் சிக்கும், பொருளாதார வளர்ச்சிக்கும், உதவிகள் செய்தனர். மங்கையற்கரசி, திலகவதி, வாசுகி என இல்லங்கள் வகுத்து விளையாட்டுப் போட்டிகள்

நடாத்தியும் கண்காட்சிகள் நடாத்தியும் மகிழ்ந்தோம். நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழலில் மிகவும் கஷ்டப்பட்டோம். எந்த கஷ்டம் வந்தாலும் அம்மா எங்களுடன் இருந்து "ஒரு பொல்லாப்பும் இல்லை" என்ற வசனத்தைக் கூறி ஆறுதல்படுத்தி வழிநடத்தினார்.

எமது ஆலயச் சூழலில் நடந்த ஷெல் வீச்சில் எமது இல்லத்தைச் சேர்ந்த செல்வி சுமித்திரா (கௌரி) மற்றும் பணியாளர்கள் சிலரும் இறந்தது எமக்கு மிகுந்த வேதனையைத் தந்தது. மகளிர் இல்ல கட்டிடத்தை விட்டு முதன் முதலில் 1991-05-31இல் இடம்பெயர்ந்தோம். அன்றிலிருந்து 1998ஆம் ஆண்டு மீள திரும்பும் வரை பல இடங்களுக்கும் இடம் பெயர்ந்தோம். கைதடி சைவ சிறுவர் இல்லம், சுன்னாகம் இராமநாதன் கல்லூரி, உரும்பிராய் திருஞானசம்பந்தர் இல்லம், உஷன் கந்தசாமி கோயில் தர்மகர்த்தா குகதாசன் வீடு, சிவஸ்ரீ சுந்தரேஸ்வரக் குருக்கள் ஐயாவின் உசன் வீடு, மீசாலை கா.பொ.செல்லையா வீடு, கைதடி சச்சிதானந்தா ஆச்சிரமம், மீண்டும் சுன்னாகம் இராமநாதன் கல்லூரி, மானிப்பாய் விமாகி கிரிதரன் வீடு என எமது இடப்பெயர்ச்சிகள் நீண்டு சென்றது.

இடப்பெயர்வு காலங்களில் எமக்கு உதவியாக இருந்து பல உதவிகளைச் செய்தவர்களை என்றும் எம்மால் மறக்கமுடியாது. நாம் நீண்ட காலமாக இராம நாதன் கல்லூரியில் இடம் பெயர்ந்து இருந்தவேளை பேருதவியாக இருந்தவர்கள் அப்போதைய வலயக் கல்விப் பணிப்பாளராக இருந்த அமரர் சு. இரத்தினராசா மற்றும் கல்லூரி அதிபர் திருமதி. ஆனந்தி சிவஞானசுந்தரம் ஆகியோர் என்றும் மறக்க முடியாதவர்கள் ஆவார். எந்த நெருக்கடியான நிலையிலும் பிள்ளைகளின் கல்வியிலோ, உடையிலோ, உணவிலோ எந்தவிதமான குறைகளும் இல்லாமல் அம்மா வளர்த்து வந்தார். அதற்கு அவரது அறிவும், ஆளுமையும் சமயோசித செயற்பாடுகளுமே காரணமாக அமைந்திருந்தன. இதனால் பிற உதவிகளும் தேடிவந்தன. என்னாலும், சக பணியாளர்களாலும் உற்சாகமாக கடமைகளைச் செய்யக்கூடியதாக இருந்தது.

இடம்பெயர்ந்த நிலையிலும் 1996ஆம் ஆண்டு உசனில் எமது இல்ல ஆண்டு விழாவைக் கொண்டாடி மகிழ்ந்துள்ளோம். பிள்ளைகள் மீது அளவற்ற அன்பு கொண்ட அம்மா, பிள்ளைகளின் கலை நிகழ்வைக் கண்டுகழிப்பதிலும், பிள்ளைகளின் பரீட்சைப் பெறுபேறுகள், பல்கலைக்கழக பட்டங்கள் புலமைப் பரிசில் பரீட்சை சித்தி என்பவற்றின் போதும் மிகவும் பெருமிதப்படுவார். எமது அன்னையரைக் கொண்டு "திருஷ்டி" துடைத்து சொந்தப் பிள்ளைகளைப் போல் பராமரிப்பார். ஒரு நாள் ஒருவர் அம்மாவிடம் வந்து "அநாதைப் பிள்ளைகளைப் பார்க்க வேணும்" என்று கேட்டார். அம்மா உரத்த குரலில் "அநாதை என்றால் வெளியே போ, என்னுடைய பிள்ளைகளைப் பார்க்க என்றால் உள்ளே வா" என்று கூறியது என் கண்முன்னே நிற்கிறது. இதற்கு இணை

யாக இடம்பெயர்ந்த காலத்தில் சில பிள்ளைகளின் பெற்றோர் / பாதுகாவலர் பிள்ளையைத் தம்முடன் கூட்டிச்செல்ல வந்திருந்தபோது, ஒருவர் கூட பெற்றோர் / பாதுகாவலருடன் செல்ல மறுத்து விட்டார்கள். அவர்கள் அம்மா மீது வைத்திருந்த அன்பிற்கும் மரியாதைக்கும் இது சான்றாக அமைந்திருந்ததை என்னால் உணர முடிந்துள்ளது.

நாட்டின் அசாதாரண சூழ்நிலையில் இல்ல வரலாறுகளைச் சுமந்தவாறு எமது பணிகள் தொடர்ந்தன. 1998ஆம் ஆண்டு மீண்டும் நாம் துர்க்கை அம்மன் ஆலய வளாகத்திற்கு வந்து எங்கள் இருப்பிடத்தை நிலைப்படுத்திக் கொண் டோம். அம்மாவின் நேரடிக்கண் காணிப்பில் எமது பிள்ளைகளின் உதவியுடன் செய்து மகிழ்ந்தோம். எந்த நெருக்கடியான சூழ்நிலையிலும் எமது கலாசாரங்கள், பண்பாடுகள், சைவ பழக்க பழக்கங்களையும் பிள்ளைகள் தொடர்ந்து கடைப்பிடித்து வந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். எந்தக் கோயிலிலும் எமது பிள்ளைகள் சிரம தானம் செய்வதிலும், மாலை கட்டுதல், கோலமிடல், பதிகம் பாடல், இருப்பிடங் களை சுத்தமாக வைத்திருத்தல் போன்ற வற்றை செய்யத் தவறுவதில்லை. இதற்கு எமக்கு தனிப்புகழாரம் உண்டு எனலாம். இவை யாவற்றையும் அம்பாளுக்கு காணிக்கையாக்க கிடைக்கப்பெற்ற கடமையாக எண்ணுகிறேன்.

2008ஆம் ஆண்டு கையில் ஏற்பட்ட முறிவு காரணமாக அம்மா நோய்வாய்ப் பட்டார். பின்பு சத்திரசிகிச்சை பயனளிக் காமல் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் 28 நாட்கள் இருந்தபோது வெளியே இல்லப் பிள்ளைகளும் நாங்களுமாக மாறி மாறி இருந்து அம்மா சுகமடைய பிரார்த்தித்தோம். அம்மா எங்களை விட்டுப் பிரிந்தார். அது எங்களை மட்டுமல்லாது உலகத்திலுள்ள சைவ மக்களையும் சோகத்தில் ஆழ்த்தியது. அம்மாவின் மறைவின்பின் எங்களுடன் உடனிருந்த "மிஸ்" என அன்பாக அழைக்கப்படும் மேற்பார்வையாளர் செல்வி காமாட்சி கந்தையா அவர்களின் இழப்பும் மற்றும் எமது இல்லப் பிள்ளையாக இருந்து வளர்ந்து எமது தேவஸ்தானத்தில் எழுதுவினைஞராகக் கடமையாற்றிய திருமதி. மஞ்சுளா உதய குமார் அவர்களது இழப்பும் எங்களைச் சோகத்தில் வாட்டியது.

அம்மாவின் மறைவின் பின் எமது தேவஸ்தானத்தின் தலைவராகவும், மகளிர் இல்லத்தின் தலைவராகவும் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் செயற்படுவது மதிப்பிற்குரியதாகின்றது. எத்தனையோ துன்பங்களுக்கு மத்தியிலும் எமது துர்க்காபுரம் மகளிர் இல்லமும் இல்லப் பிள்ளைகளும் தலைநிமிர்ந்து வாழ் வதற்கு "அம்பாளே" துணை நிற்கின்றார். அம்பாளின் நிழலில் அம்மாவின் கீழ் பணியாற்றியதை நான் என் வாழ்வில் பெற்ற பெரும் பாக்கியமாகக் கருது கின்றேன்.

அன்று தொட்டு இன்றுவரை எமது இல்லப் பிள்ளைகள் கல்வியிலும் கலையிலும் சிறந்து விளங்குகிறார்கள்.

சிறந்த பெறுபேறுகளை பெற்று பல்கலைக்கழகம், கல்வியியற்கல்லூரி, தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் படிப்பைத் தொடர்கின்றனர். படித்து முடித்து பட்டம் பெற்று அரச திணைக் களங்களிலும் பணிபுரிகின்றார்கள். குடும்பப் பெண்ணாக இருப்பதற்கான சமையல் கலைகள் மற்றும் பசுக்களில் பால் எடுத்தல், பண்ணைவேலை, தையல், நெய் தயாரித்தல், கிடுகு பின்னுதல், தோட்டம் அமைத்தல், பூந்தோட்டம் வைத்து அழகுபடுத்தல் மற்றும் சுத்தம் பேணுதல் போன்ற யாவற்றையும் வழக்கப்படுத்தி பட்டை தீட்டப்படுகின்றனர். இதன் பயனாக திருமணம் செய்து எமது நாட்டிலும், வெளிநாட்டிலும் வாழும் எமது பிள்ளைகள் தாம் பெற்ற நன்மைகளின் சிறப்பு பற்றியும், பயன்கள் பற்றியும் தற்போதும் என்னுடன் கதைப்பதுண்டு. எமது கண்டிப்பும், வழிநடத்தலும், அறிவுரைகளும் இன்று அவர்களுக்குப் பெரிதும் பயன்படுவதை எண்ணிப் பெருமிதங் கொள்கின்றேன்.

எமது பிள்ளைகளின் பூப்புனித நீராட்டு விழாக்களைப் பொறுப்பேற்று நடாத்தி அகமகிழ்ந்துள்ளேன். அத்தோடு பல பிள்ளைகளின் திருமண நிகழ்வுகள் எமது இல்லத்தில் என் கண்முன் நடந்தேறி யுள்ளன.

இன்னும் திருமணங்கள் நடைபெற வுள்ளது. இதனால் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். இந்த வகையில் தற்போதும் திருமணமான பிள்ளைகள் குடும்பசகிதம் என்னைத் தேடிவந்து தமது பிள்ளைகளை (பேரன், பேத்தி) எனது கையில் தந்து மகிழ்கின்றனர். இது எனக்கு திருப்தியைத் தருகின்றது. எனது தனிப்பட்ட வாழ்வைத் துறந்து எனது வாழ்வின் பெரும்பகுதியை எமது இல்லப் பிள்ளைகளை வழிநடத்திய தையிட்டு அகமகிழ்வதுடன், என் வாழ்வில் ஆத்ம திருப்தியைப் பெற்றுள்ளேன். மேன் மேலும் எமது துர்க்கா புரம் மகளிர் இல்லம் வளர்ந்து பெரு விருட்சமாகி பல பிள்ளைகளை இந்த மண்ணில் தலைசிறந்த பிரஜைகளாக உருவாக்க வேண்டும் என்று துர்க்கை அம்பாளை வேண்டுகிறேன்.

# சிவத்தமிழ்ச் செல்வி சைவத்தமிழ் ஆய்வு நூலகம்

**செல்வி. உஷாதேவி சுப்பையா**
இல்ல மேற்பார்வையாளர்

*வளம் கொழிக்கும் தெல்லியம்பதியில் அமைந்துள்ள துர்க்காபுரத்தில் அருள் பாலிக்கும் ஸ்ரீ துர்க்காதேவி ஆலய வளாகத்தில் அறிவாலயமாக அமைந் துள்ள சிவத்தமிழ்ச்செல்வி சைவத்தமிழ் ஆய்வு நூலகம் சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பவளவிழா அன்று (7-1-2000) எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி உயர்தர மாணவர்களுக்கும்; சைவம், தமிழ் பற்றி ஆய்வு செய்வோருக்கும்; சைவத்தமிழ் அபிமானிகளுக்கும், தேடலில் ஈடுபடும் ஆர்வலர்க்கும், ஆய்வு ரீதியாகப் பயன்பட வேண்டும் என்ற உயர்ந்த நோக்குடன் சாதாரண நூலகங்களைவிட தகவல்கள் பல கொண்டு அடங்கும் நூலகமாகத் திகழவேண்டும் என்ற நோக்குடனும் அமைக்கப்பட்டுள்ளது.*

*இவ் நூலகமானது காங்கேசன் துறை வீதியில் இருந்து ஸ்ரீதுர்க்காதேவி ஆலயத்திற்குச் செல்லும் வழியில் தேவியின் தீர்த்தமாம் புஷ்கரணிக்கு முன்பாக ஏறத்தாழ 7 பரப்பளவு கொண்ட காணியில் அமைந்துள்ளது. நூலகமானது காலை 8-00 மணி தொடக்கம் மாலை ஐந்து மணி வரை வாசகர்கள் வாசிக்க வசதியாகத் திறக்கப்படும்.*

*இவ் நூலகத்தின் ஆரம்பப் பணிக்கு இன்றைய ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவரும் அன்றைய நிர்வாகசபையின் உறுப்பினருமான கலாநிதி ஆறு. திரு முருகன் அவர்களின் முயற்சியும் கட்டிட அமைப்புக்கு தேவஸ்தான மூத்த நிர்வாக சபை உபதலைவர் திரு.ச.ஆறு முகநாதன் அவர்கள் பொறுப்பாக இருந்ததும் எமது தேவஸ்தானத்திற்கு பெருமை சேர்க்கிறது. இவர்களது கடுமையான உழைப்பின் காரணமாக துரித கதியில் இங்கு நூலகக் கட்டடப் பணி நிறைவு பெற்றது. நூலக முன்றலில் காணப்படும் சிற்பமாகிய சரஸ்வதி சிலை தாமரைப் பூவில் அமர்ந்திருக்கும் சரஸ்வதி வடிவமைப்புச் சிறப்பு கலைஞர் திரு.வை.சிவசுப்பிரமணியம் அவர்களைச் சிறந்த கலைஞராகப் பறைசாற்றுகிறது. நூலகத்தை அலங் கரிக்கும் அலங்கார வேலைப்பாடுகள் திரு.வே. பாலேந்திரன் அவர்களின் கைத்திறனின் திறமையைக் காணக் கூடியதாக உள்ளது. இவ் நூலகமானது 7-1-2002 திங்கட்கிழமை நடைபெற்ற சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் அறக் கொடை விழாவின் போது முன்னை நாள் பிரதம நீதியரசரும் இன்றைய வடக்கு மாகாண முதல் அமைச்சரு மாகிய உயர்திரு சி.வி. விக்கினேஸ்வரன்*

அவர்களால் திறந்து வைக்கப் பட்டது.

உலக நாடுகளில் தமிழ்பேசும் மக்கள் பார்க்கும் வகையில் அனைத்து சிறப்பு மலர்களும் இங்கே குவியப் பெற்றுள்ளன. தத்துவம், கலை, மருத்துவம், சஞ்சிகைகள், இலக்கியம், இலக்கணம், சோதிடம், வெளிநாடு, உள்நாடு கும்பாபிஷேக மலர்கள், மாநாட்டு மலர்கள், சிவத்தமிழ்ச்செல்வி அம்மா அவர்களின் ஆக்கங்கள், ஆசி உரைகள், மெய்கண்ட சாஸ்திரங்கள், பதினெண் புராணங்கள், வரலாறுகள், ஆங்கில நூல்கள், சிறுவர் பகுதி என்பன உட்பட ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட நூல்கள் இங்கு காணப்படு கின்றன.

இத்தகைய ஓர் ஆய்வு நூலகத்திற்கு திறப்பு விழா முடிவடைந்தவுடன் எம்முடன் வாசம் செய்யும் அருட் சகோதரி ஜதீஸ்வரி அம்மையார் அவர்களைப் பொறுப்பேற்று பணியாற்றும்படி சிவத் தமிழ்ச்செல்வி அம்மா அவர்கள் பணித்தார். அவரைத் தொடர்ந்து இளைப்பாறிய நூலகர் திருமதி. இரத்தினேஸ்வரி பாலசிங்கம் அவர்களும் திருமதி. சுகன்யா செந்தூரன் அவர்களும் பணியாற்றினார்கள். இவர்கள் எல்லோருக்கும் உதவியாளராக கல்வி கற்று முடிந்த மகளிர் இல்லப் பிள்ளைகள் கடமை புரிந்தனர். அவர்களைத் தொடர்ந்து நூலகராகப் பணியாற்றும் வாய்ப்பு அடியேனுக்குக் கிடைத்தது. வாசிப்பதால் மனிதன் பூரணத்துவம் அடைகிறான் என்பதற்கு அமைய எனக்கும்அவ்வாய்ப்புக் கிடைத்தது. அரிய நூல்களை வாசிக்கும்போது பல நுண்ணிய கருத்துக்களையும் அறியக் கூடியதாக இருந்தது. அங்கு காணப்பட்ட சிறார்களுக்குரிய ஆங்கில சிறுகதைகள், சிறார்கள் வாசித்து அறியும் வண்ணம் சாதாரண ஆங்கில சொற்பிரயோகங் களை உபயோகித்து அமைக்கப்பட் டுள்ளது. க.பொ.த (சா/த), க.பொ.த (உ/த) படிக்கும் மாணவர்களுக்கு ஆங்கிலத்தில் ஆக்கப்பட்ட பாடம் சம்பந்தமான கட்டுரைகள் சம்பந்தமான புத்தகங்கள் மிக அருமையாக உள்ளது. இங்குள்ள நூல்கள் யாவும் ஆய்வுக்கு உபயோகப்படக்கூடிய நூல்களாகவே உள்ளன. அதற்கு உதாரணமாக நூல்களில் காணப்படாத விடயங்கள் கலைக்களஞ்சியத்தில் எடுக்கக்கூடிய தாக உள்ளது. மேலும் இங்கு காணப்படும் மெய்கண்ட சாஸ்திர நூல்கள், உள்நாட்டு, வெளிநாட்டு மாநாட்டு மலர்கள், கும்பாபிஷேக மலர்கள், சித்தாந்த, சமய சஞ்சிகைகள், மாதர்களுக்குரிய சஞ்சிகைகள், சிறார்களுக்குரிய சஞ்சிகைகள் அமைந்துள்ளன.

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் பற்றிய நூல்கள், தேவஸ்தான வெளி யீடுகள் தனிமைப்படுத்தப்பட்டதுடன், நிர்வாகசபை, மகளிர் இல்லம் ஆகிய வற்றுக்குரிய அறிக்கைகள், விழா மலர்கள் என்பன ஆவணப்படுத்தப் பட்டு பேணப்பட்டு வருகின்ற முறையினால் கோவிலைப் பற்றியோ அல்லது மகளிர் இல்லத்தைப் பற்றியோ ஆய்வு எழுதும்

போது உசாத்துணை நூல்களாகப் பயன்படுகின்றன. சிவத்தமிழ்ச்செல்வி அம்மா அவர்களின் ஆக்கங்கள், கும்பாபிஷேக, மாநாட்டு மலர்களின் ஆசி உரைகள் தனிமையாக்கப்பட்டுள்ளமை, தின பத்திரிகையில் வரும் செய்திகள் தேடப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டு ஒரு பகுதியாக வைக்கப்பட்டுள்ளமை அம்மா அவர்களைப் பற்றி ஆய்வு செய்வதற்கு உதவுகிறது. இவ்வாறு அமைந்துள்ள நூலகத்தைச் சிறப்பாக நடாத்தி வருபவர்கள் அடுத்த சந்ததியினரை நல்வழியில் இட்டுச் செல்லும் ஆசான்களாகவே உள்ளனர்.

எதிர்பாராத வகையில் எமது இல்லத்தின் முதன்மை மேற்பார்வையாளர்; என்றும் மறக்கமுடியாத எமது "மிஸ்" என எல்லோராலும் அன்பாக அழைக்கப்படும் செல்வி காமாட்சி கந்தையா அவர்களின் மறைவின் பின் என்பணி மாற்றம் செய்யப்பட்டது. இன்று இந் நூலகத்தில் செல்வி பா. சிவரூபி அவர்கள் பணியாற்றி வருகிறார்கள்.

அமரர் செல்வி. காமாட்சி கந்தையா அவர்களின் ஞாபகார்த்தமாக ரூபா ஒரு லட்சத்து எண்பத்தையாயிரம் பெறுமதியான தரமான நாவல்களும், கற்கும் நூல்களும் அவரது சொந்தப் பணத்தில் வாங்கப்பட்டு நூலகத்திற்கு அன்பளிப்புச் செய்யப்பட்டது. எமது இல்லச் சிறார்களுக்கு ஒரு வரப்பிரசாதமே என்றால் மிகையாகாது.

இவ்வாறாக மிகவும் அருமையாக அமைந்துள்ள இந் நூலகத்தில் உள்ள நூல்களை கணனி மயப்படுத்தி உலகறியச் செய்ய வேண்டும் என்பதே எனது அவா. அம்பாள் திருவருள் கைகூடட்டும்.

## பெற்றோர்களுக்கு :

# போதைப் பொருள் பாவனை பற்றிப் பிள்ளைகளுடன் பேசுதல்

**– கோகிலா மகேந்திரன்**

அண்மைக் காலமாகத் திடீரென எமது பிரதேசங்களில் போதைப் பொருள் பாவனையும் மது பாவனையும் அதிகரித்துள்ளன என்ற அவதானம் மிகக் கவலை தரும் விடயமாக ஆகியுள்ளது. குறிப்பாகப் பாடசாலை மாணவர்கள் பல்வேறு வடிவங்களில் இவற்றை உள்ளெடுக்கத் தொடங்கியிருப்பது சமூகத்தை ஆபத்தின் விளிம்பை நோக்கி எடுத்துச் செல்லத் தக்கது.

போதைப்பொருள் பாவனையைச் சமூகத்திலிருந்து அப்புறப்படுத்தும் நல்ல முயற்சியில் ஈடுபடுகின்ற அனைவரும் பெற்றோருடையதும் பாதுகாவலருடையதும்ஆதரவைப் பெற்றுக் கொள்வது மிக அவசியம். பிள்ளைகள் இவ்விடயங்கள் பற்றித் தமது நம்பிக்கைக்குரிய பெரியவர்களிடமும் பெற்றோர்களிடமும் கதைக்க விரும்புகிறார்கள் என்றே ஆய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆகவே என்ன கதைப்பது? எப்படிக் கதைப்பது? எப்போது கதைப்பது? என்பது பற்றிப் பெரியவர்களாகிய நாங்கள் தெளிவாகவும் ஆயத்தமாகவும் இருப்பது அவசியம்.

**விடய அறிவு :**

போதைப் பொருள் பாவனை பற்றிப் பத்து வயதுக்கு மேற்பட்ட எல்லாப் பிள்ளைகளுடனும் பெற்றோர் பேசுதல் வேண்டும். போதைப் பொருளைப் பாவிக்கத் தொடங்கிய பிறகு மிகச் சங்கடமான நிலையில் இருந்து பேசுவதைவிட, அவர்கள் அதைப் பற்றிச் சிந்திக்க முதலே பேசுவது சிறந்த தடுப்பு முறையாக அமையும். பிள்ளைகளோடு விடயத்தைப் பேச ஆரம்பிக்க முன்னர் அவ்விடயம் பற்றி விரிவாகவும், சரியாகவும் விஞ்ஞானபூர்வமாகவும் தெரிந்து கொண்டு பேசத் தொடங்க வேண்டும்.

மதுவையோ அல்லது கனாபிஸ், கொகேயின், எக்ஸ்ரசி, அம்பிரமீன் போன்ற போதைப் பொருள்களையோ பாவிப்பவர்களில் 70% ஆனோர் அவற்றைத் தமது நண்பர்களூடாகவே பெற்றுக் கொள்கிறார்கள்.

பாரிய உளநோய் ஒன்றுக்காக ஒருவர் மருத்துவ நிபுணரிடம் வருகிறார். அதற்கு முதல் மாதத்தில் அவர் போதைப்பொருள் ஏதாவது பாவித்திருக்கிறாரா என்று மருத்துவர் கேட்பார். ஏனென்றால் அவ்வாறு பாவித்திருந்தால் அவருக்குப் பாரிய மனநோய் வருவதற்கான சாத்தியக்கூறு மற்றவர்களைவிட இரு மடங்காக ஆகிறது. ஆகவே போதைப் பொருளைப் பாவிப்பதன் மூலம் நாம் பாரிய மன

நோய்க்கு உள்ளாகும் ஆபத்தையும் உருவாக்கிக் கொள்கிறோம்.

போதைப் பாவனையாளர்கள் குற்றச்செயல்களில் ஈடுவடுவதற்கான வாய்ப்பும் மிக அதிகம்.இது அவர்கள் சிறைச்சாலையில் வாடும் நிர்க்கதிக்கு அவர்களைத் தள்ளிவிடலாம். அதீத போதைப்பாவனையால் இறந்துபோகக் கூடிய சாத்தியமும் உண்டு.

எந்த ஒருவரும் எந்த நேரத்திலும் போதைக்கு அடிமையாகலாம். "எனது பிள்ளை ஒருபோதும் அப்படிச் செய்ய மாட்டார்" என்ற ஊகத்தோடு கவனிப் பின்றி இருக்கவேண்டாம். போதையைப் பாவிக்கத் தொடங்கியபின்னர், அது அவர்களுக்குப் பிரச்சினை தருகிறது என்று உணர்ந்தாலும், அதன் பாவ னையைக் கட்டுப்படுத்துவதில் உள்ள சிரமம் காரணமாக அதனைத் தொடர்ந்து பாவித்து வருவர். அவர்களின் வாழ்வில் போதையே மையப் பொருளாக மாறுவ தால், படிப்பு, வேலை, உளநலம், மனித உறவுகள், வாழ்க்கைத்தரம் போன்ற வாழ்வின் கூறுகள் அனைத்தும் பாதிக் கப்படுகின்றன. காலப்போக்கில் போதைக் கான ஒரு தாங்கு திறனையும் அவர்கள் வளர்த்துக் கொள்ளக்கூடும். ஒரு குறிப்பிட்ட விளைவைப் பெற்றுக்கொள் வதற்கு அவர்கள் மேலும் மேலும்அதிக போதையைப் பாவிக்க நேரிடலாம். போதையை நிறுத்தஅவர்கள்முயற்சி செய்கிறபோதும் சில உடல் ரீதியான குணங்குறிகள் தோன்றி அதைத் தடுத்து விடும்.

மைய நரம்புத் தொகுதியில் போதைப் பொருள் ஏற்படுத்தும் விளைவுகளின் அடிப்படையில் அவற்றை மூன்று முக்கிய பிரிவுகளில் அடக்கலாம்.

1. தூண்டிகள்
2. மந்தமாக்கிகள்
3. மாயப்புலன் உணர்வுக்காட்டிகள்

தூண்டிகள் பொதுவாக மைய நரம்புத் தொகுதியின் தொழிற்பாட்டைத் தூண்டும் அம்பிரமீன், எக்ஸ்ரசி,கொகேயின், கபீன், நிக்கோற்றின் ஆகியவை இதற்குள் அடங்கும்.

மந்தமாக்கிகளோ மறுதலையாக மைய நரம்புத் தொகுதியின் செயற் பாட்டை மந்தப்படுத்தும். மது, கனாபிஸ், நித்திரைக் குளிசைகள், ஹெரோயின், மெதடோன் போன்றவை இப்பகுதியில் வரும்.

மாயப் புலன் உணர்வுக் காட்டிகள் புலன்சார் உள்வாங்கலில் மாற்றங் களைக் கொண்டுவரும். நேரம், வெளி பற்றிய உணர்வுகளிலும் மாற்றம் வரலாம். கெராமின், எல்.எஸ்.டி, கனாபிஸ், மஜிக் மஸ்றூம் போன்றவை இந்த வகையில் வரும்.

சில போதைப் பொருள்கள் ஒன்றுக்கு மேற்பட்ட வகுதிக்குள் வந்திருப்பதை அவதானிக்கலாம். உதாரணமாகக் கனாபிஸ் ஒரு மந்தமாக்கி. ஆனால் அதுஅதிக அளவில் பாவிக்கப்படும்போது மாயப்புலன் உணர்வுக் காட்டியாகவும் மாறலாம்.

போதைப் பொருள்கள் எல்லாமே ஆபத்தானவை என்பது மிக முக்கிய மான உண்மையாகும். போதைப் பொருளைக் கலந்து பாவித்தல். குறிப்பாக மதுவுடன் வேறு பொருள்களைச் சேர்த்தல் மிக மிக ஆபத்தானது. ஒரு போதைப் பொருளின் தூய்மை பற்றியோ அதன் செறிவு பற்றியோ ஒருவரும் உத்தரவாதம்வழங்க முடியாது. ஒரு போதைப் பொருளை ஒருவர் முன்பு பல தடவை பாவித்திருந் தாலும்கூட, இம்முறை அது என்ன விளைவை ஏற்படுத்தும் என்று ஒரு போதும் எதிர்வு கூற முடியாது.

**பிள்ளைகளை எங்களோடு பேச வைப்பதற்கான வழிகள்**

**1. அவர்கள் வாழ்வின் பகுதி ஆகுங்கள்**

உங்கள் பிள்ளைகளுடன் பேசுவதற் காகத் தரமான நேரத்தை ஒதுக்குவதை உறுதிப்படுத்துங்கள். அவர்கள் அக்கறை கொள்ளும் விடயங்களில் நீங்களும் அக்கறை கொள்ளுங்கள். விடயங்களை குறைக்கவும் ஒன்றாகச் சேர்ந்து கொள்வதற்கு நேரஅட்ட வணை தயாரித்துக்கொள்ளுங்கள். எந்த ஒரு புதிய விடயத்தையும் பிள்ளைகள் செய்யத் தொடங்கும்போது, “எனது பெற்றோர் அல்லது பாதுகாவலர் இது பற்றி என்ன நினைப்பார்கள்?” என்ற கேள்விக்கு விடை தேடிக் கொண்டே இருப்பார்கள். ஆகவே அவர்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் போதைப் பொருள் பாவிப்பதை நீங்கள் முற்றாகவே விரும்பவில்லை அல்லது ஏற்றுக்கொள்ள வில்லை என்ற செய்தியை அவர் களுக்கு மிகத் தெளிவாகவும் உறுதி யாகவும் கூறி வைக்க வேண்டும்.

நண்பர்களிடமிருந்து போதைப் பொருளை எடுப்பதற்கான அழுத்தம் இருக்கிற போதும் அதை மறுப்பதற்கு உங்கள் ஆதரவு இருக்கிறது என்று தெரிந்தால் அதை மறுப்பது அவர் களுக்கு இலகுவாக இருக்கலாம். அவர்கள் எந்த நேரத்தில் யாருடன் இருக் கிறார்கள், எங்கு செல்கிறார்கள் என்று கேட்கப் பயப்பட வேண்டாம். குடும்பம் முழுவதும் ஒன்றாகச் சேர்ந்து நேரத்தைச் செலவழிப்பது முக்கியம். கதைப்பதற்கும், ஒன்றாக அமர்ந்து சாப்பிடுவதற்கும் வேறு விடயங்களை ஒன்றாகச் சேர்ந்து செய்வதற்கும் முயற்சி செய்க.

**2) அவர்கள் சொல்வதைச் செவி மடுப்போம்**

பிள்ளைகள் சொல்வதைக் கேட்பதில் நீங்கள் ஒரு விருப்பத்தைக் காட்டுகிற போது தான் நீங்கள் சொல்வதைக் கேட்பதற்கும் அவர்கள் தயாராகிறார்கள். அவர்களுடைய கருத்துகளுக்கு நீங்கள் மதிப்பளிக்கிறீர்கள் என்பதைக் காட்டு வதற்குக் குடும்பம் தொடர்பான தீர்மானம் எடுத்தலின்போது அவர்களின் ஆலோ சனையைக் கேளுங்கள். மேலதிக கலந் துரையாடலை நிறுத்தும் வகையில் இடை யீடு செய்ய வேண்டாம். தங்களது பிரச் சினைகளையும் தங்களது அபிப்பிராயங் களையும் சொல்வதற்கு அவர்கள் மனதில் சௌகரியமாக உணர வேண்டும்.

### 3) மாதிரியாக வாழ்ந்து காட்டுங்கள்

"நான் சொல்வதைச் செய். என்னைப் போலச் செய்யாதே" என்பது ஒருபோதும் சரிவராது. நீங்கள் போதை பாவிப்பவராக இருந்தால் நீங்கள் சொல்வதை உங்கள் பிள்ளைகள் கேட்பார்கள் என்று எதிர் பார்க்க வேண்டாம். உங்களது நடத்தை உங்கள் பிள்ளைகளில் ஏற்படுத்தும் செல்வாக்கைக் குறைத்து மதிப்பிட வேண்டாம். குறிப்பாகப் புகைத்தல், மது பாவனை, போதைப்பொருள் பாவனை ஆகியவை உங்களிடம் இருந்தால், பிள்ளைகள் உங்களைவிட அதிகம் பாவிப்பதற்கான வாய்ப்பே அதிகமாகும்.

### 4. நேர்மையாக இருங்கள்

உங்களுக்குத் தகவல்கள் தெரிந் திருக்கவேண்டும் என்பது மிகவும் முக்கியம். ஆனால் எல்லாம் தெரியும் என்பதுபோலப் பாசாங்ககு செய்ய வேண்டும். "எனக்கு இது தெரியவில்லை, ஆனால் தெரிந்துகொள்ள முயற்சி செய்வேன்" என்று கூற எப்போதும் ஆயத்தமாக இருங்கள். நீங்கள் எங்கே நிற்கிறீர்கள் என்பதில் நேர்மையாகவும் தெளிவாகவும் இருந்தால் உங்களோடு நேர்மையாக இருப்பது உங்கள் பிள்ளை களுக்கும் இலகுவாக இருக்கும்.

### 5) சரியான நேரத்தைத் தேர்ந்தெடுங்கள் :

இயற்கையாக எழும் சந்தர்ப்பத்தைப் பார்த்து விடயத்தைக் கதைப்பதற்குரிய சரியான நேரத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். அது எல்லோரும் ரி.வி. பார்க்கும் நேரமாக இருக்கலாம். பாட சாலையில் படிக்கும் இன்னொரு மாண வரைப் பற்றிக் கதைக்கும் சந்தர்ப்பமாக இருக்கலாம். கதைப்பதற்குச் சற்றுக் கடினமான இன்னொரு பிரச்சினை பற்றிய கதையின் ஒரு பதில் போல் அமையலாம்.

### 6) அமைதியாக இருங்கள் :

அமைதியாக இருப்பது முக்கியம். உங்கள் செயற்பாடுகள் தர்க்க ரீதியான தாக அமைதல் வேண்டும். அதீத எதிர்வினை காட்டவேண்டாம். கோபப் பட்டால் நச்சு வட்டங்கள் ஆரம்பித்து விடலாம். கருத்துப் பரிமாறலுக்கான சந்தர்ப்பம் எப்போதும் திறந்திருக்க வேண்டும். போதை பற்றி விரிவுரை நிகழ்த்த வேண்டாம். போதை பாவிப் பாளர்களைக் கேலி செய்ய வேண்டாம். குற்றஞ்சாட்ட வேண்டாம். நீங்கள் அதிகமாக உணர்ச்சி வசப்படுவீர்களா னால் மேலதிகமான கலந்துரையாட லுக்கான சந்தர்ப்பம் மூடப்பட்டுவிடும் என்பதை மறக்க வேண்டாம்.

### 7) முரண்பாடு ஏற்படுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்

மனிதர்களுக்கிடையில் முரண்பாடு இருக்கும்போது பிரச்சினையைத் தீர்ப்பது கடினமாகும். அவர்களின் பக்கத்தை நீங்கள் பார்க்க முனையும் அதே நேரத்தில் உங்களைப் பற்றி அவர்கள் விளங்கிக் கொள்வதற்கான சந்தர்ப்பத்தை உற்சாகப்படுத்துங்கள். தர்க்கம் ஒன்று தொடங்குவதற்கான அறிகுறி தென்பட்டால் உரையாடலை அவ்விடத்தில் நிறுத்தி இருவரும் சுமுக

மான மனநிலைக்கு திரும்பிய பிறகு மீண்டும் உரையாடலைத் தொடரலாம்.

### 8. தொடர்ந்து பேசுங்கள்

ஒருமுறை நீங்கள் உரையால் ஒன்றைத் தொடங்கினால், அதைத் தொடருவது முக்கியம். உங்கள் பிள்ளைகளோடு போதைப் பொருள் பற்றிப் பேச எப்போதும் ஆயத்தமாக இருப்பதை உறுதிப்படுத்துங்கள். பிள்ளைகள் அத்தகைய பழக்கங்களை ஆரம்பிக்குமுன்னரே அதைப் பற்றிப் பேசுவது முக்கியமானது.

### 9) தெளிவான எல்லைகளைப் பேணுங்கள்

அநேகமான இளைஞர்கள் ஒரு உரையாடலின்போது தெளிவான அடிப்படை விதிகளைப் பேண விரும்புகிறார்கள். உரையாடலுக்கான அடிப்படை விதிகளை அவர்களே முன்மொழிய அனுமதிக்கலாம். அவர்களே முன்மொழியும் விதிகளை அநேகமாக அவர்கள் மீறமாட்டார்கள். விதிகள் முன்வைக்கப்பட்ட பின் அவற்றை மீற வேண்டாம் என்பதில் உறுதியாக இருங்கள். விதிகளை உடைத்துவிடுவதனால் ஏற்படும் விளைவுகளைப் பற்றி விளக்கிக் கூறுங்கள். அவர்கள் மதுப் பாவனைக்கு அல்லது போதைக்கு அடிமையாகக் கூடிய சூழலில் அவர்களுக்கு உதவ முன்வாருங்கள். சந்தி தோறும் முளைத்திருக்கிற பெட்டிக் கடைகள், பாக்குக் கடைகள் பற்றி மிகுந்த அவதானமாக இருக்குமாறு கூறுங்கள். ஒரு குறிப்பிட்ட இடத்திற்குச் சென்று அவர்களை அழைத்துவர வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்பட்டால், அது இரவு நேரமாயினும் நீங்கள் அதைச் செய்வீர்கள் என்று உறுதி கூறுங்கள். ஆயினும் அப்படியான சூழலில் அவர்கள் மாட்டிக் கொள்வதை நீங்கள் விரும்பவில்லை என்பதையும் குவியப் படுத்துங்கள்.

### 10. நேரான விடயங்களில் குவியப் படுத்துங்கள்

அவர்கள் செய்யும் நல்ல விடயங்களைப் பாராட்டுங்கள். அவர்கள் தங்களைப் பற்றி நல்ல சுயகணிப்புக் கொள்வதை உறுதிப்படுத்துவதோடு, அவர்களுக்கு நீங்கள் மரியாதை கொடுப்பதையும் இன்னும் அவர்களை அன்பு செய்வதையும் உணரச் செய்யுங்கள்.

### உங்கள் பிள்ளை போதை பாவிக்கிறாரா என்று எப்படித் தெரியும்?

உங்கள் பிள்ளை போதை பாவிக்கிறார் என்று நீங்கள் சந்தேகப்பட்டால் அவர்களிடம் நேரே கேட்பதே சிறந்தது. அவர்கள் அதை மறுக்கிறார்கள். ஆயினும் நீங்கள் சந்தேகிக்கிறீர்கள் என்றால் பின்வரும் கேள்விகளுக்கு விடை தேட முயலுங்கள்.

1. உங்கள் வீட்டில் வித்தியாசமான குளிசைகள், திரவங்கள் அல்லது பாக்கு வகைகள், தூள் ஏதாவது அடிக்கடி காணப்படுகிறதா?
2. உங்கள் பிள்ளையின் பாடசாலைப் பெறுபேறுகளில் திடீர் வீழ்ச்சி காணப்படுகிறதா?

3. ஒழுங்குபடுத்தப்பட்ட இணைப்பாட விதானச் செயற்பாடுகள் சிலவற்றை அவர் தானாக நிறுத்திவிட்டாரா?
4. ஊக்கம் குறைந்து எந்நேரமும் சோர்வாக இருக்கிறாரா?
5. அவரது நண்பர் குழாமில் காரண மில்லாத மாற்றம் ஏற்பட்டுள்ளதா?
6. பிள்ளைகள் கண்கள் கண்ணாடி போல் தோன்றுகின்றனவா?
7. திடீர் திடீரெனக் கடும் உணர்வு மாற்றங்களுக்கு உட்படுகிறாரா?
8. குடும்பத்துடன் செலவிடும் நேரத்தைக் குறைத்துக் கொண்டுள்ளாரா?
9. வீட்டில் காசு அல்லது பெறுமதி யான பொருள்கள் மறைந்து போகின்றனவா?
10. உங்கள் பிள்ளையின் சாப்பாட்டு முறை அல்லது பழக்கவழக்கங்கள் திடீரென மாற்றமடைந்துள்ளதா?
11. அடிக்கடி அந்தரத்துடன் பதகளிப்பு நிலையில் காணப்படுகிறாரா?
12. ஒழுங்கான நித்திரையில் பிரச்சினைகள் இருக்கின்றனவா?
13. அடிக்கடி கோபப்பட்டு ஆக்ரோஷ வெளிப்பாடு காட்டுகிறாரா?

இவற்றில் பல கேள்விகளுக்கு "ஆம்" என்ற விடையை நீங்கள் பெற்றால், உங்கள் சந்தேகம் உண்மை யாக இருக்கலாம்.

**உங்கள் பிள்ளை போதை பாவிக்கிறார் என்றால் என்ன செய்வது?**

1. அவர்களோடு உரையாடுங்கள்.

2. உதவி தேடிப் போகத் தயங்க வேண்டாம்.

உளவளத்துணையாளர் ஒருவரின் உதவியை நாடுங்கள். அல்லது உங்கள் குடும்ப வைத்தியரிடம் செல்லுங்கள்.

**பிள்ளைகளோடு எப்படிக் கதைப்பது?**

பொதுவாக நீங்கள் பிள்ளைகளோடு அதிக நேரம் செலவிட ஆயத்தமாக இருக்க வேண்டும். அவர்களின் நண்பர் களைப் பற்றிப்பேச வேண்டும். பாடசாலை யிலும் ரியூசனிலும் நாள்தோறும் என்ன நடைபெறுகிறது என்று கேட்டறிய வேண்டும். என்ன, என்ன விளையாட்டுக் களில் அவர்கள் ஈடுபடுகிறார்கள், எந்த விடயங்கள் அவர்களுக்கு விருப்பமாக இருக்கிறது போன்ற விடயங்களை அடிக்கடி கலந்துரையாட வேண்டும். நீங்கள் அவர்களில் அதிக அக்கறை காண்பிக்கிறபோது உங்களின் கருத்துக் களுக்குப் பிள்ளைகள் மதிப்பளிப்பார்கள்.

பிள்ளைகள் என்ன செய்கிறார்கள், யாரோடு நண்பராக இருக்கிறார்கள் என்று அறிய விரும்புவதால் அவர் களிடம் உங்களுக்கு "நம்பிக்கை இல்லை" என்று அர்த்தப்படமாட்டாது. அவர்களின் வாழ்க்கையைச் சிறப் பாக்க விரும்பும் அக்கறை இருக்கிறது என்பதே அர்த்தமாகும். நீங்கள் கதைக்கும்போது விடயங்களை மிகைப் படுத்திக் கூறாமல் இருப்பதும், பிழை யான தகவல்களை முன்வைக்காமல் இருப்பதும் அவசியமாகும். உங்கள் பிள்ளைகளுக்கு இவ்விடயத்தில் உதவுவதற்கு நீங்கள் போதை பற்றிய அறிவில் நிபுணராக இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை.

நீங்கள் கதைக்கும்போது பிள்ளைகள் முன்வைக்கக்கூடிய சில வசனங்களும் அதைத் தொடர்ந்து நீங்கள் எப்படிக் கதைக்கலாம் என்பதும் கீழே தரப்படு கின்றன.

**1. பிள்ளை** – "ஆரோ எடுத்தினம் நல்லா இருக்கு எண்டு சொல்லிச்சினம். நானும் எடுத்துப் பாப்பம் எண்டு நினைச்சிட்டன்".

**பெற்றார் : –**

அவர்கள் மீதான உங்கள் அக்கறையை முன்வைத்து, போதை தொடர்பான அவர்கள் எதிர்காலத்தில் என்ன செய்யப் போகிறார்கள் என்ற தீர்மானத்தைக் கேளுங்கள். போதை பாவிப்பதால் ஏற்படும் தீமை பற்றியும் ஆபத்துக்கள் பற்றியும் கதையுங்கள். போதையைப் பாவிக்கும்படி அவர்கள் நண்பர்களால் அழுத்தப்படுகிறார்களா என்று கவனியுங்கள். எதிர்காலத்தில் வாழ்வில் வேறு அழுத்தங்கள் வரும் போது அவற்றைக் கையாள அவர்கள் பழகிக்கொள்வதற்கு இந்தச் சந்தர்ப்பம் உதவக்கூடும் என்று கூறுங்கள். இதைப் போன்ற ஒரு சந்தர்ப்பத்தில் நீங்கள் எவ்வாறு நடந்து கொண்டீர்கள் என்பதை நேர்மையாக முன்வையுங்கள்.

**பிள்ளை :–** குறிப்பிட்ட அந்தப் பொருளை ஒருக்காப் பாவிக்க ஆசை யாய் இருந்தது"

**பெற்றார் :–**

"போதைப் பொருள் பாவித்தால் எப்படி இருக்கும் என்று நீங்கள் நினைத்தீர்கள்"

"ஏன் குறிப்பிட்ட அந்தப் பொருளைத் தெரிவு செய்தீர்கள்?" போன்ற கேள்விகள் பயனுள்ளதாக இருக்கும். வேறு பொருள்களையும் அவர்கள் பாவித்துள்ளார்களா என்று அறிந்து கொள்ளப் பாருங்கள்.

**3. பிள்ளை :–** "என்ரை நண்பர்கள் எல்லாரும் பாவிக்கினம். நான் ஏன் எடுக்கக்கூடாது எண்டு நினைச்சன்".

**பெற்றார் :–** போதை சம்பந்தமான உங்கள் உணர்வைத் தெளிவாகச் சொல்லுங்கள். உங்கள் பிள்ளை போதை பாவிக்கக்கூடாது என்று ஏன் விரும்புகிறீர்கள் என்று கூறுங்கள்.

"நண்பர்கள் பாவிப்பதனால் அது பாதுகாப்பானதாக இருக்கும் என்று நினைத்தீர்களா?"

"நண்பர்களுக்கு இதன் தீமைகள் பற்றி எல்லாம் தெரியுமா?" என்று கேளுங்கள். போதையைக் கண்டபடி பரிசோதித்துப் பார்ப்பதில் உள்ள ஆபத்துக்களை எடுத்துக் கூறுங்கள். ஒரு கூட்டத்தினரைக் கண்ணை மூடிக்கொண்டு பின்பற்றுவதை விட ஒவ்வொரு விடயத்திலும் சொந்தத் தீர்மானம் எடுப்பது எவ்வளவு முக்கியம் என்பதை எடுத்துக் கூறுக.

**4. பிள்ளை :–** "அதை எடுத்தபோது எனக்கு நல்லாய் இருந்தது"

**பெற்றார் :–** என்ன நெருக்கீட்டின் விளைவினால் அவர் இதை எடுக்க முயற்சி செய்கிறார் என்று ஆராயுங்கள். வேறு ஒரு பிரச்சினை பற்றிப் பிள்ளை கதைக்க முற்பட்டால், அதைத் தீர்ப்

பதில் உதவப் பாருங்கள். மனம் சந்தோஷமாக இருப்பதற்கான, அல்லது மனதைத் தளரச் செய்வதற்கான ஆபத்தற்ற முறைகளைப் பற்றி விளக்குக.

**5) பிள்ளை :-** "இதை எடுக்கிறபோது, எனது பாடசாலைப் பிரச்சினை, வீட்டுப் பிரச்சினை, வாழ்க்கைப் பிரச்சினை எல்லாம் மறந்து போகுது..."

**பெற்றார் :-** பிரச்சினைகளைச் சமாளிப்பதற்கு அவர் போதை எடுப்பது தொடர்பான உங்கள் அக்கறையைக் கூறுங்கள். பிரச்சினைகள் இருந்தால் அவை பற்றிக் கதைக்க விருப்பம் என்று கூறுங்கள். நிலைமையை நன்றாக ஆக்குவதற்கு என்ன செய்யலாம் என்று கேளுங்கள். "போதையின் அனுபவம் குறைந்த பிறகு பிரச்சினைகள் திரும்ப வந்தனவா? இல்லையா? என்று கேளுங்கள். பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பொருத்தமான வழிகள் பற்றிக் கலந்துரையாட உங்களுக்கு விருப்பம் என்று கூறுங்கள்.

**6. பிள்ளை :-** "அது எனக்கு அதிக நம்பிக்கையைத் தருகிறது".

**பெற்றார் :-** ஒருவரின் சுய கணிப்பை உயர்த்துவதற்கு போதை தேவையில்லை என்பதை உறுதியாகக் கூறவும். சமூகத்தில் சிக்கலான நிலைகளை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்ட உங்கள் அனுபவங்களைக் கூறவும். நீங்கள் கையாண்ட வழிமுறைகளை எடுத்துக் கூறவும். நேரான விளைவுகளைத் தந்த சந்தர்ப்பங்களையும் எதிர் விளைவுகளைத் தந்த சந்தர்ப்பங்களையும் ஒப்பிட்டுப் பேசவும். உங்கள் பிள்ளையின் நம்பிக்கை, சுய கணிப்பு ஆகியவற்றை உயர்த்த என்ன செய்யலாம் என்பது பற்றிக் கலந்துரையாடவும்.

**7. பிள்ளை :-** "நீங்களும் பாவித்தீர்கள் தானே"

**பெற்றார் :-** இந்தத் தாக்கத்திற்கு நீங்கள் ஆயத்தமாக இருக்க வேண்டும். இது உண்மையானால் நீங்கள் மனம் திறந்து அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். போதைப் பொருள் தீமையானது என்று தெரிந்தபின்னர் நீங்கள் பாவிக்கவில்லை என்று கூறவேண்டும். இன்னும் பாவிப்பதாக இருந்தால், இன்றுடன் நிறுத்திக் கொள்கிறேன்" என்றோ, "மருத்துவர் உதவியை நாடி உள்ளேன்" என்றோ கூறவேண்டும். நீங்கள் முக்கிய வகை மாதிரி என்பதை மறக்க வேண்டாம்.

பெற்றோர்கள், பிள்ளைகள், ஆசிரியர்கள், உளவளத் துணையாளர்கள், மருத்துவர்கள், சமூக ஆர்வலர்கள் அனைவரும் இணைந்தோமானால் எமது சமூகத்தைக் காப்பாற்ற முடியும்.

# இல்லத்துப் பிள்ளைகளுக்கு இல்லத்தினால் நடாத்தப்பட்ட திருமண நிகழ்வுகள்








# நம்மை நாமே செதுக்குவோம் - தேடல்

**திருமதி. சிவமலர் அனந்தசயனன்**
ஓய்வுநிலை அதிபர்

ஆதிகாலத்திலிருந்தே மனிதன் தனது வாழ்க்கையில் தனக்கான இலக்குகளை அடைவதற்காக இயற்கையுடன் போராடிக் கொண்டிருக்கின்றான். மனிதனுடைய அந்த இலக்குகளை இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1) புற வாழ்க்கைக்கான இலக்கு

2) அகம் சார்ந்த இலக்கு

ஒரு தேசத்தின் தனிமனித வளர்ச்சி, மற்றும் சமூக முன்னேற்றம் இரண்டும் சரியாக அமைய வேண்டுமானால் இந்த இரண்டு நிலைகளிலும் அவனுடைய தேடல் சரியான விகிதத்தில் அமைய வேண்டும்.

அகம் சார்ந்த மனிதனின் தேடலானது உணர்வுகள், சிந்தனை, மனஎழுச்சி, மன உறுதி, ஒழுக்கம், தெய்வீகத்தன்மை போன்றவற்றை அடைவதற்கான வழியை அமைத்துக் கொடுக்கின்றது. இதன் மூலம் மனிதன் அடையக்கூடிய ஒருங்கிணைந்த வடிவமே **பண்பாடு – கலாசாரம்** என்பதாகும். இன்றைய உலகில் நாம் கலாசாரம், நாகரிகம் இரண்டையும் ஒன்றாகக் கருதி நம்மை நாமே குழப்புகின்றோம். மற்றவர்களையும் குழப்புகின்றோம். கலாசாரமா நாகரிகமா சிறந்தது; முதன்மையானது என்ற தேடல் நமக்குள் பலரிடமுள்ளது.

நாகரீகமானது மேலே தெரியும் செடி என்றால் பண்பாடானது அதன் ஆழத்தில் இருக்கும் அந்தச் செடிக்கு உயிர்ச்சக்தி கொடுக்கும் வேர்களைப் போன்றது. நாகரிகம் என்பதையே பண்பாடு, கலாசாரம் என்று தவறாகப் புரிந்து கொள்பவர்களைப் பார்த்து சுவாமி விவேகானந்தர் பின்வருமாறு திருத்தமாகக் கூறியுள்ளார்.

"கலாசாரம் என்பது தான் எத்தனை எதிர்ப்புக்கள் வந்தாலும் எக்காலத்திலும் நிலைபெற்றிருக்கக்க கூடியதே தவிர நாகரிகம்அல்ல".

இன்றைய உலகத்தின் அவசிய தேவை, சமய நல்லிணக்கம் மட்டும் தான். ஒரு இந்துவாகட்டும்; கிறிஸ்தவனாகட்டும், இஸ்லாம் மதத்தவனாகட்டும் எவனொருவன் தன்னளவில் **மனித நேயத்துடனும் சேவை மனப்பான்மையுடனும்** நடந்துகொள்வானானால் அதுவே அவனை தூய்மையுள்ளவனாகவும் தெய்வீகத்தன்மையுடையவனாகவும் மாற்றிவிடும். ஏனெனில் உண்மையான சமயம் என்பது உணர்ந்து அறியக்கூடியதே ஒழிய, மூட நம்பிக்கைகளால் ஆனதல்ல.

அகம்சார்ந்த தேடலில் எம்மிடம் அருகிக்கொண்டு வருவது **மனித நேயமே.** ஒருவரது செயலுக்காக நீங்கள் மகிழும் தருணத்தில் அதை உங்கள் உள்ளத்தில் பூட்டி வைத்துக் கொள்வதால் பயன் இல்லை. உங்கள் பாராட்டுதல்கள் அவர்களை மகிழ்ச்சிப் படுத்தும்போது அது அவர்கள் அந்த நல்ல செயலைத் தொடர்ந்து செய்

வதற்கு ஊக்கமாக அமையும். உங்களை அறியாமல் நீங்களும் அப்படியான செயல்களைச் செய்யத் தொடங்கு வீர்கள். நான் ஒருவரைப் பாராட்டும் போது என்னைச் சுற்றியிருப்பவர்கள் என்மீது அன்பு கொண்டு என்னோடு இன்னும் நெருக்கமாக இருக்க ஆசைப் படுவார்கள். உன்னால் முடியும்; உனக்குத் திறமை இருக்கின்றது என்று மனம் விட்டு பிறரை **பாராட்டும்போது அந்தச் சின்ன விஷயம் மற்றவருக்கு எவ்வளவு சந்தோஷத்தைத் தரும். சந்தோஷம் என்பது சின்ன விஷயம் அல்லவே.**

இந்த விடயத்தை வேறு ஒரு கோணத்தில் பார்ப்போம். யாராவது உங்களை அவமதிக்கிறார்கள். இந் நிலையில் நீங்கள் எவ்வாறு தொழிற் படுகிறீர்கள், உங்கள் செயற்பாடு யந்திரத்தனமானதா அல்லது உணர்வு பூர்வமானதா எனச் சிந்திப்போம்.

உடனடியாகக் கோபப்படுகிறீர்களா? ஒருவேளை அவர் கூறியது உண்மை யாகவும் இருக்கலாம். உடனடியாக நீங்கள் கோபம் கொண்டிராவிட்டால் **நீங்கள் சொல்வது சரி** என்ற உணர்வோடு கோபத்திற்குப் பதிலாக நன்றியுடன் உணர்ந்திருக்கலாம் அல்லவா?

யேசுபிரான், "உன்னை ஒருவர் கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தையும் காட்டு" என்று கூறியதன் அர்த்தம் இதுதான். இதன் உண்மை யான அர்த்தம் யந்திரத்தனமாக இருக்காதே என்பதுதான். ஏனெனில் யந்திரத்தனமான நடவடிக்கை என்பது அவரை நீ திருப்பி அறைவது அல்லது அதற்கான ஒரு சந்தர்ப்பத்திற்காக காத்திருப்பது. ஆனால் மறு கன்னத்தையும் காட்டுவது என்பது மிகவும் உணர்வு நிலையுடன் செயற்படுவது ஆகும்.

**இந்த உணர்வுபூர்வமான தேடல் எம்மிடம் அருகிவருவதுதான் மனித நேயம் எம்மிடம் அற்றுப்போவதற்கான காரணமாகும்.**

மனித உறவுகளைப் பொறுத்த வரையில் ஒருவரை மற்றவர் புரிந்து கொள்வதற்கான கட்டாயம் இருக் கின்றது.

- பரஸ்பரம் புரிந்துகொள்வது, உறவுகள் நெருங்கி வருவதற்கான முதற்படி
- விட்டுக்கொடுத்தல் இரண்டாவது படி
- வேண்டியதைப் பெறுதல் மூன் றாவதுபடி.

முதல் படியில் கால் வைக்காமல் அடுத்தடுத்த படிகளுக்கு ஏறுவது கடின மானது. ஒரு சிறிய கதை. எல்லோ ருக்கும் தெரிந்தது தான். சில வேளை களில் அக்கதை எதைச் சொல்ல வரு கின்றது என்பது புரியாமலிருக்கலாம்.

வயல் பரப்பில் கொடிய விஷப்பாம்பு ஒன்றிருந்து வருவோர் போவோரைச் சீறிப் பாய்ந்து விரட்டுவது, மாட்டிக் கொண்டோரை விஷக்கடிபட்டு இறந்து போகச் செய்வது என்றிருந்தது. இந் நிலையில் ஒருநாள் அந்தப்பக்கம் வந்த சாது ஒருவரை ஊர்க்காரர்கள் பாம்பைப் பற்றிக் கூறி எச்சரித்தனர். சாதுவோ புன்னகையுடன் பாம்புக்கருகில் சென்று தன் சாந்த சொரூபத்தினால் கனிவோடு நோக்கி அம்பாம்பிற்கு நற்குணங் களைப் போதித்து இறைவனை நினை,

யாருக்கும் தீங்கு செய்யாதே என்றெல் லாம் கூறி மறுபடியும் வந்து சந்திப்ப தாகக் கூறிச் சென்றார். பல பேரைக் கொன்று குவித்த பாம்பு சாதுவின் உபதேசத்தால் பெட்டிப் பாம்பானது. இதைக் கண்ட ஊர்க்காரர்கள் கல்லெ டுத்து அடிப்பது, வாலைப் பிடித்து சுழற்றி அடிப்பது என்பதாக வருத்தி குற்றுயிரும் குலை யுயிருமாக்கிவிட் டார்கள். மயங்கிக் கிடந்த பாம்பை சாது திரும்ப சந்திக்கும்போது அதன் நிலையைக் கண்டு பதறி நடந்ததைக் கேட்டறிந்து கோபம் கொண்டார். "முட்டாளே மற்றவர்களை துன்புறுத் தாதே என்று தான் உன்னிடம் கூறினேன். உன்னைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டாம் என்று சொல்ல வில்லையே. கடிக்காதே என்று தான் சொன்னேன். அதற்காக சீறாதே என்று அர்த்தமாகி விடுமா? நீ சீற்றம் காட்டி யிருந்தால் உன்னை விட்டு ஓடிப்போயிருப்பார்கள் என்று கடிந்து கொண்டார்.

இதுதான் **சொல்வதற்கும் சொல் லாமல் சொல்வதற்குமான வித்தியாசம்.** புரிந்துகொண்டு வாழப் பழகினால் உறவுகள் இனிக்கும். உறவினர்கள் இனிமைக்குரியவர்களாவார்கள். பார்த்தவுடன் புரிந்து கொள்வது; பழகிய பின் புரிந்து கொள்வது; மனம் கோணாமல் நடந்துகொள்வது எனப் பலவிதங்கள். இதைவிட எதிராளி தன்னைப் புரிந்துகொள்ள சந்தர்ப்பமே கொடுக்காத விடாக்கண்டர்களும் இருக்கிறார்கள். அவர்களையும் புரிந்து கொள்ளத்தான் வேண்டும்.

எம்மிடையே மூன்று வகையான புத்திகள் உண்டு.

**1) சிலாபுத்தி** - சிலையெனில் அது அடிப்படையில் கல். கல்லில் ஓர் உருவத்தை சிலையாக வடிக்க வேண்டு மாயின் இரும்பு உளியில் கஷ்டப்பட்டு செதுக்க வேண்டும். அதைப்போலவே மிகச் சிரத்தை எடுத்துக் கொண்டு பலர் சொல்லக் கேட்ட பிறகே ஒரு விஷயத்தைக் கிரகித்துக் கொள்ளும் புத்தி சிலாபுத்தி.

**2) தாரு புத்தி** - தாரு என்றால் மரம். கல்லில் செதுக்குவதைவிட சுலப மாகவும் சுத்தமாகவும் செய்துவிடலாம். இதைப்போன்று ஒரு விஷயத்தை ஒருமுறை கேட்டால் போதும். முழு வதையுமே கிரகித்துக் கொள்ளும் சக்தியுள்ள புத்தி தாரு புத்தி.

**3) வேணு புத்தி** - வேணு என்பது மூங்கில். மூங்கிலைப் பிளக்க வேண்டு மானால் கணுவின் ஒருபக்கம் உளியைக் கொண்டு பிளக்கும்போதே மறுபக்கம் தானாகவே பிளந்து கொள்ளும். அதேபோன்று ஒரு விஷயத்தை விபரிக்கும்போதே அதன் முழுக்கருத்தையும் புரிந்துகொள்ளக் கூடிய சூட்சும புத்தி வேணு புத்தி.

உறவுகளுக்கு மரியாதை செய்ய மனம் விரும்பும் ஒவ்வொருவருக்கும் இந்த வேணு புத்தி இருக்கவேண்டும். ஒரு பக்கம் அடிக்கும்போதே மறுபக்கம் உடையும் மூங்கில் போல் இருந்தால் யாரையும் புரிந்துகொள்ளமுடியும். அன்பினால் அவர்களை வெல்லவும் முடியும். உணர்வுபூர்வமான மனித நேயம் என்பது இதுதான்.

# எனக்கு வாழ்வளித்த துர்க்காபுரம் மகளிர் இல்லம்

**திருமதி. தவனேஸ்வரி சிவகுமார் B.A. (Hons), PGDE.**
யா/ தந்தை செல்வா தொடக்கநிலைப்பள்ளி

**"இன்னறுங் கனிச்சோலைகள் செய்தல்**
**இனிய நீர்த்தண் சுனைகளியற்றல்**
**அன்ன சத்திரமாயிரம் வைத்தல்**
**ஆலயம் பதினாயிரம் நாட்டல்**
**இன்னருள்ள தருமங்கள் யாவும்**
**பெயர் விளங்கி யொளிர நிறுத்தல்**
**அன்னயாவினும் புண்ணியங்கோடி**
**ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"**

என்னும் பாரதியார் வாக்குக்கு செயல் வடிவம் கொடுத்தவர் அன்னை துர்க்கா துரந்தரி அவர்கள். 06-02-1984ஆம் ஆண்டு எனது தாயாரால் துர்க்காபுரம் மகளிர் இல்லத்தில் அனுமதிக்கப்பட்டேன். ஆனால் அந்த மகளிர் இல்லம் என் வாழ்வையே திசை திருப்பப்போவதை நான் அன்று அறிந்திருக்கவில்லை. சிவத்தமிழ்ச்செல்வி அம்மையார் அவர்களின் அன்பும், ஆதரவும் துர்க்கா தேவியின் பெருங்கருணையும் இணைந்து என்னை வளப்படுத்தி இன்று ஒரு மகிழ்ச்சியான வாழ்வை எனக்கு ஏற்படுத்தி நிற்கின்றது என்றால் மிகையில்லை.

தந்தையில்லாத வறுமையான குடும்பம் என்பதால் எனது தாயார் என்னை இவ்வில்லத்தில் சேர்த்தார். அங்கே காணப்பட்ட ஒழுங்குமுறை யான வாழ்க்கை அமைப்பும், கண்டிப்பும் அன்பும் ஒருசேரக் கலந்த அம்மா அவர்களின் அரவணைப்பும், நிர்வாக சபையினரின் பேராதரவும், மேற்பார்வை யாளர்களின் ஒழுங்கான கண்காணிப்பும், ஆன்மீக ரீதியான வழிகாட்டலும் எல்லாவற்றுக்கும் மேலாக துர்க்கை அம்மனின் பேரருட்திறமும் அமைந்து எம்மைக் கல்வியிலும் ஒழுக்கத்திலும், வாழ்விலும் மேலோங்க வழிகாட்டியது.

ஆலயப்பணி செய்வதும், அம்மை யாரின் திருமுறை மடத்தில் உள்ள சுவாமிப் படங்களுக்குப் பூக்கள் வைப்பதும் எமது கடமைகளாக அமைந் திருந்தன. அம்மையார் அவர்கள் எமது கல்வியில் மிகுந்த அக்கறை காட்டிய துடன் எமக்குப் பாடங்களையும் தாமே கற்பித்தார். திருமுறைகளைப் பாடுவது, பேசுவது, நடனமாடுவது, நாடகம் நடிப்பது, கோலம் போடுவது, மாலை கட்டுவது போன்ற அனைத்து விடயங் களிலும் எமக்குப் பயிற்சியளிக்கப் பட்டது. வெள்ளிக்கிழமை தோறும் பிற்பகல் சமய வகுப்பு நடைபெற்று அம்மா அவர்களின் நற்சிந்தனை இடம்பெறும். அவற்றைக் கேட்டும், பின்பற்றியும் நாம் நடந்தோம். க.பொ.த. சாதாரண தரத்தில் சித்திபெற்று க.பொ.த. உயர்தரத்தில் கலைப்பாடங் களைப் பயின்று 3A, C சித்தி பெற்று பல்கலைக்கழகம் தெரிவாகி அங்கு தமிழ்ப்பாடத்தைச் சிறப்புப் பாடமாகக் கற்று இன்று ஒரு ஆசிரியராகக் கடமையாற்றுகின்றேன் என்றால்

அதற்கு துர்க்காபுரம் மகளிர் இல்லமும், துர்க்காதேவி தேவஸ்தானமுமே முதற் காரணம் என்பதை இவ்விடத்தில் நன்றியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

1982ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இவ்வில்லம் இன்று முப்பத்து இரண்டு அகவை நிறைவெய்துவது என்பது சாதாரண விடயமன்று. இவ்வில் லத்தைப் பராமரிக்க ஆலய நிர்வாக சபையினரும், தர்மகர்த்தா சபை யினரும், அம்மையாரும் பட்ட துன்பங்கள் ஏராளம். யுத்தசூழல், இடப்பெயர்வுகள் எனப் பலவகையான துன்பங்கள் வந்து சேர்ந்தாலும் அம்மையார் அவர்களின் மனத்துணிவும், ஆளுமையும், எதற்கும் அஞ்சாத நெஞ்சமும் இத்தூய பணியை முன்னெடுக்க உதவியது எனலாம். அவர் ஒரு வெற்றிப் பெண்மணி; வீரப்பெண்மணி; ஆத்மீகப் பெண்மணி. தொட்டதெல்லாம் துலங்கும் வல்ல மையும் ஆற்றலும் அவருக்கு துர்க்கா தேவியால் அருளப்பட்ட அருட்கொடை களாகும்.

இத்தகைய தூய பணிகளுக்குப் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் சைவத்தமிழ் மக்கள் தாம் உழைக்கும் பணத்தின் ஒரு பகுதியைத் தர்ம காரி யங்களிலும், சமூகப் பணிகளிலும் உதவிடும் மனம் கொண்டவர்களாகத் தமது பணத்தை ஆலயத்துக்கு அனுப்பி தர்ம காரியங்களில் பங்கேற்றவர்களாக, பெண்பிள்ளைகளின் வாழ்வுக்கு ஒளி ஏற்றியவர்களாக மிளிர்கின்றனர் என்பதை இவ்விடத்தில் நான் நன்றியுடன் நினைவு கூருகின்றேன். ஏனெனில் அப்பொழுது காணப்பட்ட யுத்தசூழலில் போதுமான பணவசதி கிடைக்கப்பெறாத அக் காலங்களில் புலம்பெயர்ந்து வெளி நாடுகளில் வசிக்கும் துர்க்காதேவியின் கருணைமிக்க அடியவர்கள் அனுப்பிய நிதியினாலேயே அம்மையார் அவர்கள் ஆலயத்தையும் அதனோடிணைந்த மகளிர் இல்லத்தையும் இடம்பெயர்ந்த நிலையிலும் மிகவும் திறம்பட இயக்க முடிந்தது என்பதை இவ்விடத்திலே நினைவுகூர்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

அம்மா அவர்களுடன் பத்தொன்பது வருடங்கள் வாழ்ந்ததால் அவரின் அருமையும் பெருமையும் அவரது இரக்க குணநலன்களும் எமக்கு என்றுமே மறக்கமுடியாதவை. அவரைப் போல ஒரு தாயார் அமைவது கடினம். அவரது கண்டிப்பு மறுகணம் அவர் காட்டும் பரிவால் மறைந்துவிடும் அளவுக்கு அவரது தூய உள்ளம் அமைந்திருந்தது. புண்ணியங்கள் யாவற்றிலும் மிகச் சிறந்த தானமாகக் கருதக்கூடிய கல்வித் தானத்தைப் பெண்பிள்ளைகளுக்கு அளித்து அவர்கள் தமது வாழ்வை மிகவும் சிறப்பாகக் கொண்டமைக்க சகல துறைகளிலும் பயிற்சி அளித்து நல்ல குடும்பப் பெண்களாகவும் உழைக்கும் பெண்களாகவும் மாற்றிய பெருமை துர்க்காபுரம் மகளிர் இல்லத்தையே சாரும்.

ஆலயத்தை அண்டி அறப்பணிகள் ஆற்றலாம், ஆலயப்பணத்தை சமூக சேவைக்கும் ஆதரவற்றவர்களுக்கும் பயன்படுத்தலாம் என்பதை உலகெங்கும் வாழும் சைவத்தமிழ் மக்களுக்கு வழி

காட்டிய பெருமை துர்க்காதேவி தேவஸ் தானத்தையே சாரும் என்பது சாலப் பொருந்தும்.

பெண் பிள்ளைகளை வளர்த்தல் என்பது சாதாரண விடயமன்று. எவ்வளவோ சவால்களையும் பிரச் சினைகளையும் எதிர்கொள்ள வேண்டி யிருக்கும். அவ்வளவையும் எதிர் கொண்டு அஞ்சாநெஞ்சத்துடன் அம்மையார் அவர்கள் ஒரு நடமாடும் தெய்வமாக மிளிர்ந்து இல்லத்தைச் செவ்வனே நடாத்தினார். அவர் ஒரு தீர்க்கதரிசி. எத்தனையோ ஏழைப் பெண்களின் வாழ்வில் கல்வியும் அளித்து வாழ்வில் ஒளியேற்றிய உத்தமி. அம்மையார் அவர்களுடன் இணைந்து ஆலய தர்மகர்த்தா சபையினர், நிர்வாக சபையினர், பெண்கள் தொண்டர் சபையினர், இந்து இளைஞர் சங்கத்தினர் ஆகியோரும் இல்லத்தின் வளர்ச்சிக்கு ஒட்டுமொத்தமாகப் பணியாற்றினார்கள். பெண்கள் தொண்டர் சபையினர் ஆரம்பகாலத்தில் இல்லப் பிள்ளை களுக்கு வேண்டிய அனைத்து உதவி களையும் அளித்தனர் என்பதை நன்றி யுடன் கூறுகின்றேன். உணவு அளித்தல், உடை தைத்தல் போன்ற அனைத்துக் காரியங்களிலும் முன்னின்று உழைத் தனர்.

எமது இல்லத்தில் மேற்பார்வை யாளர்களாகக் கடமையாற்றிய செல்வி மணிமேகலை கணபதிப்பிள்ளை, அமரர் செல்வி காமாட்சி கந்தையா, திருமதி தயாளமணி, செல்வி. செல்வராணி பெரியதம்பி ஆகியோர் எமக்காற்றிய சேவைகளையும் பணிகளையும் அன்பையும் பண்பையும் நான் இவ் விடத்திலே நினைவுபடுத்துகிறேன். அவர்கள் எம்பால் காட்டிய அன்பும், தியாக சிந்தையும் இன்றும் எம்மனக்கண் முன்னால் நினைவில் வருகின்றது. நாம் கல்வி கற்பதற்காக அவர்கள் தம்மை உருக்கி எமக்கு வெளிச்சத்தை ஏற்படுத்திய தியாக சிந்தையையும் நல்லுணர்வினையும் நன்றியோடு நினைவு கூருகிறேன். அவர்களின் வழிகாட்டல், அர்ப்பணிப்புமிக்க சேவை என்பன மகத்துவமானவை.

சிவத்தமிழ்ச்செல்வி அம்மையார் அவர்களின் சகோதரிகளான ஆசை அன்ரி, பொன்னா அன்ரி அவர்களின் பிள்ளைகளான பாமதி ஞானேஸ்வரன், ரேவதி சண்முகராசா ஆகியோர் எமக்கு சகல விடயங்களிலும் ஆக்கமும் ஊக்கமும் அளித்த உத்தமிகளாவர். அவர்கள் சிறுவயதில் இருந்தே எமக்குக் கல்வியறிவூட்டியும் எமக்கு வேண்டிய அனைத்து விடயங்களிலும் முன்னின்று உழைத்தவர்களாவர். தமது சொந்தப் பிள்ளைகள் போலவும், சகோதரர்கள் போலவும் பழகி அவர்கள் எமக்கு ஆற்றிய பணிகளை நாம் என்றும் மறக்கமுடியாது.

இன்று துர்க்காபுரம் மகளிர் இல்லம் ஒரு மகோன்னதமான நிலையில் இயங்குவதையும் இம் முப்பத்திரண்டு வருடங்களில் இன்று முந்நூறுக்கும் மேற்பட்ட பெண்பிள்ளைகளுக்கு வாழ்வளிக்கும் நிலையமாக, அறிவு பரப்பும் நிலையமாக மாறுவதற்கு

வழிகாட்டும் நிர்வாக சபைத் தலைவர் திரு.ஆறு.திருமுருகன் ஐயா அவர்களின் பணிகளையும் இவ்விடத்திலே கூற வேண்டிய கடப்பாடு எமக்குண்டு. இவ்வில்லம் சகல வசதிகளோடும், வாய்ப்புக்களோடும் இயங்கி இன்று பல பெண்களின் வாழ்வாதார இடமாக மிளிர்வதற்கு ஆலய நிர்வாக சபைத் தலைவரும், நிர்வாக சபை உறுப்பினர்களும் ஆற்றும்பணி அளப்பரியது. அவர்களின் பணி சிறக்கவும் மேலும் பல ஆதரவற்றவர்களுக்கு வழிகாட்டவும் இவ்வில்லம் இன்றும் என்றும் உதவும் கரங்களாக அமைய எம்பெருமாட்டி துர்க்காதேவியைப் பிரார்த்திக்கின்றேன்.

ஆலயத்தின் இணைச்செயலாளராகக் கடமையாற்றிய அமரர் சிவவாகீசர் ஐயா அவர்களும் அமரர் தணிகாசலம் ஐயா அவர்களும், திருமதி. மலைமகள் இராமநாதர் அவர்களும் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியிலும் ஏனைய பணிகளிலும் முன்னின்று உழைத்த பண்பாளர்கள். பிள்ளைகள் கல்வி கற்று மேல்நிலை அடையவேண்டும் என்பதே இவர்களுடைய சிந்தனையில் என்றும் காணப்படும் நினைவுகளாகும். அவர்கள் இப்பூவுலகில் இல்லாது விட்டாலும் என்றும் எங்கள் உள்ளங்களில் நீங்காது உறையும் தெய்வங்களாவர்.

எமது ஆசிரியர் விநாயகரத்தினம் ஐயா அவர்கள் எம்மைப் பல போட்டிகளிலும் பங்குபற்றச் செய்து, நாம் வெற்றியடைந்தவுடன் பரிசில் வேண்டுவதற்கும் தாமே அழைத்துச் சென்று ஊக்கப்படுத்துவார். அவருக்கும் எமது நன்றிகள்.

மேலும் அருட்சகோதரி ஜதீஸ்வரி அவர்கள் எம்மை ஆற்றுப்படுத்தி பல்வேறு துறைகளிலும் நல்லபடி மிளிர ஆற்றிய அருட்பணிகளை என்றும் எம்மால் மறந்துவிடமுடியாது. 'சிஸ்ரர் அம்மா' என்று அன்பாக அழைக்கும் துறவறஞானியான அம்மையார் எமக்குக் கிடைத்தமை நாம் செய்த தவப்பேறினாலேயே ஆகும். அவருக்குத் தெரியாத விடயங்கள் ஒன்றுமே இல்லை என்னும் அளவுக்கு அறிவால் நிரம்பிய ஞானி அவர். அவருடைய சொல், செயல், மனம் ஆகிய மூன்றும் நல்லதையே நினைக்கத் தூண்ட வல்லவை. அவரது வழிகாட்டல்களும் நாம் இவ்வாறான நிலையை அடைய முதற்காரணமாக இருந்ததென்றால் மிகையில்லை.

அன்பாக 'மென்னாக்கா' என்றழைக்கப்படும் மெனிக்கா அக்கா அவர்கள், செல்வி.செ.பெரியதம்பி, சுகந்தினி அக்கா அவர்கள் எமக்கு அன்பாக உணவு ஊட்டியதை இன்றும் எம்மால் மறக்க முடியாது. உணவை அன்பாக அளிப்பதுடன் எமக்கு விருப்பமான உணவுகளைத் தந்தும் எம்மை ஊட்டி வளர்த்தமை இன்றும் எம்மீது காட்டிய பரிவையும் அன்பையும் வெளிப்படுத்தியமையையும் மறக்கமுடியவில்லை.

இவர்களைவிட நினைவுகூர வேண்டியவர்கள் பலர் உள்ளனர். செல்வி. ஞானசரஸ்வதி சின்னத்தம்பி அவர்கள் எம்மீது தனிப்பட்ட அன்பும் பரிவும்

உடையவராக விளங்கி எமது கல்வி முன்னேற்றத்துக்கு உதவினார். தற்போது யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதி பதியாக விளங்கும் திரு.திருமதி. சிவநாதன் தம்பதியினர், எனது கல்வி வளர்ச்சிக்கு அருந்தொண்டாற்றிய வர்கள். நான் யாழ். பல்கலைக்கழகத்தில் கற்கும் நான்கு வருடங்களும் இலவச மாக உணவு, இருப்பிட வசதிகளை ஏற்படுத்தி தமது பிள்ளையைப் போல பேணிக்காத்து கல்வி கற்க வசதியை ஏற்படுத்தித் தந்மைக்கு நான் நன்றி கூறுகின்றேன். அவர்களின் தூய மனத்தினாலும், தூய பணியினாலும் எனது கல்வியை எவ்வித இடையூ றின்றியும் கற்க முடிந்தது என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறேன்.

இவர்களைவிட நன்றிகூற வேண்டிய வர்கள் பலர் காணப்படினும் இவ் விடத்தில் விரிவுபடுத்த முடியாத நிலையில் உள்ளேன். எனினும் எம்மை வளப்படுத்தி இன்று நாமும் ஏனைய வர்களைப் போன்று நல்வாழ்வு வாழ வழிகாட்டிய துர்க்காபுரம் மகளிர் இல்லத்தையும் துர்க்காதேவி தேவஸ் தானத்தையும், சிவத்தமிழ்ச்செல்வி அம்மையார் அவர்களையும் எமது உயிர் இருக்கும்வரை நன்றியுடன் நினைவு கூர்ந்து கொண்டேயிருப்போம் என்பதைத் தெரிவித்து அமைகின்றேன்.

(இல்லத்து பிள்ளையாய் 1984இல் இல்லம் சேர்ந்து பட்டதாரியாக 2003இல் இல்லத்தின் மூலம் திருமணமாகிய முதலாவது பிள்ளை )

# எமது பிள்ளைகளின் பல்கலைக்கழக அனுமதியும் கற்கை ஆண்டும்.


த. தவனேஸ்வரி
1996


வி. வடிவாம்பிகை
1996


சு. சாயாரூபி
1996


கே. புஷ்பலக்சுமி
2002


மு. கலாநிதி
2003


கு. சர்மிளா
2003


ம. சுமித்திரா
2006


யோ. மேரி தர்சினி
2010


அ. ஜெயந்தினி
2011


து. துஷ்யந்தினி
2011


பூ. செல்வதியம்மா
2013


பா. விதுஷாயினி
2013

## எமது பிள்ளைகளின் பல்கலைக்கழகம் அனுமதியும் கற்கை ஆண்டும்.

### பரீட்சைப் பெறுபேற்றில் சாதனையாளர்



நா. சர்வலோஜினி
2013



ஜெ. தேவரூபி
2014



வி. ஜலயா
2011



செ. தமிழ்விழி
2011



நா. கிருபாலினி
2007



த. தேவதர்மளா
2013



இ. மதிவதனி
2014
உயர் தொழில்
நுட்பநிறுவனம்



பா. சிந்துஜா
க.பொ.த. உயர்தர
உயர் சித்தி
2013



த. தேவதர்சினி
க.பொ.த. (சா/த)
உயர் சித்தி
2012

# என்னைச் செதுக்கிய சிற்பியும் நான் வளர்ந்த கலைக் கோயிலும்

**திருமதி. புஸ்பலட்சுமி உமாசங்கர்** BFA
*யா/ குளமங்கால் றோ.க. வித்தியாசாலை.*

*1993ஆம் ஆண்டு நான் துர்க்காபுரம் மகளிர் இல்லம் என்னும் கலைக் கோயிலை வந்தடைந்தேன். இக் கோயிலுக்கு வரும்போது தரம் 7இல் கல்வி கற்றேன். எனது குடும்பத்தில் ஏற்பட்ட கஷ்டநிலை காரணமாக எனக்கு கல்வியில் எந்தவிதமான ஆர்வமும் இல்லை. எனது நிலையை அறிந்த அன்னை அவர்கள் எங்களில் மூத்த சகோதரியான தவனேஸ் அக்கா விடமும், மிஸ் அவர்களிடமும் தமிழ், கணிதம்ஆகிய பாடங்களைப் போதிக்கு மாறு கூறினார். அன்றிலிருந்து என்னிடம் முடக்கப்பட்டிருந்த திறமைகள் கொஞ்சம் கொஞ்சமாக வெளியே கொண்டுவர அரும்பாடுபட்டவர் எங்கள் அன்னை அவர்கள். அதேபோன்று எனது நடிப்புத்திறனை வெளிப்படுத்திய அருட்சகோதரி யதீஸ்வரி அம்மையார் அவர்கள் என்னைப் பல நாடகங்கள் நடிக்கவைத்து எனது அன்னையின் பாராட்டுக்களைப் பெற வைத்தவர். எந்த விழாக்களிலாவது கலை நிகழ்ச்சி களைத் தனது பிள்ளைகள் திறமையாகச் செய்தால் அதனைப் பற்றியே அடிக்கடி பாராட்டுவதுடன் என்ர குஞ்சுகளுக்கு "கண் திருஷ்டி" போட வேண்டும் என்று அதனை அன்று இரவு தானே முன்னின்று செய்விப்பார்.*

*இசைத்துறையில் எனக்கு திறமை உள்ளது, அதனை வழிப்படுத்தி நன்றாகப் பாடவைக்க வேண்டும் என்று மூத்தசகோதரியான நளாயினி அக்கா அவர்கள் எனது திறமையை அன்னை யிடம் கூறியபோது அன்னை அவர்கள் அன்றிலிருந்து என்னைப் பாடும் பயிற்சி பெறுவதற்கு திருமதி. சிதம்பரநாதன் ஆசிரியர் அவர்களிடம் இவர் நன்றாகப் பாடக்கூடியவர் இன்னும் நன்றாகப் பயிற்றுவிக்கும்படி கூறினார். பெரிய வர்கள் யாராவது வந்தால் உடனே எம்மைப் பாடவைத்து தனது பிள்ளையின் திறமையை வெளிப்படுத்தி சந்தோஷம் அடைவார். என்னை சகல துறைகளிலும் அதாவது மாலை கட்டுதல், கோலம் போடுதல், பண்ணிசை, நாடகம், புராண படனம், கட்டுரை வரைதல், விளை யாட்டு ஆகிய போட்டிகளில் பங்குபற்றி பணப்பரிசில்களையும், சான்றிதழ் களையும் பெறவைத்தவர் என் அன்னை அவர்களே. இக்கலைக்கூடத்தில் வளர்ந்தமையால் சகலவிதமான துறை களிலும் கற்றுத் தேர்ச்சி பெறக்கூடிய வாய்ப்பு எங்களுக்கு அமைந்தது. இவ்வில்லத்தில் இருந்து ளியேறிய நாங்கள் அனைவரும் பாக்கியசாலிகள் என்று தான் கூறவேண்டும்.*

புதுவருடம், தீபாவளி, பிறந்தநாள் வந்தால் எங்களுக்கு புத்தாடை வாங்கி, எங்களுக்குப் பொருத்தமான நிறத்தைத் தானே தெரிவு செய்து அதனை அணிவித்து ஒவ்வொருவராக அழகு பார்த்து சந்தோஷம் அடைவார். உணவு வகைகளிலே சகலவிதமான உணவு களையும் உண்டு மகிழவைத்தவர் தான் என் அன்னை அவர்கள். அதிகாலை கண் விழித்து எழுந்தவுடன் முதலில் கேட்பது சுகந்தி இன்று பிள்ளைகளுக்கு என்ன சாப்பாடு என்று தான். அப்படிப் பட்ட அன்னை இன்று எம் மத்தியில் இல்லை. தனது பிள்ளைகளின் ஒவ்வொரு செயற்பாட்டிலும் மிகுந்த அக்கறை கொண்டவர் தான் என் அன்னை அவர்கள். கலாசாரத்திற்கு ஏற்ற வகையிலே எம்மை உடை அணிவித்து அன்போடும் மிகுந்த கட்டப்பாட்டோடும் வளர்த்தவர் தான் என் அன்னை.

எனக்குப் பல்கலைக்கழக அனுமதி கிடைத்தவுடன் மிகவும் சந்தோஷப்பட்டு எனக்கு காப்பு போட்டு அழகு பார்த்ததும் என் அன்னை தான். நான் பல்கலைக் கழகம் சென்று களைப்படைந்து வரும்போது, ஆச்சி சாப்பிட்டியா என்று தான் முதலில் கேட்பார். இல்லை என்றால் உடனே வந்து சாப்பிட வைத்துவிட்டுத் தான் செல்லுவார்.

கடும் போர்ச்சூழலில் கூட எங்களை எந்தவித கஷ்டமும் தெரியாமல் ஒவ்வொரு இடமாக கோழி தன் குஞ்சுகளை எவ்வாறு காப்பாற்றுமோ அதே போன்று எங்களையும் கொண்டு சென்றவர் தான் எங்கள் அன்னை. தாயினும் சாலப் பரிந்து என்னை அன்போடு உருவாக்கியவர். இல்லத்தில் இருக்கும்போது நாம் அனைவரும் அன்னையின் செல்லப் பிள்ளைகளே. நான் இவ்வில்லத்தில் இருந்து எத்தனையோ பெரிய அறிஞர்களைச் சந்தித்து சந்தோஷம் அடைந்தேன். ஆனால் இவ்வளவு சந்தோஷமும் ஒரு தாய் தந்தையருடன் இருக்கும் பிள்ளை களுக்கு ஏற்படும் சந்தர்ப்பம் குறை வாகவே இருக்கும். எங்கள் அன்னையின் வளர்ப்பினால் ஏற்பட்ட ஒரு பொக்கிசம் என்று தான் கூறவேண்டும்.

ஒரு நாள் அலுவலகத்தில் நான் பணியாற்றிக் கொண்டிருக்கும்போது அன்பர் ஒருவர் வந்து கேட்டார். அநாதைப் பிள்ளைகளுக்கு காசு கொடுக்க வேண்டும் என்று. உடனே அவரை அழைத்து நாங்கள் அநாதை யாக யாரையும் வளர்க்கவில்லை. இங்கே எந்தவிதமான குறையுமில்லை. அவர்கள் செல்லப் பிள்ளைகளாகத் தான் இங்கே இருக்கிறார்கள் என்று கூறினார். அநாதை என்ற சொல்லே அன்னை அவர்களுக்குப் பிடிக்காத ஒரு சொல்.

கல்வியில் எதுவுமே தெரியாமல் வந்த என்னை சாதாரணதரம், உயர் தரம், பல்கலைக்கழகம் வரை செல்ல வைத்து, பட்டதாரி ஆசிரியராக நியமனம் பெற்று மட்டக்களப்பில் கல்குடா வலயத்தில் சிறந்த ஆசிரியர் என்ற வகையில் மாகாணக் கல்விப் பணிப் பாளர் அவர்களிடம் சான்றிதழைப் பெற்று வந்தேன் என்றால், அவை அனைத்திற்கும் காரணம் என் அன்னை

அவர்களே. சிறு வயது முதல் திரு மணம் வரை என்னை ஆற்றுப்படுத்திய அனைத்து உள்ளங்களையும் தினமும் காலை, மாலை, இரவு ஆகிய வேளை களில் அன்போடும் ஆசையோடும் எங்களுக்கு உணவு பரிமாறிய சுகந்தி அக்கா, ராணி அக்கா அவர்களையும் நான் என்றுமே மறக்கமாட்டேன். என் அன்னை அவர்கள் என்னை அருகில் வைத்து எனது திருமணம் பற்றிய முழு விபரத்தையும் திருமண நாளையும் விசாரித்துவிட்டு பிள்ளை நீ சந்தோஷ மாக இருக்கவேண்டும் என்று கூறினார். நான் உடனே அழுதேன். 'அவர் என்னைத் தடவி நீ அழவேண்டாம் அம்பாள் எல்லாவற்றையும் நடத்தி முடிப்பாள் என்று கூறிய ஒரு வாரத்தின் பின் அன்னை தவறுதலாக விழுந்து விட்டார். வைத்தியசாலையில் நீண்ட நாட்களாக சிகிச்சை பெற்று வரும் போது நாங்கள் வைத்தியசாலையில் காத்திருந்தோம். தினமும் கதறி அழு தோம். அம்பாளைப் பிரார்த்தித்தோம். எங்கள் அன்னையை எங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று அது எதுவுமே பலனளிக்காமல் அம்பாள் அன்னை அவர்களைத் தன் திரு வடிக்கே அழைத்துவிட்டார். அம்மா அவர்களின் இழப்பு எங்கள் எல்லோ ரையும் பேரதிர்ச்சிக்கு உள்ளாக்கியது.

அம்மா அவர்கள் இருக்கும்போதே எனக்கு திருமணத்திற்கு நாளும் குறிக்கப் பட்டது. அதன் பின்னர் எனது திரு மணத்தை மகளிர் இல்லத்தின் தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் ஐயா அவர்களும் நிர்வாகசபை உறுப் பினர்களும் மகளிர் இல்லத்தினரும் சேர்ந்து எந்தவிதமான குறையுமில்லாமல் மிகச் சிறப்பாக நடாத்தி வைத்தார்கள். பெரியவர்கள் எல்லோரினதும் ஆசியினால் எனக்கு சிறந்ததொரு கணவர் கிடைத் துள்ளார். அவர் வலி தென்மேற்கு பிரதேச சபையில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமை புரிகின்றார். ஒரு முழுமையான குடும்பத்தை நிர்வகிக்கக்கூடிய அறிவையும் ஆற்றலையும் எமக்கு ஊட்டி உயரிய பெரியோருடன் பழக வைத்த தங்கத் தாயினால் தான் இன்று மிகவும் சந்தோஷமாக எனது கணவர் பிள்ளை களுடன் வாழ்ந்துவருகின்றேன். துர்க்கா தேவி அன்னையின் நிழலில் வளர்ந்த நான் இன்று எந்தவிதமான குறையும் இல்லாமல் சந்தோஷமாக வாழ்ந்து வருகின்றேன்.

என்னை வளர்த்தெடுத்து ஆளாக்கிய இவ் இல்லம், நிர்வாகசபை உறுப்பினர்கள் அனைவருக்கும் என்றும் நன்றியாகவே இருப்பேன் என்றும், எனது இளைய சகோதரிகளுக்கு நான் கற்ற இசை யறிவை வேண்டிய நேரத்தில் போதிப்பேன் என்றும் இந்த வேளையில் கூறிக் கொள்கின்றேன்.

*(இல்லத்து பிள்ளையாய் 1993இல் இல்லம் சேர்ந்து பட்டதாரியாகி 2008இல் இல்லத்தின் மூலம் திருமண மாகிய நான்காவது பிள்ளை )*

# இல்லத்தின் வளர்ச்சிப்பாதையில் ஒரு நோக்கு

**தொகுப்பு :- செல்வி.தமிழ்விழி செல்வநாதன்**

**1982 –**

- 1982.02.03ல் துர்க்காபுரம் மகளிர் இல்லம் சிவத்தமிழ் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களினால் ஸ்தாபிதம்.
- 11.12.1982ல் அமரர் சிவதர்மவள்ளல் மில்க்வைற் கனகராஜாவினால் ஞானசுரபி மண்டபத்தில் திறக்கப்பட்டது.
- 09 பிள்ளைகளுடன் ஆரம்பமாகி ஆண்டு இறுதியில் 15 பிள்ளைகள் இருந்தனர்.

**1983 –**

- இல்லத்தில் 04 பிள்ளைகள் சேர்ந்து எண்ணிக்கை 19 ஆகியது.

**1984 –**

- இல்லத்தில் 11 பிள்ளைகள் புதிதாக சேர்ந்தனர். 03 பிள்ளைகள் பெற்றோர் / பாதுகாவலருடன் மீள் இணைக்கப்பட்டனர்.
- 18.01.1984 தர்மகர்த்தா சபைத் தலைவர் திரு.ஏ.தர்மலிங்கம் அவர்களால் மகளிர் இல்லத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

**1985 –**

- இல்லத்தில் 07 பிள்ளைகள் புதிதாக சேர்ந்தனர். 04 பிள்ளைகள் பெற்றோர் / பாதுகாவலருடன் மீள் இணைக்கப்பட்டனர்.
- அமரர் காமாட்சி கந்தையா இல்ல மேற்பார்வையாளராக கடமையேற்றார்.

**1986 –**

- இல்லத்தில் 13 பிள்ளைகள் புதிதாக சேர்ந்தனர். 05 பிள்ளைகள் பெற்றோர் / பாதுகாவலருடன் மீள் இணைக்கப்பட்டனர்.
- 31.01.1986ல் மகளிர் இல்லக் கட்டிடம் திறக்கப்பட்டது.

**1987 –**

- இல்லத்தில் 07 பிள்ளைகள் புதிதாக சேர்ந்தனர். 05 பிள்ளைகள் பெற்றோர் / பாதுகாவலருடன் மீள் இணைக்கப்பட்டனர். 40 பிள்ளைகள் இல்லத்தில் வாழ்ந்தனர்.

**1988 –**

- இல்லத்தில் 13 பிள்ளைகள் புதிதாக சேர்ந்தனர். 06 பிள்ளைகள் பெற்றோர் / பாதுகாவலருடன் மீள் இணைக்கப்பட்டனர்.
- 23.09.1988ல் J/3/84 இலக்கத்தில் நன்னடத்தை திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்டு அரச அங்கிகாரம் பெற்றது.
- முதன் முதல் இல்ல மெய்வல்லுனர் போட்டி திலகவதி, வாசுகி, மங்கையற்கரசி ஆகிய 03 இல்லங்களுக்கிடையில் நடைபெற்றது.

**1989 –**

- இல்லத்தில் 19 பிள்ளைகள் புதிதாக சேர்ந்தனர். 10 பிள்ளைகள் பெற்றோர் / பாதுகாவலருடன் மீள் இணைக்கப்பட்டனர்.
- 01.04.1989ல் செல்வி.செல்வராணி பெரியதம்பி இல்ல மேற்பார்வையாளராக கடமையேற்றார்.

**1990 –**

- இல்லத்தில் 05 பிள்ளைகள் புதிதாக சேர்ந்தனர். 06 பிள்ளைகள் பெற்றோர் / பாதுகாவலருடன் மீள் இணைக்கப்பட்டனர்.
- சிவத்தமிழ் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் 65 வயதான இவ்வாண்டில் இல்லத்தில் 65 பிள்ளைகள் வாழ்ந்தனர்.

**1991 –**

- இல்லத்தில் 02 பிள்ளைகள் புதிதாக சேர்ந்தனர். 07 பிள்ளைகள் பெற்றோர்/பாதுகாவலருடன் மீள் இணைக்கப்பட்டனர்.
- அன்னையவர்களுக்கு **கலாசூரி** விருது கிடைத்தது.
- 31.05.1991ல் முதன் முதலில் **இல்லக் கட்டிடத்தை விட்டு பாரிய இடப்பெயர்வுடன் கைதடி சிறுவர் இல்லத்திற்கு சென்றோம். 66 பிள்ளைகளுடன் இடப்பெயர்வு.**

**1992 –**

- இல்லத்தில் 07 பிள்ளைகள் புதிதாக சேர்ந்தனர். 06 பிள்ளைகள் பெற்றோர்ஃ பாதுகாவலருடன் மீள் இணைக்கப்பட்டனர்.

**1993 –**

- இல்லத்தில் 11 பிள்ளைகள் புதிதாக சேர்ந்தனர். 10 பிள்ளைகள் பெற்றோர் / பாதுகாவலருடன் மீள் இணைக்கப்பட்டனர்.
- சப்பறம் திருவிழா அன்று ஷெல்வீச்சினால் இல்ல வளாகத்தினுள் சுமித்திரா செல்வராசா(கௌரி) மரணமானார்.

**1994 –**

- இல்லத்தில் 11 பிள்ளைகள் புதிதாக சேர்ந்தனர். 12 பிள்ளைகள் பெற்றோர் / பாதுகாவலருடன் மீள் இணைக்கப்பட்டனர்.

**1995 –**

- இல்லத்தில் 04 பிள்ளைகள் புதிதாக சேர்ந்தனர். 12 பிள்ளைகள் பெற்றோர் / பாதுகாவலருடன் மீள் இணைக்கப்பட்டனர்.

**1996 –**

- இல்லத்தில் 03 பிள்ளைகள் புதிதாக சேர்ந்தனர். 24 பிள்ளைகள் பெற்றோர் / பாதுகாவலருடன் மீள் இணைக்கப்பட்டனர்.
- 03 பிள்ளைகள் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டனர்.
  1. செல்வி.த.தவனேஸ்வரி-கலைப்பீடம்,யாழ்பல்கலைக்கழகம்.
  2. செல்வி.சு.சயாரூபி-கலைப்பீடம்,யாழ்பல்கலைக்கழகம்.
  3. செல்வி.வி.வடிவாம்பிகை-நுண்கலைப்பீடம்,யாழ்பல்கலைக்கழகம்.

**1997 –**

- இல்லத்தில் 02 பிள்ளைகள் புதிதாக சேர்ந்தனர். 07 பிள்ளைகள் பெற்றோர் / பாதுகாவலருடன் மீள் இணைக்கப்பட்டனர்.

**1998 –**

- இல்லத்தில் 22 பிள்ளைகள் புதிதாக சேர்ந்தனர். 06 பிள்ளைகள் பெற்றோர் / பாதுகாவலருடன் மீள் இணைக்கப்பட்டனர்.
- இடப்பெயர்விற்குப் பின் மீண்டும் துர்க்காபுரம் மகளிர் இல்லத்திற்கு வந்தடைந்தனர்.

- ❖ முதன் முதலில் செல்வி.ம.சுமித்திரா தரம்-05 புலமைப்பரிசில் பரீட்சை சித்திபெற்றார்.
- ❖ சிவத்தமிழ் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு கலாநிதிப் பட்டம் கிடைத்தது.
- ❖ நல்லூர் துர்க்கா மணிமண்டபம் திறக்கப்பட்டது.

**1999 –**

- ❖ இல்லத்தில் 02 பிள்ளைகள் புதிதாக சேர்ந்தனர். 05 பிள்ளைகள் பெற்றோர் / பாதுகாவலருடன் மீள் இணைக்கப்பட்டனர்.

**2000 –**

- ❖ இல்லத்தில் 04 பிள்ளைகள் புதிதாக சேர்ந்தனர். 01 பிள்ளை பெற்றோர் / பாதுகாவலருடன் மீள் இணைக்கப்பட்டார்.

**2001 –**

- ❖ இல்லத்தில் 09 பிள்ளைகள் புதிதாக சேர்ந்தனர். 02 பிள்ளைகள் பெற்றோர்ஃ பாதுகாவலருடன் மீள் இணைக்கப்பட்டனர்.

**2002 –**

- ❖ இல்லத்தில் 13 பிள்ளைகள் புதிதாக சேர்ந்தனர். 02 பிள்ளைகள் பெற்றோர்ஃ பாதுகாவலருடன் மீள் இணைக்கப்பட்டனர்.
- ❖ 17.01.2002ல் சிவத்தமிழ் செல்வி சைவ ஆய்வு நூலகம் திறப்பிக்கப் பெற்றது. இதனை பிரதம நீதியரசர் சி.விக்னேஸ்வரன் ( இந்நாள் வடக்கு மாகாண முதல் அமைச்சர் ) அவர்கள் திறந்துவைத்தார்.
- ❖ கே.புஸ்பலட்சுமி யாழ்நுண்கலைப்பீடத்திற்கு அனுமதி பெற்றார்.

**2003 –**

- ❖ இல்லத்தில் 06 பிள்ளைகள் புதிதாக சேர்ந்தனர். 02 பிள்ளைகள் பெற்றோர்ஃ பாதுகாவலருடன் மீள் இணைக்கப்பட்டனர்.
- ❖ கு.சர்மிளா யாழ். பல்கலைக்கழகத்திற்கும், மு.கலாநிதி, ஸ்ரீ.கலைவதனி இருவரும் யாழ். நுண்கலைப் பீடத்திற்கும் தெரிவு செய்யப்பட்டனர்.
- ❖ த.தவனேஸ்வரி இல்லம் திருமணம் செய்து வைத்த முதலாவது பிள்ளையாகும்.

**2004 –**

- ❖ இல்லத்தில் 02 பிள்ளைகள் புதிதாக சேர்ந்தனர். 07 பிள்ளைகள் பெற்றோர் / பாதுகாவலருடன் மீள் இணைக்கப்பட்டனர்.

**2005 –**

- ❖ இல்லத்தில் 08 பிள்ளைகள் புதிதாக சேர்ந்தனர். 05 பிள்ளைகள் பெற்றோர் / பாதுகாவலருடன் மீள் இணைக்கப்பட்டனர்.
- ❖ துர்க்காபுரம் மகளிர் இல்லம் வலிவடக்கு பிரதேச செயலகத்தில் J/F/GN/83/VOL/2005/1 என்ற இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டது.
- ❖ இல்லத்தில் வளர்ந்த த.மஞ்சுளாவிற்கு இல்லத்தினால் திருமணம் செய்து வைக்கப்பெற்றது.

**2006 –**

- ❖ இல்லத்தில் 01 பிள்ளை புதிதாக சேர்ந்தார். 06 பிள்ளைகள் பெற்றோர் / பாதுகாவலருடன் மீள் இணைக்கப்பட்டனர்.
- ❖ ம. சுமித்திரா பல்கலைக்கழக அனுமதி பெற்றார்.

**2007 –**

- இல்லத்தில் 04 பிள்ளைகள் புதிதாக சேர்ந்தனர். 08 பிள்ளைகள் பெற்றோர் / பாதுகாவலருடன் மீள் இணைக்கப்பட்டனர்.
- மகளிர் இல்லம் தனது வெள்ளி விழாவை 10.03.2007ல் கொண்டாடும் போது 52 பிள்ளைகள் இருந்தனர்.
- நா.கிருபாலினி முதன் முதலில் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு அனுமதி பெற்றார். (ஆரம்ப பிரிவு)
- 03.02.2007ல் செல்வி.நாகராணி அவர்களுக்கு திருமணம் நடைபெற்றது.
- வி.ஜலயா க.பொ.த.சாதாரண பரீட்சையில் 6A சித்தி பெற்றார்.

**2008 –**

- இல்லத்தில் 03 பிள்ளைகள் புதிதாக சேர்ந்தனர். 07 பிள்ளைகள் பெற்றோர் / பாதுகாவலருடன் மீள் இணைக்கப்பட்டனர்.
- 15.06.2008ல் சிவத்தமிழ் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் இறைவனடி சேர்ந்தார்.
- செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் அவர்கள் துர்க்காதேவஸ்தானம், துர்க்காபுரம் மகளிர் இல்லத் தலைவராக பதவியை ஏற்றுக்கொண்டார்.
- இல்லத்தில் வளர்ந்த கே.புஸ்பலட்சுமிக்கு இல்லத்தினால் திருமணம் செய்து வைக்கப்பெற்றது.

**2009 –**

- இல்லத்தில் 30 பிள்ளைகள் புதிதாக சேர்ந்தனர். 04 பிள்ளைகள் பெற்றோர்ஃ பாதுகாவலருடன் மீள் இணைக்கப்பட்டனர்.
- 02.04.2009ல் சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு சேவைகள் திணைக்களம் வடமாகாணத்தில் NP/24/2/1/CH/06ல் பதிவு செய்யப்பட்டது.

**2010 –**

- **இல்லத்தில் 99 பிள்ளைகள் புதிதாக சேர்ந்தனர்.** 10 பிள்ளைகள் பெற்றோர்ஃ பாதுகாவலருடன் மீள் இணைக்கப்பட்டனர்.
- போர்க் கால சூழலால் 99 பிள்ளைகள் இல்லத்தில் இணைக்கப்பட்டனர். இடப்பற்றாக்குறை ஏற்பட்டமையால் தரம்-09திற்கு கீழ்ப்பட்ட மாணவர்கள் யாத்திரிகர் விடுதியில் தங்கிவைக்கப்பட்டனர்.

**2011 –**

- இல்லத்தில் 17 பிள்ளைகள் புதிதாக சேர்ந்தனர். 23 பிள்ளைகள் பெற்றோர் / பாதுகாவலருடன் மீள் இணைக்கப்பட்டனர்.
- அ.ஜெயந்தினி, து.துஸ்யந்தினி ஆகியோருக்கு யாழ்நுண்கலைப்பீடத்திற்கு அனுமதி பெற்றனர்.
- செ.தமிழ்விழி வவுனியா தேசிய கல்வியற் கல்லூரிக்கு அனுமதி பெற்றார்.
- 04.04.2011ல் புதிய மகளிர் இல்லத்திற்கான அடிக்கல் தலைவர் திரு.ஆறு.திருமுருகன் அவர்களால் நாட்டப்பெற்றது.

- ❖ பூ.செல்வதியம்மா சுற்றாடல் துறையில் தேசியமட்ட கட்டுரைப் போட்டியில் 2ம்இடத்தை பெற்றார்.
- ❖ த.தேவதர்மிளா தினக்குரல் நடத்திய தேசியமட்ட கட்டுரைப் போட்டியில் 3ம்இடத்தை பெற்றார்.

2012 –

- ❖ இல்லத்தில் 02 பிள்ளைகள் புதிதாக சேர்ந்தனர். 25 பிள்ளைகள் பெற்றோர் / பாதுகாவலருடன் மீள் இணைக்கப்பட்டனர்.
- ❖ 19.03.2012ல் இல்லத்திற்கான அதிபர் நியமிக்கப்பட்டார்.
- ❖ 31.05.2012ல் இல்லத்தில் வளர்ந்து திருமணமாகி ஆலய அலுவலக உதவியாளராக கடமையாற்றிய திருமதி.மஞ்சுளா உதயகுமார் இறைபதம் அடைந்தார்.
- ❖ 10.08.2012ல் இல்லத்தில் 27 வருடங்களாக பிரதம மேற்பார்வையாளராக கடமையாற்றிய செல்வி காமாட்சி கந்தையா இறைபதம் அடைந்தார். இதனால் 30வது ஆண்டுவிழா நடைபெறவில்லை.
- ❖ மு.கலாநிதி, ம.சுமித்திரா ஆகியோருக்கு இல்ல நிர்வாகசபையினர் திருமணம் செய்துவைத்தனர்.
- ❖ தலைவர் திரு.ஆறு.திருமுருகன் அவர்களுக்கு கலாநிதிப் பட்டம் கிடைத்தது.
- ❖ முதன் முதலில் இல்ல மாணவி த.தேவதர்சினி க.பொ.த.சாதாரண தரத்தில் சகலபாடங்களிலும் விசேடசித்தியாக 9A பெற்றார்.

2013 –

- ❖ இல்லத்தில் 09 பிள்ளைகள் புதிதாக சேர்ந்தனர். 06 பிள்ளைகள் பெற்றோர் / பாதுகாவலருடன் மீள் இணைக்கப்பட்டனர்.
- ❖ புதிய மகளிர் இல்லம் ஆலயத்தின் தெற்கு பக்கமாக 14.07.2013ல் பேராசிரியர் கலாநிதி மிகுந்தன் அவர்களால் திறக்கப்பட்டடு யாத்திரிகர் விடுதியில் இருந்த பிள்ளைகள் அன்றைய தினமே குடிபுகுந்தனர்.
- ❖ பூ.செல்வதியம்மா, பா.விதுசாயினி யாழ்பல்கலைக்கழகத்திற்கும், நா.சர்வலோயினி வந்தாறுமூலை கிழக்கு பல்கலைக்கழகத்திற்கும் தெரிவு செய்யப்பட்டனர்.
- ❖ த.தேவதர்மளா யாழ்தேசியகல்வியற் கல்லூரிக்கு தெரிவு செய்யப்பட்டார்.
- ❖ செ.தமிழ்விழி கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பட்டம் பெற்றார்.

2014 –

- ❖ இல்லத்தில் 08 பிள்ளைகள் புதிதாக சேர்ந்தனர்.
- ❖ துர்க்காபுரம் மகளிர்இல்ல வீட்டுத்திட்ட அடிக்கல் நாட்டுவிழா 02.02.2014 நடைபெற்றது. கலாநிதி.ஆறு.திருமுருகன் அவர்களால் அடிக்கல் நாட்டப்பெற்றது.
- ❖ ஜெ.தேவரூபி பல்கலைக்கழக அனுமதி பெற்றார்.(2012-2013)



தலைவருடன் அன்னையர்



தலைவர், அதிபருடன் மேற்பார்வையாளர்கள்



தலைவருடன் பல்கலைக்கழக மாணவிகள்



தலைவருடன் பணியாளர்கள்






தலைவர், அதிபர், மேற்பார்வையாளர்களுடன் மகளிர் இல்லப் பிள்ளைகள்






தலைவர், அதிபர், மேற்பார்வையாளர்களுடன் மகளிர் இல்லப் பிள்ளைகள்

# இல்லத்தின் வளர்ச்சியில் ஒரு நோக்கு

| வருடம் | அனுமதி பதிவேட்டின் படி இல்லத்தில் பயன் பெற்றோர் தொகை | இணைந்த பிள்ளைகள் தொகை | பெற்றோர் / பாதுகாவலருடன் மீள் இணைப்பு / திருமணம் / தொழில் வாய்ப்பு பெற்று இல்லத்திலிருந்து வெளியேறியோர் |
|---|---|---|---|
| 03/02/1982-31/12/1982 | 15 | 15 | - |
| 31/12/1982-31/12/1983 | 19 | 04 | - |
| 31/12/1983-31/12/1984 | 30 | 11 | 03 |
| 31/12/1984-31/12/1985 | 37 | 07 | 04 |
| 31/12/1985-31/12/1986 | 50 | 13 | 05 |
| 31/12/1986-31/12/1987 | 57 | 07 | 05 |
| 31/12/1987-31/12/1988 | 70 | 13 | 06 |
| 31/12/1988-31/12/1989 | 89 | 19 | 10 |
| 31/12/1989-31/12/1990 | 94 | 05 | 06 |
| 31/12/1990-31/12/1991 | 96 | 02 | 07 |
| 31/12/1991-31/12/1992 | 103 | 07 | 06 |
| 31/12/1992-31/12/1993 | 114 | 11 | 10 |
| 31/12/1993-31/12/1994 | 125 | 11 | 12 |
| 31/12/1994-31/12/1995 | 129 | 04 | 12 |
| 31/12/1995-31/12/1996 | 132 | 03 | 24 |
| 31/12/1996-31/12/1997 | 134 | 02 | 07 |
| 31/12/1997-31/12/1998 | 156 | 22 | 06 |
| 31/12/1998-31/12/1999 | 158 | 02 | 05 |
| 31/12/1999-31/12/2000 | 162 | 04 | 01 |
| 31/12/2000-31/12/2001 | 171 | 09 | 02 |
| 31/12/2001-31/12/2002 | 184 | 13 | 02 |
| 31/12/2002-31/12/2003 | 190 | 06 | 02 |
| 31/12/2003-31/12/2004 | 192 | 02 | 07 |
| 31/12/2004-31/12/2005 | 200 | 08 | 05 |
| 31/12/2005-31/12/2006 | 201 | 01 | 06 |
| 31/12/2006-31/12/2007 | 205 | 04 | 08 |
| 31/12/2007-31/12/2008 | 208 | 03 | 07 |
| 31/12/2008-31/12/2009 | 238 | 30 | 04 |
| 31/12/2009-31/12/2010 | 337 | 99 | 10 |
| 31/12/2010-31/12/2011 | 354 | 17 | 23 |
| 31/12/2011-31/12/2012 | 356 | 02 | 25 |
| 31/12/2012-31/12/2013 | 365 | 09 | 06 |
| 31/12/2013-31/12/2014 | 373 | 08 | - |
| | **373** | | **236** |

**தற்போதைய மாணவர் தொகை ஈ 137**

# தமிழ் ஒரு செம்மொழி

**கு. பிரேமினி**
க.பொ.த. (உ/த) 2014

*இன்று உலகத்திலே பேசப்படுகின்ற பல்லாயிரக்கணக்கான மொழிகளுள் ஒரு சில மொழிகளே செம்மொழி களெனக் கருதப்படுகின்றன. பண்டைக் காலந் தொடக்கம் நீண்ட காலப் பயன்பாடுடையதும் மிகச் சிறந்த உலகு தழுவிய இலக்கியங்களுடையதும் நீண்டகால இலக்கியப் பாரம்பரிய முடையதும் வேறெந்த மொழியிலு மிருந்து கிளைத்தெழாததுமாகிய மொழியே செம்மொழி எனப்பட்டது. நீண்ட காலமாக கிரேக்கம், இலத்தீன், சமஸ்கிருதம், ஹீப்ரு, அரபிக், பாரசீகம், சீனம் ஆகிய மொழிகளே செம்மொழி களெனப் போற்றப்பட்டன. செம்மொழி பயிலும் மாணவர்கள் மிகக் குறைவு. காரணம் என்னவென்றால் செம்மொழி யொன்றினைப் பயில விரும்பும் ஒருவர் பண்டைய மொழி, பண்டைய இலக்கியம், பண்டைய பண்பாடு ஆகியனவற்றைக் கற்கவேண்டிய கட்டாயத் தேவை இருப்பதனாலேயாகும்.*

*செம்மொழிகளெனக் கருதப்பட்டன வற்றிற் காணப்படும் தகைமைகள் யாவும் தமிழ் மொழியிலும் காணப்படு கின்றன. எனினும் ஆரம்பத்தில் தமிழ் மொழி செம் மொழியெனக் கருதப்பட்டு பறைசாற்றப் படவில்லை. அதற்குச் சில காரணங் களும் உள. தமிழ் மொழியின் பண்டைய இலக்கியங்கள் பற்றி ஆங்கி லேயர்களுக்கு 19ஆம் நூற்றாண்டள விலேயே தெரியவந்தது. சி.வை.தாமோ தரம்பிள்ளை, உ.வே. சாமிநாதையர் போன்றோர் சங்க இலக்கியங்களையும் தொல்காப்பிய இலக்கண நூலையும் பதிப்பித்தபோதே தமிழ் மொழியில் இத்தகு பண்டைய நூல்கள் இருந்தன என்னும் உண்மை உலகுக்குத் தெரிய வந்தது. 19ஆம் நூற்றாண்டின் நடுப் பகுதியில் (1856இல்) திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலை எழுதி வெளியிட்ட டாக்டர் கால்ட்வெல் தமிழ் மொழியின் சிறப்புக்களையெல்லாம் மிகவும் விரிவாகவும் தெளிவாகவும் எழுதியுள்ளார். அவ்வாறு எழுதிய* ***கால்ட்வெல் ஐயருக்குத்*** *தமிழ்மொழி யிலே பண்டைத் தமிழ் இலக்கியத் தொகுதியாகிய சங்க இலக்கியங்கள் இருந்தமை பற்றித் தெரியாது. இதனால் தமிழ்மொழியில் கி.பி. ஆறாம் நூற் றாண்டுக்குப் பின்னாலேயே இலக்கி யங்கள் தோன்றியுள்ளன எனக் குறிப் பிட்டுள்ளார். உலக அறிஞர்கள் இதை நம்பினார்கள். எடுத்துக்காட்டாக ஜப்பானிய இலக்கிய வரலாற்றினை எழுதிய சேம்பர்லெயின் (Chamberlain) என்னும் ஆங்கிலேய அறிஞர் தமிழ் மொழியிலே இலக்கியங்கள் தோன்றிய காலத்திலேயே ஜப்பானிய மொழியில் இலக்கியங்கள் தோன்றின எனக் கூறியுள்ளார். தன்னுடைய கூற்றுக்கு டாக்டர் கால்ட்வெலைச் சான்றாகக் காட்டியுள்ளார். ஜப்பானிய மெழியிலே*

கி.பி. ஏழாம் நூற்றாண்டளவிலேயே இலக்கியங்கள் தோன்றின என்பது உண்மை. அதனைத் தமிழ் மொழியோடு ஒப்பிட்டது பிழையாகும்.

தமிழ் மொழியின் தொன்மை பற்றியும் தமிழருடைய பண்பாடு பற்றியும் பண்டைத் தமிழ் இலக்கியங்கள் பற்றியும் பி.ரி.சிறீநிவாச ஐயங்கார் (History of the Tamils), தி.கனகசுந்தரம்பிள்ளை (The Tamils Eighteen Hundred Years Ago), M.S.பூரணலிங்கம்பிள்ளை (History of Tamil Literature) போன்றவர்கள் ஆங்கில மொழியில் எழுதியும் உலகம் தமிழ் மொழியை ஒரு செம்மொழியென உத்தி யோகபூர்வமாகத் தெரிவிக்கவில்லை. சமஸ்கிருத மொழியின் ஒரு கிளை மொழியே தமிழ் என்னும் கருத்து வட இந்திய அறிஞர்களிடையே வேரூன்றி யிருந்தது. இதனால் சமஸ்கிருத மொழியைச் செம்மொழி என உத்தி யோகபூர்வமாக ஏற்றுக்கொண்ட இந்திய அரசு தமிழ்மொழியை ஏற்றுக் கொள்ள வில்லை. 2000ஆம் ஆண்டி லிருந்து தமிழறிஞர்களும் தமிழ்நாடு அரசும் தமிழை ஒரு செம்மொழியென உத்தி யோகபூர்வமாக ஏற்று அறிவித்தல் செய்யவேண்டும் என இந்திய அரசுக்கு வேண்டுதல்கள் விடப்பட்டன. அவற்றின் பலனாகச் சென்ற ஆண்டு இந்திய அரசு தமிழ் ஒரு செம்மொழி என ஆணை பிறப்பித்தது. இந்த ஆணையினாலே பெறக்கூடிய பயன்கள் யாவை? உலகப் பல்கலைக்கழகங்களிலே தமிழ் மொழியை ஒரு செம்மொழியாகக் கற்பிக்கும் வாய்ப்பு ஏற்படலாம். தமிழ்மொழிக்கான தவிசுகள் (chairs for Tamil) ஏற்படுத்தப் படலாம். இந்திய அரசு செம்மொழி வளர்ச்சிக்கென ஒவ்வோராண்டும் கொடுக்கப்படும் ஐந்து கோடி ரூபா தமிழ் மொழிக்கு வழங்கப்படுகிறது. மைசூரில் தமிழ்ச் செம்மொழி மையம் உருவர்ககப் பட்டுள்ளது.

**உங்கள் அனுமதி இல்லாமல் உங்கள் உடம்பில் ஒருவர் அடித்துக் காயம் ஒன்றினை ஏற்படுத்திவிடலாம். ஆனால் உங்கள் ஒத்துழைப்பில்லாமல் உங்கள் மனதை யாராலும் காயப்படுத்தமுடியாது. மற்றவர்கள் சொல்வதைச் சொல்லட்டும். நீங்கள் உங்கள் இலக்கை நோக்கிப் பயணித்தக் கொண்டிருங்கள். ஏனெனில் சாதிக்கத் தெரியாதவனுக்கு, சாதிக்கமுடியாதவனுக்கு சாதனைகள் செய்பவனைக் கண்டால் பொறுக்காது. விமர்சித்துக் கொண்டேயிருப்பான். அவனைப் பார்த்து உங்களால் பரிதாபப்பட மட்டும்தான் முடியும்.**

*– யாரோ*

# அறநூல்கள் காட்டும் பெண்கள்

**ம. செல்வதியம்மா**
கலைத்துறை, 1ஆம் வருடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

அறநெறிக்காலமாக தமிழ் இலக்கிய வரலாற்றாசிரியர்கள் பலராலும் கி.பி. 300 தொடக்கம் 650 வரையென வரையறை செய்யப்பட்ட சங்கமருவிய காலம் திகழ்வது யாவரும் அறிந்ததே. இங்கு களப்பிரரின் ஆட்சி கோலோட்சி இருந்தமையினால் அந்தக் காலத்தில் வாழ்ந்த மக்களுக்கு அறக்கருத்துக்கள் போதிக்க வேண்டிய தேவை எழுந்தது. இதன் காரணமாக அக்காலகட்டத்திலே எண்ணிறைந்த அறநூல்கள் எழுந்தன.

அந்த வகையிலே இவ் அறநூல்களானது பெண்களைப் பற்றி என்ன கூறுகின்றது என்பதே எனது கருத்து. அற நூல்களிலே காட்டப்படும் பெண்கள் இல்வாழ்க்கையிலே முதன்மை பெறுகின்றார்கள். இல்லாள் ஆற்றவேண்டிய கடமை பற்றியும், அவளது பொறுப்புக்கள் பற்றியும், அவள் செய்ய வேண்டிய, பின்பற்றவேண்டிய அறங்கள் பற்றியும், விரதங்கள் பற்றியும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இதன் சான்றாதார அறநூலாக திருக்குறளைக் குறிப்பிடலாம்.

**"வித்துமிடல் வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி**
**மிச்சல் மிசைவான் புலம்"**

ஒருவருக்கு விருந்தோம்பல் செய்வது இல்லறத்தரசியின் தலையாய கடன் என்கிறார். வள்ளுவர் காட்டிய பெண்மை அனைவராலும் மெச்சிப் புகழத்தக்கது. காமத்துப்பாலிலும் ஒரு பெண்மை எப்படியிருக்க வேண்டும் எனக் கூறியிருக்கின்றார்.

**"கானுங்கால் காணேன் தவறாய காணாக்கால்**
**காணேன் தவறல்லவை"**

எனும் குறட்பாவினூடே தன் தலைவன் பிழை செய்திருந்தாலும் அவன் பக்கத்துவரும் பொழுது அனைத்தையும் மறந்து அவனை வரவேற்பது மாதரசியின் கடமை என்கிறார். அறத்துப்பாலிலும் சரி, காமத்துப் பாலிலும் சரி வள்ளுவர் காட்டிய பெண்மையின் உயர்வு மெச்சத்தக்கதே. அற இலக்கியங்களிலே பெண்கள் சிறந்த காதலிகளாகப் போற்றப்பட்டுள்ளனர். "ஐவகை இன்பங்களையும் ஒருங்கே அடக்கியவர்கள்" என்பது வள்ளுவரின் கூற்று. இவர்கள் தலைவனைக் காணாத விடத்துப் பெறும் இன்னல், அதைவிட கற்புடை மகளிர் தம் ஒழுக்கம், திருமண பந்தத்தின் பின்னான காமம் என்பன நாலடியாரிலே பெண்களினூடாகவே சொல்லப்படுகின்றது.

இதனைவிட அற நூல்கள் "வரைவின் மகளிர்" பற்றியும் கூறுகின்றது. இதன் கருவூலம் அனைவரும் நற்பெண்டிராக வாழவேண்டும் என்பதேயாகும். வரைவின் மகளிர் பற்றி நாலடியார்கூறுவதாவது –

**"இந்திரனாயினும் பொருளின்றேல் கையால் –**
**வணங்கி அனுப்புவர்**
**பொருளிருப்பின் இனியவராய் நடிப்பர்**

**வறியவராயின் இனியமையற்றவராகி**
**ஆட்டுக்கடாவின் கொம்பு போன்று மாறுபாடு –**
**கொள்வார்"**

என்பதாக அமைய திரிகடுகமோ "பொது மகளிர் துறை போன்றவர்" என்கிறது.

**"பொது மகளிர் பாடுகின்ற இடத்தை நாடாதீர்**
**ஆடுகின்ற நாடகத்தைப் பாராதீர்"**

என்று எத்தனையோ அறக் கருத்துக்கள் வலியுறுத்தப்படுகின்றன. இது அன்றைய கால ஆடவர்கள் பரத்தையரை நாடக் கூடாது என்பதற்கே எனலாம்.

சிறுபஞ்சமூலத்திலே "தீய பெண்கள்" என ஒரு சாரார் வன்முறையாகச் சாடப் பட்டனர். அக்காலத்திலே கொலை, களவு, காமம், கள்ளுண்ணல், பொய் என பஞ்சமா பாதகங்களும் தலைவிரித் தாடியது. ஆதலால் பெண்களும் கணவனைப் பிரிந்து வேறு ஆடவனைச் சாடி வாழ்ந்தனர். இது தவறு என பல நூல்கள் சாடி நிற்கின்றன.

அற நூல்ககளிலே பெண்களது அழகானது இழிவு நிலையிலே வர்ணிக் கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

"பெண் உடல் குமட்டுவது பெண் ஓர் அழகுத்தேர், ஆனால் அசுத்தமும் நாற்றமும் உள்ளது" என நாலடியார் கூறுகின்றது.

இன்னா நாற்பதானது கூறுவது என்னவெனில் –

"மினன் காமம் உடையவர் சேர்க்கை இன்னா" என்பதேயாம்.

விதவைப் பெண்கள் பற்றியும், அடிமைப் பெண்கள் பற்றியும் அறநூல் களானது கூறி நிற்பது நோக்கத் தக்கதே.

"விதவைக்கு உதவுதல் வேண்டும்" என ஏலாதி நேரடியாகக் கூறி நிற்கின்றது.

இத்தோடு பெண்களது உயர்வு பற்றியும் அற நூல்கள் கூறி நிற்கின்றன. பெண்கள் கல்வி, மனைவி கணவனைப் பாதுகாக்கும் திறன், பெண்களைப் போற்றும் நிலை என்பன திகழ்கின்றது. எடுத்துக் காட்டாக –

"மனைவியைப் பாதுகாக்கும் திற னின்றி இகழ்ந்து பேசுபவன் இறப்பில் எவர்க்கும் பயனற்றவன்" என 'திரிகடுகம்' குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது. பெண் களின் உயர்வுநிலையானது பெரிதும் விரும்பப்படவில்லை. இதனை திரிகடுகம்

**"பெண்கள் வழக்குத் தொடுத்து முன்னேற்றமடைதல்**
**கண்களால் பாக்கத்தக்கதன்று"**

இவ்வாறாக பெண்களின் கருத் துக்கள் பலதும் இடம்பெற்றிருக் கின்றன. நான் சங்கமருவிய கால பெண்மையின் முன் நிலை இக்காலத் திலும் தொடரக்கூடாது, அதன் பின் நிலை தழைத்தோங்க வேண்டும் என்ற பேரவாவில் இக் கட்டுரையைச் சமர்ப்பிக்கின்றேன்.

**பெண்களே சிந்தியுங்கள், நீங்கள்**
**எவ்வாறு வாழவேண்டுமென்று.**

# இசையில் வாத்தியக் கருவியின் முக்கியத்துவமும் பயன்பாடும்

**ஜெ. நாகசுஜித்தா**
க.பொ.த. (உ/த) 2012

**"இசையால் வசமாகா இதயம் ஏது"**

தென்னிந்திய சங்கீதத்திலே வாத்திய இசையானது மிக உன்னத இடத்தினை வகிக்கின்றது என்பதை நாம் அனைவரும் கண்ணூடாகக் காணமுடிந்ததே. இந்த வகையில் சுத்த இசை என்பதன் பெருமையையும் விளக்கத்தையும் மனிதனுக்கு உணர்த்தியது இவ் இசைக் கருவிகளேயாகும்.

இத்தகைய இசைக்கருவிகளின் இசையினை எல்லா நாட்டு மக்களும் விரும்பி ரசிப்பது உண்மையுமாகும். இங்கு ஒலியின் தத்துவங்களை அறிந்து கொள்வதற்கு இசைக்கருவிகள் பெரிதும் உதவுகின்றன. இந்த வகையில் சரஸ்வதிதேவி வீணையுடனும், நந்திகேஸ்வரர் மிருதங்கத்துடனும், கிருஷ்ணன் குழலுடனும் இருப்பதிலிருந்து இக்கருவிகளின் பெருமையை நாம் உணரலாம். அத்துடன் கோபாலகிருஷ்ண பாரதியார், சாரங்கதேவர், தியாகராஜ சுவாமிகள், முத்துஸ்வாமி தீட்சிதர், முத்துத் தாண்டவர் போன்ற இசைப் பேரறிஞர்களும் வாத்திய இசைவல்லுநர்களாக திகழ்ந்தனர்.

ஸ்வரஸ்தானங்களின் நிலையினை வாத்தியங்களில் நாம் நன்றாக உணர முடியும். அதுமட்டுமன்றி கமகங்களின் நுட்பங்கள், இராகங்களின் ஜீவ, நியாஸ ஸ்வரங்களையும் இவ்வாத்தியத்தினூடாக நாம் அறியக்கூடியதாக உள்ளது.

ஒருவன் சாரீரத்தால் வெளிப்படுத்த முடியாத தன் ஆற்றலை சங்கீதத்தில் உள்ள ஞானத்தினால் வாத்திய சங்கீதத்தின் மூலம் வெளிப்படுத்துகின்றான். அத்துடன் குறிப்பிட்ட வயதிற்குப் பின் நம்முடைய சாரீரம் செயற்றிறன் குன்றிவரும். அத்தருணம் வாத்தியக் கருவியினை வாசிக்க நன்கு அறிந்து கொண்டால் எம் திறமையை வாத்திய சங்கீதத்தின் மூலம் வெளிக் கொணரலாம்.

இவ்வாத்திய இசையானது வெகு தூரத்திற்கு ஒலிக்கக்கூடியது. எனவே தான் பண்டைய காலத்தில் செய்திகளை வெகு தூரத்திற்கு அறிவிப்பதற்கு கொட்டு, முரசு,கொம்பு, சங்கு, துந்துபி போன்ற இசைக்கருவிகளைப் பயன் படுத்தினர்.

புதிய ராகங்களைக் கண்டுபிடிப்பதற்கும் இசை நுட்பங்களை அறிவதற்கும் வீணை போன்ற நரம்புக்

கருவிகள் பயன்படுத்தப்பட்டன. அது மட்டுமன்றி கமக வேறுபாடுகளையும் இராக சாயாஸ்வரங்களையும் அறிய வீணை மிகவும் சிறந்தது.

சங்கீத ஞானம் படைத்த மாணவர் ஒருவருக்கு ஸ்ருதி ஒழுங்காக அமையா விடின் அல்லது ஸ்ருதி ஒழுங்கமைப்பது கடினமாக இருப்பின் வாத்தியம் ஒன்றினை அவர் பயின்று தன் ஞானத்தை வெளிப்படுத்துவதுடன் விருத்தியடையவும் செய்யலாம்.

ஸ்வரங்களின் குணாம்சங்களை இசைக்கருவிகள் ஊடாக நாம் அறியலாம். அதுமட்டுமல்ல, ஒரு சிறந்த குரல் வளத்தை உடையவர் கூட 2 1/2 அல்லது 3 ஸ்தாயிகளுக்கு மேல் பாட இயலாது. ஆனால் சில இசைக்கருவிகளில் 5 - 7 ஸ்தாயிகள் கூட வாசிக்கலாம்.

ஒரு பாடகனுக்கு சுகவீனம், ஜலதோஷம், காலநிலை மற்றும் சூழல் மாற்றங்களால் உடல்நிலை பாதிக்கப் படும்போது அவனால் இனிமையாகப் பாடமுடியாமல் போகும். ஆனால் வாத்திய இசைக் கலைஞனுக்கு இத்தகைய இடைஞ்சல்கள் வராது. எனவே தூய தனியிசையின் பெருமையினை வாத்தியக் கருவிகள் மூலம் நாம் நன்குணர முடியும். எனவே ஒவ்வொரு குரலிசைக் கலைஞனும் குறைந்தது ஒரு வாத்திய இசையாவது கற்றிருக்க வேண்டும். இது அக்கலைஞனுக்குத்தான் பெருமை என்பதில் ஐயமில்லை.

# ரஷ்யப்புரட்சி - 1917

**பா. சிந்துஜா**
க.பொ.த. (உ/த) 2013

உலகிலே பல புரட்சிகள் தோன்றி யுள்ளன. இப்புரட்சிகளின் தோற்றத் தினால் வரலாறே ஒரு திருப்புமுனை கண்டது. இப்புரட்சிகள் தோன்றக்காரணம் சர்வதிகார ஆட்சியே ஆகும். அந்த வகையில் 1917ஆம் ஆண்டு காணி, நிலம், உணவு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு இடம்பெற்றதே ரஷ்யப் புரட்சி ஆகும். இது போல்ஷிஷப் புரட்சி, அக்டோபர் புரட்சி, லெனின் புரட்சி, 1917 புரட்சி, சமதர்ம புரட்சி, சோசலிச புரட்சி எனவும் பல பெயர்களால் அழைக்கப்படுகிறது.

இவ் ரஷ்யப் புரட்சியால் ரஷ்யாவில் பல மாற்றங்கள் ஏற்பட்டது. ரஷ்யப் புரட்சி பொதுவுடமைவாதம் எனவும் அழைக்கப்படும். பொதுவுடமை வாதம் என்பது செல்வம் தொடர்பாகப் பொது உரிமையை உறுதி செய்து உற்பத்தியின் பலனை அனைவரிடையேயும் சமமாகப் பங்கீடு செய்யும் பொருளாதார அரசியல் முறையே பொதுவுடமையாகும். ரஷ்யப் புரட்சி ஏற்பட பல காரணங்கள் ஏதுவாக அமைந்தன.

ரஷ்யாவை மகாமீட்பர், மகாகதரீன், 2ம் நிக்கலஸ், 2ம் அலெக்ஸ்சாண்டர் போன்றவர்கள் மக்கள் நலனில் அக்கறை செலுத்தாது ஆட்சி செய்தார்கள். மகாபீட்டரும், மகா கதரீனும் பரந்த அரசை உருவாக்கினாலும் கி.பி. 18ஆம் நூற்றாண்டில் ரஷ்யாவின் சனத்தொகை வளர்ச்சியடைந்ததுடன் பல்வேறு வேறுபாடுடைய மக்கள் கூட்டம் ஒன்று ரஷ்யாவுக்குள் தோற்றம்பெற்றது.

2ம் நிக்கலஸ் என்ற மன்னன் தனது மனைவியான அலெக்ஸ்சாந்திரியா பியு(f)தரவ்னா என்பவளின் சொல் கேட்டு ஆட்சி செய்து வந்தான். அவளோ றஸ்புதின் என்ற வேடதாரியான துறவியின் சொல் கேட்டு அதன்படி மன்னனையும் ஆட்சி செய்யப் பணித்தாள். றஸ்புதின் அரச சபையிலிருந்து அமைச்சர்களை நீக்கிவிட்டு, வேறு அமைச்சர்களை நியமிக்குமாறு கூற, அதன்படி மன்னன் செய்ய, மக்கள் சீற்றம் அடைந்து றஸ்பு தினைக் கொலை செய்தனர். இதனால் மன்னன் மக்களைத் துன்புறுத்தினான்.

பாராளுமன்றத்தில் பல சீர்திருத் தங்கள் கொண்டுவரப்பட்டது. இதனால் மன்னன் பாராளுமன்றத்தைக் கலைத்து விட்டு ஆட்சி செய்தான். மேலும் இந்நிலையில் பொருளாதார சீர்கேடு ஏற்பட்டது. தொழிலாளர்கள் பல இன்னல்களை அனுபவித்தனர். இக் காலகட்டத்தில் இங்கிலாந்து இயந்திர மயமாக்கப்பட்டு, கைத் தொழிலில் வளர்ச்சியடைந்தது. இதனால் அதனைப் பின்பற்றி கைத்தொழிற் சாலைகள் உருவாக்கப்பட்டது. தொழி லாளர்கள் குறைந்த சம்பளத்தில் கடுமையாக வேலை வாங்கப்பட்டனர்.

இதனால் தொழிலாளர் தொழிற் சங்கம் அமைத்தனர். அதனை முதலாளித்துவ வர்க்கத்தினர் இல்லா தொழித்தனர். மேலும் எழுத்தாளர் களும் தோற்றம் பெற்றனர். காள்மார்க்ஸ் என்பவர் டாஸ் கபிற்றல் என்னும் நூலில் தொழிலாளர்களின் துன்ப நிலையும் முதலாளிகளின் கொடுமை யான ஆட்சி பற்றியும் குறிப்பிட்டார். பாரனின், துர்கினேவ், புன்ஸ்கில்லர், குரோபோகின் போன்றவர்களும் பொதுவுடமை வாதக் கருத்துக்களை வெளியிட்டனர்.

ரஷ்யாவில் புரட்சி இயக்கங்கள் தோற்றம் பெற்றது. ட்ரொஸ்கி மார்டொவ் போன்றோர் மென்ஷிவிக் எனும் இயக்கத்தை தோற்றுவித்து அரசுக்கு ஆதரவாகச் செயற்பட்டனர். லெனின் தலைமையில் போல்ஷிஷக் இயக்கம் தோற்றம் பெற்று மக்களுக்கு ஆதரவாகச் செயற்பட்டது. போல்ஷிவிக் கட்சி பெரும்பான்மையாகக் காணப் பட்டது. இவ்வாறு பல வழிகளில் புரட்சிக்கு ரஷ்யா வித்திட்டாலும், ரஷ்யா மஞ்சூரி யாவைக் கைப்பற்ற முயன்றது. இதற்கு ஜப்பான் எதிர்ப்புத் தெரிவித்தது.

இதனால் ரஷ்யா ஜப்பான் மீது போர் தொடுத்தது, தோல்வி கண்டது.இவ்வாறு பல வழிகளிலும் புரட்சிக்கு வித்திட்டுக் கொண்டு வந்தது. பொதுமக்கள் ஆர்ப் பாட்டங்களில் ஈடுபட்டனர். மக்கள் பாண் கேட்டு வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்தனர். இக்கலகத்தை அடக்கப் படைவீரர்கள் அனுப்பப்பட்டனர். படை வீரர்களும் கலகக்காரருடன் இணைந் தனர். இதுவே போல்ஷிவிக் கட்சிக்கு பெரும் உறுதுணையாக அமைந்தது. போல்ஷிவிக்கின் தலைவர் லெனினுக்கு எதிராகப் படை அனுப்பப்பட்டது.

அது மொஸ்கோவின் பெட்ரோ கிறாபி என்ற இடத்தில் முறியடிக்கப் பட்டது. பின்னர் படையும் லெனின் பக்கம் சேர்ந்து கொண்டது. லெனின் தலைமையில் சோவியத் சபை நிறுவி தற்காலிக அரசாங்கத்தின் கீழ் கொண்டு வந்து அரசினை முடி துறக்கும்படி வற்புறுத்தினர். இதனால் எதுவும் செய்யமுடியாத நிலையில் மன்னன் பதவி துறந்தான். இதனைத் தொடர்ந்து லெனினும் ட்ரொஸ்கியும் இணைந்து தொழிலாளர் கிளர்ச்சிக்குத் தலைமை தாங்கி தொழிலாளர்களுக்குத் தலை மைத்துவம் வகித்தார்.

பின்னர் லெனின் பொதுமக்களின் ஆணையாளர் சபைக்கு அதிகாரம் கொடுத்து புரட்சியை முடிவுக்குக் கொண்டு வந்தார். இவ்வாறு ரஷ்யப் புரட்சியானது முடிவுற்றது. உலகிலே பல புரட்சிகள் தோன்றி மறைந் துள்ளன.அப் புரட்சிகளுக்கு எல்லாம் பல தலைவர்கள் தோன்றி ஆதரவு அளித்து மிகவும் கஷ்டப்பட்டு போராடி முடிவுக்குக் கொண்டுவந்தனர். அவற்றை யெல்லாம் நாம் வரலாற்றில் தற்போதும் கற்கின்றோம். இவ்வாறு ரஷ்யப் புரட்சியும் வரலாற்றில் தனக்கும் ஒரு இடத்தைத் தக்கவைத்துள்ளது.

# தோமஸ் கூன்

**எஸ். சிவரூபி**
க.பொ.த. (உ/த) 2013

- இவர் அமெரிக்க தேசத்தைச் சேர்ந்த மெய்யியலாளர்.

- நவீன விஞ்ஞானத்தின் வரலாற்றில் தனது கோட்பாடு பற்றிய கருத்தினைப் பயன்படுத்தினார்.

- இவர் வெளியிட்ட "விஞ்ஞானத்தின் புரட்சியின் கட்டமைப்பு" என்றும் தமது நூலில் விஞ்ஞானத்தின் போக்குப் பற்றிய தமது புதுக் கருத்தை முன்வைத்தார்.

- நவீன விஞ்ஞானத்தின் வரலாறு தொடர்பாக ஆய்வுகளை மேற்கொண்ட இவர், விஞ்ஞானத்தின் வரலாற்றை சாதாரண காலம், புரட்சிக்காலம் என வகைப் படுத்தினார்.

- சாதாரண காலத்தில் ஏதேனும் ஒரு அடிப்படை வாதத்தை ஆதாரமாகக் கொண்டு விஞ்ஞானம் கட்டியெழுப்பப்படுவதாக விளக்கிய இவர், இந்த அடிப்படை வாதம் அக் காலத்திற்குரிய விஞ்ஞானப் பிரச்சினைகள், விஞ்ஞான ஆய்வுமுறை, விஞ்ஞானக் கணோட்டம், விஞ்ஞான அறிவு என்பவற்றைத் தீர்மானிக்கிறது எனக் கூறினார்.

- சாதாரண காலத்தில்புதுமைபோன்ற கண்டுபிடிப்பு காணப்பட்டாலும், அவை புரட்சி ஆனவை அல்ல.
  உ-ம் : நீராவியந்திரம் கண்டுபிடிக் கப்பட்டது.

- சாதாரண காலத்தில் எழும் விஞ்ஞானப் பிரச்சினைகளை குறிப்பிட்ட அடிப்படை வாதத்தைக் கொண்டு தீர்க்கமுடியாத பட்சத்தில் விஞ்ஞானிகள் இடத்தே தீவிரமான விழிப்புணர்ச்சி ஏற்படுகின்றது.

- இதனால் குறிப்பிட்ட அடிப்படை வாதத்தை மாற்றவேண்டிய தேவை எழுகின்றது. அடிப்படை வாதத்தில் ஏற்படும் இம் மாற்றத்தையே கூன் 'விஞ்ஞானப் புரட்சி' என்கிறார்.

உ-ம் : கொப்பணிகஸின் விஞ்ஞானப் புரட்சி.

- இடையிடையே நிகழ்ந்துவரும் விஞ்ஞானப் புரட்சியினால் விஞ்ஞானத்திற்கென பொதுவான முறை ஒன்று இல்லாது உள்ளது எனவும் இதனால் விஞ்ஞானம் தொடர்ச்சியான முறையில் முன்னேறுவதாகவும் கூறமுடியாதுள்ளது என்க குறிப்பிடுகின்றார்.

# சைவ சமயத்தின் தொன்மையும் மேன்மையும்

**வி. லக்ஸ்சியா**
க.பொ.த. (உ/த) 2014

சைவசமயம் சிவசம்பந்தமுடையது. இது சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயம். இவ்வுண்மையைத் திருமூலர் தனது திருமந்திரத்தில்

**"சைவம் சிவனுடன் சம்பந்த மாகுதல்**
**சைவம் தனை அறிந்தே சிவம் சாருதல்**
**சைவம் சிவன் தன்னைச் சாராமல் நீங்குதல்**
**சைவம் சிவானந்தம் சாயுச்சியமே"**

எனத் திட்பநுட்பமாகக் கூறுகின்றார். சைவ சமயம் எப்போது தோன்றியது, எவரால் தோற்றுவிக்கப்பட்டது என்று கூறமுடியாத வரலாற்றுத் தொன்மை வாய்ந்தது.

சிவலிங்க வழிபாடு வரலாற்றுக் காலத்திற்கு முன்பே உலகலாவிய மட்டத்தில் பல நாடுகளில் இருந்தமைக்கான சான்றுகள் உண்டு. இன்றும் புலம்பெயர் நாடுகளில் சைவ சமயம் வளர்ச்சியடைந்து வருவதைக் காணலாம்.

இந்தியாவின் வட பகுதியில் நிலவும் சைவம் காஸ்மீர சைவம் எனவும் நடுப்பகுதியில் நிலவும் சைவம் வீர சைவம் எனவும் தென்நாட்டில் நிலவும் சைவம் சித்தாந்த சைவம் எனவும் அழைக்கப்படுகிறது. இவற்றுக்கிடையே சிறு வேறுபாடுகள் இருப்பினும் இவை சிவனையே முழுமுதற் கடவுளாகக் கொள்கின்றன.

சைவ சித்தாந்தத்தைத் தத்துவமாகக் கொண்டு விளங்குவது சித்தாந்த சைவம். இச்சைவம் இந்தியாவில் மட்டுமன்றி இலங்கையிலும், மலேசியா, சிங்கப்பூர், கனடா போன்ற பல நாடுகளிலும் நிலவுகிறது.

சைவத்தின் பிரமாண நூல்களாக வேதமும் ஆகமமும் விளங்குகின்றன. இவற்றுள் வேதம் பொது நூல் எனவும் ஆகமம் சிறப்பு நூல் எனவும் கூறப்படுகின்றது. ஆகமத்தில் சிவாகமம் மூலாகமங்கள் என அழைக்கப்படுகின்றது.

ஆகமத்தில் சைவசமய தத்துவங்கள், திருக்கோயில் அமைப்பு முறைகள், சிவாச்சாரியர் ஒழுக்கம், வழிபாட்டுச் செயல் முறைகள் போன்ற பல அரிய செயல்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

சைவசமயம் வேத காலத்துக்கு முற்பட்ட வரலாற்றுப் பெருமை கொண்டது. மொகஞ்சதாரோ, ஹரப்பா அகழ்வாராய்ச்சிகளிலிருந்து ஆரியர் வருகைக்கு முன்பே சைவ நாகரிகம் இருந்தது என்பதற்குச் சான்றுகள் கிடைத்துள்ளன. இந்த உண்மையை ஜி. யூ. போப் அவர்கள் தனது திருவாசக மொழிபெயர்ப்பில் "ஆரியர் வருகைக்கு முன்பே தென்னிந்தியாவில் நிலவிய வரலாற்றுக்கு முற்பட்ட சமயமே சைவம்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

காலத்துக்கு காலம் வெளியில் இருந்துவந்த ஆரியர்,மொகலாயர், ஐரோப்பியர் முதலான பிற மத இனத்தவர்களின் படையெடுப்புக் களால் சைவ சமயம் அவ்வப்போது சிதைக்கப்பட்டாலும் மீள எழுச்சி பெற்றதும் வரலாறாகும்.

கிறிஸ்துவுக்குப்பின் 3ம் நூற்றாண்டு முதல் 6ம் நூற்றாண்டு வரை தமிழ்நாட்டை ஆண்ட களப்பிரர் ஆட்சியில் தமிழில் உள்ள அறிவு நூல்கள் சிதைக்கப்பட்டன. தமிழர் நாகரிகம் சிதைவுற்றது. சமயமும், பௌத்தமும் சைவத்தை நலிவடையச் செய்தன.

இந்த நிலையிற்றான் திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் போன்ற அருளாளர்கள் தோன்றி தமிழும் சைவமும் தழைக்கப் பணி புரிந்தனர். ஊருராகச் சென்று திருக்கோயில்களில் திருப்பாடல்கள் பாடியும் தொண்டுகள் செய்தும் தமிழகத்தில் சைவ எழுச்சியை உண்டாக்கினர்.

இந்த அருளாளர்கள் இருபத் தெழுவர் பாடிய திருப்பாடல்கள் பன்னி ரண்டு திருமுறைகளாக வகுக்கப் பட்டன. சைவத் தமிழ்த் தோத்திர நூல்களாக இவை போற்றப்படுகின்றன. இவற்றை இன்றும் பாடி வருகின்றனர்.

பழந்தமிழ் நூல்களிலும் பன்னிரு திருமுறைகளிலும் வேதாகம நூல் களிலும் பரவிக்கிடக்கும் தத்துவக் கருத்துக்களை ஒழுங்குபடுத்திச் சைவ சித்தாந்த தத்துவ நூல்களாகப் பின்னர் வந்த ஞானிகள் தந்தனர். இவை மெய் கண்ட சாஸ்திரங்கள் என்ற பெயரிலே பதினான்கு நூல்களாகவுள்ளன. பன்னிரு திருமுறைகளும் பதினான்கு மெய் கண்ட சாஸ்திரங்களும் தமிழர் போற்றும் சைவத்தின் அடிப்படை நூல்களாக அமைந்துள்ளன.

இன்று உலகில் உள்ள சமயங்களில் தொன்மையும் மேன்மையும் மிக்க சமயமாகச் சைவ சமயம் கருதப்படுகிறது. குறைவற்ற நிறை பொருளைச் சைவம் என்றனர் நம் தமிழர். கோதிலா அமுதே; குறைவிலா நிறைவே; செம்பொருள் துணிவே என்றெல்லாம் போற்றித் துதிப்பர் சைவர். கடவுள் என்றும் இறையென்றும் தமிழில் கூறப்படும் சிவனை பிரம்மம் என்றும், பரப்பிரம்மம் என்றும் வடமொழியில் கூறுவர். சித்தாந்த தத்துவ உலகில் பதி என்று கூறப்படும்.

சிவம் என்ற சொல்லுக்கு மங்கலம் என்பது பொருள். பதி என்பதற்கு உயிர்களைக் காக்கும் தலைவன் என்பது பொருள். பசு, பதி என்பதும் இதே கருத்தாகும். சிவனைச் செம் பொருளாகக் கண்டு போற்றியவர்கள் தென்னடாட்டவர்கள் ஆகிய தமிழர் எனினும், அவன் என்னாட்டினர்க்கும் உரியவன் என்பதை மணிவாசகர்

**"தென்னாடுடைய சிவனே போற்றி**
**என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி"**

எனப் பாடிப் போற்றுகின்றார். ஆதியும் அந்தமுமில்லாத சிவபரம்

பொருளை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சைவமும் ஆதியும் அந்தமும் இல்லாதது என்பதனை

"ஆதியும் அந்தமும் இல்லா
அரும்பெரும் சோதி"
எனக் கூறினார்.

சைவ சமயத்தவர்களாகிய நாம் எமது இருப்புக் குலையாமல், புது வரவாக வரும் பிறமத அலைகளில் மயங்காமல் நாம் தமிழர், நாம் சைவர் என்ற உறுதியுடன் வாழ்வோம். சைவத்தைப் பேணுவோம், வாழ்வில் உயர்வோம்.

"சிவ சிவ என்கிலர் தீவினையாளர்
சிவ சிவ என்றிடத் தீவனை மாளும்
சிவ சிவ என்றிடத் தேவருமாவார்
சிவசிவ என்றிடச் சிவகதிதானே"

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக
உலகமெல்லாம்"

# பாடத் தெரிவில் மாணவர்களின் பங்களிப்பு

**க. கலையரசி**
க.பொ.த. (உ/த) 2015

அரிது அரிது மானிடராதல் அரிது. அதனிலும் அரிது கூன், குருடு, செவிடு நீங்கிப் பிறத்தல் அரிது என்ற ஔவை யாரின் வாக்குக்கு இணங்க நாம் இந்த இருபத்தோராம் நூற்றாண்டில் பல கற்கை நெறிகளுக்கு முகம் கொடுத்து, அதில் எமக்கு விரும்பிய துறைகளில் கல்வி கற்று எமது வாழ்க்கையில் ஏதோ ஒரு வகையில் முன்னேறிக்கொண்டு இருக் கின்றோம். அதற்கு அடித்தளமாக விளங் குவது எமது பாடத் தெரிவிலே தங்கி யுள்ளது என்று சொல்வது சாலப் பொருத்தமான ஒன்றாகக் காணப்படு கின்றது.

அந்த வகையில் இன்றைய மாண வர்கள் நாளைய தலைவர்கள் என்று கூறும் வகையில் அவர்கள் எவ்வாறான முறையில் சமூகத்தில் சென்று கொண்டு இருக்கின்றார்கள் என்பதை நோக்கு வோம். ஒரு மாணவன் சிறுவயதில் இருந்து கல்வி கற்றுக் கொண்டு வருகின்றான். ஆனால் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சில மாணவர்கள் தான் சித்தி அடைகின்றார்களா? இவ்வாறான நிலைமை ஏற்படுவதற்கு என்ன காரண மாக இருக்கும் என நான் யோசித்த பொழுது எனது மனதுக்குள் ஒன்று தோன்றியது.

சாதாரண தரம் படிக்கத் தொடங்கும் காலத்தில் அவர்கள், தமக்கு விருப்ப மான பாடங்களைத் தெரிவு செய்வார்கள். ஆனால் அந்த பாடங்களின் ஊடான எதிர்காலம் பற்றி அறியாத பருவமது. இருந்தாலும் அவர்கள் உயர்தரம் போகும்போது சரியான முடிவு எடுக்க வேண்டும். இந்தக் காலகட்டத்தில் அவர்கள் வாழ்க்கை என்ற புதிய பாதையைக் காணுவதற்கான ஏணியாக சரியான கல்வி விளக்கைத் தேர்ந் தெடுக்க வேண்டும். ஆனால் எந்தக் கல்வி விளக்கை எடுப்பது என்று தெரி யாமல் அவர்கள் தடுமாறுகின்றார்கள்.

அவர்களே சரியான அந்தக் கல்வி விளக்கைத் தெரிவு செய்யும்போது நன்மையும் இருக்கின்றது தீமையும் இருக்கின்றது என்று சொல்வது மிகப் பொருத்தமானது. ஆனால் அங்குதான் ஒரு பிரச்சினை ஒன்று எழும்புகின்றது. ஒவ்வொரு பெற்றோருக்கும் தமது பிள்ளைகள் என்ன தொழில் செய்வோ ராக வரவேண்டும் என்ற கனவு இருக்கும். அது போலவும் ஒவ்வொரு பிள்ளைக்கும் தாம் என்ன தொழில் செய்பவராக வரவேண்டும் என்ற எதிர்பார்ப்பு ஒன்று இருக்கும்.

இவ்விரு தரப்பினரதும் கனவுகள் ஒத்துப்போகும் போது அங்கு எந்த விதப் பிரச்சினையும் வராமல் இருக்கும். ஆனால் சில வேளைகளில் அங்கு பெற்றோர்களின் கனவுகளை

நிஜமாக்கச் செல்லும் மாணவர்களுக்கு அந்த உயர் கல்வி பாடத் தெரிவானது மணல் பரந்த வீதியாக இருக்கின்றது. ஆனால் சில வேளைகளில் தன் பெற்றோருக்காக, அவர்கள் உயர் நிலையில் இல்லாவிட்டாலும் நாங்களாவது அந்தநிலைக்கு வரவேண்டுமென எண்ணி அவர்கள் கொடுத்த பாடத் தெரிவின் மூலம்செல்லும்மாணவர்களின் நிலையானது உயர்ந்த நிலைக்கும் சென்று கொண்டிருக்கின்றது. சில மாணவர்கள் இலட்சியத்தின் பாதையிலே பாடத் தெரிவினைக் கொண்டு செல்கின்றார்கள். அந்த மாணவர்கள் தாங்கள் இந்தப் பாடத்தின் ஊடாகச் சென்ற தாம் கண்ட கனவை எட்டிப் பிடிக்க வேண்டும் என்று சென்று கொண்டிருக்கிறார்கள். அவ்வாறு செல்லும் மாணவர்கள் சமுதாயத்தில் உயர்ந்தவர்களாகவே காணப்படுகின்றார்கள் என்று சொல்வது மிகப் பொருத்தமானது.

இன்றைய காலகட்டத்தில் உயர்தர பாடத் தெரிவானது எம்மை உயர்வழிக்கு இட்டுச் செல்லுமாறு தெரிவினை அமைப்பது மிக மிக அவசியம். அந்த வகையிலே புதிதாக அறிமுகப்படுத்தப்படும் பாடங்களை நாம் தெரிவு செய்ய வேண்டும். தொழில் நுட்பம் சம்பந்தமான பாடத் தெரிவு எமது வாழ்வின் உயர்வுக்கு வழிவகுக்குமா? நாம் இலகுவாக வேலையினைப் பெற்றுக் கொள்ள துணைபுரியுமா? என்பதனை கல்வியியலாளர்களிடம் அறிந்து கொள்ள வேண்டும். எமக்கு எக் கலையில் ஆர்வமுள்ளதோ அக்கலையில் நம்மைச் செலுத்த வேண்டும். எமது தொகுதித் தெரிவு எம்மை பல்லைக்கழகம் வரை கொண்டு நிறுத்துமாறு அமைய வேண்டும்.

**எம்மை எந்த ஒரு நிறுவனமும் போட்டி போட்டு வாங்கக்கூடிய வகையில் எமது பாடத்தெரிவு அமைந்திருப்பது கவனத்திற்குரியது.** எனவே எமது எதிர்காலத்தை பாடத்தினைத் தெரிவு செய்வோம். ஏனோ தானோ என்று தெரிவு மேற்கொள்வது எம்மைப் படுகுழியில் தள்ளிவிடும்.

அந்த வகையில் கல்வி என்ற சமுத்திரத்தில் மாணவர்களின் நிறைவான பாடத்தெரிவே அவர்களின் எதிர்காலத்தின் ஏணியாகவும் புன்னகை விளக்காவும் இருக்கின்றது என்று சொல்வது சாலப் பொருத்தமானது.

**“தன்னம்பிக்கை இழக்கின்ற அக்கணமே ஒருவன் அழிகின்றான்,** ஆதலால் தன்னம்பிக்கையினை முதலாகக் கொண்டு பாடத்தினைத் தெரிந்து பட்டப்படிப்பினைத் தொடர்வோமாக”

# முயற்சி கொண்டு உன்னை உயர்த்திடு

**வே. கஜேந்தினி**
க.பொ.த. (உ/த) 2015

இன்று மாணவர் சமுதாயம் புத்தகம் படிப்பதுதான் கல்வி என்று எண்ணுவது சரியன்று. இன்று மாணவர்கள் சாதிக்க எத்தனையோ வழிகள் இருக்கின்றன. மேல்நாடுகளில் சிறுவர்கள், மாண வர்கள் எத்தனையோ சாதனைகளைச் செய்கிறார்கள். அவர்களும் உங்களைப் போன்றோரே! எந்த நேரமும் படிப்பு படிப்பு என்று இருப்பதால் மட்டும்தான் உங்கள் அறிவு வளர்கிறதா? ஒரு நாளும் இல்லை. வாசிப்பதால் மாணவர்கள் உயர்வடைவார்கள். அதனால்தான் மனிதன் பூரணமடைகிறான் என்று கூறு கிறார்கள்.

உங்களால் எழுதப்பட்ட ஆக்கமோ செய்யப்பட்ட பொருளோ அதனை மற்றவர்களுக்கு காட்டுங்கள். உங்க ளுக்கு அறிவும் ஆற்றலும் இருக்கும் போது சாதிப்பதற்கு ஏன் சிபாரிசு? முயற்சியும் தன்னம்பிக்கையும் இருக் கும்போது சாதிப்பதற்கு ஏன் தடை? நீங்கள் முயற்சி எடுத்து முன்வரும் போது தடை சொல்ல யாராலும் முடியாது. என்னால் சாதிக்க முடியும், நான் கவிதை எழுதுவேன், புதிய பொருட்களைச் செய்ய முயற்சிப்பேன் என்று உங்கள் மீது நீங்கள் முதலில் நம்பிக்கை வையுங்கள். யாருக்கும் தானாகவே எதுவும் வருவதில்லை. முயற்சி செய்தால் முடியும். ஒரு கவிதையை வாசியுங்கள், இதுபோல் ஏன் என்னால் எழுது முடியாது என்று சிந்தியுங்கள். பிழைகள் வரும்போது அதனைத் திருத்தி எழுத என்னால் முடியும் என்று சிந்தியுங்கள். அதே போல் வேறு ஒரு கவிதை எழுத முயற்சியுங்கள். இவ்வாறு பல கட்டுரை, கவிதை, சிறுகதை என்பவற்றை எழுத முடியும் என மனதில் நம்பிக்கை கொள்ளுங்கள். முயற்சி கொண்டு முயற்சித்து முன்னேறுங்கள்.

*"முயற்சி திருவினையாக்கும்"*

# மகளிர் இல்லப் பிள்ளைகளின் பாவனைக்கான வாகனங்கள்












# ஆகமமும் அதன் முக்கியத்துவமும்

**ச. விமலா**
க.பொ.த. (உ/த) கலைப்பிரிவு (2015)

வேதமும் ஆகமமும் இறைவன் உண்மையை எடுத்துரைக்கும் நூல்களாகும். சிவபெருமான் ஆன்மாக்களின் பொருட்டு ஆகமத்தை அருளிச் செய்தார்.

"மன்று மாமலை மகேந்திர மணிதனிற் சொன்ன ஆகமம் தோற்றுவித்தருளியும்" எனும் மணிவாசகர் அருளிச் செய்தார். வேதம் பொதுநூல் என்றும் ஆகமம் சிறப்பு நூல் என்றும் கொள்ளப்படுகின்றது. சைவ ஆகமம் சிவாகமம் எனவும், வைஷ்ணவ ஆகமம் பஞ்ராத்திரம், வைகானம் எனவும் சாக்த ஆகமம் தந்திரம் எனவும் கௌமார ஆகமம் குமார தந்திரம் எனவும் பெயர் பெறும். ஆகமம் என்பது சைவ ஆகமங்களையே கருதுகின்றன. சைவ சமயத்திற்கு காமிகம் முதல் வாதுளம் ஈறாக இருபத்தெட்டு ஆகமங்கள் உள்ளன. உபாகமங்கள் 207, அவை நாரசிங்கம் முதல் விசிவான்மகம் வரையாகும். தமிழ் ஆகமம் திருமந்திரம் ஆகும்.

## ஆகமம் என்பதன் பொருள்

தொன்று தொட்டுவரும் அறிவு என்பார்கள். அத்துடன் ஆகமம் என்ற சொல் ஆ-பாசம். க-பசு, ம-பதி எனப் பொருள் கொள்வதாகையால் முப்பொருள் உண்மையை உணர்தல் என்றும் இன்னோர் விதத்தில் கூறும் போது ஆ-சிவஞானம், க.மோட்சம், ம-மலநசம் எனக் கூறப்பட்ட விதத்தில் பொருள் கொள்ளும்போது ஆன்மாக்களுக்கு மலத்தை நாசம் பண்ணி சிவஞானத்தை உயிர்ப்பித்து மோட்சத்தைக் கொடுத்தல் என்றும் வேறு விதமாகக் கூறும்போது "ஆ" என்பது அன்பைக் கூட்டும் உபசார்க்கம் என்றும் "கம்" என்பது போதலை உணர்த்தும் வினையடியாக அதாவது போய்ச் சேர்தல் அல்லது வந்தடைதல். எனவே ஆகமம் என்பது தொன்று தொட்டு வரும் அறிவு.

ஆகமமாகி நின்றண்ணிப்பான் தாள் வாழ்க.
(மணிவாசகர் கூற்று)

## ஆகமம் பரம்பல் அடைந்த முறை

சைவ மரபிலே ஆகமங்களை சிவபெருமான் உமாதேவியாருக்கு சொல்லியருளினார் என்றும், பின்னர் அவை சதாசிவமூர்த்தியின் ஐந்து திருமுகங்களின்றும் தோன்றிச் சுத்த வித்தியாத்துவத்திலிருந்து சதாசிவனால் அநந்தருக்கும், அவரால் ஸ்ரீகண்டருக்கும், அவரால் தேவர் களுக்கும், அவர்களால் முனிவர்களுக்கும், அவர்களால் மானுடருக்கும், மானுட ரால் மானுடருக்குமான உபதேச கிரமத்தில் உலகில் பரவலாகியது.

## ஆகமம் கூறும் சமயம்

தனித்தனிச் சமயங்களின் கொள்கை விளக்கங்களையும் வழிபாட்டு முறை களையும் கூறும் நூல்களே ஆகமங்கள் எனப்படும். நம் ஒவ்வொருவரும் நல் ஒழுக்கத்தின் பொருட்டு ஆன்மா ஈடேற் றத்தின் பொருட்டு நாள் தோறும் செய்ய வேண்டிய கடமைகளையும் அனுசரிக்க வேண்டிய ஒழுக்கங்களையும், விதி முறைகளையும் கூறுகின்றது.

## கோயில் அமைப்பு

பசுவின் உடலில் உள்ள பாலை அதன் மடியில் இருந்து மட்டுமே பெறுதல் முடியும். அதுபோல் உலகெங்கும் வியாபித்திருக்கும் இறைவனை வழிபட்டு அவனருள் பெற ஆலயங்கள் அவசிய மாகின்றன என ஆகமம் கூறுகின்றது. ஆலயங்கள் அமைப்பதற்குரிய இடம், நிலத்தின் இயல்பு, கோயிலை எவ்வாறு அமைத்தல் வேண்டும்? என்ன நிலையில் என்ன கோயில் அமைத்தல் வேண்டும் எனக் கூறுகின்றது. அதாவது கிழக்கில் சூரியன், தெற்கில் சண்முகன், தென் மேற்கில் ஐயனார், மேற்கில் விஷ்ணு, வடமேற்கில் துர்க்கை, வடக்கில் சப்தமாதர், வடகிழக்கில் சிவன் என்ப பகுத்துக் கூறுவதைக் காணலாம்.

## திருவுருவங்களை அமைக்கும் முறை

இவ் ஆலயங்களில் திருவுருங்களை எவ்வாறு அமைக்க வேண்டும், திரு வுருங்களை உருவாக்கும் கற்களைத் தேர்ந்தெடுக்கும் முறை பற்றியும் விரி வாகக் கூறுகின்றது. அதாவது கருங் கல்லைத் தட்டியவுடன் அதிலிருந்து உண்டாகும் சத்தத்தைக் கொண்டு அக்கல்லை அறியலாம். மணி ஓசை போன்ற ஒலியை உடையது ஆண் கல் என்றும, தாளத்தின் ஒலியைத் தருவது பெண் கல் என்றும் நாதமற்றது அலிக்கல் என்றும் கூறப்பட்ட நிலையில் திரு வுருவங்களை அமைக்கும்போது கவனிக்க வேண்டிய அங்குலப் பிரமாணங்கள் பற்றியும் கூறுவதிலிருந்து இவை விஞ்ஞான கணித நுட்பம் நிறைந்தவையாக விளங்கு கின்றது.

## திருவுருங்களை பிரதிஷ்டை செய்யும் முறை

திருக்கோயிலில் திருவுருவங்களைப் பிரதிஷ்டை பண்ணும் முறைகளையும் ஆகமங்கள் விரித்துரைக்கின்றன. ஆலயம் இல்லாதஇடத்தில் புதிதாக ஆலயம் அமைத்து அங்கு புதிதாக ஒரு மூர்த்தியைப் பிரதிஷ்டை செய்வது அநாவர்த்தனம் என்றும் முன்பிருந்த ஆலயம் முற்றாய் அழிந்துவிட்டால் அவ்விடத்தில் மறுபடி ஓர் ஆலயத்தை அமைத்து செய்வது ஆவர்த்தம் என்றும், பூசை வழிபாடுகள் நிகழும் கோயிலில் திருத்த வேலைகளுக்காக பாலஸ் தாபனம் செய்து திருத்தவேலைகள் முடிந்தபின் மறுபடி மூர்த்தியைப் பிர திஷ்டை செய்வது புனராவர்த்தனம் என்றும் ஆலயத்தினுள் மரணம் நிகழ்தல் கள்வர் முதலிய ஆசாரக் குறைவுடை யோர் நுழைதல் போன்ற காரணங்களால் நிகழும் பிரதிஷ்டை அந்தரிதம் என்றும் விளக்கிக் கூறுவதுடன் திருவுருவங் களைப் பூசிக்கும் முறை பற்றியும் விளக்கிக் கூறுகின்றது. கோபுரங்கள்,

விமானம் அமைக்கும் முறை, வாகனங்களை அமைக்கும் முறை, தேர் அமைக்கும் முறை, அர்ச்சகர் ஒழுக்கம், அடியார் நடைமுறை, ஆலயத்தை எவ்வாறு தரிசிக்க வேண்டும் என்பன பற்றியும் விரிவாகக் கூறுகின்றன.

## ஆகமம் கூறும்கிரியை முறை

பலவிதமான கிரியைகளைப் பற்றிக் கூறுகின்றது. அனுஞ்ஞை, வாஸ்து சாந்தி, மிருஞ்சங்கிரணம், அங்குரார்ப்பணம், ரட்சாபந்தனம் முதலியன பற்றியும் கும்பங்கள் வைக்கும் முறைகள் அவற்றின் எண்ணிக்கை பற்றியும் பூசை ஆராதனைகள், அர்ச்சனைகள், அபிஷேகங்கள், அபிஷேகங்களின் சிறப்பியல்புகள், அவற்றைச் செய்யும் முறைகள் பற்றியும் சிவன் அபிஷேகப்பிரியன் என்பதால் பலவித அபிஷேகங்களின் சிறப்புப் பற்றியும் கூறுகின்றது. இதைவிட பரார்த்த கிரியை, ஆன்மார்த்த கிரிகை முறை பற்றியும், பரார்த்த கிரிகையி ஆதி சைவர்கள் மட்டும் உரித்துடையவர்கள் என்றும் ஏனையவர்கள் ஆன்மார்த்த கிரியைக்கு உரித்துடையவர்கள் என்றும் கூறுகின்றன.

## தீட்சை

தீட்சை மந்திரம், கிரியை பாவனை முறை பற்றியும், தீட்சை வகைகள் பற்றியும் அதாவது சமய தீட்சை, விசேட தீட்சை, நிர்வாண தீட்சை முதலியன பற்றியும் ஐந்தெழுத்து, ஆறெழுத்து மந்திரம், முத்தியடையும் நான்கு மார்க்கங்களான சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன பற்றியும், தந்திரம், மந்திர முதலியனவற்றுடன் குரு, லிங்க, சங்கமம் போன்ற உபாசனை முறை பற்றியும் எடுத்துரைக்கின்றது.

## மரம், சொடி, கொடி

உலகின் கண்பால் உள்ள மரம், செடிகள், கொடிகளின் தன்மை பற்றியும் பட்டைகள், மா, பலா, ஆல், அரசு, அத்தி, இலை, பூ, காய், கனி என்பன இன்ன தன்மை உடையன என்றும் அதன் பயன்கள் பற்றியும் கூறப்படுவதில் இருந்து தாவரவியல் சார்ந்த கருத்துக்களைக் கூட ஆகமங்கள் விளக்கிக் காட்டுகின்றது என்பதை அறியமுடிகின்றது.

ஆகமங்கள் மூர்த்தி, தலம், தீர்த்தம் முதலியன பற்றியும், சிவதீர்த்தத்தில் நீராடினால் பாவங்கள் நீங்கும் என்றும் திருநீறு அணிதல், அத்திருநீற்றைத் தயாரிக்கின்ற முறைகள், சிவசின்னங்கள், பிரசாதங்கள் என்பவற்றுடன் உருத்திரட்சமாலை, அதை உருவாக்கும் முறை, அதை அணியும் முறைகள் என்பனவற்றுடன் நாள் விழாக்கள், வார விழாக்கள், மாத விழாக்கள், கார்த்திகை விளக்கு, தீபாவளி, சிவராத்திரி, சித்திரை வருடப்பிறப்பு, பங்குனி, ஆனி, ஆடி, பூரட்டாதி மாத பூசைகள், மகோற்சவங்கள், மகோற்சவம் குறிக்கும் ஐந்தொழில்கள், நித்திய, நைமித்திய, காமிய பூசை முறைகள் பற்றியும் கூறுகின்றது. இத்தகைய சிவாகமம் இரு பிரிவுகளைக் கொண்டதாகும். “சிரௌதம்” மற்றும் “அச்ரௌதம்”, இதை நூல் பதாதிகள் என்றும் அழைக்கப்பட்ட நிலையில் விபூதிகண்டர்,

நீல கண்டர், ஸ்ரீகண்டர், ஈசானசம்பு, பிரம்புசம்பு, சோமசம்பு, ஞானசம்பு, ராமகண்டர், நாராயணகண்டர், வித்தியா கண்டர், அகோரசிவன் முதலிய சிவாச் சாரிகளால் வகுக்கப்பட்டு அவர்களுடைய பெயருடன் உருவாக்கப்பட்டனவாகும். ஆகம ஞானப்பொருளை விளக்கும் சிவஞானபோதம், சிவஞான சித்தியார் ஆகிய நூல்கள் முறையே மெய்கண்ட தேவராலும், அருணந்தி சிவாசாரிய ராலும் தோற்றுவிக்கப்பட்ட நிலையில் இவற்றிற்கு மேலாக ஆகமம் பற்றிக் கூறுமிடத்து காஞ்சி கைலாய நாதர் கோயிலைக் கட்டுவித்த இராசசிம்மன் அக் கோயிற் கல்வெட்டில் ஆகமங் களின் பெயரைப் பொறித்ததோடு தன்னையும் ஸ்ரீ ஆகமப்பிரியன் என்று குறிப்பிட்டுள்ளான். இந்த வகையில் ஆகமத்தின் முக்கியத்துவம் அமைந் துள்ளதைக் காணலாம்.

# மாவீரன் நெப்போலியன் பொனபார்ட்

**பிரசா விஜயகுமார்**
க.பொ.த. (உ/த) 2014, கலைப்பிரிவு.

உலகில் தோன்றிய மாவீரர்களுள் ஒருவனே நெப்போலியன் ஆவான். இம் மாவீரன் ஐரோப்பாக் கண்டத்திலே காணப்படும் தீவுகளில் ஒன்றான கோர்சிகா தீவில் அயோசியா எனும் இடத்தில் பிறந்தான். இவனது பிறப்பிற்கு முன்னர் 1762ஆம் ஆண்டு ரூஸோ என்ற தத்துவஞானி கோர்சிகா தீவு பற்றிக் கூறுகையில் "என்றோ ஒருநாள் இச் சிறு தீவும் ஐரோப்பாவை வியப்பில் ஆழ்த்த உள்ளது" என்று கூறியுள்ளார்.

அவரது கூற்றினை உண்மையென நிரூபிக்கும் நோக்குடன் 1769ஆம் ஆண்டு லெட்டீசியா சாமோலினாவிற்கும், சார்ளஸ் பொனபாட்டுக்கும் மகனாகப் பிறந்தான். இவன் பிரான்சின் இராணுவப் பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்து இராணுவப் பயிற்சியைப் பெற்றுக் கொண்டதனால் தனது 16ஆவது வயதில் 1785ஆம் ஆண்டு பிரான்சின் பீரங்கிப் படைத்தளபதியாக பதவியேற்றுக் கொண்டான். பின்னர் 1793ஆம் ஆண்டு டுலான் நகரை முற்றுகையிட்டு அங்கிருந்த ஆங்கிலேயரை வெளியேற்றியதனால் பிரிகேடியர் ஜெனரலாகப் பதவியேற்றுக் கொண்டான். இவ்வாறு பிரான்சின் அரச நிர்வாகத்தில் பல பதவிகளை வகித்த இவன், பிரான்சினை விஸ்தரிப்பதையே தனது குறிக்கோளாகக் கொண்டிருந்தான்.

1799ம் ஆண்டு பிரான்சிலே கொன்சல் ஆட்சியைக் கொண்டுவந்த இவன், படிப்படியாக 1802இல் பிரான்சின் பேரரசனாக முடிசூடிக் கொண்டான்.

இவன் பிரான்சின் பேரரசனாக முடிசூடிக் கொண்டதும் நிதி, நீதி, சமய, அரசியல், பொருளாரம், கல்வி போன்ற பல்வேறு துறைகளிலும் பல சீர்திருத்தங்களை ஏற்படுத்தினான். இவனது நிதி சீர்திருத்தத்திலே ஒன்றாகக் காணப்படுவது வங்கி முறை அறிமுகம் ஆகும். 1800ஆம் ஆண்டளவில் பிரான்சிலே மதிப்பிழந்து இருந்து காசோலைகளை நிரறப்படுத்தி பிரான்ஸ் வங்கி என்ற வங்கியை நிறுவி அதில் சேமிக்கும் முறையைக் கையாண்டான்.

இவனது நீதி சீர்திருத்தத்தால் பிரான்சிய நாடு முழுவதும் ஒரேவிதமான சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. உரோம நாகரிக காலத்தில் ஆட்சி செய்த ஜஸ்ரீனியன் மன்னனால் வெளியிடப்பட்ட சட்டத்தொகுப்பைத் தழுவி இவனாலும் ஓர் சட்டத்தொகுப்பு வெளியிடப்பட்டது. இதனால் இவன் நவீன ஜஸ்ரீனியன் என அழைக்கப்பட்டான். அத்துடன் இவன் காலத்தில் குடியியல் நீதிமன்றம், குற்றவியல் நீதிமன்றம், சிவில் நீதிமன்றம், வணிகவியல் நீதிமன்றம் போன்ற நீதிமன்றங்கள் உருவாக்கப்பட்டது.

இவன் காலத்தில் கத்தோலிகக் சமயமே அரசமதமாகக் காணப்பட்டது. இவன் 1801ஆம் ஆண்டு 7ம் பஜஸ் என்ற

பாப்பரசருடன் கண்காட் உடன்படிக்கை செய்து கொண்டதுடன், திருச்சபையிடம் இருந்த அனைத்து சமய, கல்வி நட வடிக்கைகளையும் அரசாங்கத்தின் கீழ் கொண்டுவந்தான். இதனால் திருச் சபையானது அரசாங்கத்தின் கீழ் கட்டுப்பட்டதாகக் காணப்பட்டது.

இவன் காலத்தில் தேசியக் கல்வி யானது வளர்ச்சியடைந்து காணப் பட்டது. பிரான்சில் இருந்த ஆரம்பப் பள்ளி, இலக்கணப்பள்ளி, தொழில்நுட்பப் பள்ளி, இராணுவப்பள்ளி போன்றவற்றை யும் தனியார்கல்வி நிலையங்களையும் அரசு பொறுப்பேற்றுக் கொண்டது. பிரதான நகரங்களில் "லைசிஸ்" என்ற உயர் பாடசாலைகள் அமைக்கப்பட்டது. இங்கே வரலாறு, அரசியல் போன்ற பாடங்களுக்கு முக்கியத்தவம் குறைக்கப் பட்டு கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்கள் முக்கியத்துவமடைந்தன.

இவன் காலத்தில் வர்த்தகம், தொழில் வாணிபம் என்பன சிறப்புப்பெற்றுக் காணப்பட்டது. வர்த்தக விருத்திக்காக டுலான், செர்பக் முதலான துறை முகங்கள் விருத்தியாக்கப்பட்டதுடன் 200 அலை இராணுவப்பாதையானது விஸ் தரிக்க்பபட்டதுடன், பரிஸ், மிலான், நேப்பிளஸ் முதலானமுக்கிய நகரங்கள் பெருந்தெருக்களால் இணைக்கப்பட்டது. பீட்றூட்டில் இருந்து சீனி தயாரிக்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இவர் களது பிரதான உற்பத்திப் பொருளாக சோளன் உற்பத்தியே காணப்பட்டது.

நெப்போலியன் பிரான்சை விஸ்த ரிக்கும் நோக்குடன் இத்தாலி முதல் ஆஸ்திரியா, எகிப்து, போலந்து, ஸ்பானியா, ஜேர்மனி போன்ற நாடுகளுடன் போர் தொடுத்தனர். இங்கிலாந்துடனும் போரில் ஈடுபட்ட இவனால் இங்கிலாந்தை வெற்றி கொள்ள முடியவில்லை. இதனால் இவன் "கண்டத்திட்டக் கொள்கை" எனும் முறையை அறிமுகப்படுத்தினான். இங்கி லாந்தானது தனது கடற்படைப் பலத் தினால் பல்வேறு நாடுகளுடன் வர்த்தக உறவில் ஈடுபட்டுக்கொண்டதால் கண்டத் திட்டக்கொள்கையானது வீழ்ச்சி கண்டது.

1814ம் ஆண்டு வாட்டலூ எனும் இடத்தில் இடம்பெற்ற போராட்டத்தில் வெலிங்டன் பிரபுவினால் தோற்கடிக்கப் பட்ட இவன், எல்பா என்ற தீவில் சிறை வைக்கப்பட்டான். ஆயினும் தப்பிச் சென்ற இவன் பிரான்சை ஆட்சிசெய்த 18ஆம் லூயி மன்னனைக் கலைத்துவிட்டு ஆட்சிப்பீடம் ஏறினான். 1815ஆம் ஆண்டு மீண்டும் இடம்பெற்ற வாட்டலூ யுத்தத்தில் வெலிங்டன் பிரபுவால் தோற்கடிக்கப்பட்ட இவன் செங்கொலினா என்ற தீவிலே சிறைவைக்கப்பட்டான். ஆயினும் 1821ம் ஆண்டு திடீரென இவனுக்கு ஏற்பட்ட மாரடைப்பால் திடீர் மரணத்தை மாவீரன் நெப்போலியன் தழுவிக்கொண்டான்.

மாவீரன் நெப்போலியன் தனது இலக்கை நோக்கிப் பயணிக்கும்போது ஏற்படும் தடைகளைத் தாண்டி தனது இலக்கினை நோக்கிச் செல்லும் இயல்புடையவன். அதுபோல் நாமும் எமது தடைகளைத் தாண்டி இலக்கை நோக்கிப் பயணிப்போமாக!

# இடம்பெயரும் கண்டங்கள்

**V. சிந்துஜா**
க.பொ.த. (உ/த) 2014

புவி என்பது மிகப் பிரமாண்டமான காந்தம். பிரான்சில் பி. புருண்ஹெஸ் மற்றும ஜப்பானில் எம். மத்யுயாமா ஆகியோர் இத்துறையில் நீண்ட ஆராய்ச்சிகள் நடத்தினர். 1906ஆம் ஆண்டு புருண் ஹெஸ் கண்டுபிடிப் பின்படி பிரான்சில் சில பாறைகள் தோன்றியபோது புவி காந்தப் புலத்தின் திசை நேர்மாறாகத் திரும்பிய தாம். அவ்வாறே மத்யுயாமா ஆய்வில் சில பாறைகள் புவி காந்தத் திசை யிலேயே காந்தமாவதும் கண்டறியப்பட்ட தாம். அதனைத் தொல்காந்தவியம் (Palaeomagnetisim) என்று அழைக்கின் றோம். அதிலும் புவி காந்தப்புலம் நம் பூமியின் ஆரத்தைப்போல் 10 மடங்கு தொலைவு வரை வியாபித்து உள்ளது. ஏறத்தாழ 64,000 கிலோ மீற்றர்கள்.

உலகின் திணைப்படம் வரையப்பட்ட போது அதன் முழுத்தோற்றமும் அல்ப்ரெட் உவெக்னர் எனும் ஜேர்மன் புவியியல் அறிஞருக்கு வித்தியாசமான சிந்தனையைத் தூண்டிற்று. இவை ஏன் முன்னொரு காலத்தில் ஒரே நிலப் பரப்பாக இருந்திருக்கக்கூடாது. அந்தக் கண்டங்களைச் சேர்த்து ஒட்டிப் பார்த்தால் அப்படித்தான் தோன்றும். உண்மையில் இத்தகைய கருத்தோட்டம் 1910ஆம் ஆண்டு உவெக்னர் மனதில் உதித்தது. ஆனால் முதலாம் உலகப் போரின் போது புவியியல் தொல்லாய் வியல் தொடர்பாக கிறீன்லாந்து சென்று விட்டபடியால் தமது ஆய்வுத்திட்டத்தை அவரால் தொடர இயலவில்லை. போரில் அவரும் காயமடைந்தார்.

இறுதியில் 1915ஆம் ஆண்டு தம் ஆய்வு முடிவுகளை டீ என்ஸ்தேஹங் டெர்கான் ஷனென்டே அண்ட் ஒசியானி. 40 கோடி ஆண்டுகளுக்கு முன்னதாக பூமியில் இந்த ஒரே மாபெரும் கண்டம் பஞ்சியா, அதன் வடபகுதியில் இன்றைய ஐரோப்பா, ஆசியா, வட அமெரிக்கா, கிறீன்லாந்து ஆகிய கண்டங்கள் அடங்கிய லொறேசியா நிலப்பகுதியும் தென்பகுதியில் தென்னமெரிக்கா, ஆபிரிக்கா, மடகஸ்கார், இந்தியா, அவுஸ் ரேலியா, அண்டாட்டிக்கா ஆகிய கண்டங்கள் அடங்கிய கொண்டுவானா பரப்பும் இடம்பெற்றது.

கொண்டுவானா நிலத்துண்டத்தில் ஏறத்தாழ 12 கோடி ஆண்டுக்கு முன்னர் அண்டாட்டிக்காவிலிருந்து பிரிந்த இந் தியத் துணைக்கண்டம் வடக்கு நோக்கி மிதந்து கொண்டிருந்தது. அன்றைக்கும் மடகஸ்கார் தீவு இந்தியாவுடன் ஒட்டிய வாறு நகர்ந்தது. அதே கால கட்டத்தில் இந்தியத் துணைக்கண்டம் ஆண்டுக்கு வெறும் 2.4cm அதாவது ஒரு அங்குல அளவு வீதம் வடக்கு நோக்கிப் பயணித்தது.

இந்தக் கண்டங்கள் நகர்ச்சியில் ஆங்காங்கே முட்டி போதுகிற இடங்

களில் மடிப்பு மலைகள் உயர்ந்து எழும்பும். உலகில் இமயமலை உட்பட யூரல், அல்ப்ஸ், பொஹிமியா, பைரினீஸ், வாஸ்கம், ஹார்ஸ் மடிப்பு மலைகள் இவ்வாறு உயர்ந்தவையே. இதன் காரணமாகக் கடல் நடுவிலும் கண்டங்கள் தோன்றலாம். மலைகள் உயரலாம். இந்திய - இலங்கை நிலப்பரப்பின் இடையே 3 கிலோ மீற்றர் அகலத்திரட்டுப்பாதை போலவும் அமையலாம்.

மிதக்கும் பூமிப் பொருக்குத் துண்டு களில் யுரேசியத் தகடு, வட அமெரிக்கத் தகடு, தென்னமெரிக்கத்தகடு, ஆபி ரிக்கத் தகடு, அண்டாட்டிக்தகடு, பசுபிக் தகடு அவற்றுடன் இந்தியாவும் அவுஸ் ரேலியாவும் அடங்கிய அவுஸ்ரேலியத் தகடு வரலாற்றில் 1556 பெப்ரவரி 2 அன்று சீனாவில் ஷென்சி, ஷான்சி மற்றும் ஷோனன் ஆகிய பிராந்தியங் களில் நிகழ்ந்த நிலநடுக்கத்தில் 8,30,000 பேர் பலியாகினர். இதுதான் வரலாற்றில் மிக்க கொடூர நிலநடுக்கம். 2004ம் ஆண்டில் திபெத் மிதவைத் துண்டத்தில் பதிவாக்கப்பெற்றன.

இவ்வாறான கொடூர நிகழ்வுகளின் கருவூலம் கண்டத்தகடுகளின் இடம் பெயர்வே எனக் கூறுவது சாலப் பொருத்தமானதாகும்.

## சிந்திக்க சில வரிகள்...

**ஜெ. லோஜனா**
தரம் 09

- நிதானம் பலவீனத்திலும் நல்ல முடிவுகளை ஏற்படுத்தும்.
- நல்ல தருணம் இருமுறை உன் கதவைத் தட்டுமென எண்ணாதே.
- நல்ல மனம் படைத்தவனுக்கு நல்லவர்கள் துணை இருப்பர்.
- வாழ்க்கையில் உயர்வு உன் நாக்கின் நுனியில் இருக்கிறது.
- அன்பாய் பேசுபவனையும் அடக்கமாய் இருப்பவனையும் கடவுள் நேசிக்கின்றார்.
- உன்னை அளக்கும் கோல் உனது குணமே ஆகும்.
- யோசித்துப் பேசுகின்றவன் வருந்தமாட்டான்.
- எண்ணங்களை ஓவியமாகத் தீட்டிக் காட்டுவதே பேச்சு ஆகும்.

# இப்பத்தைய சமுதாயம் வேறமாதிரி

**செல்வநாதன் யசோதா**

தரம் 11

எல்லோருடைய வாழ்க்கையிலும் சோகம் என்ற சொல் நிரம்பியே காணப்படும். அந்த வகையில் ஒரு தாயின் கவலையான கதையானது என்னை ஒரு புது உலகத்திற்கு மாற்றியது. அந்த வகையில் ஓர் அழகிய கிராமமாம் தம்பிராய். அக்கிராமத்தில் இருந்து பஸ் ஒன்றில் ஏறினாள் அந்தத் தாய். அந்த பஸ்ஸூக்குள் நானும் இருந்தேன். அப்போது எல்லோரும் சீற்றில் இருந்துகொண்டு அந்த அம்மா வந்ததுகூடப் பார்க்காதது போலவும், பார்த்தவர்கள் திரும்பியும் இருந்தார்கள்.

இவ்வாறு எல்லோருமே செய் தார்கள். அதனைப் பார்த்த நான் என்னுடைய சீற்றில் இருக்குமாறு சொன்னேன். என்னைத் தடவி நீயாவது பிள்ளை எனக்கு இடம் தந்தாய். ஒரே கைகால் உழைவாக இருக்குது பிள்ளை. நான் இப்போது யாழ்ப்பாணத்தில் இருக்கும் பிள்ளை வீட்ட போகின்றேன். ஆனால் எனக்கு நான்கு ஆண் பிள்ளைகளும் ஒரு பெண் பிள்ளையும் தான். அவளுக்கு யாழ்ப்பாணத்து பையனைக் கட்டிக் கொடுத்திருக் கிறேன். ஆனால் அவள் ஒரு நாளும் என்னை வந்துபார்ப்பதும் இல்லை. நான்தான் அவளைப் பார்க்கிற மாதிரி இருக்கின்றது. அதனால் போய்க்கொண் டிருக்கிறேன் என்று அந்த அம்மா சொன்னார். ஆனால் நான் அந்த அம்மாவிட்ட ஒன்றும் கேட்கவில்லை. ஆனால் அவாவே தன்னுடைய கவலையை எடுத்துக் கூறினார். அந்த தாயின் கதையை கேட்ட நான் ஏன் உங்கள் நான்கு மகன்மார்கள் எங்கே என்று கேட்டேன். அதற்கு அந்த அம்மா சொன்னார். அவங்க எல்லோரையும் வெளிநாட்டிற்கு அனுப்பிவிட்டேன். நானும் கணவனும் தான் வீட்டில் இருக்கின்றோம். அவர்கள் தொலை பேசி எடுத்துப் பேசுகிறது இல்லை. எப்போதாவது இருந்திட்டு போன் எடுப்பாங்கள். இப்படித்தான் பிள்ளை என் பிள்ளைகளை நினைத்தாலே கவலை யாக இருக்குது.

இப்பத்தக்கால பிள்ளைகள் இந்த நிலையில் தான் இருக்கின்றார்கள் என்று சொல்லி என்னுடைய பிள்ளையின் வீடு வந்திட்டுது அம்மா நான் போட்டு வாறன் என்று சொல்லி என் முதுகில் தட்டி நல்லா இருப்பாய் அம்மா என்று இறங்கிப் போனா. நானும் பஸ்ஸில் போய் எனது வீட்டில் இறங்கினேன். இவ்வாறு ஒவ்வொரு தாயும் கருவறைப் பிள்ளைகளால் இப்படித்தான் வாடு வார்களா என என்னை நானே கேட்டுக் கொண்டேன்.

# எனது கிராமத்தின் ஒளி ஏன் மங்கியது?

**க. தயாளினி**
தரம் 09

இயற்கை எழில் கொஞ்சும் வனாந் தரங்களுடன் அழகிய நீழ் வீழ்ச்சிகளும் ஆறுகளும் நிறைந்த அழகிய கிராம மாகும் எனது கிராமம். இது மன்னார் மாவட்டத்திலே அமைந்துள்ள முண் டாம்பிட்டி ஆகும். அன்புக்கே இலக் கணமான மக்கள்; இயற்கையாலே தாலாட்டும் பல மரங்கள், இன்பமூட்டும் நீர் வீழ்ச்சிகள் என்று மனதைக் கவரும் ஓர் அழகிய கிராமமாகும்.

எமது கிராமத்துக்குள் நுழையும் போது வீதியின் இரு புறமும் பற்றைக் காடுகள். உள்ளே செல்லும்போது அழகிய பூ மரங்கள் வருவோரை வரவேற்பது போல பூத்துக் குலுங்கிக் காணப்படும். அங்கு வாழும் ஒவ்வொரு வரும் அன்பே உருவானவர்கள். சிறு சிறு குடிசைகள் காணப்பட்டாலும், பெரும்பாலும் ஓரளவான கல் வீடுகள் பலவும் காணப்பட்டன. எமது கிரா மத்தில் விடிந்தால் வேலைக்குப் போகும் பெரியோர்கள், பாடசாலைக்குப் போகும் மாணவர்கள் எல்லோரும் தத்தமது கடமைகளைச் செய்வதற்காக சென்று வருவார்கள். மாலை ஆனதும் எமது கிராமத்தில் பெரிய ஒரு மைதானம் உண்டு. அங்கு சிறுவர்கள் முதல் பெரியோர்கள் வரை கிராமப்புற விளை யாட்டுக்கள் என பலவகை விளை யாட்டுக்கள் விளையாடி செக்கச் சிவந்த சூரியன் அடி வானத்தில் மறைந்து போவதைக் கண்டு களிப்பார்கள்.

அந்தி மங்கிக் கொண்டு போகும் வேளையில் அவரவர்கள் தத்தமது வீடுகளுக்குச் சென்று விடுவார்கள். மாலையில் விளையாடிய பிள்ளைகள் கை, கால், முகம் கழுவி கல்வி கற்பார்கள். தாய் தந்தையர்கள் கண்டிப்புடன் பிள்ளை களுக்கு கல்வி கற்றுக் கொடுப் பார்கள். இவ்வாறு நித்திய கடமைகளைச் செய் வார்கள். இதைவிட ஆலயங்கள், தேவா லயங்கள் என்பனவும் அங்கு பல காணப் படுகின்றன. எமது கிராம மக்கள் மத வேறுபாடின்றி எல்லா ஆலயங்களுக்கும் சென்று வணங்குவார்கள். ஆலயங்களில் திருவிழா என்றால் ஊரே விழாக் கோலம் பூணும். இவ்வாறு அமைந்திருந்த எமது ஊருக்குள் இனந்தெரியாத ஒரு தொல்லை நுழைந்தது.

யுத்தம் என்ற கொடிய அரக்கன் நாட்டில் கால் வைக்கத் தொடங்கிய தால் எமது கிராமத்தைவிட்டு நாம் செல்லவேண்டுமென்ற ஓர் கொடிய சொல் காதுகளில் ஒலித்தது. எமது கிராமத்தார் அடியற்ற மரம்போல நின்றனர், அழுதனர். யுத்தம் மிக அருகாமையில் நடந்ததால் செல் வீச்சுகள் எமது கிராமத்துக்குள் நுழைய ஆரம்பித்தது. மக்கள் குழந்தைகளைக்

கைகளில் காவிக்கொண்டு கால்போன போக்கில் சிதறி ஓடினர். குடும்பங்கள் பிரிந்தன, இறப்புக்கள் வந்தது. வேறு எங்கோ சென்று ஓர் ஊர்ப் பாட சாலையில் தங்கியிருந்தோம். இவ்வாறு பல நாட்களின் பின் யுத்தம் அதி கரித்தது. பின்பு ஒருவாறு யுத்தத்திற்கு முற்றுப்புள்ளி கிடைத்தது. யுத்தம் முடிவுற்றது. நாம் அந்நியரின் கட்டுப் பாட்டிற்குள் நுழைந்தோம்.

உறவுகளைப் பிரிந்து உடமை களைப் பிரிந்து ஊரையும் விட்டு அந்நிய தேசத்தில் முட்கம்பி வேலிகளுக்குள் அகப்பட்டுக் கிடந்தோம். பின்பு உறவு இணைப்பு என பல திட்டங்களை மேற் கொண்டு ஓரிருவர் ஒன்று சேர்ந்தோம். அகதிகள் மீள்குடியேற்றம் என்று ஓர் நாள் ஊருக்குத் திரும்புவோம் என்று அனுதினம் காத்திருந்தோம். விடிவு கிடைத்தது. ஓர் நாள் முட்கம்பி வேலி முகாம்களுக்கு முன்னால் சில பேரூந் துகள் வந்து நின்றன. உறவுகளைப் பிரிந்த சோகமும் ஊருக்குப் போகும் மகிழ்ச்சியும் கூற முடியாத புதுவித உணர்வினைத் தூண்டியது. பேருந்தும் புறப்பட்டது ஊரை நோக்கி.

தலைகள் வெட்டப்பட்ட மரங்கள், பூக்களே இல்லாத செடிகள், அகோரச் சத்தமிட்டவாறு ஓடும் ஆறுகள், இடிந்து உடைந்து கிடக்கும் பாடசாலைகள் என்பனவையே எமது கண்ணுக்குத் தெரிந்தவை. உறவுகளைப் பிரிந்த வேதனைக்குள்ளாகி இருந்தவர்கள் ஊர் மாதாவைப் பார்த்தவுடன் உரக்கக் கதறி அழுதார்கள். நிலைகுலைந்து நிற்கின்றது எமது கிராம மாதா

மீள்குடியேற்றம் எனும் பெயரில் அமைக்கப்பட்டிருந்த குடிசைளில் வாழ்க்கையை ஆரம்பிக்கத் தொடங்கினர் சிலர். மறுநாள் காலை விடிந்தது. அகதி முகாம்களில் நன்றாகத் தூங்கிய சிறுவர்கள் அன்றும் தூங்கினார்கள். எழும்படா பள்ளிக்கூடம் போக என்று தாய்மார்கள் தம்மையறியாமலே எழுப் பினார்கள். பொழுது விடிந்தது. அகதி மக்களைப் போலவே எமது கிராமமும் நிலைகுலைந்து நிற்கின்றது. மீண்டும் அபிவிருத்தியை நாடி கடமைகளைச் செய்வதற்கு வாழ்கின்றார்கள் எம் ஊர் மக்கள்.

# மாணவர் கடமை

**சி. சங்கீதா**
தரம் 09

முற்கால மாணவர்கள் அறிவுச் செல்வத்தைத் தேடிக் கொள்வதே தம் தலையாய நோக்கெனக் கருதினர். அதனால் தேன் உள்ள இடத்தை நாடிச் செல்லும் தேனீக்கள் போலக் கல்விச் செல்வம் உள்ள இடத்தைத் தேடிச் சென்று கற்றனர். ஆனால் இன்றைய மாணவர் ஒரு சிலர் அறிவை நாடி அதைப் பெற்றுக்கொள்ள முயல் கின்றனர். ஆனால் பெரும்பான்மை யோர் பரீட்சைகளில் அதி மதிப் பெண்கள் பெறவேண்டுமென்னும் குறிக்கோளுடன் செயற்படுகின்றனர். வேறு சிலர் பரீட்சைகளில் தேர்ச்சி பெற்றால் போதும் என்று நினைக் கின்றனர். மற்றும் சிலர் தொழில் வாய்ப்பினைத் தேடிக் கொள்ளும் நோக்குடன் கற்கின்றனர்.

இன்றைய மாணவர்களே நாட்டின் நாளைய பிரசைகள். பிரசைகள் மட்டு மல்ல, வருங்காலத் தலைவர்கள் என்றே கூறலாம். நாட்டுக்கு ஏற்ற நல்ல குடி மக்களாக நாட்டை ஆளும் தகுதி படைத்த நல்ல தலைவர்களாக அவர்கள் திகழவேண்டும். அதற்கேற்ற மனநிலை இன்றைய மாணவர் களிடையே உருவாக வேண்டும். பாடசாலைகளில் கற்கும் காலத்திலேயே மாணவர்களிடையே நல்ல குறிக்கோள், சமூக நோக்கு, நாட்டுப்பற்று என்பன முளைகொள்ள வேண்டும். இன்றைய மாணவர்கள் தமக்கும் சமுதாயத்துக்கும் நாட்டுக்கும் பயனுள்ளவர்களாக உருவாதல் அவசிய மாகும். இவை மாணவர் தம் கடமை என்பதை உணர வேண்டும்.

கல்வி கற்போர் மாணவர் எனப் பொதுவாகக் கூறுவர். ஆனால் அச் சொல் ஆழ்ந்த கருத்துடையது. மாண் பினை ஆக்குவோர் அல்லது மாண் பினை உடையவர்கள் என்பது இதன் உட்பொருளாகும். மாண்பு என்ற சொல் கல்வி மாண்பை மட்டும் குறிக்கவில்லை. கற்கவேண்டியவற்றைக் கசடறக் கற்ப தோடு மட்டும் நின்றுவிடாது கற்றபடி வாழவும் அறநெறிப்படுத்திச் சமூகத்தில் மாண்பினை உண்டாக்க வேண்டும். இத்தகயைதொரு பொருள் கொண்டதே மாண்பு என்ற சொல்லாகும். இத்தகு மாண்பு கொண்டோரே மாணவர் எனலாம்.

கல்வி என்பது மாணவர் வாழ்க் கைக்கு உதவுவதாக அமைய வேண்டும். ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது என்ற முதுமொழிக்கு ஒப்ப வெறும் ஏட்டுக் கல்வியைப் பயில்வதால் மட்டும் மாணவர் திருப்தி கொள்ளக்கூடாது. தாம் பெறும் கல்வி தமக்கும் சமூகத்துக்கும் நாட் டுக்கும் பயன் தருவதாக அமைதல் வேண்டும் என்பதை மாணவர் நன்கு உணர்தல் வேண்டும்.


# ஆறுமுக நாவலர்

**விக்னேஸ்வரன் யாமினி**
தரம் 09

சைவத்தையும் தமிழையும் வளர்த்த சைவத்தமிழ் புலவர்களில் ஆறுமுக நாவலர் ஒருவர் ஆவார். இவர் 1822ம் ஆண்டு மார்கழி மாதம் 18ஆம் திகதி யாழ்ப்பாணத்து நல்லூரிலே கந்தப் பிள்ளைக்கும் சிவகாமி அம்மைக்கு அருமை மகனாக அவதரித்தார். இவரின் இளமைப் பெயர் ஆறுமுகம் என்பது ஆகும். இவரின் சைவத்தமிழ் பணி களைப்பாராட்டி திருவாவடுதுறை ஆதீனம் "நாவலர்" பட்டம் வழங்கிக் கௌர வித்தது. அன்று முதல் இவர் "ஆறுமுக நாவலர்" என அழைக்கப் பட்டார்.

இவர் வாழ்ந்த காலப்பகுதியிலே இலங்கையை ஆங்கிலேயர் ஆட்சி செய்தனர். அக்காலத்திலே சைவமும் தமிழும் நலிவடைந்து சென்றது. இதனைக் கண்ட ஆறுமுக நாவலர் மனமுடைந்து சைவத்தையும் தமிழையும் வளர்க்க அரும்பாடுபட்டார். அக் காலத்திலே ஆங்கிலக்கல்வி கட்டாயக் கல்வி ஆக்கப்பட்ட அதேவேளை கிறிஸ்தவ மதமும் பரவத்தொடங்கியது. சைவத்தமிழ் மக்கள் அனைவரும் தமிழ் மொழியை விட்டு ஆங்கிலமொழியைக் கற்றதோடு கிறிஸ்தவ மதத்தினையும் தழுவிக் கொண்டனர்.

இவ் வேளையில் ஆறுமுக நாவலர் தமிழ்மொழி அழிவடைந்து வருவதனைக் கண்டு தமிழின் சுவையினையும் அதன் மேன்மையினையும் கூறி அவரே தமிழ் மொழியைப் போதித்தார். இவர் தமிழ் மொழியை மக்கள் இலகுவில் கற்க பல நூல்களை வெளியிட்டார். இவர் வெளியிட்ட நூல்களில் இலக்கண வினாவிடை குறிப்பிடத்தக்கதாகும். மேலும் இவர் பல நூல்களை வெளியிட்டு மக்கள் தமிழினைக் கற்க வழி சமைத்துக் கொடுத்தார்.



இவர் வாழ்ந்த காலத்தில் தமிழ் மொழி மாத்திரமன்றி சைவமும் நலி வடைந்த அதேவேளை அதன் கலா சாரம், பண்பாடு என்பனவும் வீழ்ச்சி யடைந்தது. இதனைக் கண்டு வேதனை

யடைந்த நாவலர் சைவ சமயத்துக்கு அரும்பெரும் பணியாற்றினார். இவர் வாழ்ந்த காலத்தில் கிறிஸ்தவ மதத்தினையும் அதன் கலாசாரத்தையும் சைவ மக்கள் பலரும் பின்பற்றினார்கள். இவ்வேளையில் நாவலர் சைவத்தின் உண்மையையும், மேன்மையையும் உயர்வினையும் கூறி மதம் மாறியோரை மீண்டும் சைவத்துக்கு மாறச் செய்த தோடு சைவ சமயத்தவர்களைப் பிற மதத்துக்கு மாறாதவாறும் எமது கலாசாரம், பண்பாடு நிலைபெற்று இருப்பதற்கும் இவர் தனது நாவன்மையால் வழி அமைத்துக் கொடுத்தார்.

நாவலர் பெருமான் இல்லாவிடின் இன்று சைவமும் தமிழும் நிலைபெற்று இருக்காது எனக் கூறமுடியும். இவர் சைவத்தமிழ் பிள்ளைகள் கல்வி கற்பதற்கென சைவப்பிரகாச வித்தியா சாலைகளை நிறுவியதோடு, அவர்கள் படிப்பதற்கான பாடநூல்களையும் அச்சிட்டு வழங்கியதோடு, அச்சியந்திர சாலையினையும் நிறுவினார். சைவத் தமிழ் மாணவர்கள் மாத்திரம் அன்றி ஏனைய மத மாணவர்களுக்கும் பாட நூல்களை அச்சிட்டு வழங்கினார். இவரின் சைவத்தமிழ் பணிகளை கூறவோ எழுதவோ முடியாது.

இன்னும் நாவலர் சில காலம் வாழ்ந்திருந்தால் அரிய பல சேவைகளை சைவத்திற்கும் தமிழுக்கும் ஆற்றியிருப்பார். சைவமும் தமிழும் தனதுஇரு கண்கள் என வாழ்ந்த நாவலர் பெருமான் *1879*ஆம் ஆண்டு கார்த்திகை மாத மக நட்சத்திரத்தில் இறையடி சேர்ந்தார். இவரின் குருபூசையினைக் கொண்டாடுவது சைவத்தமிழர்களின் தலையாய கடமை ஆகும். எனவே இவரைப் போல் எம்மால் பணிசெய்ய முடியாவிட்டாலும் இவர் வளர்த்த சைவத்தமிழை நாமும் பேணி வளர்க்க வேண்டும் என்பது சைவத்தமிழர் ஒவ்வொருவரினதும் தலையாய கடமை ஆகும்.

# ஆன்மீக அன்னை

**சி. சுரேக்கா**
தரம் 07

"தோன்றில் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலிற் தோன்றாமை நன்று" என்ற வள்ளுவரின் வாக்கிற் கிணங்க தோன்றிப் புகழொடு மறைந் தவர் எம் அன்னை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்.

"என் கடன் பணி செய்து கிடப்பதே" என்பதற்கு ஏற்ப சைவத்தையும் தமி ழையும் தன் இரு கண்களாகப் போற்றி வளர்த்த அன்னை 1925ஆம் ஆண்டு 01ம் மாதம் 7ம் திகதி கந்தர் அப்பாக் குட்டிக்கும், தையற்பிள்ளை என்பவர் களுக்கும் மகளாகப் பிறந்தார். இவ ருக்குப் பெற்றோர்கள் தங்கம்மா என்ற நாமத்தைச் சூட்டினார்கள். இவர் சிறுவயதுக் கல்வியை அமெரிக்க மிசன் பாடசாலையிலும் மேற்படிப்பை மல் லாகம் விசாலாட்சி வித்தியாலயத் திலும் கற்றார். 1940ஆம் ஆண்டு அரசாங்கப் பரீட்சையான S.S.C. பரீட்சையிலும் பிரதேச பண்டித பரீட்சையிலும் சித்தி பெற்றார்.

சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் ஆசிரியர் பயிற்சிக்காகச் சேர்ந்து இறுதிப் பரீட்சையில் மொத்தம் 13பாடங்களில் சித்தியடைந்து வெளியேறினார். 1946ஆம் ஆண்டு மட்டக்களப்பு சென்ற்சிசிலியா ஆங்கிலப் பாடசாலையில் பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியராக நியமனம் செய்யப் பட்டார். அம்மையார் துர்க்காதேவி ஆலயத்தில் தனது தொண்டுகள் தொடரவும் ஏற்ற முறையில் தான் வாழும் போதே அதற்குரிய வாரிசை வளர்த் தெடுத்த பெருமைக்குரிய பெண்ணாக விளங்குகிறார்.

மக்களும் சமுதாயமும் பயன்பெற வேண்டும் என எண்ணி ஆன்மீகப் பரப்புரையின் அடுத்த வாரிசான "செஞ்சொற் செல்வர் ஆறு.திரு முருகன்" தொடர்ந்து இவரின் தொண்டு களை நடாத்திச் செல்லவென அன்னை யினாலே நியமிக்கப்பட்டார். அம்மை யாருக்கு கலாநிதி, பண்டிதை, செஞ் சொற் செம்மணி, கொண்டல், சமாதான நீதிவான் எனும் பட்டங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் கண்ட சமூக நந்தவனத்தில் சாதி, சமய பேதமில்லை. ஏழை பணக்காரன் என்ற பிரிவே இல்லை. அவரது சமூகத்தில் அன்பு, அஹிம்சை, அரவணைப்பு, ஒற்றுமை என்ற மலர்களே மலர்ந்தன.

அன்னை தனது பிறந்தநாளை அர்த்த முள்ளதாக்கி அறக்கட்டளையை ஏற் படுத்தினார். இந்த அறக்கட்டளை நிதி மூலம் அன்னை ஆற்றிய தொண்டுகள்

அளப்பரியன. பின்தங்கிய வைத்திய சாலைக் கட்டடங்களை புனரமைத்தல், தேவையான உபகரணங்களை அன் பளிப்புச் செய்தல், ஏழை மாணவர்களின் கல்விக்கு உதவி செய்தல், புலமைப் பரிசில் வழங்குதல், சிறந்த சைவத்தமிழ் நூல்களை வெளியிடுதல், சைவசமய அறிஞர்களையும் பாராட்டி, அந்தணர் களைக் கௌரவித்தல் போன்ற தொண்டு களுக்குப் பயன்படுத்தியுள்ளார். காலத் திற்கு ஏற்ப சேவைகளைச் செய்து மக்களை நெறிப்படுத்திய அன்னையின் தூய வாழ்வு நம்பிக்கைக்கு வித்தாகிறது.

ஒவ்வொருவரின் ஆற்றலையும் இனங்கண்டு உலகறிய வைத்த பெருமை அன்னைக்கே உரிய சிறப்பாகும். ஆன்மீக ஒளி பரப்பிய ஞானவிளக்கு அணைந்துவிட்டாலும், அவர் ஒவ்வொருவர் உள்ளத்திலும் ஏற்றிவைத்த ஆன்மீகச் சுடர் என்றும் ஒளிவீசிக் கொண்டேயிருக்கும். சொல்வதைச் செய்து காட்டும் அன்னை அரசிடம், அதிகாரிகள், இராணுவம் ஆகியோருடன் பேசி மக்களின் உணர்வுகளைப் புரிய வைத்து கண்ணீரைத் துடைத்து வைத்தார். இவர் ஆனந்தத்துடன் சமய, சமூக தெய்வத் தொண்டுகள் செய்தவர். ஆலயத் தொண்டுகளுடன் இணைந்த வகையில் சமூக நல கல்வித் தொண்டு களை முன்னெடுத்துச் சென்ற ஒரு சமூக மறுமலர்ச்சியை ஏற்படுத்திய பெருமைக்குரியவர். மக்களை நெறிப் படுத்தி பெண் குலத்திற்கே பெருமை தேடித்தந்த அன்னை 2008ஆம் ஆண்டு 06ஆம் மாதம் 15ஆம் திகதி இறைவனடி சேர்ந்தார்.

"இவர் வாழ்க்கையினால் பெண் குலமே பெருமை பெறுகிறது"

# கூண்டுக் கிளியின் சுயசரிதை

**ம. அட்சகி**
தரம் 06

நான் பிறந்த சூழல் மிகவும் அழகான இயற்கைக் காட்சிகளைக் கொண்டது. பச்சைக் கம்பளம் விரித்தது போன்ற மலைத்தொடர்கள், இன்னிசைக் கீதம் இசைத்தபடி பாய்ந்துவரும் அருவிகள், நன்கு செழித்து வளர்ந்திருக்கும் மரங்கள். அவற்றிலே பழுத்து மணம் பரப்பும் கனிகள். அக்காட்சிகளைப் பார்த்துக் கனிகளை உண்டு நான் உல்லாசமாகப் பறந்துகொண்டிருப்பேன்.

"எப்போது விடியும்" எனக் காத்திருப்பேன். விடிந்ததும் என் நண்பர்களுடன் சேர்ந்து கொண்டு மழலை பேசிய வண்ணம் பறப்பேன். சூரியனது பொற் கிரணங்களையும் தென்றல் காற் றினது இதமான வருடலையும் என்றும் மறக்க முடியாது. மாலைவேளையும் எனக்கு விருப்பமானதுதான். சந்திரனையும் கண் சிமிட்டும் நட்சத்திரங்களையும் எனது கூட்டத்தாருடன் சேர்ந்தே இரசிப்பேன்.

இன்னுமொன்றைக் கூற மறந்து விட்டேன். சின்னச் சின்ன மழைத்துளி களில் நனைந்தபடி பறந்துசெல்லும் போது மழைத்துளி பட்டுச் சிரிக்கும் மரங்களையும் கண்டு இரசிப்பேன். உங்களைப் போன்ற குழந்தைகளும் மழையில் ஆனந்தத்தோடு நனைந்து மகிழ்வதையும் நான் கண்டு அனுபவிப்ப துண்டு. இப்போது நீங்களும் என்னைப் பார்த்து மகிழ்கிறீர்கள் என்பது உங்களுக்கும் தெரிகிறதா? இல்லையா?

எத்தனை விதம் விதமான பழங்களை நீங்கள் எனக்குத் தந்திருக்கிறீர்கள்? ஆயினும் சுதந்திரமாகப் பறந்து திரிந்து மரங்களிலே பழுத்திருக்கும் கனிகளைக் கொத்தித் தின்பதிலுள்ள சுவை இதிலே கிடைத்திடாது. அதுபோல் சுதந்திரமாகத் தானியங்களைக் கொத்தி உண்பதில் உள்ள சுகம் இங்கே உண்டா?

முன்பெல்லாம் சின்னஞ்சிறிய வயிற் றுக்கு உணவாகத் தானியங்களையும் தேடிச் செல்வேன். தனியாக அல்ல, கூட்டமாக. பரந்த வயல் வெளிகள் எமது நிறத்தைப் போலவே பசுமையாகக் காட்சி யளிக்கும் கதிர் சுமந்த நெல்லினங்கள் எம்மைத் தலையசைத்து வரவேற்கும். பொன் நிறமாகக் காட்சி தரும் கதிர்களில் எதைச் சுவைப்பது எனத் தெரியாது அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கொரித்து உண்ணுவதால் மனிதர்கள் எம்மைக் கண்டதும் விரட்டுவார்கள்.

நாங்கள் பயந்துதிரும்பிச் செல்வ தாகப் போக்குக் காட்டிவிட்டு, மீண்டும் அவ்விடத்திற்கே வந்து சேர்ந்துவிடு வோம். என்நிலைமை உணர்ந்து எனக்கு விடுதலை பெற்றுத் தர விரும்பும் மனித உள்ளங்களை எதிர்பார்த்து என் வாழ் நாளைக் கழித்து வருகிறேன். எப்போ எனக்கு விடிவு கிட்டும்.

# மகாத்மா காந்தி

கு. அசூரியா
தரம் 05

காந்தியடிகள் தமக்கென வாழாது பிறருக்காக வாழ்ந்த உத்தமர்களுள் ஒருவர். இவர் வட இந்தியாவிலுள்ள குஜராத் மாநிலத்தில் போர்பந்தர் என்னும் கிராமத்தில் 1869ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இரண்டாம் திகதி பிறந்தார். பெற்றோர் இவருக்கு மோகன தாஸ் காந்தி என்று பெயரிட்டனர்.

இவர் தனது இளம் பராயத்தில் அரிச்சந்திர நாடகம், இராவணன் நாடகம் போன்றவற்றைப் பார்த்து நல்லொழுக் கங்களைப் பேசுபவராகவும் பெற்றோரைக் கனம் பண்ணுபவராகவும் விளங்கினார். இளம் பராயத்திலேயே இவருக்கு அக்கால வழக்கப்படி பெற்றோர் கஸ்தூரி பாயைத் திருமணம் செய்து வைத்தனர். மோகனதாஸ் காந்தி சட்டக்கல்வி கற்ப தற்காக இங்கிலாந்து சென்ற பொழுது இவரது தாயார் இவருக்குப் பல அறிவுரை களைக் கூறினார். அவற்றுள் மது அருந் தாதே, பொய் சொல்லாதே என்பனவை யாகும். இவ் அறிவுரைகளை மனதிற் கொண்டு வாழ்ந்தார். மூன்றாண்டுகள் முயன்று கற்று "பாரிஸ்டர்" பட்டம் பெற்று இந்தியாவிற்குத் திரும்பினார்.

சிறிது காலம் இந்தியாவில் வழக்க றிஞர் தொழிலில் ஈடுபட்டார். அப்பொழுது ஒரு வழக்குத் தொடர்பாக தென்னா பிரிக்காவிற்குச் சென்றார். தென்னா பிரிக்காவில் வாழ்ந்துவந்த இந்தியர்களை வெள்ளையர்களும் வெள்ளையர் அர சாங்கமும்தாழ்வாக நடத்தியதைக் கண்டு வேதனைப்பட்டார். அவர்களது துன்பங்களைப் போக்க விழைந்தார்.



சத்தியாக்கிரக வழியில் நின்றுதுயர் துடைக்க முனைந்தார். அதில் வெற்றியும் கண்டார். அதன் பின்னர் இந்தியாவிற்குத் திரும்பினார். அப்போது இந்தியா அந்நிய ருக்கு அடிமைப்பட்டு தாழ்வுற்றிருந்தது. இந்தியாவின் சுதந்திரத்திற்காகப் பலர் உழைத்தனர். காந்தியடிகளும் தம்மை அவர்களுடன் இணைத்துக் கொண்டார். பலமுறை சிறை சென்றார். ஏழை மக்களின் வாழ்க்கையை உயர்த்த திடசங்கற்பம் கொண்டார். இவரது பெற்றோர் பெருஞ் செல்வந்தர்களாக இருந்தபோதும் இவர் கை ராட்டினம் கொண்டு நெய்யப்பட்ட கதர் உடைகளை அணிந்து எளிமையான வாழ்க்கை நடாத்தினார். அஹிம்சை ஓர் இணையற்ற

சக்தி வாய்ந்த ஆயுதம் என்பதை உணர்ந்து அன்பு வழியில் நின்று நாட்டிற்குச் சுதந்திரம் பெற்றுக் கொடுத்தார்.

1947ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ஆம் திகதி இந்திய சுதந்திரக்கொடி ஏற்றப்பட்டது. காந்தியடிகள் எழுதிய 'சத்தியசோதனை' அவரது சுயசரிதையாகும். இந்நூல் மூலமாக இவரது வாழ்க்கை வரலாற்றை அறிந்து கொள்ளலாம். சத்தியத்தில் இவர் கூடியளவு நம்பிக்கை வைத்திருந்தார். சத்தியமே கடவுள் என்று வாழ்ந்து காட்டியவர்.

சமூகத்திலிருந்து கொண்டு சமூக சேவை செய்தலை ஒரு தெய்வீகப் பணியாகக் கொண்டிருந்தார். இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்துவிடல் என்ற வள்ளுவர் வாக்குக்கு அமைய வாழ்ந்து காட்டியவர் காந்தியடிகள் ஆவார். குற்றம் இழைத்தவர்களுக்குக் கூட நாம் தீங்கு செய்யக் கூடாது. பாவத்தை வெறுக்கலாம், ஆனால் பாவம் செய்தவனை ஒரு பொழுதும் வெறுக்கக்கூடாது என்பது இவர் போதனையாக இருந்தது.

# உள்ளத்தின் உளறல்

**பா. விதுஷாயினி**
யாழ். பல்கலைக்கழகம்,
கலைத்துறை,
1ம் வருடம்.

ஆன்றோனும் சான்றோனும் கூடிய நற்தவ வாயிலில்
நலமுடன் வந்து சேர்ந்தேன்
தாயுமாய்த் தந்தையுமாய் எனை அரவணைத்த அன்னை
என்றுமே என் சிந்தைவாழ் சிவத்தமிழ் அன்னை.

மகளின் ஆசைகளை கண்குளிரக் காணும் தாய்
கணப்பொழுது எனக்காய்க் கலங்கி முத்தமிட்டாள்.
பூப்புனித நீராட்டில் புன்னகையோடு புருவம் தூக்கினாள்
ஆறு வயதில் அடைக்கலமான நான் இன்று பல்கலைக்கழகமதில்...

கால்பதிக்க கருத்தோடு கவனித்தாள்
என் உயர்வு கண்டு எனை என்றும் வாழ்த்தும் தாய்
எப்பொழுதும் வாழ்த்துவாள் அவள்கரம் என் ஆசிக்காய்
ஆகாயத்தில் அருள்பாலிக்கும்.

நன்றுடன் பணிபுரியும் நல்லுள்ளங்கள்
நலத்துடன் எனை கவனிப்பதை
நாளும் எண்ணுகிறேன்
நன்றியோடு அவர்களை நலமுற வாழ அருள் வேண்டுகின்றேன்.

சீமாட்டிகள் பலரை சீரியராய் உயர்த்திய
சிந்தை வாழ் என் இல்லம்
சிரம் தாழ்த்தி நான் வணங்குமில்லம்
சிகரமது கண்டு சிறப்போடு விளங்கி
விருட்சமாகட்டும், நிழலாய் நின்றிடட்டும்.

செல்வி அ. ஜெயந்தினி யாழ். நுண்கலைப்பீடம்
சித்திரமும் வடிவமைப்பும் அவர்களினால்
வரையப்பட்ட படைப்புக்கள்







# மானிடம் சிதைகிறது

**கா. ஹஜனிகா**
க.பொ.த. (உ/த) 2014

மானிலத்தில் வாழ உருவெடுத்த மனிதங்கள்
மதிகெட்டு மானிலத்தை மாற்ற - வழிபார்க்கின்றன
மாண்பு கொண்ட மானிடராய்
மதிப்புடனே நடமாட இன்னும் மானிடம் விரும்பவில்லை.

ஆசைக்கடலில் மூழ்கி - இன்பம் என்ற பேரில்
அவலத்தைச் சுமக்கின்றன அறிவேதும் இன்றி
அன்பு போய் அறம் போய் அகிலத்தை
ஆணவத்தால் ஆழ்கின்றனர் சில பேர்

தன்னலம் கொண்டு புனிதங்களை அழித்து
தரணியை சுடுகாடாய் மாற்றுகிறது இன்று - மனிதம்
தன் இனம் அழித்து தம் மதம் அழித்து
தமது வாழ்வை தரணியில் தவிக்க விடுகின்றது மானிடம்

பதவிகள் வேண்டும் என்று - பாதியில்
பகவான் தமக்களித்த வாழ்வு தனைவிஞ்சி
பாரினில் முன்னேற முயல்கின்றனர் - சிலர்
பண்புகள் இவ்வாறாய் மாறுகிறது இன்று

அன்புக்கு அடிமையில்லை ஆசைக்கு அளவுமில்லை
அறிவுக்குச் செயலுமில்லை உண்மைக்கு இடமுமில்லை
ஆழவந்த மனிதங்கள் அழிகின்றன
மானிலம் மறைகிறது, மானிடம் சிதைகிறது - இதற்கு
மானிடமே முழுப்பொறுப்பு.

# அம்மா நீ எங்கே?

**ர. விதுரா**
க.பொ.த. (உ/த) 2015

**தாயைக் கண்டதில்லை**
**தாய் மார்பில் பால் குடிக்கவில்லை**
**தாய் அன்பும் எனக்கு கிடைக்கவில்லை**
**தாலாட்டு கேட்கவில்லை**

**தாய் மடியில் தலை சாய்க்கவில்லை**
**தாயின் குரலைக் கேட்கவும் இல்லை**
**என் தாயை அம்மா என்றழைத்த**
**அனுபவமும் எனக்கில்லை**

**தவளும்போது என் தாய் பார்க்கவில்லை**
**நடை பழகி தடுக்கி விழுந்தேன்**
**என் தாய் தூக்கவில்லை**
**கதறி அழுதும் என் தாய் கண் கலங்கவில்லை**

**என் மழலை மொழியைக் கூட**
**தாய் கேட்கவில்லை**
**நான் மழையில் நனைந்தேன்**
**என்தாய் தடுக்கவில்லை**

**நிலாச்சோறு ஊட்டவில்லை**
**நெஞ்சில் போட்டு ஆடவில்லை**
**மகளே என்று அழைக்கவும் இல்லை**
**மார்போடு சேர்த்து அணைக்கவுமில்லை**

**துன்பம் வந்தால் ஆறுதல் கூறத் தாயில்லை**
**இன்பத்திலும் தாய் பங்குகொள்ளவில்லை**
**அறிவுரையும் எனக்குக் கூறவில்லை**
**என் ஆசைகள் எதுவும்நிறைவு செய்யவில்லை.**

**ஈரத்தலையும் துவட்டவில்லை**
**எண்ணெய் தேய்த்து தலை சீவவில்லை**
**எதனையும் என்தாய் செய்யவில்லை**
**இறைவன் எனக்களித்த வரம் இவ்வளவே!**

**இன்னோர் ஜென்மம் எனக்கிருந்தால்**
**இத்தனையும் கொண்ட தாய்மடியில்**
**தலை சாய்த்து ஒரு நிமிடம் நான் தூங்க**
**இறையிடத்தில் வேண்டுகின்றேன்.**

# இலட்சியத்திற்காக....

**கி. றூபிகா**
க.பொ.த. (உ/த) 2014

வாழும் நாள்கள் குறைந்துவர
வாழ்நாள்கள் வீணே கரைகின்றன
கண்மூடித் திறப்பதற்குள்
வான்தொடும் பல சாதனைகள்
சிறகு விரிக்கின்றன
பிறகும் ஏன் தாமதம்?
மனித அடிச்சுவடுகள்
மாண்புமிகு சாதனைகள் படைக்க
சுவரைக் கடக்க சுவடுகள்
அவதானமாக வைத்திட வேண்டும்
கடக்கும் சுவடுகளை வழியில்
கிடக்கும் முட்கள் பதம் பார்க்கத்தான் செய்யும்
வலி தாங்க முடியாமல்
விழுந்து விடுகின்றன சில இதயங்கள்
எழுந்து நடக்கட்டும் அவைகள்
வேதனைகள்தான் உனக்கு
சாதனைகள் மனிதா!
உன் இதயக் கீறல்களில்
உறுதியெனும் குருதி சிந்தட்டும்
கடந்து செல்
உன் சாதனைகள் நோக்கி
சாதனைக்கு வேதனைகள் - பெரும்
போதனைகளல்ல
வெற்றியின் போதனைகள் - உன்
பாதச் சுவடுகளின் கீறல்கள்.

# உன்னை நீயே சீர்தூக்கிப்பார்

**கா. கலைப்பிரியா**
க.பொ.த. (உ/த) 2015

*கால நதியின் கரையில்லா ஓட்டத்தில்
கரை சேர்ந்துவிட வேண்டும் என்ற
ஆசையுடன் பிறந்திட்ட மானிடா - நீ
பிறவிப்பயன் எய்த வேண்டும் என்பதை மறந்துவிடாதே*

*பாழ்பட்டு போகும் சமுதாயத்தை
அத்திவாரம் இட்டு உயர்த்திக்கொண்டிருக்கிறாய்
நீ என்ன செய்கின்றாய் என்பது புரிகிறதா!
சுழலும் சக்கரத்தின் விளிம்பில் நிற்கிறாய்*

*நாகரிகம் என்ற வார்த்தை உன்னை கட்டி விட்டதா
கட்டுக்கள் அவிழ்க்கப்பட்டு - நீ மனிதனாக வேண்டும்
ஒரு கணம் சிந்தி
உன் உறவுகள் படும் துயரங்கள் - பார்!*

*தன்னைத் தாங்க இன்னொருவர் தேவைப்படும் நிலையில்
தானே இன்னொருவரைத் தாங்கியபடி
தொலைபேசிகள் தொல்லை கொடுத்ததாலே
இந்த நிலை ஏற்பட்டது.*

*பாதையில் செல்லும்போது பாரமான வார்த்தைகளை
அர்த்தம் புரியாதவாறு உன்மேல் அவிழ்த்து விடுகின்றார்கள்
உன்னையே நீ ஒரு முறை திரும்பிப்பார்
உனக்கே அர்த்தம் புரியும்.*

*உனக்காக ஆசைகளை எறிந்துவிட்டு
அவலங்களைச் சுமந்து உன்னை ஆளாக்கியவர்
படும் வேதனை கூட புரியவில்லையா
ஏ! மானிடா விழித்தெழு.*

*மனிதா இன்னும் தாமதம் ஏன்
நீ விழித்திடும் காலம் கடந்துவிட்டது
நாகரிக போர்வையை சற்றே கழற்றிவிட்டு
உன்னை நீயே சீர்தூக்கிப்பார்.*

# மீண்டும் வராதா கனவுகள் நிஜத்தில்

**ர. சஞ்சீதா**
க.பொ.த. (உ/த) 2015

கடந்த கால நினைவுகள்
கண்களிற்குள் நிற்குதே
கலைந்துபோன நினைவுகள்
மீண்டும் எம்மைத் தொடருதே

பள்ளிக்கூட மேசையில்
பட்டப்பெயர்கள் எழுதினோம்
வாத்தியாரின் பிரம்பை உடைத்து
கிட்டிப்புல்லு விளையாடினோம்

கணிதபாடவாத்தியிடம்
கத்தி காட்டி மிரட்டினோம் – தடியால்
கண்டபடி வாங்கிக்கொண்டு
கதறிக்கதறி ஓடினோம்

கடற்கரைக்கு ஓடிச்சென்று
கட்டுமரம் செலுத்தினோம்
கடலில் உள்ள மீன்கள் போல
கரையில் நீந்த எண்ணினோம்

அப்பாவின் சட்டைப் பைக்குள்
சில்லறைகள் தேடினோம்
சினிமாவிற்கு ஓடிச்சென்று
சண்டைப்பயிற்சி பழகினோம்

கடைக்கார மாமாவை
கஞ்சன் என்றே கூறினோம்
கண்டதெல்லாம் வாங்கி வந்து
பெட்டிக்கடை நடத்தினோம்

ஊரிலுள்ள பெரியவரை
மிரட்டி போஸ்ற்றர் ஒட்டினோம்
தேரிலுள்ள சாமியையும்
திருடிச் செல்ல எண்ணினோம்

புத்தகப்பையுடன் பூவசர மரத்தின்கீழே
பூக்காதா என ஏங்கினோம்
புத்தகம் நடுவே பூவரசங்காயில்
பம்பரங்கள் சுத்தினோம்

அன்றும் இன்றும் என்றும் வராதா
எம் வாழ்வில் நிகழ்ந்தவைகள்
மீண்டும் வராதா – எம்
நினைவுகள் நிஜத்தில்.

# நம்பிக்கை

**எஸ். சுகிர்தா**
க.பொ.த. (உ/த) 2015

மனிதனே
குத்தும் குறைகளை
கூறு போடுங்கள்
கத்தும் கவலைகளை
கருக்கிப் போடுங்கள்
சுற்றும்பூமி சற்று நின்றால்
சமுத்திரத்தின் சத்தம் கூட
சலனம் அற்றுப் போகும்...

சூழ்நிலையின் சுவாரஸ்யத்தில்
மனிதாபிமானச் சுவடைத்
தொலைக்காதீர்கள்...
இயலாமை மேகத்தால்
உன்மீது தோல்விச் சாரலா?
பரவாயில்லை நனைந்து கொள்!
முடிந்தவரை முயற்சிக் கோலத்தை
உன் முற்றத்தில் போடு!

மனிதனே
நம்பிக்கையின் கரம்பிடி
அவநம்பிக்கை
உன்முன்கை கட்டி நிற்கும்
தன்னம்பிக்கைச் சுவடு
உன்னைச் சுற்றிக் கூத்தாடும்!
முன்னேற்றப் படியில்
தோல்விச் சுவடுகளா?
பரவாயில்லை
முன்னேறு
கீறும் செயல்கள் தான்
சிகரத்தின் சிதறல்கள்!

கோபக் கேடு கொண்டு
செயல்களை அலங்கரிக்காதே – அவை
வெற்றியை நசுக்கும்
வெற்று நாடகம்!

முயற்சியின் முடிவில்
பயணப் பாதையை
திரும்பிப் பார்
வெற்றியின் வரைபடங்கள்
வானளாவி நிற்கும்!

உன் சோதனைச் சாலையில் படரும்
வேதனை வேர்களை
வெட்டி விடு
நாளைய உன் சாதனை
பட்ட மரமாய்ப் பரிதவிக்கும்!

அரங்கேற்று
அமைதி நாட்டியத்தை
சூழ்நிலையெங்கும்
உழைப்பின் உச்சத்தில் – காத்திரு
காலத்தின் பிடியில்
காட்சிகள் கரையலாம்
முயற்சி வேள்வி
முணுமுணுத்தாலும் – முடிவு
வெற்றியே!

# பான்மை இல்லம்

**ஜெ. அபிராமி**
க.பொ.த. (சா/த) 2013

பாரெங்கும் எத்திசையும் புகழ் பரப்பும்
ஈழத்தின் தலைநகராம் யாழ் தனிலே
பாரோங்கப் பணிபுரிந்து பண்டு தொட்டு இன்று வரை
பலர் புகழும் துர்க்கை அன்னையின் விளக்கம் மேவி
பண்பாட்டுடன்கூடி பரிதவித்த பெண்களை
பார் போற்ற எழுந்த பான்மை இல்லம்
பாங்காகப் பணிபுரியும் பெண்கள் இல்லம்
அன்பின் அன்னையாய் துர்க்கா துரந்தரியின்
அறத்தின் வழி உருவாகிய அற்புதம் - இதுவன்றோ

அகல் விளக்காய் நாம் ஒளிர அறிவுகாட்டிய
அன்னை ஸ்தாபனம் நம் உறையுள்
பள்ளத்தில் வீழ்ந்திட இருந்த நம்மை
பகுத்தறிவுடன் பணிவுகள் பல செய்ய
பார்போற்ற பான்மையாக வாழ
பணிபுரிந்த இல்லம் நம் துர்க்காபுரம் அன்றோ!

அடக்கிய சமூகத்தில் ஆன்றோனாய் உயர்வடைய
அரும்பணியாற்றிய அகிம்சா இல்லம்
வரலாறு காண வைத்த நாம் கண்ட இல்லம்
வன்முறைகளைத் தாண்டி வாழவேண்டிய இல்லம்
தேறுமுகம் இன்றவையும் தமிழர்க்கெல்லாம்
தெளிவூட்டி இன்முகத்தால் துயர் துடைப்போம்
மாறிவரும் வாழ்வினுக்கு வளங்கள் காட்டிய
நம் இல்லம் வாழட்டும் வளரட்டும்.

# தமிழ்நாடு

**சி. சங்கீதா**
தரம் 09

சங்கம் முழங்கிய வங்கம் மிகுந்த
தங்கத்தமிழ் நாடே உயர்
பங்கம் விரித்திட அங்கம் மலர்ந்திட
மங்காத் தமிழ் நாடே!

பொங்கும் கவிதைகள் முழங்கிய
பொங்கல் தமிழ் நாடே நல்ல
சங்கு சரேலனறுங்கு நெகிழ்திடும்
எங்கள் தமிழ் நாடே.

மங்கையைப் போற்றியே சங்கைக்கு ஏற்றிய
அங்கைத் தமிழ் நாடே - வளர்
கங்கைக் கடவுளும் நங்கையும் நடனமிடும்
திங்கள் தமிழ் நாடே

எங்கும் எளிமையும் தங்கும் தருமமும்
தொங்கும் தமிழ் நாடே - என்றும்
மங்காப் புகழுடை மங்கையர் வாழ்ந்த
மாங்காய்த் தமிழ் நாடே.

# உன் கரம்

**ர. டிசானி**
தரம் 09

சொந்தங்கள் தொடர்வதில்லை
உண்மை உறவுகள் இறப்பதில்லை
காலத்தின் தொல்லைகள் தொடர்வதில்லை
கடந்தகால நினைவுகள் கானல் நீர் போல
நிசப்த கனவு அலைகள் - இவை
நீர்க்குமிழி போல் நிலையற்றவை
மாறும் உலகில்
மாறும் மனித மனங்கள்
உன்மனதில் எழும் ஓசைக்கு
நீயே விடைகொடு - ஏனெனில்
அணையை உடைத்தால் நம்
கரத்தினால் தான் அணைகட்ட வேண்டும்
அதுபோல நம் எதிர்காலம்
நம் கரத்தில் - மனமே
பச்சோந்தி மனிதன் உன்னைச் சூழ்ந்திருக்கிறான் கவனம்
நிசப்தக் கனவுகளை நனவாக்க
உன்கரம் உனக்குப் போதும்.

# நட்பு

**பூ. நிஷாளினி**
தரம் 09

தோல்வியிலும் தோள் கொடுக்க
வேண்டும் ஒரு தோழி
துயரத்திலும் தோற்றிவிட
வேண்டும் ஒரு தோழி
அவள் பிரிவில் நான் துயர் கொண்டால்
துறந்திடுவாள் உயிரை
அவள் உயிர் பிரிந்தாலும்
என்றுமே மறந்திடாள் என் நட்பை.

# தாய் அன்பே மேலானது

**பி. தானுஜா**
தரம் 09

பத்து மாதம் எம்மைச்
சுமந்து நீ பட்டபாடு
யார் தான் அறியமாட்டார்
பாரினிலே நாம் உதிக்க
நீ பட்ட துன்பம்
யார் தான் அறியமாட்டார்

எமக்கு நோய் என்றால்
அன்னையே உன்
உயிர்போன மாதிரி வாடிவிடுவாய்
நாம் பசியால் வாடினால்
உன் பசியையே மறந்துவிடும்

உன்னை வாட்டி வதக்கி
எம்மை வளர்த்தவளே
உந்தன் அன்புக்கு என்னஇணை
என்னை நல்வழியில்
கூட்டிச் செல்லும் தாய் அன்பு

இல்லை என்றால் - நாமெல்லாம்
பாரினிலே இருந்தென்ன பயன்
தாய் அன்புக்கு ஈடேயில்லை
ஏன் இந்த உலகமே தூசு தானே.

# வளரும் எமது இல்லம்

**இ. கஜனி**
தரம் 06

தங்கமனம் படைத்த தங்கம்மா - எமது அம்மா
தரணியிலே எமக்குத் தந்த இல்லம்
மகளிர் வாழ்வு மாண்புற மேம்பட
தூரநோக்கங் கொண்ட துர்க்காதுரந்தரி

கல்வியுடன் கலைகளும் கலாசாரமும்
அறிவும் அடக்கமும் கூறித்தந்த அம்மா
பலமாக வேரூன்றி நாம்வளர
பண்புகள் பல சொன்ன அம்மா

விதைபோட்டு விழுதுவிட்ட உங்கள் இல்லம்
முன்னேற்றத்துடன் முன்னோக்கிச் செல்கின்றது
உம் பணி தனைத் தொடர்ந்து
உம் செல்வர் திருமுருகன் தொடர்கின்றார் உம் பணியை.

# இலங்கை பற்றிய பொதுவான தகவல்கள்

1. இலங்கையின் மொழி - சிங்களம் - 74%
   தமிழ் - 18%
   ஆங்கிலம் - 8%

2. இலங்கையின் பரப்பளவு - 65610 சதுர கிலோ மீற்றர் (25332 ச. மைல்)

3. இலங்கையின் நீளம் - பேதுரு முனை தொடக்கம் தெவுந்தரை வரை (432 கிலோ மீற்றர் )

4. இலங்கையின் அகலம் - கொழும்பு தொடக்கம் சங்கமன்கந்தை வரை (மைல் 140 – கி. மீ. 224)

5. இலங்கையின் சனத்தொகை - 20,222,240

6. இலங்கையின் சனத்தொகை வளர்ச்சி வீதம் – 0.78
   – 73.2

7. இலங்கையின் சிசுமரண வீதம் - பிறப்பு 1000க்கு – இறப்பு 13.97

8. இலங்கையில் உள்ள இனம் - சிங்களவர்
   தமிழர்
   முஸ்லிம்கள்
   பறங்கியர்
   மலாய் இனத்தோர் வாழ்கின்றனர்.

9. இலங்கையில் உள்ள மதம் - பௌத்தம் - 69 %
   இந்து - 7.1 %
   முஸ்லிம் - 7.6 %
   கத்தோலிக்கர்- 6.2 %

10. இலங்கையின் துறைமுகங்கள் - திருகோணமலை
    கொழும்பு

11. இலங்கையின் பிரதான விமான நிலையங்கள் - கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம்
ரத்மலானை
பலாலி
வீரவில
கொக்கல
அனுராதபுரம்
அம்பாந்தோட்டை மாத்தள

12. இலங்கையின் பிரதான நீர் வீழ்ச்சிகள் - பம்பரகந்த
தியலும
லக்சபானா
கிரிந்த எல்ல
அபர்டின்
டெவோன்
செயின்ட் கிளயார்

13. இலங்கையின் பிரதான மலைகள் - பீதுருதாலகலை
கிரிகல் பொத்தத
கொலபத்தன ஹெல
தொட்டு பொல
குடாகலை
பல்ப்
சிக்கிலிமான
சமனல
ஹொகஸ் பெக்
கிறேட் வெஸ்டர்ன்
கோனமல்லகந்த
மவுண்ட் பார்
ஹக்கல
ஹோர்டன் வெளி

14. இலங்கையின் நீர்த்தேக்கங்கள்-விக்டோரியா
கொத்மலை
ரந்தனிகலை
மவுஸ்ஸாகலை
ரந்தம்பை.

15. இலங்கையின் பூங்காக்கள் - கம்பஹா
பேராதனை
ஹக்கலை

16. இலங்கையின் தேசிய வனங்கள் -

| | | |
|---|---|---|
| | யால | வில்பத்து |
| | கல் ஓயா | சுண்டிக்குளம் |
| | வஸ்கமுவ | ஹோட்டன் தென்ன |
| | புந்தலை | கொஸ்கொடை |
| | லாஹூகலை | சோமாவதி |
| | ஹக்கலை | |

17. இலங்கையின் குளங்கள் -

மின்னேரியா குளம்
கலா குளம்
பராக்கிரம சமுத்திரம்
மஹாவிலாச்சிய குளம்
நாச்சதுவ குளம்
கவுடுலு குளம்
கொரபொர குளம்

18. இலங்கையின் நதிகள் -

| | | |
|---|---|---|
| | மஹாவலி கங்கை | களு கங்கை |
| | மல்வத்து ஓயா | நில்வள கங்கை |
| | கலா ஓயா | ஜின் கங்கை |
| | யான் ஓயா | தெதுறு ஓயா |
| | களனி கங்கை | மகா ஓயா |
| | வளவை கங்கை | மாதுறு ஓயா |
| | மாணிக்க கங்கை | கல் ஓயா |
| | மீ ஓயா | கல்யாணி |
| | கும்புக்கன் ஓயா | |

# Internet is a global system

**T. Logini**
*Grade – 08*

The world's largest network. The internet is a collection of network systems worldwide which allows people to share and find out informaton. The letters www stands for world wide web. It allows, you to download images, date, music files, computer programmes and several other things.

It is the network systems that links together millions of computers by means of telephone lines, modems and other communication devices. More than 130 million of users around the world use the internet for various reasons, especially the 'facebook'. Two of the most popular web browsers are microsoft internet Explorer and Netscape navigation. The internet is very sophisticated and we can exchange e-mails with a single person or a group of people who share our interest or even chat with them using web cameras (web coms). The first page usually we get on the screen when we switch on the computer is the homepage.

This instructs the users to find the website desired.

Just as much as the internet provides valuable information it also gives people a large amount of illegal material, depending on the countries.

Some governments have faced huge problems and have restricted users from going to internet cafes where such illegal activity is carried out. However, it is difficult to monitor and control the manner in which it is used, as the internet is a global system with millions of users.

> "Reading maketh a full mand;
> Conference a ready man;
> And writing an exact man."

# The country mouse and The town mouse

**T. Tharsika**
*O/L ( 2013 )*

A town mouse came to visit a country mouse. The country mouse lived in a field and gave her visitor all she had, peas and rice. The town mouse nibbled in for a while, then said.

"You're so thin because your food – is so poor. Come and see how we live in the town".

So the country mouse went to visit her. They waited until night time, then the town mouse led her guest through a crack into the table. The country mouse had never seen such fine fare.

"You're right". She said

"Our food in poor. I will come to live in the town too".

No sooner had she said so, than a man with a candle came into the room and chased the mice. They barely managed to escape through the crack.

"No." said the country mouse. "My house in the field is better. I never know such fear.

# My Ambition

**M. Tharsini**
*Grade – 07*

Most people live in this world without aim. They lead their life as it comes. That type of life is dull and often ends in misery. It is ture that we can't accomplish every thing we want to. But it is also that natural we should plan before we do. We must have clear idea about our future. We should fix, what we call an ambition. Ambition can lead to progress and prosperity.

When I was studying in year four I fell sick. I was admitted to Jaffna hospital, warded there for several weeks. The doctor who treated me was very soft, polite and patient. His simplicity, kindness and devotion to duty captured the hearts of all.

His image got impressed deep in my young heart. I decided to follow his foot steps. Thus a seed was sown in my heart. It became my ambition. Now I am studying hard to achieve my goal. The doctor is my "Guru" and idol. My ambition is not based on selfishness. I shall not go after wealth or fame but service shall be my motto. I believe that there can be no service better than the healing touch of a kind doctor. I shall serve god through serving the sick.

# An apple led to a discovery

**T. Thevatharsini**

*G.C.E. A/L (Maths) 2015*

One day, when Issac Newton was sitting under an apple tree, a ripe apple fell down on the ground. Newton looked up at the tree and then at the apple that lay on the ground. The act was a natural and simple one but is set him thinking hard. "Why did the apple fall on the ground instead of going up?" Several questions cropped up in his mind. The answer, to all these pointed to one common reasoning. "As the apple fell down from a height, the earth must have attracted it, and in doing so, it must have exerted some force on the apple".

This reasoning later formed the basis of his discovery of the "first law of motion". The next question to intrique Newton was "But if the earth attracted the apple perhaps the apple might be a basic property of matter. How is that possible? Newton reasoned out, "I have never seen two been so, why did the tricky question.

Newton hit upon the idea that the force of attraction might be dependent on certain factors. The first and most striking factor that caught his attention was mass. He thought, the larger the mass of a body the larger should be the force rexerted by it on another body. "Since the earth is much more massive than any other object on its surface, it attracted the apple with a greater force, there by making it fall". Was this the answer to his question?

"If the force depends only on the mass of a body, then why was not the apple attracted towards the sun, a body far more massive than the earth? Newton realized that "mass is not the only factor that influences this force, but another factor equally important is distance. Then his mind was still not at rest, he questioned himself, why is the moon hovering about the earth? Why does it not fall on the earth, as the apple did? This answer, too was quite clear to him According to the laws of motion, there must exist some force interaction between the earth and the moon, which makes the moon move around the earth in it's orbit, yet keeps it a fixed distance away, preventing it from falling to the earth.

Newton found that the force of attraction between to bodies varied inversely as the square of the distance between them. In other words, if the distance is doubled, the force reduces to one – fourth. It is trebled, the force reduces to one – ninth, and so on. The relation between the force and masses of the two bodies. Interacting was also clearly shown in the result.

Newton presneted the whole result in the form of a law called "the" Gravitational law" Gravity is the force of attraction between two bodies. This law which derived its inspiration from a falling apple.

# துர்க்காபுரம் மகளிர் இல்லம்
# 2013 மாணவர் மன்ற அறிக்கை

**தலைவர் :**
**செல்வி.இ.சர்மிளா**

**உப தலைவர் :**
**செல்வி.வி.சிந்துஜா**

**செயலாளர் :**
**செல்வி.வி.பிரசா**

**உப செயலாளர் :**
**செல்வி.கா.கலைப்பிரியா**

**பொருளாளர்:**
**செல்வி.வி.லக்ஷியா**

**உப பொருளாளர் :**
**செல்வி.ச.விமலா**

**பத்திரிகையாளர் :**
**செல்வி.கி.ருபிகா**

**உப பத்திரிகையாளர் :**
**செல்வி.கி.துஸ்யந்தினி**

**நிகழ்ச்சித் தொகுப்பாளர் :**
**செல்வி.கா.ஹஜனிகா**

**உப நிகழ்சித்தொகுப்பாளர் :**
**செல்வி.செ.ஞானசௌந்தரி**

துர்க்காபுர மகளிர் இல்ல மாணவர் மன்ற செயற்பாடுகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. ஒவ்வொரு மாதமும் கடைசி சனிக்கிழமை நடைபெறுகின்ற மாணவர் மன்றக் கூட்டத்தில் விசேடமாக அம்மாதத்தில் பிறந்த சகல பிள்ளைகளுக்கும் புதிய உடை வழங்கப்பட்டு அம்மாணவர் மன்றக் கூட்டத்தில் கௌரவிக்கப்படுகின்றார்கள். இதற்கான நிதி உதவியை அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் திரு.கந்தையா நீலகண்டன் (சட்டத்தரணி) அவர்கள் வழங்கி இவ்விழாவை ஊக்குவித்து வருவது பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். அவருக்கு எமது இல்லத்தின் சார்பிலும் மன்றத்தின் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இம் மாணவர் மன்றங்களில் கவிதை, பாடல், பேச்சு, நாடகம், நகைச்சுவை, செய்திகள், அபிநயப்பாடல், விவாதம், கவிமன்றம், ஆங்கிலப்பாடல்கள், ஆங்கில உரையாடல்கள் போன்ற நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. அத்தோடு ஒவ்வொரு ஆண்டின் தொடக்கத்திலும் புதிய மன்றப்பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவதுடன் அவர்களின் வினைத்திறனான செயற்பாடும் கண்காணிக்கப்பட்டு வருகின்றது.

2013ற்கான மன்றப்பிரதிநிதிகளின் செயற்பாடுகள் சிறப்பாக நடைபெற வேண்டும் என இல்ல அதிபரினால் அறிவுறுத்தப்பட்டதுடன் தொடர்ந்து மன்றச் செயற்பாடுகளும் வினைத்திறனுடன் நடைபெற வேண்டும் எனக் கூறப்பட்டது.

2013.12.06 திகதியன்று புதிய மன்றப்பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டார்கள். 2014ற்கான புதிய மன்ற பிரதிநிதிகள் விபரம் வருமாறு:

| | | |
|---|---|---|
| தலைவர் | :- | செல்வி.சு.சிந்துஜா |
| உபதலைவர் | :- | செல்வி.கா.கலைப்பிரியா |
| செயலாளர் | :- | செல்வி.வே.கஜேந்தினி |
| உபசெயலாளர் | :- | செல்வி.ச.விமலா |
| பொருளாளர் | :- | செல்வி.ர.விதுரா |
| உபபொருளாளர் | :- | செல்வி.உ.சுஞ்சிதா |
| நிகழ்ச்சித் தொகுப்பாளர் | :- | செல்வி.மா.தனுஜா |
| உபநிகழ்ச்சித் தொகுப்பாளர் | :- | செல்வி.சி.சுகிர்தா |
| பத்திரிகையாளர் | :- | செல்வி.க.கலையரசி |
| உபபத்திரிகையாளர் | :- | செல்வி.சி.நிக்சனா |

2013ம் ஆண்டு மன்றத்தின் வினைத்திறன் மிக்க செயற்பாடுகள்:

- தரம் 4, 5 ஆண்டிற்கான பொது அறிவுப் போட்டிகளை நடாத்துதல்
- தரம் 6, 7, 8 ற்கான வாய்ப்பாட்டுப் போட்டிகளை நடாத்துதல், பரிசில்களை வழங்குதல்
- சிறப்பான நாடகங்கள் அரங்கேற்றுவதற்கும் சிறப்பான நாடகங்களை வழங்கிய மாணவர்களுக்கும் பரிசில் வழங்குதல்
- பரீட்சையில் அதிக புள்ளிகளை பெற்றவர்களை ஊக்குவித்தல்

போன்றனவாகும்.

ஆகவே, 2013ம் ஆண்டிற்கான மன்றப்பிரதிநிதிகளாக எம்மைத் தெரிவு செய்த இல்லப்பிள்ளைகளுக்கும் நிகழ்ச்சிகளைத் தந்துதவிய பிள்ளைகளுக்கும் அறிவுரைகளை வழங்கிய இல்ல அதிபர், நிர்வாக சபை உறுப்பினர்கள், மற்றும் மேற்பார்வையாளர்களான செல்வி.செல்வராணி பெரியதம்பி, செல்வி.உஷாதேவி சுப்பையா, செல்வி.சுகந்தினி சுப்பையா, செல்வி. மோகனாம்பாள் நாகநாதன், செல்வி பவானி பொன்னையா ஆகியோருக்கு நன்றி கூறுகின்றோம். மேலும் பிறந்த நாள் சிற்றுண்டிகள் வழங்குவதற்கு பொறுப்பாக இருந்த செல்வி.சுகந்தினி சுப்பையா, திருமதி.சிவாஜினி கருணாகரன், திருமதி.து.தவமலர், செல்வி.மு.பூமலர், செல்வி.த.சிந்துஜா மற்றும் அன்னையர் யாவருக்கும், உதவி செய்யும் இல்லப்பிள்ளைகளுக்கும் எமது மன்றத்தின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**செயலாளர்**
**செல்வி.வி.பிரசா**

# துர்க்காபுரம் மகளிர் இல்லம், தெல்லிப்பழை.

# மாணவர் பரிசு விபரம்

### தரம் – 04

01. கி.அபிநயா
    1. அறநெறிப்பாடசாலை பாவோதல் 2ம்இடம்
    2. குழு நடனம் 3ம்இடம்

02. செ.அபிராமி
    1. குழு நடனம் 3ம்இடம்
    2. பாவோதல் 2ம் இடம்

03. வி.கவிதா
    1. குழு நடனம் 3ம்இடம்

04. ஜெ.அபர்னா
    1. ஓட்டம் 1ம்இடம்

### தரம்–05

1. ஸ்ரீ.நிருபா - பொது

05. ரா.தட்சிகா
    1. உயரம் பாய்தல் 2ம்இடம்
    2. ஓட்டம் 2ம்இடம்

06. செ.துஷாந்தினி
    1. ஓட்டம் 2ம்இடம்
    2. தாம்பு தாண்டுதல் 1ம் இடம்

07. கு.அசூரியா
    1. ஓட்டம் 1ம்இடம்
    2. சமநிலை 1ம்இடம்

08. ம.சாமந்தி
    1. ஓட்டம் 3ம்இடம்
    2. உயரம் பாய்தல் 1ம்இடம்

### தரம்–06

09. இ.கயனி
    1. பண்ணிசை 3ம்இடம்

10. ப.சஜீனா - பொது

11. ஜெ.கஜேனா
    1. பண்ணிசை 2ம்இடம்

12. தோ.துஸ்யந்தினி
    1. மனனம் 1ம்இடம்

13. கி.லோயினி
    1. அறநெறிப்பாடசாலை பாவோதல் 2ம்இடம்
    2. பண்ணிசை 2ம்இடம்
    3. பண்ணிசை 2ம்இடம் ( கோட்ட மட்டம், வலய மட்டம் )

14. ம.அட்சகி - பொது

15. க.விதுர்சினி - பொது

### தரம்–07

16. மா.தர்சினி
    1. அறநெறிப்பாடசாலை பேச்சு 2ம்இடம்
    2. சித்திரம் வரைதல் 3ம்இடம் ( கோட்ட மட்டம் )
    3. ஆங்கில கதை கூறுதல் 3ம்இடம்
    4. ஆங்கில வாசிப்பு 3ம்இடம்
    5. மனனம் 3ம்இடம்
    6. பொது அறிவு போட்டி 1ம்இடம்

17. சி.நிலாயினி - பொது

18. சி.சுரேக்கா
    1. அறநெறிப்பாடசாலை கட்டுரை 1ம்இடம்
    2. மனனம் 3ம்இடம்
    3. Hand writing 3rd Place

19. ஜெ.ஜெயச்செல்வி
    1. உயரம் பாய்தல் 1ம்இடம்

### தரம்–08

20. த.மகிழினி - பொது

21. அ.அபிநயா - பொது

22. த.மகிந்தினி - பொது

23.ச.சோபிதா - பொது

24.தி.லோஜினி

1. ஈட்டியெறிதல் 3ம்இடம்
2. தட்டெறிதல் 3ம்இடம்

## தரம்–09

25.சி.கீதா

1. அறநெறிப்பாடசாலை பாவோதல் 2ம்இடம்

26.ர.டிசானி - பொது

27.வி.கஜேந்தினி - பொது

28.வி.யாமினி - பொது

29.த.கார்த்திகா

1. ஓட்டம் 1ம் இடம்

30.ஜெ.லோஜனா - பொது

31. இ.சங்கவி - பொது

32.க.தயாழினி

1. உயரம்பாய்தல் 2ம்இடம்

33.க.கௌசல்யா - பொது

34.ம.சாமினி - பொது

35.பூ.நிசாளினி - பொது

36.ம.சர்மினி - பொது

37.பிதானுஜா - பொது

38.க.சஜிந்தா

1. ஓட்டம் 2ம்இடம்

39.சி.சங்கீதா - பொது

40.க.கார்த்திகா

1. ஈட்டியெறிதல் 2ம்இடம்

41. டயானா - பொது

## தரம்–10

42.யோ.தனுஜா

1. தோரணம் பின்னுதல் 2ம்இடம்

43.யோ.தனுசியா - பொது

44.ஜெ.தேனுஜா - பொது

45.ந.மதுரா

1. பேச்சு 1ம் இடம்
2. கட்டுரை 3ம் இடம்

46.க.மதனப்பிரியா

1. அறநெறிப்பேச்சு 2ம்இடம்

47.ஜீ.நிவேனிகா

1. ஓட்டம் 100m 2ம்இடம்
2. ஓட்டம் 200m 3ம்இடம்

48.இ.கார்த்திகா - பொது

49.ம.மோகனா - பொது

50.ஆ.பானுஜா - பொது

51. ச.சந்தியபானு

1. அறநெறிக்கட்டுரை 2ம்இடம்

52.பா.ஸ்ரீப்பிரியா - பொது

53. மோ.ஜெசிந்தா - பொது

54.ஸ்ரீ.நிருசா - பொது

55.ஜெ.ருலக்சனா – பொது

56.ற.றஜிதா - பொது

## தரம் –11

57.செ.நிசாந்தினி

1. அறநெறிப்பேச்சு 2ம்இடம்
2. நூலகவாரக்கட்டுரை 3ம்இடம்
3. சமூகவிஞ்ஞானப்போட்டி 3ம்இடம்

58.பா.கஜீபா

1. சமூகவிஞ்ஞானப்போட்டி 3ம்இடம்
2. அறநெறிப்பாடசாலை பாவோதல் 3ம்இடம்

59.யோ.கம்சிகா - பொது

60.யோ.ஜெயபாரதி - பொது

61. து.சுபாசினி - பொது

1. பொதுஅறிவுயுசித்தி

62.க.ஹரிசாளினி - பொது

63.செ.றஜிதா - பொது

64.சு.டலக்சனா - பொது

1. பண்ணிசை 2ம்இடம்

65.க.கலைச்செல்வி

2. பிரதேச செயலகத்தினால் நடாத்தப்பட்ட கட்டுரைப்போட்டி 2ம்இடம்

66.பி.பிருந்திகா - பொது

67.கு.யசோதா

1. சித்திரம் 2ம்இடம்

68.ம.மதுசா
1. ஓட்டம் 400m 3ம்இடம்
2. ஓட்டம் 200m 3ம்இடம்
69.சி.சோபிதா - பொது
70.ஸ்ரீ.நிறோஜா
1. கோலம் 2ம்இடம் (J/H.C)
71. இ.ஐஸ்வர்யா
1. பொதுஅறிவு A சித்தி
72.மா.தனுசியா - பொது
73.வி.விஜயசாளினி - பொது
74.வி.பிரசனா
1. அறநெறிப்பாடசாலை பாவோதல் 3ம்இடம்
75.செ.சுபாசினி
1. ஓட்டம் 400m 2ம்இடம்
2. உயரம் 1ம்இடம்
3. ஓட்டம் 200m 3ம்இடம்
76.ம.மதுசா - பொது
77.த.கௌசல்யா
1. ஓட்டம் 100m 1ம்இடம்
2. ஓட்டம் 200m 2ம்இடம்
78.ஜீவிதா

## தரம்–11 (2013)

79.யோ.வினுயா
1. மனைப்பொருளியல் வினாவிடை 1ம்இடம்
80.சி.கீர்த்தினா — பொது
81. ச.சாருஜா
1. பண்ணிசை 1ம்இடம்
82.ஜீ.நிருத்திகா - பொது
83. கு.மிதுசா
(1) மனைப்பொருளியல் வினாவிடை 1ம்இடம்
84.ஆ.சசிகலா - பொது
85.ந.கிருசாந்தி - பொது
86.செ.மதுசா - பொது
87.த.தர்சிகா
(1) பண்ணிசை 1ம்இடம்
88.பூ. கிருசாளினி - பொது
89.க. கயலி - பொது
90.ஜெ.அபிராமி - பொது
91. த.கோசிகா - பொது
92.க.சாந்தரூபி - பொது
93. கி.தேவிகா - பொது
94.கு.தெனேசா - பொது
95.கி.துஸ்யந்தினி
(1) பண்ணிசை 3ம்இடம்
96.செ.யசோதா - பொது
97.க.கார்த்திகா - பொது
98.சி.உஷா - பொது
99.செ.விஜயகுமாரி - பொது
100.செ.ஞானசௌந்தரி - பொது
101.யோ.அமுதினி - பொது

## தரம் – A/L (2015)

102. த.தேவதர்சினி - பொது
103. சு.சிந்துஜா - பொது
104. க.கலையரசி
(1) தேசியஇலக்கியப்போட்டி 3ம் 2ம்இடங்கள்
105. ச.விமலா
(1) பட்டிமன்றம் 2ம்இடம்
106. கா.கலைப்பிரியா - பொது
107. சி.நிக்சனா - பொது
108. பொ.டிரைக்சனா - பொது
109. ர.விதுரா - பொது
110. சி.சுகிர்தா
(1) ஓட்டம் 1500m 2ம்இடம்
(2) குண்டு 3ம்இடம்
(3 ) உயரம் 3ம்இடம்
111. வே.கஜேந்தினி
(1) மனனம் 3ம்இடம்
112. மா.தனுஜா
(1) பண்ணிசை 1ம்இடம்
113. உ.சஞ்சிதா

**தரம்-A/L(2014)**

**114.இ.சர்மிளா**

(1) பட்டிமன்றம் 2ம்இடம்

(2) திரைவிமர்சனம் 2ம்இடம்

(3) மனனம்1ம்இடம

(4) பண்ணிசை 3ம்இடம்

**115.கா.கஜனிகா** - பொது

**116.வி.சிந்துஜா**

**117.கி.ரூபிகா**

(1) மனனம் 3ம்இடம்

(2) தேசியமட்டகட்டுரை 3ம்இடம்

**118. வி.பிரசா**

(1) மனனம் 2ம்இடம்

(2) பண்ணிசை 2ம்இடம்

**119. வி.லக்சியா**

**தரம் - A/L(2013)**

**120.பா.சிந்துஜா** - 2A,B

**121. கு.பிறேமினி** - 3C

**122.சிவரூபி** – B, 2C

**தரம்-A/L(2012)**

**123. ஜெ.தேவரூபி** – A,B,C

**124. ஜெ.நாகசுஜித்தா** – A,C,S

**125. இ.மதிவதனி** – B,2C

## பல்கலைக்கழகம் / தேசியகல்வியற்கல்லூரி (2010-2011கற்கை ஆண்டு)

**அ.ஜெயந்தினி** –யாழ்நுண்கலைப்பீடம்

**து.துஸ்யந்தினி**- யாழ்நுண்கலைப்பீடம்

**செ.தமிழ்விழி** -முகிழ்நிலை ஆசிரியர் வவுனியா தேசியகல்வியற்கல்லூரி

## பல்கலைக்கழகம் / தேசியகல்வியற்கல்லூரி (2011-2012கற்கை ஆண்டு)

**பா.விதுசாயினி** - யாழ் பல்கலைக்கழகம் (கலைப்பீடம்)

**பூ.செல்வதியம்மா** - யாழ் பல்கலைக்கழகம் (கலைப்பீடம்)

**நா.சர்வலோஜினி** - வந்தாறுமூலைப் பல்கலைக்கழகம் (கலைப்பீடம்)

**த.தேவதர்மளா** - யாழ் தேசியகல்வியற்கல்லூரி (ஆரம்ப பரிவு)

**பல்கலைக்கழகம் (2012-2013கற்கை ஆண்டு)**

**ஜெ.தேவரூபி** - யாழ். நுண்கலைப்பீடம்

**ஸ்ரீ.கம்சிகா** - யாழ். பல்கலைக்கழகம்

**உயர் தொழில்நுட்ப முகாமைத்துவக்கற்கை (2013-2014)**

**இ.மதிவதனி**

**வெளிவாரிப்பட்டப்படிப்பு** (G.A.Q)

**சி.தர்சினி**

## சிறப்பு பரிசில்கள்

1. மலைமகள் இராமநாதன் ஞாபகார்த்தப்பரிசு – 5000/-
பல்கலைக்கழகஅனுமதியின் சிறந்தபரீட்சை பெறுபேற்றுக்காக 2500/- வீதம் சிறப்புப் பரிசு வழங்கப்படுகிறது.

வழங்குபவர் : திருமதி.சந்திராதேவி திருநாவுக்கரசு
நரம்பியல் நிபுணர் வைத்திய கலாநிதி திவாகரன்

பெறுபவர்கள் : செல்வி.சிந்துஜா பாலச்சந்திரன்
செல்வி. தேவரூபி ஜெயக்குமார்

2. உயர் கல்வியில் பட்டப்படிப்பை முடித்து பட்டம் பெறும் இவ்வாண்டிற்குரிய மாணவி / மாணவிகளுக்கு சிறப்புப் பரிசு 10,000/-

வழங்குபவர் : வைத்திய கலாநிதி காயத்திரி அனந்தசயனன்

பெறுபவர் : செல்வி.தமிழ்விழி செல்வநாதன் National Diploma in Teaching (Hindusium)

## 32வது ஆண்டு விழாவினையொட்டி நடைபெற்ற போட்டிகளும் முடிவுகளும்.

| பிரிவு | நிகழ்ச்சி | பெயர் | இடம் |
|---|---|---|---|
| கீழ் பிரிவு | மனனம் | கி.அபிநயா<br>செ.அபிராமி | 1ம் இடம்<br>2ம் இடம் |
| மத்திய பிரிவு | மனனம் | தோ.துஸ்யந்தினி<br>ம.தர்சினி<br>சி.சுரேக்கா | 1ம் இடம்<br>2ம் இடம்<br>3ம் இடம் |
| | பண்ணிசை | கி.லோஜினி<br>ஜே.கஜேனா<br>இ.கஜனி | 1ம் இடம்<br>2ம் இடம்<br>3ம் இடம் |
| மேற்பிரிவு | பண்ணிசை | த.தர்சிகா<br>ச.சாருஜா<br>கி.தேவிகா<br>கி.துஸ்யந்தினி | 1ம் இடம்<br>1ம் இடம்<br>2ம் இடம்<br>3ம் இடம் |
| அதிமேற்பிரிவு | மனனம் | இ.சர்மிளா<br>வி.பிரசா<br>கி.ரூபிகா<br>வே.கஜேந்தினி | 1ம் இடம்<br>2ம் இடம்<br>3ம் இடம்<br>3ம் இடம் |
| | பண்ணிசை | ம.தனுஜா<br>வி.பிரசா<br>இ.சர்மிளா | 1ம் இடம்<br>2ம் இடம்<br>3ம் இடம் |





AnDRA Printers, Jaffna : 021-221 7279